# தாய் மண்

— நாவல் —

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# தாய் மண்

நாவல்

பூவை எஸ். ஆறுமுகம்

வானதி பதிப்பகம்
தி.நகர் · சென்னை-17

முதற் பதிப்பு : செப்டம்பர், 1972
உரிமை: வானதி பதிப்பகத்துக்கு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 7-00

அச்சிட்டோர் :
மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ்,
சென்னை-2.

# பதிப்புரை

இந் நாவலில்........

மண்ணின் மணத்தையும்

விண்ணின் அற்புதத்தையும்

தமிழின் இனிமையையும்

தாயின் பாசத்தையும் விளக்கமாக விவரிப் பதோடு மனித மனங்களின் விளையாட்டுக்களையும் அற்புதமாகச் சித்திரித்திருக்கிறார் ஆசிரியர் பூவை எஸ். ஆறுமுகம் அவர்கள்.

நாட்டு விடுதலை வெள்ளி விழா ஆண்டில் ''தாய் மண்'' நாவல் வெளிவருவது மிகப் பொருத்தம்.

இந்த நாட்டு மண்ணின் மானத்தைக் காப்பாற் றவும், மண்ணின் மணத்தை நுகரவும் நாட்டில் உலவும் மனித மன ஓட்டங்களின் அற்புதங்களை ரசிக் கவும் இந் நூல் பயன்படுமாதலால் இந்நாவலை மிகப் பெருமையோடு வெளியிடுகிறேன்.

"தாய் மண்" நாவலைச் சிருஷ்டித்துத் தந்த கதைக் கலைஞரும் அற்புதமான நாவலாசிரியருமான பூவை எஸ். ஆறுமுகம் அவர்களுக்கு மிக்க நன்றி. வானதி பதிப்பக நூல்களை வரவேற்கும் வாசக நேயர்களுக்கும் நன்றி.

அன்புள்ள

ஏ. திருநாவுக்கரசு

# அஞ்சலி

பெண் ஒரு புதிரல்ல ; அவள் ஒரு புதுமை.
தெய்வம் ஒரு புதுமையல்ல ; அது ஒரு புதிர்.
அன்பு ஒரு சோதனையல்ல ; அது ஓர் உண்மை.
சத்தியம் ஓர் ஆணையல்ல ; அது ஒரு தர்மம்.
இலட்சியம் ஒரு கனவல்ல ; அது ஓர் ஆன்மா.
காதல் ஒரு விளையாட்டல்ல ; அது ஒரு வாழ்வு.
வாழ்வு ஒரு பிரச்னையல்ல ; அது ஓர் உலகம்.

ஆம் ; பிறவி எனும் கடனைச் செய்து முடிக்க வேண்டிய மனிதாபிமானத்தின் கட்டுப்பாட்டுக்கு, வாழ்க்கை ஓர் ஆதார பீடமாக அமைகிறது ; மனித மனம் இந்த வாழ்க்கைக்கு ஓர் ஆதார சுருதியாகக் குரல் கொடுக்கிறது.

இத்தகைய மானுட வாழ்க்கைக்கு உகந்த காலம் குறைவு. கனவுகளோ அதிகம்.

குறைவான இக்கால எல்லைக்குள்ளேதான், கூடுதலான கனவுகள் விளையாடுகின்றன ; விளையாட்டுக் காட்டுகின்றன.

வாழ்க்கையோடு மனிதன் விளையாடுகிறான் ; மனிதனோடு வாழ்க்கை விளையாடுகிறது !

இவ்விளையாட்டுக்கு ஒரு விதியை வரம்பறுத்துக் காட்டித் தீர்ப்பை வழங்கும் முதல் உரிமை பூண்டவன் ' அவன் !'— அலகிலா விளையாட்டுடையான் அவன். ' அவன் ' மனிதனுக்கு முதன் முதலாகக் காட்டும் காட்சிகள் இரண்டு : ஒன்று தாய். அடுத்தது : மண்.

தாயும் மண்ணும் ஒரே மரபுக்குச் சொந்தம். ஒரே நிலைப்பட்ட தியாகத்தின் பாரம்பர்யத்துக்கு ஒரு வரலாறு நல்கும் பண்புகொண்ட சித்தாந்தங்கள் இவை இரண்டும். இவை இல்லையேல், தத்துவம் இல்லை !

மனம் என்பதே ஒரு தத்துவம்தான். அது ஆண்டவனின் அருட்கொடை. கொடை சிறக்க—கொடைத் தன்மை நிறக்க இந்த மனம் ஓர் உன்னதம் ஆக வேண்டும்.

உன்னதத்தின் ஒளிப்புள்ளிகள் நாடும் வீடும் ! அவை இன்றுவரை சொன்ன கதைகள் ஒன்ரு, இரண்டா ?

ஆம்.

உண்மைதான் ! — கதை இல்லையேல், கடவுள் இல்லை !

ஆகவேதான், நானும் ஒரு கதை சொல்லத் தொடங்கு கிறேன். இவ்வகையில், நானும் ஒரு சிருஷ்டிகர்த்தா !

எனவேதான், இலக்கியப் பண்பாடு செழித்த என்னுடைய மனோதர்மச் சுயப்பிரக்ஞையில் விளைந்த சொக்கப் பச்சையாகத் திகழ்கின்ருள் என்னுடைய தமிழரசி. அவள் என் கண்ணீருக்குச் சொந்தம். எனக்குரிய கனவின் பந்தமும் அவளே. எனக்குகந்த பாசத்தின் நிதி அவள் ; என் யுகத்தின் நீதியும் அவளேதான் !

தமிழ்ச் சமுதாயத்தின் நடைமுறை வாழ்க்கைக்கு அவள் ஓர் எடுத்துக் காட்டு. அவளுடைய கதை ஒரு பிரச்னை. அவள் கொண்ட இலட்சியம் ஒரு சாதனை. அவளது தேசப் பற்று ஒரு நீதி ; அவள் காதல் ஒரு நிறை ! அவளது முடிவு ஒரு விதி. அவள் விதி ஒரு சிருஷ்டி. ஆம் ; அவள், விதியின் நாயகி ; விதிக்கு நாயகி.

விளையாடுகிருள், விளையாடிக்கொண்டே இருக்கிருள்— விதியோடு, வினையோடு, வினை தீர்த்தானோடு !

அவள் சௌபாக்கியவதி.

சுகந்தத்தின் நித்தியமல்லி அவள்.

புனிதத்தின் பாரிஜாதம் அவள்.

மண் காண, அவள் ஓர் அதிசயம்.
விண் காண, அவள் ஓர் அற்புதம்.
தமிழ் காண, அவள் ஓர் இலக்கியம்.
இலக்கியம் காண, அவள் ஓர் அசல்.

தமிழாசிரியை குமாரி தமிழரசிக்கு லால்பகதூர் சாஸ்திரி என்றால் ஒரு பக்தி. ஆகவே, அவளை என் இலக்கிய நெஞ்சத்தில் இருத்தி, அமரர் லால்பகதூர் அவர்களின் புனிதம் மிகுந்த புண்ணிய நினைவை என் இலக்கிய நினைவில் இருத்தி, இப் புதினத்தை அந்த இரு சக்திகளின் ஜீவன் களுக்குக் காணிக்கையாகப் படைத்து அஞ்சலி செய் கின்றேன்.

பாரத—பாகிஸ்தான் சமர் ஓய்ந்து, ஓர் அமைதியான உடன்பாட்டினைச் சிம்லா ஒப்பந்தம் தோற்றுவித்தது; நாட்டு விடுதலை வெள்ளி விழா கோலாகலமாகக் கொண்டாடப் படுகிறது. இந்த நல்ல நேரத்தில், என்னுடைய இந்த நாவல் ஒரு தேசிய உணர்ச்சி துலங்க வெளிப்படுத்துவதில் நான் நிறைவு அடைகின்றேன். வானதி பதிப்பகத்தின் உரிமை யாளர் திரு ஏ. திருநாவுக்கரசு அவர்களின் தொடர்ந்த பாசத்துக்குத் தலை வணங்குகின்றேன்.

வணக்கம்.

பூவைமாநகர்,
15, ஆகஸ்ட், 1972

பூவை எஸ். ஆறுமுகம்

# அவள்தான் சட்டம்!

## ஒன்று

புனிதம் தழைத்த ஆனந்தமான இளங்காலை வேளை.

தமிழரசி நீராடினுள்; நீறு தரித்தாள்.

தமிழ்த் தெய்வத்துக்கு நல்ல விளக்கு ஏற்றி வைத்தாள்; மலர்ச்சரம் சூட்டினுள். ஊதுவத்தி மணம் கமழ்ந்தது.

பிரார்த்தனை நடந்தது; முடிந்தது.

மனம் ஆனந்தக் கடலாடியது.

அவள் விழி மலர்ந்தாள்!......

கொண்டையில் செருகப்பட்டிருந்த கதம்ப மணம், அவளது எடுப்பான நீண்ட சிவந்த நாசிகளுக்கு ஆரோக்கிய மான வாசனையை அர்ப்பணம் செய்து கொண்டிருந்தது. அவளது அடி மனத்தில் இனம் புரியாத மகிழ்வு அலை அலையாக வீசி விரிந்தது. அலைகளின் முனைகளிலே, எண்ணங்கள் காலத்தின் மும்முனைகளைத் தொட்டுப் பார்த்துக் குமிழ் பறித்து விளையாடின. அவள் இதழ் பிரித்து, இதழ் இணைத்தாள்; அற்புதமான நளினம் பூண்ட முரல் சிந்தியது. ஓடி வந்த நெடுமூச்சு வந்த சுவடு காட்டாமல் பறிந்தது!

இடது கை மணிக்கட்டு அவள் பார்வையில் தென்பட்டது தான் தாமதம்; இருந்திருந்தாற்போல, அவளுக்குப் பதற்றம் மூண்டது. 'மணி எட்டரை ஆயிட்டுதே! பலகாரம் சாப்பிட்டுட்டுப் புறப்பட வேண்டியதுதான். எண்ணி எண்ணிப் பார்த்தாலும் மணி ஒன்பதுக்குக் கிட்டே நெருங் கிடாதா? அப்பத்தான் ஸ்கூலுக்குப் போய்ச் சேருறதுக்கும் அங்கே காலிங்பெல் அடிக்கிறதுக்கும் சரியாயிருக்கும்!' என்று எண்ணங்களைத் தொடுத்து, அவற்றுக்கு அனுசரணையாகக் காலத்தின் திட்டத்தையும் செம்மைப்படுத்திக் கொண்டாள்.

கூடத்தில் மேஜைமீதிருந்த முகம் பார்க்கும் கண்ணாடி அவளை நோக்கி, 'டீச்சர், டீச்சர்!' என்று விளித்தது. அவளுடைய கண்ணாடிக்கு மட்டும் பேசத் தெரியும். அதன் பேச்சுக்கு மதிப்புக் கொடுக்கவும் அவளுக்குத் தெரியும். ஆடியை அண்டினாள். முகம் பொருத்தி முகம் பார்த்தாள். கண் தொடுத்துக் கண் எடுத்தாள். கண்ணியமான கவர்ச்சி கண் பொத்தி விளையாடியது. மொக்கினுள்ளே தவம் இயற்றும் மணம் போன்று, அவளுள் அந்தரங்கமான பெருமிதம் மொக்கின் மணமாகத் தவம் இயற்றியது.

அடுக்களைக்குள் சென்றாள், அவள். மூடி வைத்திருந்த இட்லிகளைச் சாப்பிட்டாள். பிளாஸ்கிலிருந்த காப்பியை அளவாக ஊற்றிச் சுவைத்தாள். பாத்திரம் பண்டங்களைச் சுத்தம் செய்தாள். கொல்லைப்புறத்துக்குத் தாழ் அமர்த்தித் திரும்பினாள். கொடியில் உலரப் போட்ட துணிகள் மத்தியான்னத்துக்குக் காய்ந்துவிடும். வெயில்தான் நன்றாகக் காய்கிறதே! கஞ்சிப்பொழுதுக்குப் பள்ளி முடித்துத் திரும்ப உதவும் சோற்றுப் பானையை மூடி வைத்தாள். கறி குழம்புக்கு அடக்கம் மிகுதி.

கூடத்துக்கு வந்தாள், தமிழரசி. ஊதுவத்திச் சாம்பலைக் காகிதத்தில் தாங்கி மேஜையின் அடியில் இருந்த கூடையில் கொட்டினாள். அந்தச் சாம்பலில் பொதிந்திருந்த மகத்தான தியாகத்தை அவள் எப்போதும் நினைத்துக் கொள்வாள். அது அவள் பொழுதுபோக்கா? அல்ல. அது அவளது உதிரத்துடன் உதிரமாக உறவாடிக் கிடந்த கடமைப் பண்பாட்டின் உயிர்ப்பு; மூச்சு!— அப்படித்தான் அவள் தன்னுள் அடக்கமாக அடக்கிக் கொள்ளுவாள். அவள் பழக்கம் அப்படி!

புதிய செய்தித்தாள் விரிந்தது.

சண்டீகரில் பஸில்கா பகுதியில், பஞ்சாப் ஆயுதப் போலீஸ் சாவடி ஒன்றைப் பாகிஸ்தானித் துருப்புகளின் வசமிருந்து நம் இந்தியத் தற்காப்பு வீரர்கள் மீட்டுவிட்டார்களாம்!......

தமிழரசி 'அற்புதம்!' என்று சொல்லி மகிழ்ந்தாள்.

பாகிஸ்தானின் நட்பற்ற தன்மையைச் சுட்டிக்காட்டி, நாட்டின் தற்காப்புக்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டி, காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சியில் ஆகஸ்ட் பதினைந்தில் பாரதப் பிரதமர் பேசிய பேச்சு அவளுடைய நெஞ்சைத் தொட்டுக் கொண்டேயிருந்தது.

மக்களுக்கு ராஷ்டிரபதி அருளிய சுதந்திர தினச் செய்திகளிலே, மாணவர்கள் ஒழுக்கத்தோடும் சீலத்தோடும் நடந்து கொள்ள வேண்டுமென்றும், நாட்டு மக்கள் லட்சியங்களில் நம்பிக்கையுடனும் நாட்டு நலனில் உறுதியுடனும் தீரத்துடன் கடமை புரிய வேண்டுமென்றும், தியாக உணர்வே சிறந்த தற்காப்பு என்றும் உரைத்த ஆழ்ந்த சிந்தனைத் தத்துவங்களை அவள் ஆன்மநேயத்தோடு நித்தம் நித்தம் எண்ணிப் பார்ப்பது வழக்கமாகிவிட்டது.

"நன்றாகப் பாடினான் பாரதி! எவ்வளவு தீர்க்க தரிசனத்தோடு, எவ்வளவு முன்னறிவிப்புக்களை நமக்குக் கொடுத்திருக்கிறான்!... குருடனுக்குக் குருடன் வழி காட்டினானாம்! இப்போது அப்படித்தான் உலக வியவகாரம் நடக்கிறது. சீனாக்காரன் நம்மிடம் பட்டபாடுகளைப் பார்த்திருந்தும், இந்தப் பாகிஸ்தானியர் இப்படிக் குருட்டுத்தனமாக நடக்கத் துணிவார்களா? இவர்களுக்குக் கண் மட்டும் குருடல்ல! இதயமும் குருடு!... அதனால்தான், போர் ஓய்வு ஒப்பந்தத்தை அவர்களால் மீறத் துணிவு ஏற்பட்டிருக்கிறது!... பாவம், பாகிஸ்தான்! நம் வணக்கத்துக்குரிய வீர ஜவான்களிடம் இந்தப் பாகிஸ்தானியர் பட்டபாடுகளை உலகம் எப்போதும் மறக்கவே மறக்காது! நம் தர்மம் நம்மைக் காக்கும். அறத்தை, அன்பை, பண்பை, சத்தியத்தைத் தொழுபவர்கள் நாம். "தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்; தருமம் மறுபடி வெல்லும்!" என்ற அர்ஜுனன் வாய்மொழி — பாரதியின் உண்மை நம்மை என்றென்றும் வாழ்த்தும்!...'

''அக்கா!'' என்று அழைத்து நின்றாள் சீதை.

அவளைக் கண்ட சடுதியிலேயே, செய்தித்தாளை மடித்து அவளிடம் கொடுத்தாள் தமிழரசி.

சீதை, நடைபாதைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண். வாலைக்குமரி. மூன்று வீடு தள்ளி வாசம். அண்ணன்காரர் பட்டாளத்தில் இருக்கிறாராம்! அவள் தந்தை ரிக்ஷாவாலா யுத்த நிலைகளைப்பற்றி அன்றாடம் விவரம் அறிந்துகொள்ள அவள் பத்திரிகையைப் படிப்பாள். அந்தப் பத்திரிகை தமிழரசியிடம் கிடைத்து வந்தது.

சீதை என்றால் — அவள் குடும்பத்தவர் என்றால், தமிழரசிக்கு ஒரு பரிவு — பாசம். ''பிறந்த மண்ணுக்காக நீங்க உங்க பிள்ளை மூலம் உங்களுக்குரிய கடமைகளைச் செய்யு றீங்க. உங்க மாதிரி குடும்பங்களுக்கு நாடு ரொம்பக் கடமைப்பட்டிருக்குது. நாங்களும் கடமைப்பட்டிருக் கிறோம்!'' என்பாள் அவள், நடைபாதைத் தம்பதியரிடம்.

சீதையை அனுப்பியதும், தமிழரசி கூடத்துக்கு மீண்டாள்.

செக்கச் சிவந்த நெற்றிக்கு மையம் கணித்து, செக்கச் சிவந்த திலகம் இட்டுக்கொண்டாள். திலகம் வந்ததும், நெற்றிக்குத் தனிக்களை வந்தது. மங்கலச்சின்னத்தில் மங்கள கரமான சௌபாக்கியம் களை கட்டிப் பொலிந்தது. மஞ்சள் பூசப்பட்டிருந்த முகத்தின் இடது புறத்துக் கன்னத்தின் மேல் வசமாக முகப்பருக்களின் நடுவே இருந்த கறுப்பு மச்சத்தையொட்டி, ஒட்டியிருந்த பவுடரின் அழுத்தத்தை டவலினால் மெல்லத் துடைத்தாள். இப்போது எங்கும் சமனான — வெண்மை படிந்த — நறுவிசான அழகு படிந் திருக்கக் கண்டாள். அவள் தனக்குத்தானே 'ஓ. கே.' சொல்லிக் கொண்டாள். இடது தோள் பகுதியில் சுருங்கிக் கிடந்த சேலைப் பகுதியைச் சற்று இழுத்து விட்டுக் கொண் டாள். ஆகாயவர்ணச் சேலைக்குக் கிளிப் பச்சைச் சோளி வெகு பொருத்தம். கைத்தறி இனம் என்றால், அவளுக்கு இயல்பாகவே ஓர் ஈடுபாடு; அக்கறை; கடமையுணர்வு!

மறுமுறையும் தமிழரசி அந்தக் கண்ணாடியை ஜாடை யாகப் பார்க்கத் தவறவில்லை. எம்பித் தணிந்த மார்பகத் தில் பதிந்து தவழ்ந்து கிடந்த கழுத்துச் சங்கிலியின் பதக்கம் இம் முறை அவளுக்குப் பளிச்சென்று பட்டது. அந்தத் தங்கப் பதக்கத்தைக் கண்டதும், அவளுடைய செவிகளில், தன் தோழி சுடர்க்கொடி அன்றொரு நாள் நயத்தக்க நாகரி கத்தோடு பேசிய பேச்சு ஒலிக்கத் தொடங்கியது. "தமிழரசி! உங்களோட இந்த டாலருக்குப் பதிலாக கூடிய சீக்கிரத் திலேயே தங்கத்தாலி டால் வீச வேணும். இது என் ஆசை. இது உங்க ஆசையாகவும் இருந்திடுச்சுதின்னா, எல்லாம் சுபமாகவே கைகூடிவிடும். என்ன ஸிஸ்டர் நான் சொல்றது?" என்று தன் இதயத்தை வெளிக்காட்டிச் சொன்னதுடன் நிற் காமல், அவள் அபிப்பிராயத்துக்கு ஆதாரம் சேகரம் செய்து, அவ்வெண்ணத்தை நிலைப்படுத்திக் கொள்ள விழைந்து, உடனடியாக ஒரு கேள்வியையும் அவள் முன்னே வைத்தாள்.

இப்படிப்பட்ட திருமணத் தொடர்பு கொண்ட வினாக் களை மனித மனங்கள் பரிவர்த்தனை செய்து கொள்வது சரி; ஆனால் இப்படிப்பட்ட கேள்விகளுக்கு உரிய விடைகளைத் தெய்வங்கள் அல்லவா சொல்லவேண்டும்?

தமிழரசி மௌனமாக நகை பூத்தாள். "நீ சொல்றது உண்மை, சுடர்க்கொடி! ஆனால், என்னைப் பொறுத்தவரை இந்தத் திருமண விஷயம் அவ்வளவு அவசரமான ஒரு காரிய மாய் எனக்குத் தோணலையே! அதுக்குக் காரணம், எனக் கென்று நான் வகுத்துக் கொண்டிருக்கக்கூடிய கொள்கை களாகவும் இருக்கலாம்! ஆனால், என் நிலை வேறே; உன் நிலை வேறே! என் பேச்சை வச்சுக்கிட்டு உன்னை நீ எடைபோட்டுக் கக் கூடாது!..." என்று சொல்லி வாய் மூடினாள், அவள்.

அதற்குள் இடைமறித்தாள் தோழி. "உங்க பேச்சை வச்சுக்கிட்டு எப்படி நான் எடைபோட முடியும்?... என் வெயிட்டுக்கு நான்தானே சுமையாக முடியும்!" என்று சொல்லி, தன்னுடைய டம்பப் பையைத் திறந்து அவளது எடைச் சீட்டைக் காட்டினாள்.

தமிழரசிக்குச் சிரிப்பு பாளை வெடித்ததற்கு ஒப்ப வந்தது. ''இயல்பாவே உனக்குக் கைவந்திருக்கிற நகைச் சுவைப் பண்பு என் பேச்சை மடக்கக் கற்றுக் கொடுத்திட்டுது. சந்தோஷம், சகோதரி! சரி, என் பேச்சை முடிச்சிடுறேன். அதாவது, உன்னுடைய சூழல், தகுதி நிலைமை, மனம் எல்லாமே உனக்கு அனுசரணையாய் கூடியிருக்குது. ஆனபடி யாலே, உன் அப்பா இஷ்டப்பிரகாரமே உன் மனசைக் கவர்ந்திருக்கிற உன் அத்தானுடன் நீ உன் கல்யாணத்தை முடித்துக் கொள்! அதுதான் விவேகமும் கெட்டிக்காரத் தனமுமாகும்!'' என்று தன்னுடைய இதயத்தைத் திறந்து பேசினாள்.

அன்று ஒரு நாள் :

நேருஜி இல்லாத பாரதத்தில் நடந்த அந்த இரண்டாவது சுதந்திர நாள் விழாவை மன ஏக்கத்துடன் தரிசித்து, கால் நடையாகத் திரும்பிக் கொண்டிருந்தாள் தமிழரசி. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் கடைவீதி நெடுகிலும் வந்து கொண்டிருந்தாள். அப்போது அவளைத் தொடர்ந்து வந்தாற்போல, சுடர்க்கொடியின் ரோஜப்பூ நிறக் கார் மறித்து நின்றது. உயிர்த்தோழிமார் இருவரும் அண்டி யிருந்த ஹோட்டலில் சாயா அருந்தினார்கள். பெண்கள் இருவர் சந்தித்தால், பேச்சுக்குத்தானா தட்டுப்பாடு ஏற்படப் போகிறது? இருவரும் பேசினார்கள். அப்போது, சுடர்க் கொடியின் திருமண விஷயம் பேசப்பட்டதைத் தமிழரசி அறிவாள். ஆகவே, அதைப் பற்றிப் புலனறிய விரும்பினாள். நையாண்டிப் பேச்சுக்கள் இருதரப்பிலிருந்தும் கிளம்பின.

'நட்பென்னும் நாடாச் சிறப்பை' மதிப்பவர்கள் அவர்கள் ஆயிற்றே!

அப்போது, தமிழரசியின் மணவினைபற்றிச் சுடர்க்கொடி அன்பான ஆதரவுடனும், ஆதரவரன நல்லெண்ணத் துடனும், நல்லெண்ணம் கொண்ட கவலையுடனும் எடுத்துச் சொன்ன அந்த நட்பை இப்போது அவளுடைய அந்தத்

தங்கப்பதக்கம் ஞாபகப்படுத்திக் காட்டியது. 'கண்காணும் தெய்வம் எங்கள் மதர்... எங்கள் தாய்!... கஸ்தூரி அன்னை அனாதை இல்லத்தின் தலைவி தந்த ஈடில்லாப் பரிசு இது!...'

படிப்பறைக்கு வந்தாள் தமிழரசி.

அறிஞர் அண்ணாதுரை, அமரர் ஜீவா ஆகியோரின் எழுத்தோவியங்கள் பளிச்சிட்டன.

திரும்பினாள்.

அன்பும் தியாகமும் சுடர் தெறிக்க, ஊதுவத்தியின் நறுமணத்தில் திளைத்தவாறு, கஸ்தூரி அன்னை அனாதை இல்லத் தலைவி திலகவதி அம்மையார் இளநகை சிந்திக் கொண்டிருந்தாள் — அந்தப் புகைப் படத்திலே! தவழ்ந்து கொண்டிருந்த நறுமணத்தில் இறைமணம் கூடி மணத்ததாகவே அவள் நம்பினாள்; மனப்பூர்வமாக நம்பிய உண்மை அல்லவா அது?

அவள் மனம் திறந்து, விழி மூடி, கரங்குவித்து வணங்கினாள்: 'அம்மா!... அம்மா!...'

வினாடிகள் சில ஊர்ந்திருக்க வேண்டும்.

அவள் கண்களைத் திறந்தாள். சேலை முன்றானை அவளது விழி முனைகளை நாடி மீண்டது.

இனிமேல், அவள் புறப்பட்டு விடவேண்டும்!

மேஜைமீதிருந்த பேனாவையும் பர்ஸையும் எடுத்தாள்; பேனாவை ரவிக்கையின் உட்புறமாகச் செருகிக் கொண்டாள்; பர்ஸை உட்புறம் போட்டுக் கொண்டாள். புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி எடுத்து இடது புறக் கைக்குள் அடக்கி, விரல்களின் பிடிக்குள் அவற்றைக் கட்டுப்படுத்தினாள். அன்றைச் செய்தித்தாளையும் நாட்குறிப்பையும் இணைத்தாள். அவை மார்புடன் இணைந்தன.

கதவைப் பூட்டிக்கொண்டு தமிழரசி புறப்பட்டாள். கை வளைகள் குலுங்கி விழுந்தன.

சுழன்று கொண்டிருந்த அவளது சிந்தனையில், அன்றைக்குப் போதிக்க வேண்டிய பாடங்களின் குறிப்புக்கள் அலை மோதிக் கொண்டிருந்தன.

நைனியப்பன் தெருவிலிருந்து மடங்கி நேராக நடந்தாள். அன்றைத் தேதியில் அவள் செய்தாக வேண்டிய கடமைகளை—பொறுப்புக்களை அவள் திரும்பவும் ஒருமுறை நினைவு கூர்ந்தாள். 'மதருக்குக் கடிதம் எழுதவேண்டும்; தசரா விடுமுறையில் அவர்களைப் பார்த்து. மிஸ்டர் அம்பலவாணனுக்கு என் முடிவைத் தெரிவித்து விடவேண்டும்!' என்ற இரண்டு விஷயங்கள் அவளுக்கு இருபெரும் கடமைகளாகவும், பொறுப்புக்களாகவும் அமைந்தன.

மண்ணடிக் கடைவீதி பின் தங்கியது. வலது புறம் திரும்பினாள்.

தம்புச் செட்டித் தெரு நீண்டது.

காளிகாம்பிகை—காமடேஸ்வரர் தெய்வாலயம் வந்தது.

அதன் சந்நிதியில் அவள் பயபக்தியுடன் நின்றாள். கால் 'ஸ்லிப்பர்'களைக் கழற்றி ஒதுக்கிவிட்டு, ஒதுங்கி நின்றாள். கைதொழுதாள். மீண்டும் புறப்பட்டாள்.

அப்போது, பாரிமுனையிலிருந்து சைக்கிளில் விரைந்து வந்து யுவன் ஒருவன் அவளைக் கண்டு அவள் வசமாக ஒதுங்கி நிற்க எத்தனம் செய்தான்.

ஆனால், அவளோ அந்த யுவனை நோட்டம் பார்த்துவிட்டு, முகத்தைச் சுளித்து வேறு புறம் தலையைத் திருப்பிக் கொண்டு விரைந்து சென்றாள்.

அதோ, ஸ்கூல் வந்து விட்டது!— 'சாரதா பெண்கள் உயர்நிலைப்பள்ளி.'

குமாரி தமிழரசி கம்பீரமான மிடுக்குடனும், கடமை மிகுந்த தன்னம்பிக்கையுடனும், லட்சுமீகரம் ததும்பி வழிய தலைமை ஆசிரியையின் அறைக்குள் நுழைந்தாள். மேஜை மீது காணப்பட்ட கையெழுத்துப் பதிவுப் புத்தகத்தைப்

புரட்டினுள். நாள் தவருமல் புறப்படும் பிரளயம் அப்பொழுதும் அவள் மனத்தில் புறப்பட்டது. 'இனிஷியல்' களுடன் கூடிய ஆசிரியைமார்களின் பெயர்களுக்கு மத்தியில் அவள் பெயர் மட்டும் 'இனிஷியல்' இல்லாமல்—தலைப்புப் பெயர் இல்லாமல், வெறும் 'தமிழரசி' என்றிருந்தது. கை நடுக்கத்துடன் பேனுவைத் திறந்து, தன் பெயருக்கு நேராகத் தேதி பார்த்துக் கையெழுத்துச் செய்தாள். நெடுமூச்சு வடிந்தது. பிரளயமும் வடிந்தது. எல்லாம் கைநொடிப் பொழுதுதான்!...

'இந்த மண்ணில் பிறந்தால் மீண்டும் இந்த மண்ணைச் சரண் அடையும் வரை, நாம் சந்தித்துத் தீர வேண்டிய சோதனைகளும் போராட்டங்களும் ஒன்ரு, இரண்டா? எல்லா வற்றையும் நாம்தானே நேர்மையான நெஞ்சுரம் கொண்டு சமாளித்தாக வேண்டும்! அம்மம்மா!...

தொடுத்த நினைவுப் பூவின் மணத்தில் மனம் தெளிந்து பூஞ்சிரிப்பை உதிர்ந்தவாறு, அவளுக்குரிய வகுப்பை இலக்கு வைத்து நடந்தாள்.

இனி, அவள் தமிழாசிரியை. இனி, அவள்தான் சட்டம், விதி எல்லாம்—அவளுடைய உலகத்திற்குள்!...

## நேசிக்கிருள்!

---

### இரண்டு

'திருவேற, உருவேறும்!'— ஆம்; மெய்தான். திரு ஏறி நின்ற அந்தப் புனிதக் கோயிலின் பாதங்களைத் தொட்ட தும், அன்பின் தண்மையும், சத்தியத்தின் பக்தியும், கடமை யின் மனச்சாட்சியும் ஒருருக்கொண்டு தமிழாசிரியை தமிழர கியின் நெஞ்சைத் தொட்டன.

ஆம்; பள்ளிக்கூடத்திற்குள் அவள் அடியெடுத்து வைத்து விட்டாள் என்ருல், அவளை விட்டுக் காலமும் கனவும் அடி

பிரித்து விடைபெற்று விலகி விடும். அலுவல் நேரங்களில் அவளுக்குக் கடமைதான் உலகம். அவ்வுலகத்திலே அவளுக்கு நீதியும், நேர்மையும்தான் மனச்சாட்சி. அம்மனச்சாட்சி தான் அவளுக்குத் தெய்வம்.

தேசீய கீதத்துடன் பள்ளிக்கூடம் ஆரம்பமானது.

தமிழரசியின் வகுப்பு 'தமிழ் மறை'யின் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பமாயிற்று.

'தமிழ்த்தாய் வாழ்த்து', முதல் பாடமாக அமைந்தது. பொங்கி வந்த பாசத்துடனும், பூரித்துப் பல்கிய அன்புடனும் பாடத்தை நடத்தினுள். தமிழ்ப் பேராசிரியரின் கவிதை மனத்திற்குக் காவிய மணம் ஊட்டி விளக்கங்களைக் கொடுத்தாள் தமிழரசி. தன்னேரில்லாத தமிழின் பால் இயல்பாகவே அவளுக்கு இருந்த பற்றும் பாசமும் சொற்பெருக்கில் ஊடும் பாவுமாக உயிர்கொண்டு ஒலித்தன. பாடலில் உயிரும் நிணமுமாகப் பொதிந்து இருந்த நாட்டுப்பற்று, தேசிய ஒருமைப்பாட்டுத் தத்துவம், தெய்வநீதி, தாய்த்தமிழின் புகழ் போன்ற நிலைகளுக்கு விரிவு மிக்க ஆதாரபூர்வமான நிலைக்களன் அமைத்து விவரித்தாள். முன்னிருந்தபடி இருக்கும் எல்லையறு பரம்பொருளாக எத்திசையும் புகழ் மணக்க இருக்கும் தமிழ் அணங்கின் சீரிளமைத்திறம் வியந்து, செயன் மறந்து வாழ்த்திய பேராசிரியருக்கு நன்றி சொன்னுள், தமிழாசிரியை.

'வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலக'த்தில் கன்னித் தமிழ் பெற்ற பண்டைச் சிறப்புக்களைக் கோடிட்டுக் காட்டினுள். அமரகவியின் 'தமிழ்த்தாய்' என்னும் அற்புதச் சித்திரத்தில் வலியுறுத்தப்பட்டிருந்த 'புகழ் ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்' என்கிற தமிழ்த் தாயின் வாய்மொழியின் உரத்தை—உண்மையை மிக அழகாக அவள் எடுத்துரைத்தாள். தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது, முதலை உண்ட பாலனை அழைத்தது, எலும்பு பெண்ணுருவாகக் கண்டது, மறைக்கதவினைத் திறந்தது போன்ற தெய்வச் சிறப்புக்களைச் செய்து சிறப்புக்

கொண்ட தெய்வத் தமிழின் பெருமையை அமுதினும் இனிக்க விளக்கினள். 'தமிழுக்கு அமுதென்று பேர்!' என்ற உண்மைத் தரிசனத்துக்கும் அவள் உரை செய்தாள். 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்தல் வேண்டும்' எனக் கனவுகண்ட புதுமைக் கவியின் இலட்சியத்தை அவள் எங்ஙனம் மறப்பாள்?

அத்தனை நிமிஷங்களாக அவள் மெய்ம்மறந்து போதித்தாள்.

அத்தனை நிமிஷங்களும் மெய்ம்மறந்து கேட்டன.

அத்தனை மாணவியர் உள்ளங்களும் தமிழ் உணர்வில் பொங்கித் திளைத்தன.

அவ்வகுப்பு முடிந்ததற்குக் கட்டியம் கூறியது மணி யொலி.

பிரிவேளைகள் மாறின.

அடுத்து, அப்பர் தேவாரம், காரைக்கால் அம்மையார் சரிதம், ஆகு பெயர் விளக்கம், வித்துவான் தியாகராசச் செட்டியார் போன்ற பாடங்கள் அவளது நாவண்ணம் பெற்றன.

தமிழாசிரியையின் பாடப் போதிப்பு என்றால், மாணவியர் குழாமில் மிகுந்த நற்பெயர். அந்தப் பெயரின் பெருமையில் பங்குபெற்றுப் பெருமை கொள்வதென்பது அந்தப் பள்ளியின்—சாரதா பெண்கள் உயர்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியை திருமதி சரோஜினி மூர்த்திக்கு வழக்க மான ஒரு பண்பாகவே ஊறிவிட்டது. 'தமிழாசிரியை தமிழரசி என்றால் அந்தந்த வகுப்பு மாணவிகளிலே பெரும்பாலும் எல்லோருமே மகிழ்ச்சியோடும் ஆர்வத் தோடும் வகுப்புகளுக்கு வந்து விடுவார்கள். இந்த அதிசயம், தமிழரசிக்குக் கிடைத்திருக்கக்கூடிய நல்ல புகழுக்கு ஒரு உதாரணமாகும். வித்துவான் படிப்பு முடிந்து வேலை ஏற்று வருஷம் இரண்டுதான் ஆகிறது. அதற்குள் எவ்வளவோ நல்ல பெயர் சம்பாதித்துவிட்டாள். மதர் திலகவதி

அம்மையாரின் ஆசீர்வாதம் பெற்ற மாணவி ஆயிற்றே! கடமைக்கும் கண்டிப்புக்கும் கேட்கவா வேண்டும்?...... குமாரி தமிழரசிக்குச் சிறப்பான எதிர்காலம் கண்டிப்பாக இருக்கிறது. தமிழரசியின் சிறப்பான போதனையைக் குறித்து, கல்வி மேலதிகாரி எழுதி வைத்த குறிப்பு மெய்தான்!......' என்று 'தமிழரசிப் புராணம்' படிப்பதில் தலைமைப் பீடம் துளிகூட அழுக்காறு கொள்ளாதது விந்தையிலும் விந்தையே!

கடைசி 'பீரியட்' நடந்து கொண்டிருந்தது.

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள?' என்ற பாடல் வரிக்கு விளக்கவுரை நடத்திக் கொண்டிருந்தாள் தமிழரசி.

அப்போது, வகுப்பின் உள்ளே நுழைந்தாள் குமாரி ஜலஜா. அவள் ஆங்கில ஆசிரியை—அதாவது, ஆங்கிலம் போதிக்கும் உபாத்தியாயினி. சூயெஸ்கால்வாயைக் கடந்து வந்து நிற்பது போலவே காணப்பட்டாள். அவள் கைகளில் நாகரிக அளவுமானி ஏதும் இல்லை. ஆனல், அவள் உடுப்புக்கள் நாகரிகத்துக்கு அளவாகக் காட்சி தந்தன. விஷயம் அறிந்த வட்டாரத்தில் அவளுக்குக் 'கிளியோபாட்ரா' என்று பேர்!

குமாரி ஜலஜா உள்ளே வந்து நின்ருள். அத்துடன் நிற்கவில்லை. வரிக்குதிரை என ஒரு கனைப்புக் கனைத்தாள். அப்புறம்தான், தமிழரசிக்குத் தன் நினைவு வந்தது. நிமிர்ந்தாள். நிமிர்ந்த வரிக்குதிரையாக, சக ஆசிரியை ஜலஜா நிற்பதைக் கண்டாள்.

“பிளீஸ் எக்ஸ்யூஸ் மி, டமிலரசி!” என்று என்னவோ சொல்லக் குனிந்தாள். இரட்டை வால் ஜடைகள் குட்டை குட்டையாகத் தொங்கின; அதர்வது, தொங்குவதற்குப் பாடுபட்டன.

அதற்குள், “வகுப்பு நடந்து கொண்டிருக்கிறது. அப்புறம், வகுப்பு முடிந்துதான் பேசவேண்டும்!” என்று 'சூடாக' ஒரு சுவை முடிவைச் செப்பினுள் தமிழர்சி.

பாவம், வழிந்த அசட்டுக் களையை வழித்துவிட்டபடி, ஜலஜா ஷேக்ஸ்பியரின் தமிழ்க் கிளியோபாட்ராவாக நடந்து வெளியேறினாள். முதுகுப் பகுதியின் விரிந்த இடைவெளியில் செந்நிறம் மின்னியது. 'ஷிபான் பட்டு' காற்றில் அலைந்தது.

வாழ்க்கைத் துணைநலம் பற்றிய போதனையின் முடிவாக, ''இல்லற வாழ்க்கையிலே கற்பு என்னும் உறுதிநிலை இருக்கப் பெற்றால், அப்பால் பெண்களைவிடப் பெருமையுடையவை வேறு என்ன இருக்க முடியும்?'' என்று முடித்தாள்.

காலைப் படிப்பின் காலநேரம் முடிந்தது.

தமிழரசி குடையை விரித்துக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்ட தருணம், அவளுக்கு 'டெலிபோன் கால்' வந்திருப் பதாக ஆயா ஒருத்தி வந்து சொன்னாள்.

குடையை வைத்தபின், தமிழரசி விரைந்து சென்றாள்.

பூக்கிண்ணங்கள் ஒதுங்கிக் கொண்டன.

சாந்தோமிலிருந்து தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தி ருந்தது. கஸ்தூரி அன்னை அனாதை இல்லத்தின் தலைவிதான் பேசினாள். தலைவி திலகவதி அம்மையார் வழக்கமாகத் தமிழரசியிடமிருந்து பெறும் க்ஷேமலாபக் கடிதத்தைப் பெறாததால், மனம் பதறி அவளுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டாள். 'அம்மாவுக்குத்தான் என் பேரில் எவ்வளவு அன்பு, எவ்வளவு பாசம்!...... நானே அவர் களுக்குத் தபால் எழுத வேண்டுமென்று இருந்தேன். அதற்குள் எனக்கு 'ஃபோன்' செய்துவிட்டார்கள்!...... ஈன்ற தாய் தந்தையரைக் காட்டிலும் என் பேரில் எவ்வளவோ உயிரை வைத்திருக்கிறார்கள்! இதற்கெல்லாம் நான் எவ் வகையில்—எப்பிறப்பில் அந்த நன்றிக் கடனை அடைக்கப் போகிறேனோ? அலகிலா விளையாட்டுடைய அத்தலைவன்தான் வழிகாட்டவேண்டும்; வழிகாட்டிப் பழகியவன் அவன். உதவுவான் எனக்கு!.....'

தான் உடல்நலம் செம்மையுடன் இருப்பதை அறிந்ததும் தான், தலைவியின் குரலில் காணப்பட்ட பதட்டம் அடங்கிய

உண்மையை அவள் மறக்க மாட்டாள். அம்மையின் அன்பு அவளது விழிகளில் கசிவை உண்டாக்கியது. 'என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான அனாதைகளின் கண் கண்ட தெய்வம் எங்கள் அம்மா! அவர்களைப் போல நல்லவர்கள் ஓரிருவர் இருக்கக் கண்டுதான் மழைகூட ஒழுங்காகப் பெய்கிறது! தன்னை அழித்துக்கொண்டு ஒளி யூட்டும் மெழுகுவர்த்தி எங்கள் மதர்! அனாதை இல்லத்தின் வளர்ச்சியிலும் வாழ்விலும் தன்னையே ஆத்ம நிவேதனம் செய்துகொண்டு வாழ்ந்துவரும் தியாகத்தாய் எங்கள் அம்மா!......'

தொலைபேசியில் பேசியதால் ஏற்பட்ட சுகந்தமான அமைதியுடன் அவள் திரும்பினாள்.

'சட்டைக்காரி' ஒருத்தி உதட்டுச் சாயத்தில் சிரிப்பைக் காட்டிக்கொண்டே தமிழரசியைக் கடந்தாள்! அண்டை அயலில் வேலை பார்த்தவர்கள் டிபனை இலட்சியமாகக் கொண்டு ஓடினார்கள். தட்டுமறித்துப் பறந்தன கார்கள்.

கூால் செருப்புக்களை வெளி வராந்தாவில் கழற்றிவிட்டு, வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே பிரவேசித்தாள் தமிழரசி. 'மதர் திலகவதி'யின் இனிய நல் நினைவுகள் அவளுக்கு இனிய சொப்பனத்தின் சுகத்தை அளிக்க, அந்த இனிய மயக்கத் திலேயே ஓர் அரைக்கணம் சோபாவில் அப்படியே சாய்ந் தாள். தெற்குத் திசை வாடைக்காற்று திடுதிப்பென்று போட் டிருந்த மூட்டத்துக்கு ஒத்துழைத்து வீசியது. பிறகு சடுதியில் மூட்டம் கலைந்து உஷ்ணக்காற்று அலைந்தது. 'சீதோஷ்ண நிலையின் இத்தகைய மாறுபாடுகள்கூட வாழ்க்கையின் பிரதி பலிப்புக்கள்தாமோ?...... அப்படியும் இருக்கக்கூடும். வாழ்க்கையில் நாம் சந்திக்கிற— அல்லது, சந்தித்த— அல்லது, சந்திக்க வேண்டிய அனுபவங்கள் சொல்லிக் காட்டுகிற காலமாறுபாடுகளின் நிலைக்கு இவை ஓர் அறிவிப்பாக இருக்கலாமோ? அல்லது உதாரணமாகவும் இருக்குமோ?' என்று நினைத்தவாறு சாய்ந்திருந்த அவள், தன் வாழ்க்கையின் இறந்த காலத்தை ஒரு விநாடிச்

சிந்தனைக்குள் அடக்கினாள்? நிகழ்காலத்தை நினைத்தாள். அந்நினைவில் நெடுமூச்சு புறப்பட்டது; புறப்பட்ட சிந்தனையும் அதற்கு ஏதுவாக அடித்தளம் பரப்பிய சித்தமும் நீண்டு வளர்ந்தன. 'தொடரும்' என்ற குறிப்பும் இருந்தது. நடப்புக் காலத்தின் நிலை அவளுக்குப் பிடிபடாத புதிராகத் தோன்றியது போலவே, எதிர்காலத்தின் கதையும் அவளது கன்னி மனத்தில் ஒரு மர்மமாகவே தோன்றியது. காலத்தின் முப்பிரிவுகள் அவளை எங்கெல்லாமோ— எப்படியெல்லாமோ மனோரதப் பயணம் செய்யத் தூண்டிவிட்டன. இன்பம், ஏக்கம், பெருமை, பாசம், வைராக்கியம், துயரம் போன்ற மனவுணர்களின் பலதரப்பட்ட பருவ மாறுதல்கள் அவளை ஆட்டிப் படைத்தன போலும்!

கடமையின் நினைவு அவளை அரித்தது. மேஜை இழுப்பைத் திறந்தாள். உள்ளே இருந்த 'மணிமேகலை'யைப் புரட்டினாள். உறை கிழிக்கப்பட்டிருந்த உறையை உதறினாள். உறை வேறு, உறைக் கடிதம் வேருகச் சிதறிவிழுந்தன. கடிதம் அவள் கைக்குள் அடங்கியது. கடிதத்தின் உள்ளடக்கம் ஏற்கனவே அவளுக்குப் பழக்கப் பட்டதுதான். இருந்தாலும், மீண்டும் படித்தாள்: எங்கிருந்தோ மிதந்து வந்த இனிய சோகத்தின் பின்னணியுடன் அவள் அக்கடிதத்தைப் படித்தாள்:

"'அன்பிற்குரிய குமாரி தமிழரசி அவர்களுக்கு,

நலம். நலம் எழுதுங்கள்.

நான் தங்களைச் சந்தித்த வேளை ஒரு பொன்னான சந்தர்ப்பமாகவே இருக்கவேண்டும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள்தாம் ஒவ்வொருவருக்கும் வாழ்வின் திரும்பு முனைகளை உண்டாக்கி வாழ்த்துகின்றன. அப்படிப்பட்ட நாகரிகமானதோர் அன்பின் வாழ்த்தாகவே நம் சந்திப்பைக் கருதி, இக்கடிதத்தை வரையவும் ஆரம்பித்தேன்.

விட்டகுறை—தொட்டகுறை என்பது பிறப்புக்களின் சங்கிலித் தொடர்பானதொரு முடியாக்

கதை. பாரம்பர்ய வழிகளிலே பற்றுக் கொண்டவர்கள் நாம். ஆகவே, இப்படிப்பட்ட தொடர்பின் பிணைப்புக்களையும், பிணைப்புக்களின் இணைப்புக்களையும் நாம் நம்புகிறோம்; நம்பவேண்டியவர்களாகவும் ஆகிறோம்.

நான் உங்களைச் சந்தித்தேன்.

நீங்கள் என்னைச் சந்தித்தீர்கள்.

நம் சந்திப்பில் புனிதமான பாசமும், கண்ணியம் மிகுந்த அன்பும் நம்மை அறியாமலே நம்முள்ளே மூகிழ்த்திருக்க வேண்டும். இல்லையென்றால், சதா தங்களைப் பற்றியே நான் சிந்தித்துக் கொண்டிருக்கும் ஓர் உள்ளுணர்வுத் தூண்டுதல் என்னுடன் வளர்ந்திருக்க முடியாது!

என்னைப்போலவே, உங்களுக்கும் இத்தகைய தூண்டுதல் உண்டாகியிருந்தால், அது என் எதிர்காலத்திற்கு—நம் எதிர் காலத்திற்கு வாய்த்திட்ட ஒரு நல்ல சகுனம் போலத்தான்.

நான் இதுவரை எழுதி வந்த வாசகங்கள் என் இதயத்தைத் தங்களுக்குச் சொல்லியிருக்கும் என்றே ஊகம் செய்கிறேன்.

என் ஊகம் அவ்வளவு கச்சிதமாக அமையாமலும் இருக்கலாம். வெறும் வார்த்தைகளால் ஓர் இதயத்தை அளந்துவிட, அல்லது எடைபோட்டுவிட முடியாதுதான்.

ஆகவே, நான் விஷயத்துக்கு வருகிறன்.

நான் தங்களை மனத்தால்—அன்பால்—பாசத்தால்-பண்பாட்டால்—புனிதத்தால்—சத்தியத்தால் நேசிக்கிறேன். 'காதலிக்கிறேன்' என்பதைக் காட்டிலும் 'நேசிக்கிறேன்' என்ற பதச்சேர்மானத்தில் தான் எனக்கு ஆறுதல் கிடைக்கிறது.

உங்களது அன்பான மறுமொழி வேண்டும்.

தங்கள் அன்பு மிக்க,
அம்பலவாணன்."

கடிதம் உறைக்குள் அடங்கியது.

ஆனால், வெய்துயிர்ப்பு அவள் மனத்தில் அடங்கவில்லை.

சிலிர்த்துச் சீறிக் குமுறிய எண்ணங்களையும் துணை வைத்துக் கொண்டு—உணவு கொண்டாள். கைக்கு எட்டும்படி இருந்த டயரியைப் புரட்டியபடி சாப்பிட்டு எழுந்தாள்.

கூடை விரிந்தது.

பாதை வளர்ந்தது.

மாலை அலுவல்கள் ஆரம்பமாயின.

உப பாடங்கள் போதித்தாள் தமிழரசி.

பள்ளிக்கூடம் முடிந்ததும், தமிழரசி திரு. வி. க. மண்டபத்தை அடைந்தாள். பள்ளியின் நிறுவனர் அங்கு வருவதாக ஏற்பாடு ஆகியிருந்ததால், எல்லா ஆசிரியைகளும் அங்கு வரவேண்டுமென்று சொல்லப்பட்டது. ஏனைய ஆசிரியைகளும் வந்தார்கள்.

ஜலஜா மட்டும் வேண்டாத மருமகளின் முகம் காணப் பிடிக்காத மாமியாராக, வேறு பக்கம் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

ஐந்து மணிக்குப் பள்ளியின் நிறுவனர் திருவாளர் சொக்கநாதன் அவர்கள் தம்முடைய வாடாமல்லி நிறக் காரிலிருந்து இறங்கினர். நெடிதுயர்ந்த ஆகிருதியுடன் கம்பீரமான தோற்றப் பொலிவு கொண்டு அவர் தோன்றினர். 'பிஸ்கட் கலர் சில்க் ஜிப்பா' எழிலூட்டியது. மைனர் சங்கிலி மின்னியது. ஜரிகைவேட்டி சலசலக்க நடந்தார். அந்திமந்தாரைப் பூக்களை வருடிவிட்டவராக நடந்தார்.

குவிந்த பூங்கரங்களுக்கு மத்தியில் அவரை வணங்கி எழிலான சிரிப்புடன் வரவேற்ருள் தலைமைப் பொறுப்புக்குரிய அம்மாள். காற்றில் அலைந்த சுருள் முடிகளை அடக்கியபடி, அவருக்கு உரிய ஆசனத்தைக் காட்டினுள்.

சொக்கநாதன் உட்கார்ந்தார்.

தலைமை ஆசிரியை உட்கார்ந்தாள்.

மற்ற ஆசிரியைகளும் உட்கார்ந்தார்கள்.

நீலப் பாதரசக் குழல் விளக்குகள் துலாம்பரமான வெளிச்சத்தைப் பாய்ச்சின.

வெள்ளை முடிகளை அம்பலப் படுத்தின மின்சார விசிறிகள். கட்டுப்படுத்தும்படிப் பணித்தார் அவர். கரிய பெரிய விழிகள் உருண்டன.

நாட்டின் நெருக்கடி நிலைமைபற்றிப் பேசப்பட்டது. பள்ளியின் சார்பாக ஆயிர ரூபாய் யுத்தநிதிக்காக அளிக்க ஆசிரியைக் குழுவினர் விரும்புவதாக சரோஜினி அம்மையார் சொன்னார்.

"அது நம்மோட கடமையாக்கும். என் சார்பில் ஒரு ஆயிரம் தருகிறேன். அதையும் ஸ்கூல் பேராலேயே குடுத்திடுங்கம்மா!" என்றார் அவர். சொல்லிவிட்டு அவர் தலையை மெள்ள உயர்த்தினார்; ஒரு முறை ஆசிரியைகளை ஒரே பார்வையாகப் பார்த்தார்.

ஸ்தாபகரின் அறச்சிந்தையைப் பாராட்டிக் கையொலி எழுப்பினர்.

இந்தக் கும்பலில் தமிழரசி மாத்திரம் சேரவில்லை.

அந்தப் பிரத்தியட்ச உண்மையைச் சொக்கநாதன் கவனிக்கத் தவறவில்லை.

"அம்மா தமிழரசி, என்ன உங்க உடம்புக்கு?" என்று பவ்யமாகவும் விநய பூர்வமாகவும் வினவினார்.

தமிழரசி ஒதுங்கிய பாவனை, சொக்கநாதன் அவர்களுக்குச் சகஜமாகத் தோன்றவில்லையோ?

"எனக்கு உடம்பு நலமாகத்தான் இருக்கிறது, ஐயா. உங்கள் கடமையை—நீங்கள் நாட்டுக்குச் செய்ய வேண்டிய மனிதாபிமானம் கொண்ட தொண்டைச் செய்ய முனைந்தீர்கள். அது இயல்பு. உங்கள் கடமையும் கூட. இதற்குக் கையொலி தேவையல்ல என்பது என் கருத்து. ஆகவே தான், நான் ஒதுங்க நேர்ந்தது, ஐயா!"

தலைமை ஆசிரியைக்கு முகம் வேர்த்துக் கொட்டியது.

சிறு சலசலப்பு விளைந்தது.

பள்ளியின் நிறுவனர் வெகு நயமாகச் சிரித்துச் சமாளித்தார். ''வாஸ்தவம்தான் அம்மா நீங்க சொல்றது!... எனக்குக் கூட இப்பதான் மட்டுப் படுது!... எஸ்... யு ஆர் ஸின்ஸியர்லி ரைட்!...'' என்றார். மூக்குக் கண்ணாடியை அவரது விரல்கள் நான்கு தரம் முற்றுகை இட்டுவிட்டன. நெற்றிக்குத் தாவி மீண்டது கைக்குட்டை.

''கிறிஸ்துமஸ் லீவுக்கு முன்னதாக மீண்டும் சந்திப்போம்!'' என்று சொல்லி எழுந்தார் சொக்கநாதன்.

ஆசிரியைகள் வணக்கம் சொல்லி விடை பெற்றனர்.

சொக்கநாதன் காரில் ஏறிச் செல்லும் வரை உடன் இருந்தாள் தலைமை ஆசிரியை.

அதற்குள் தம்புச்செட்டித் தெரு—மண்ணடி முனைச் சந்திப்புக்கு வந்து விட்டாள் தமிழரசி.

ஓடி வந்த கார் நின்றது.

"அம்மா தமிழரசி! ஒரு வாட்டி நீங்க எங்க பங்களாவுக்கு வாங்க. முன்னேகூட ஒரு தரம் சொன்னேன். என் மனைவி உங்களைப் பார்க்கிறதுக்கு ரொம்பவும் ஆசைப்படுது!" என்றார் சொக்கநாதன். அன்பின் பாசத்துடன் அவர் வேண்டினார்.

''ஆகட்டுங்க; கட்டாயம் ஒரு ஞாயிற்றுக்கிழமை வருறேனுங்க!'' என்று பணிவுடன் பதில் சொன்னாள் தமிழரசி.

கும்பிடு கொடுத்துக் கும்பிடு வாங்கிக்கொண்ட அந்தக் கார், 'காரினும் கடிது' சென்றது.

அவள் மடங்கித் திரும்பியபோது, தன்னைச் சூழ்ந்து விலகிய வல்லூறுக் கண்கள் சிலவற்றை அவள் காணத்தவறவில்லை!

## யார் இந்த அம்பலவாணன்?

மூன்று

இளம் பிறையின் சீதளக் கதிர்களை ரசித்துக் கொண்டிருந்த தமிழரசி ஆழ்ந்த சிந்தனை வசப்பட்டிருந்தாள். கண்கள் மூடியிருந்தன. ஆனால், மனமும் மனக் கண்ணும் திறந்து தான் இருந்தன. கபாலம் சூடேறி வலித்தது. அவள் இப்போது கண்களைத் திறந்தாள். ஆனால், அவளது மனப் பிரச்னைக்கு மட்டிலும் வழி திறக்கவில்லையோ?...

''பிறப்பு என்றால் அதற்கு ஒரு பொருள், பயன், நோக்கம் வேண்டும். ஆண் ஆகட்டும், அல்லது பெண் ஆகட்டும். அவரவர்களுக்கென்று சொந்தமாகச் சில கொள்கைகள் இருந்தாகவேண்டும். எல்லை இல்லாத வாழ்வு, எல்லை கட்டிக் கொள்ளாத வாழ்வு பயனற்றது; பொருளற்றது; நோக்கமற்றது!... வாழ்க்கைக்காக வாழவேண்டும்; அப்படிப்பட்ட வாழ்க்கையில்தான் தெய்வம் விளையாடும்!...''— சாயங்காலம் படித்துக் கொடுத்தபோது வகுப்பில் சொன்ன கருத்துக்கள் அப்போது அவளது மனமுடுக்கிலிருந்து அம்பலத்துக்கு வந்தன!

அம்பலவாணனின் கடிதத்தை எடுத்து வைத்துக்கொண்டாள். கடிதத்தின் வரிகள் எதுவும் தெரியவில்லை. மின் விளக்கை நெருங்கிப் போனாள். வாசகங்கள் துல்லியமாகத் தெரிந்தன. வரிவரியாகப் படிக்கப் படிக்க, அவளுக்கு மனத்தை என்னவோ செய்தது. இதுவரை அக்கடிதத்தைப் பலமுறை வாசித்திருப்பாள். ஒவ்வொரு முறையும் குறை ஏதோ விட்டிருப்பது போலவும், அக்குறையை ஏதோ ஓர் உணர்வு தொட்டு நிற்பது போலவும் அவளது உள்ளுணர்வு எடுத்தியம்பியது. அவ்வுணர்வில் உருக்கமானதொரு மந்திர சக்தி ஊடுருவிப் பரவியதையும் அவளால் உணர முடிந்தது. அவ்வுணர்வு, அவளை எந்தவிதமானதொரு முடிவுக்கும் வரவொட்டாமல் தடுத்தது.

காலையில் ஸ்கூலுக்குப் புறப்படும்போது அவள் செய்த முடிவு என்ன?

முதல் நாள் மத்தியான்னச் சாப்பாட்டுக்கு வந்திருந்த போது, அறையில் அவளுக்காகக் காத்திருந்தது அம்பலவாணனின் தபால். அதைப் பிரித்து, கடிதத்தாளின் தலைப்பில் அச்சிடப்பட்டிருந்த பெயரைக் கண்டதும் அவளுக்கு ஓர் ஆர்வம் உந்தித் தள்ளினாலும், மேற்படி கடிதத்தைப் படித்து முடிக்கும் வரையிலும் அவள் மனம் கட்டுக் குலையாமல் இருக்கும்படிப் பார்த்துக்கொண்டாள். அவசரம் அவசரமாக மேற்படி கடிதத்தைப் படித்து முடித்ததும், அவள் அதைப்பற்றிச் சுத்தமாகவே மறந்துவிட்ட துறவுப் பாவனை கொண்டு, அதை மடித்து இருந்த இடத்தில் வைத்து விட்டாள். 'இன்பக் கனவுகூட தூக்க மயக்கத்தில்—உணர்வுகள் அடங்கித் தூங்கும் தருணத்தில்—பார்க்க வெகு ரம்மியமாகத்தான் இருக்கிறது!' என்றுதான் அவள் தன்னுள் நினைத்தாள். அப்படித்தான் அன்றையக் குறிப்பாக நாட்குறிப்பில் எழுதவும் செய்தாள். 'ஓர் இன்பக்கனவைப் போலவே திருவாளர் அம்பலவாணனின் கடிதத்தை நான் கருதி மதிப்பிட வேண்டியவளாக இருக்கிறேன். இன்றையத் தமிழ்ச் சமுதாய அந்தஸ்தின் விசித்திரக் கண்ணோட்டத்திலே, இத்தகைய ஒரு தீர்மானத்துக்கு நான் வருவதைத் தவிர வேறு மார்க்கம் ஏதும் புலனாகவில்லை எனக்கு. அவர் எங்கே? நான் எங்கே?'— இவ்வாறு அவள் முடிவு கட்டி— முடிவு காட்டி எழுதியிருந்தாள்.

ஆனால், இப்போது அவள் தனக்குத்தானே தீவிரமாக ஆலோசனை செய்து தீர்த்த பிறகு, அப்போது குறித்த வரிகள் தனக்கு வருத்தத்தைத் தருவதாக அவள் உணரலானாள். இம்மாறுதலுக்குக் காரணம் என்னவென்று பலமாக யோசித்து யோசித்துப் பார்த்தாள். விடிவு ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால், தலைவலி மட்டும் கிட்டியது. அந்தத் தலைவலி தீர மருந்து எதையும் நாடவில்லை அவள். அதற்குப் பதிலாக, அடுத்த தடவையாகவும் அக்கடிதத்தைப்

பிரிக்கத் தலைப்பட்டாள். இப்போது மண்டை நோவு பையப் பையக் குறைந்து வருவதாகவே அவளுக்குப் பட்டது. பட்ட மரம் தளிர்ப்பது போலவும் ஒரு பசுமை படர்ந்தது. மனம் கொண்டது மாளிகை!

எதிர்மறைப் பதில் அனுப்பி விடவேண்டுமென்றுதான் அவள் திடம் கொண்டு பேனாவும் கையுமாக மொட்டை மாடிக்கு வந்தாள். அப்போது, முடவனுக்கும் கொம்புத் தேனுக்கும் உள்ள மகத்தான வேறுபாடுதான் அவள் மனத்தில் மாபெரும் வைராக்கியமாக உருவெடுத்திருந்தது. பேனாவை எடுத்தாள். எடுத்து எழுத முனைவதற்குள், அவள் நாடி விழுந்து விட்டது!

'வலிய வரும் சீதேவியைக் காலால் எட்டி உதைப்பது போலத்தான் என் செய்கையும் ஆகிவிடும், நான் மிஸ்டர் அம்பலவாணனுக்கு உடன்பாடு தப்பிய பதிலை அனுப்பும் பட்சத்தில்!... அதைப்பற்றி அயலவர் எண்ணுவதைப்பற்றி அல்லது விமர்சிப்பதைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. ஆனால், என் முடிவின் காரணமாக, அந்த அன்பு உள்ளம் ஏமாற்றம் அடைந்து ஏங்கித் தவிக்காதா?' என்று அவள் சிந்தனையின் ஒரு பகுதியில் நின்று யோசித்தாள். அப்போது, சிந்தனையின் எதிர்ப்பகுதியிலிருந்து ஆதரவான சிரிப்புக் குரலொன்று எதிரொலித்தது. 'அந்த அன்பு உள்ளத்தை நீ மகிழச் செய்ய விரும்பினால், சம்மதம் என்ற ஒரே சொல்லின் மூலம் உன் எதிர்காலத்தை ஒரே வினாடியில் சிறப்பாக மாற்றிக் கொள்ளத் துணிவதுதானே? இப்படிப்பட்ட சௌபாக்கியம் கிட்டுவதென்பது உண்மை வாழ்க்கையிலே அபூர்வத்திலும் அபூர்வமல்லவா?'... என்று அந்தக் குரல் கேட்டது.

இரக்கவுணர்ச்சியின் விளைவாக எழுந்த இருவகை உணர்வுகளைப்பற்றித் தீவிரமாக அவளது கன்னிமனம் சிந்திக்க முனைந்தது. அப்போது, புதிய சிக்கலான வினா ஒன்றை அவள் மனச்சாட்சி கொக்கி போட்டுக் காட்டியது. 'அம்பலவாணன் எங்கே? நீ எங்கே?... அவனிடம் ஒரு

சரித்திரம் இருக்கிறது! ஆனால் உனக்கு?...'— இந்த ஒரு கேள்வி ஓராயிரம் குரல் மாற்றங்களோடு விதியின் தூண்டில்களாக அவளது இதயத்தை—இதயத்தின் இதயத்தைத் துருவித் துருவித் தைக்கத் தொடங்கியது. அவள் தீயிடை மலரானாள். கண்களை மூடிக்கொண்டு விம்மி அழுதுத் துடித்தாள். புலம்பு முத்துக்கள் மாலை தொடுத்தன. 'தெய்வமே! ஏன் என்னைப் படைத்தாய்?' என்று நெஞ்சம் நெக்குருக்கினாள்.

தெய்வத்திற்குக் கேள்வி கேட்கத்தான் உரிமை உண்டு. பதில் சொல்ல வேண்டியது மனிதர்களின் கடமை! இல்லையா?

முகத்தைத் துடைத்துக் கொண்டு திரும்பினாள். வாசலில் இராப்பிச்சை கேட்டான் ஓர் ஏழை. அவள் பிச்சை இட்டாள். அல்ல, அன்பை இட்டாள். அன்பு, சோறு உருக்கொண்டிருந்தது. "போதும் தாயே! இன்னிக்கு ராப்பொழுதைக் கழிச்சிடுவேன் நிம்மதியாய்!'' என்றான், பிச்சைக்காரன்.

ஆஹா, போதுமென்ற மனம் இவ்வளவு இனிமையாக இருக்குமா, என்ன?

அவனுடைய மனத்தைக் கேட்டதும்—கண்டதும் அப்படியே மலைத்து நின்று மீண்டாள்.

திரும்பவும் அவளுக்கு அக் கடிதம்தான் பார்வையில் சிக்கியது.

'ஆமாம்; இந்தக் கடிதத்துக்கு உடனடியாகப் பதில் எழுதி அனுப்பிவிட வேண்டும். இல்லையென்றால், என்னைப் பேராசைக்காரியாக உருமாறி விடச் செய்தாலும் செய்து விடும் இக்கடிதம்! மெய்தான். அவருக்கு நான் ஏற்றவளல்லள்! ஆனால், அந்த அன்பு மனம் என் பொருட்டுச் சஞ்சலம் அடையப் போகிறது!... இதுதான் 'விட்டகுறை—தொட்ட குறை'யின் விபரீதச் சலன விளையாட்டோ?...'

தமிழரசி பேனவையும் கடிதத்தாளையும் எடுத்துக் கொண்டு விளக்கு வெளிச்சத்தின் பாதத்தில் சம்மணம் கோலி உட்கார்ந்தாள்.

கடிதம் உருக் கொண்டது.

"அன்பிற்குரியீர்!

உங்கள் கடிதம் கிடைக்கப் பெற்றேன். ஆனால், நீங்கள் என்னை இப்படிச் சோதிப்பீர்களென்று நான் கனுக் கூட கண்டதில்லையே!

நான் ஊர் பேர் தெரியாத அனாதை.

உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்; என்னை மறந்து விடுங்கள்: தயை செய்து என்னை மறந்து விடுங்கள்! பெரு மனம் கொண்டு என்னை மன்னித்தும் விடுங்கள்!

ஆனால், ஒன்று:

உங்கள் தூய அன்பை நான் இப்பிறவியில் மறக்கவே மாட்டேன்; என்னால் அவ்வன்பை மறக்கவும் முடியாது. ஏனென்றால், அந்த அன்புதான் எனக்குத் தெய்வம்!

அந்தத் தெய்வம்தான் என் விதி!

இப்படிக்கு,
தமிழரசி."

அச்சிடப்பட்ட சட்டத்தின் விதியைப் படிப்பதுபோல அவள் அக் கடிதத்தைத் திருப்பிப் படித்தாள். அதை உறையிலிட்டாள்; ஒட்டினாள். விலாசம் எழுதினாள். ஆரம்பமான சுவட்டிலேயே முடிந்து விட்ட ஒரு கதையின் சோகக் கடிதத்தை உள்ளங்கைக்குள் அவளால் அடக்கிக் கொள்ள முடிந்தது. ஆனால், அவளது பெண் மனம் அவளையும் மீறித் துடித்தது; துவண்டது! மனச்சுமையை இறக்கி வைக்கக் கண்ணீரைச் சுமைதாங்கி ஆக்கினாள். அழுதாள்; அழுது கொண்டே இருந்தாள்!

சுழல் விளக்கின் ஒளி மாடியில் வீசியது; வீசிய போக்கி லேயே மறைந்து விட்டது.

அவளைப் பெயரிட்டு யாரோ அழைத்தார்கள். குரலின் அழைப்பு படிதாண்டி மேலே வந்தது. அவள் கீழே வந்தாள். சேலைத் தலைப்பில் அவள் சுமை இறங்கியிருக்க வேண்டும். கீழே நடைபாதைக் குடும்பத்தைச் சேர்ந்த சீதைதான் கூப்பிட்டாள்.

"அக்கா, சாப்பிடலீங்களா அக்கா?" என்று பரிவுடன் விசாரித்தாள்.

"சாப்பிட வேண்டியதுதான்!" என்றாள் தமிழரசி. குரலில் ஜீவன் இல்லை.

"என்ன அக்கா, ஒரு மாதிரி பேசுறீங்க?"

"ஒண்ணுமில்லெம்மா;..."

சீதை நகர்ந்தாள்.

"நில்லம்மா!" என்று சொல்லி உள்ளே சென்று மீண்டாள், பள்ளி ஆசிரியை. அவள் கையில் குழம்பு நிரம்பிய கிண்ணம் இருந்தது. நீட்டினாள்.

சீதை வாங்கிக் கொண்டாள்.

"உங்க அப்பாருக்கும் ஆயாளுக்கும் இப்ப எப்படி உடம்புக்கு இருக்குது, சீதை?" என்று பாசத்துடன் கேட்டாள்.

"இப்ப பரவாயில்ல. நாளைக்குச் சரியாகிப்பிடும். ஆமா, உங்க அப்பா, அம்மா ஊரிலேயோ இருக்காங்க அக்கா?" என்னும் கேள்வியை அவளிடம் சமர்ப்பித்தாள் சீதை.

"நான் அனாதை, தாயே!......" என்று கட்டுப்படுத்த முடியாத வேதனையின் ஆற்றாமையுடன் விம்மினாள் தமிழரசி. துன்பத்தின் உருக்கம் கண்ணீரானது.

"அப்பிடிங்களா அக்கா! ஐயோ, பாழுந்தெய்வமே!" என்று ஏழைப்பெண் சீதை அனுதாபப்பட்டாள்.

""ஐயையோ! தெய்வத்தைத் திட்டக்கூடாது சீதை!..."" என்று பதட்டத்துடன் கூறினாள் அவள். சீதையின் அன்பைப் போற்றினாள்; அன்பின் அவதாரமான அந்த அனுதாபத்தை மதித்தாள். 'ஆம்; அன்பின் வழியது உயர்நிலை!'— அவள் சீதையைத் தலைநிமிர்த்தி நோக்கினாள்.

சீதையின் கண்கள் பனித்திருந்தன.

"எனக்காக நான் ஒருத்தி அழுது தீர்ப்பது போதாதாம்மா? நீ வேறு அழ வேணுமா. என்ன?" என்றாள். சீதையின் கண்களைத் துடைத்துவிட்டாள். அவளை வழி அனுப்பி வைத்தாள்.

மனம் பேதலிக்கும் சமயங்களில் அவள் 'தமிழ்மறை'யை நாடுவது வழக்கம். நாடினாள். தமிழ்மறையைச் சுடுசரம் நாடியது.

மீண்டும் வந்தாள் சீதை. ""அக்கா, அக்கா! எங்க அண்ணாச்சி பட்டாளத்திலேருந்து இன்னம் பத்துப் பதினைஞ்சு நாள் டயத்துக்குள்ளாற வந்துடுமாம்! மிலிட்டரி ஆள் சொல்லிட்டுப் போனாங்களாம் ஜீப் காரிலே!"" என்று பாசத்தின் நெருக்கமான பிணைப்புடன் தெரிவித்தாள்.

""ரொம்ப சந்தோஷம் சீதை!""

சீதை போய்விட்டாள்.

எதிர்ப்புற வீட்டில் புதுமணத் தம்பதியரின் பேச்சும் சிரிப்பும் புத்துருக்கு நெய்யென மணத்தன.

சாப்பிட்டோமென்று பேர் பண்ண எண்ணியவளாக தமிழரசி உணவுக் கலத்தின் முன் அமர்ந்தாள்.

செய்தி வாசிப்பு அப்போதுதான் முடிந்திருந்தது, ரேடியோவில்.

சாப்பிட்டு எழுந்தாள். கை கழுவினாள். உள்ளே திரும்புகையில், ""ஸிஸ்டர்!"" என்ற குரல் கேட்டது.

கேட்டுப் பழகிய குரல்.

பார்த்துப் பழகிய முகம்.

உணர்ந்து பழகிய மனம்.

அழைத்தவள் சுடர்க்கொடி. அவளன்றி, "ஸிஸ்டர்!" என்று உரிமை பூண்டு, உறவு பூண்டு அழைப்பவர் வேறு யார் இருக்கிறார்கள்!

வாசலை அடைத்துக்கொண்டு நின்றது கார்.

"வா, சுடர்க்கொடி! சாப்பிடலாம் வா!" என்று முகமன் மொழிந்தாள்.

"அத்தான் தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் திருச்சிவரை போகிறார். அவரை வழியனுப்பப் போகிறேன் நான். வழியில் உங்களைப் பார்த்திட்டுப் போகலாம்னு வந்தேன். பார்த்து ஒரு மாசத்துக்குக்கிட்டே ஆயிருக்குமே!" என்று சொல்லியபடி உள்ளே வந்து உட்கார்ந்தாள்.

"ஆமாம், ஆகியிருக்கும் என்றாள் தமிழரசி.

தமிழரசியை உன்னிப்பாகப் பார்த்தாள் சுடர்க்கொடி. "என்ன தமிழரசி, உங்க முகம் கொஞ்சம் அசைத்த மாதிரி வீங்கியிருக்குதே, உடம்புக்குச் சரியில்லையா?" என்று ஆதரவுடன் சொற்களை அடுக்கினாள்.

அவள் நலிந்த முறையில் ஒப்புக்குச் சிரித்து மழுப்பினாள்; "அதெல்லாம் இல்லை. சும்மா அப்படித் தோணும்!"

தமிழரசியின் திருஷ்டியில் மேஜைமீதிருந்த அந்தப் பதில் கடிதம் ஞாபகத்தில் உறுத்தியது. அதைத் தன் தோழியிடம் கொடுத்து பையில் சேர்ப்பித்து விடும்படி வேண்டினாள். பொழுது விடிவதற்குள் மனித மனத்தின் சபலம் எப்படி எப்படித் திசை திரும்புமோ என்று கவலை அவளுக்கு!

அதைச் சுடர்க்கொடி வாங்கி டம்பப் பைக்குள் திணித்தாள்!

கடிதம் சுடர்க்கொடியிடம் கைமாறியதும்தான், தமிழரசிக்கு ஓர் ஆறுதல் கனியத் தொடங்கியது. வாழ்க்கையில் யதார்த்தமானதும் நியாயமானதுமானதொரு

நேர்வழியில் நடந்து கொண்டதாக அவளுக்கு உள்ளூற ஒரு பெருமிதம் கிளைத்தது. அவள் மனச்சான்று அப்படித்தான் விமர்சனம் செய்தது; முடிவும் செய்தது.

"ஸிஸ்டர், உங்களுக்கு என்னோட அத்தான் அம்பலவாணனைத் தெரியாதல்லவா? அடுத்த வாரம் நீங்க பங்களாவுக்கு வரும்போது கட்டாயம் உங்களுக்கு அவரை இன்ட்ரடியூஸ் செய்கிறேன். ரொம்ப நைஸ் ஜென்டில்மேன் அவர்!...... தனி மனிதர் அவர். ரொம்பவும் இளகிய மனசு! தங்கமான அத்தானுக்கும்!" என்று பூரிப்புடன் விளக்கினாள் சுடர்க்கொடி.

சுடர்க்கொடி பேச்சு வாக்கில் சொன்ன 'அம்பலவாணன்' எனும் பெயர் தமிழரசியை மலைக்கச் செய்தது. என்றாலும், சமாளிக்கத் தெரிந்தவள் சமாளித்துக் கொண்டாள்.

"அப்படியா? ரொம்ப மகிழ்ச்சி ஸிஸ்டர்!" என்று நிர்மலமாகச் சிரித்தாள், தமிழரசி.

சிரிப்பின் அலைகளிலே, பாசம் பூண்ட நட்பின் செறிவு மிளிர தோழிமார் இருவரும் சிரித்தார்கள். சிரிப்பு நிமிஷங்கள் சிலவற்றை விழுங்கின.

"அத்தான் காத்துக்கிட்டு இருப்பார். வரட்டுமா ஸிஸ்டர்?" என்று சொல்லி, 'டாடா' மொழிந்து, பறந்தாள், சுடர்க்கொடி. அவளுடைய காருக்குப் பறக்கத் தெரியும் போலும்!

'அம்பலவாணன்!' — சுடர்க்கொடியின் குரல் தமிழரசியின் நெஞ்சில் எதிரொலி கிளப்பியது.

'யார் இந்த அம்பலவாணன்?...'

தமிழரசி சிலை ஆனாள்!

சிலை தமிழரசி ஆனது!...

## " உங்க இனிஷியல் என்ன ? "

நான்கு

விடிந்தால் ஞாயிற்றுக்கிழமை.

பொழுது சுலபமாகவும் எளிதாகவும் விடிந்துவிடும்.

அதற்குத் தடைபோட, இது அனசூயை யுகம் அல்லவே!

பொழுது விடிவதும் விடியாததும் ஒரு பக்கம் இருக்கட்டும்.

ஆனால், அன்றையப் பொழுதுக்குப் 'பதில்' சொல்ல வேண்டாமா?

அன்று சனிக்கிழமை.

அரைப்பள்ளிக்கூடம்.

காலத்தின் சுறுசுறுப்பும், கடமையின் சுறுசுறுப்பும் போட்டி போட, தமிழரசி மூன்று வகுப்புக்களை முடித்துக் கொண்டாள். முந்நீர் விழா, குறில்—நெடில் விளக்கம், இந்திராவுக்கு ஜவாஹரின் கடிதங்கள் முதலிய பாடங்கள் போதிக்கப்பட்டன.

அடுத்த நாற்பத்தைந்து நிமிஷம் அவளுக்கு ஓய்வு. என்றாலும், ஆறும் வகுப்பு ஆசிரியைக்கு உடல் நலம் இல்லாத காரணத்தால் பள்ளிக்கு வரவில்லை. அவ்வகுப்பைத் தமிழரசி பார்த்துக் கொள்ளும்படி மேலிடம் பணித்தது. அவள் சென்றாள். செல்லும் தருணம், பருகிய காப்பியின் சுகம் அவளுக்குத் தெம்பளித்தது. கையில் கொண்டு போயிருந்த புத்தகங்கள் சஞ்சிகைகளை மேஜைமீது வைத்து விட்டு அமர்ந்தாள். அவ்வகுப்பு மாணவிகள் எழுந்து நின்று அமர்ந்தார்கள். ஒருமுறை வகுப்பை நோட்டம் பதித்தாள்.

கோடியில் சிறுமி ஒருத்தி காணப்பட்டாள். சீனத்துச் சிறுமி. அவளைப் பார்த்ததும், ஒருமுறை தன்னுடைய ஆசிரியைத் தோழி தன்னிடம் சொன்ன விருத்தாந்தத்தை நெஞ்சில் கொண்டாள், தமிழரசி.

அப்போது சீனக்காரன் இந்திய மண்ணைச் சுவைத்து ருசி பார்க்க முனைந்த நெருக்கடி மிகுந்த நேரம். இந்தச் சீனப் பெண் சிங்மிங் பள்ளிக்கு வந்திருக்கிறாள். வகுப்பில் ஒரு வரும் அவளுடன் பேசவில்லையாம். சிறுமிக்குக் காரணம் விளங்கிவிட்டது. ''இதோ பாருங்க, நான் பிறந்ததென்னவோ சீன நாட்டிலேதான். ஆனால், என் மனசு வளர்ந்தது உங்க மண்ணிலேதான்; அதாவது, எனக்கும் சொந்தமான இந்த மண்ணிலே தானாக்கும்! எங்க நாட்டுக்காரன் செஞ்ச அநியாயத்துக்கு நீங்க என்னோடே பேசாமல் இருந்தா இது நியாயமாப்படுதா, அக்காமாருங்களே! இப்ப வாங்க, எங்க வீட்டுக்கு. அங்கே காந்தி மகாத்மாவும் நேருஜியும்தான் எங்க வீட்டிலே இருப்பாங்க. எங்க நாட்டுத் தலைங்களை ஒண்ணுகூட நீங்க காணமுடியாது!'' என்று அழகான தமிழில் உணர்ச்சிப் பெருக்குடன் பேசினாள். இப்பேச்சைக் கேட்க நேர்ந்த வகுப்பின் ஆசிரியை அச்சிறுமியின் விவேகமான பேச்சைக்கேட்டு மனம் நெகிழ்ந்து, உடனே தலைமைப் பீடத்தில் இவ்விவரத்தை எடுத்துரைத்தாள். அதிலிருந்து, அந்தச் சீனத்துச் சிங்காரச் சிறுமி என்றால், அப்பள்ளியில் தனிப் பாசம்தான்! அவளைப் பார்த்துப் பெருமையுடன் புன்னகை பூத்தாள் தமிழரசி...!

மாணவிகளைப் பார்த்து, ''இப்போது என்ன பாடம்?'' என்று கேட்டாள்.

''சமூகம்!''

''அப்படியா?'' என்று சொல்லி, ஒரு விநாடி நிறுத்தினாள்.

''டீச்சர், டீச்சர், இப்போது நடக்கிற சண்டையைப் பத்திச் சொல்லுங்க டீச்சர்!'' என்று பேசி வைத்த மாதிரி ஒரே குரலில் கேட்டுக் கொண்டார்கள்.

வளர்ந்து வரும் இளைய பாரதத்தினரின் வீறு மிக்க எழுச்சியைப் படிப்படியாகக் கவனித்து வரும் தமிழரசிக்கு அவ் வகுப்பின் இளம் நெஞ்சங்களின் தேசப்பற்று மிகுந்த

ஆறுதலைத் தந்தது. தமிழன் சிறப்பையும் நாட்டுப் பக்தியையும் தேசிய ஒருமைப்பாட்டுத் தத்துவத்தையும் வகுப்புக்கு ஏற்ற வகையில், தேனில் செந்தூரத்தைக் குழைத்துக் கொடுப்பதுபோல அவள் ஊட்டி விடுவது வழக்கம். இப்போது, அவள் நிமிர்ந்து உட்கார்ந்தாள். நெற்றியை அவளது தளிர் விரல்கள் வருடின. நடப்புச் சண்டையைப் பற்றிய சிந்தனையில் அவள் மனம் ஊடுருவியது.

நிர்ணயிக்கப்பட்டிருந்த நாட்டின் எல்லையைத் தாண்டி நிலைத்து விட்டிருந்த தர்மத்தின் எல்லையைத்தாண்டி ஊடுருவல் செய்து வந்த பாகிஸ்தானின் அநியாயச் சதிகளைப்பற்றிய நிகழ்ச்சிகளை அவள் எண்ணமிட்டாள். திணை வகுத்து, துறை பிரிந்து நிகழ்ந்த புறநானூற்று நிகழ்ச்சிகள் அவளுள் மோதின. பிறகு ஒரு தெளிவுடன், "இப்போது நடக்கும் யுத்தத்தைப்பற்றி ஒரு வரியில் சொல்லிவிடலாம். தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் நடக்கிற சண்டை இது. பாரதப் போரின் முடிவுதான் உங்களுக்குத் தெரியுமே! அதுபோலத் தான் இப்போரின் முடிவும் ஆகும்!" என்றாள், தீர்க்க தரிசனம் மிகுந்த தர்மத்தின் உண்மைத் தத்துவத்துடன்,

தமிழரசி தலையை நிமிர்த்திய போது, தர்மப் புன்னகை சொடுக்கி நின்ற காந்தி மகாத்மாவைத் தரிசித்தாள்.

கூட்டத்தில் நிலவியிருந்த ஆழ்ந்த அமைதி திடுமென்று கலைந்தது.

தமிழரசி திகைப்படைந்தாள்!

அருகிருந்த கிணற்றடியில் கூட்டம் கூடியிருந்தது. தலைமை ஆசிரியையின் உருவமும் இருந்தது.

வகுப்பில் கட்டுப்பாடு கையாளப் பட்டது.

தமிழரசியின் வகுப்பு என்றால் கட்டுப்பாட்டுக்குப் பஞ்சமிருக்குமா, என்ன?

வழி மறித்துச் சென்ற தலைமை ஆசிரியை, வழி விலக்கி வந்து சொன்னாள்: "மூன்றும் வகுப்பிலே ஒரு அனாதைப் பெண்ணை இன்னொரு பணக்காரப் பெண், 'அப்பன் ஆத்தா

பேர் தெரியாத அனுதை நீ!' அப்படின்னு ஏசிட்டுதாம். இந்தப் பேச்சைப் பொறுக்காத அந்த அனுதைப் பெண் பாவம், மனசு நொந்து கிணத்திலே விழுந்திருக்குது. நல்ல வேளை தப்பிட்டுது!'' என்று சொல்லிச் சென்ருள்.

தமிழரசியின் சிவந்த முகம் வெளுத்து விட்டது. மனம் கலங்கி, விழி கலங்கினுள். தன்னை நினைத்து, விதியை நினைத்தாள். விதியை நினைத்து, வினையை நினைத்தாள். வினையை நினைத்து, ஆண்டவனை நினைத்தாள்!...

அதற்குள் மணி அடிக்கப்பட்டது.

வாத்தியாரம்மாக்களின் ஏகோபித்த நாட்டுப்பற்றுக்கு நிச்சயிக்கப் பட்ட ஓர் அடையாளமாக அவரவர்களின் சம்பளத் தகுதிக்கு ஏற்றபடி சேர்ந்திருந்த யுத்தநிதி ஓர் ஆயிரத்தை எட்டிவிட்டது. அத்துடன், பள்ளியின் நிறுவனர், அன்று அளித்த வாக்குப்படி தம் பள்ளியின் பேரால் ஓர் ஆயிரம் அளித்தார்! இரண்டையும் சேர்த்து, மத்தியானம் மூன்று மணி அளவில் தலைமை உபாத்தியாயினி சரோஜினி மூர்த்தி தன் சக ஆசிரியைகளுடன் கோட்டையின் அரசாங்க அலுவலகத்திற்குச் சென்று முதலமைச்சரிடம் நேரில் சமர்ப்பித்துத் திரும்பினுர்கள். வழியில் ஆளுக்கொரு காப்பி கிடைத்தது. இது திருமதி மூர்த்தியின் அன்பளிப்பு. ஆசிரியைமார்களின் ஒத்துழைப்புக்கு நன்றியைப் பற்ருக்கி, காப்பிக்கெனச் சொல்லப்பட்ட நன்றியை வரவாக்கினுள் தலைமை ஆசிரியை.

அண்ணுமலை மன்றத்தை முச்சந்தியாக்கிப் பிரிந்தவர்கள் போக மிச்சப் பேருக்குச் சட்டக்கல்லூரி நாற்சந்தி ஆனது.

தமிழரசி குடையை விரித்தாள். இறங்கு முகச் சூரியனைத் தன்குடை நிழலில் ஆண்டாள்.

'பாரிஸ் கார்னர்' வந்தது.

நேரே அறைக்குப் போகலாமா என்று மறுகினுள். நாளைக்குத்தான் லீவு இருக்கவே இருக்கிறது. இன்றுள்ள மிகுதிப் பொழுதைக் கழிக்கவேண்டுமே! ரேடியோப் பேச்சுக்

கட்டுரை தயாரிக்க வேண்டும். அதற்கு நாளை இரவு போதும். வித்துவான் படிப்பு அதற்குக் கணிசமாகக் கைகொடுக்கும்.

அவளுக்குச் சாந்தோமின் ஞாபகம் சுரந்தது. அவ்வூரின் நினைவு அவளுக்கு அன்பாய்ச் சுரந்தது. அன்னை இல்லத்தின் தலைவிக்குத் தபால் போட நினைத்திருந்தாள். அதற்கு வேலையின்றி, அந்தத் தாய் தொலைபேசியில் அவளுடன் தொடர்பு கொண்டு நலம் விசாரித்துக் கொண்டாள். ஆனாலும், அம்மையாரின் முக தரிசனம் காண அவள் மனம் ஆசைப்பட்டது. முன்தினம் அவள் அம்பலவாணனுக்குரிய தபாலை எழுதி, சுடர்க்கொடியிடம் கொடுத்துத் தபாலில் சேர்ப்பிக்கும்படி வேண்டியதை நினைத்துக் கொண்டாள்.

சுடர்க்கொடி அவள் அத்தானைப்பற்றித் தன்னிடம் புகழ்ந்துரைத்தபோது, மிஸ்டர் அம்பலவாணன் என்பதாகத் தன் அத்தானின் பெயரை அவள் குறிப்பிட்டதைத் தமிழரசி எண்ணி எண்ணிப் பார்த்தாள். 'என்னை நேசிக்கும் அம்பலவாணனாக அவள் அத்தான் இருந்துவிட்டால்?... ஊஹூம், அப்படி இருக்க முடியாது! ஒரே பெயரில் ஓராயிரம் உருவங்கள் இருக்கும். இந்த அம்பலவாணன் சுடர்க்கொடியின் அத்தானாக இருந்திருந்தால், அவர் என்னை ஏன் நேசிக்கப் போகிறார்?'—நியாயவாதம் வளர்ந்தது. மனம் அன்று என்னவெல்லாமோ எண்ணி எண்ணி அலைபாய்ந்து தவித்தது. ஆகவே, தனியாக வீட்டில் இருக்க நேர்ந்தால், இராத்தூக்கம் கெட்டுவிடும்: மறுநாள் தன் உடல் நலத்தில் குந்தகம் விளைந்து விடும் என்று கவலைப்பட்டாள். ஆகவே, கஸ்தூரி அன்னை இல்லத்துக்குப் போய்த் திரும்பவே அவள் துடித்தாள். ஆனாலும், இரவு காலம் கடந்து விட்டதால், அவள் போகவில்லை; தன் வீட்டிலேயே இருந்து விட்டாள். சித்தர் பாடல்களைத் துணை இருக்கச் செய்தாள். பொழுதும் எப்படியோ புலர்ந்தது. கடமைகளும் தொடர்ந்து நிறைந்தன.

ஆகவே, இப்போது அவள் சாந்தோம் செல்ல முடிவு செய்தாள். சாந்தோம் பஸ் நிற்குமிடத்தை அடைந்தாள்.

அவளுக்கு மகிழ்வு பூம்புனல் வெள்ளமாகப் பாய்ந்தது; மடை கட்டிப் பாய்ந்தது.

ரத்தச் சிவப்பை அள்ளிப் பூசிக்கொண்டு வானம் விளங்கியது. அதனிடமிருந்து கடன் வாங்கிக்கொண்டு ரத்தத்தை வண்ணமாக்கிப் பூசிக்கொண்டு பவனி வந்தன டவுன் பஸ்கள்.

அவள் செல்ல வேண்டிய பஸ் வந்து நின்றது.

கால் செருப்பில் இடறிய சேலையின் கரைக்கட்டுப் பகுதியை ஒதுக்கி விட்ட வண்ணம், வண்ணச்சேலை வண்ண ஒளியில் வண்ணம் காட்டித் திகழ, பஸ்ஸினுள் ஏற முனைந்தாள்.

அப்போது. "டீச்சர்!" என்ற குரல் கேட்டது.

தமிழரசி விரைவு பாய்ச்சி ஏறிய அதே துரித கதியுடன் இறங்கினாள். பஸ்ஸின் கண்ணாடி வழியே மஞ்சள் வெயில் ஊடுருவி, அது தமிழரசியின் சிவந்த கன்னங்களைத் தழுவியது. அவளுடைய கோல விழிகள் கூசின. காதளவில் பிசிறு தட்டிக் கிடந்த பூமயிர் இழைகளைக் கோதிவிட்டுக் கொண்டு படிதாண்டி மண் மிதித்தாள். 'ஸ்டெட்' இரண்டும் மின்னின.

சாக்கடைக் குழாய்களைப் பொருத்துவதற்காகப் பள்ளங்கள் வெட்டப்பட்டிருந்தன. ஆகவே, நாசூக்காகச் சேலையைக் கொய்துகொண்டு வெகு லாகவமாக அப் பள்ளத்தைத் தாண்டினாள். "டீச்சர்! சுகமா?" என்று மீண்டும் அதே குரல் ஒலித்தது. குரலில் பண்புடன் கூடிய பாசம் பேசியது.

தமிழரசி அக்குரலுக்குடைய இளைஞனை நிமிர்ந்து பார்த்தாள்; ஆணவமான நெஞ்சழுத்தத்துடன் பார்த்தாள். அப்பார்வை அந்த இளவட்டத்தை வட்டமிட்டுச் சுற்றி முடித்து, பிறகு, வட்டத்தைவிட்டு, அந்த இளவட்டத்தை விடுதலை செய்தது.

''சுகமாய் இருக்கீங்களா?''

''ஓ!''

''என்னைத் தெரிகிறதா?''

''ஓ!''

சென்னை மாநகராட்சியின்பால் அடங்கிய உயர்நிலைப் பள்ளிக்கூடங்களுக்குள்ளே ஒரு பேச்சுப் போட்டி தமிழில் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு மண்டபத்தில் நடந்தது. அதில் தமிழரசியும் எஸ். எஸ். எல். சி. வகுப்பின் சார்பாகக் கலந்து கொண்டாள். இந்த இளைஞனும் போட்டிக்கு வந்தான். இவனுக்குப் பெயர் இருந்தது. அது : தில்லைக்கூத்தன் என்பதாகும். தில்லைவாசி. பணத்தில் படகோட்டும் 'பாக்கியசாலிக் குழந்தை!'— இவை அவளுக்குப் பின்னர் கிடைத்த புள்ளி விவரங்கள்.

போட்டி நடந்தது.

முதற்பரிசு தமிழரசிக்குத்தான்!

பொறுமை வந்து தொலைத்தது இந்தப் பிள்ளையாண்டானுக்கு. அப்போது, இந்த 'ஹிட்லர் மீசை'யை வைத்துத் தொலைக்கத் தைரியம் வரவில்லை. இருந்தாலும், வாய்ச் சவடால் அடிக்கமட்டும் தைரியம்—அசட்டுத் தைரியம் வந்தது போலும்!'' பொம்பளைன்னு ஒரு மவுஸ்தான்! நான் மட்டும் குறைச்சலாவா பேசினேன்?'' என்று தன்னுடைய சகாக்களுடன் வழியில் நின்று வம்பளந்து கொண்டிருந்தான்.

குறுக்கிட்டுச் சென்றாள் தமிழரசி, பரிசுப் பதக்கம் கையிலும், நகை முத்து இதழிலும் குலுங்க. அவளுக்கு அவன் பேச்சுக் கேட்டது. அவள் கேட்கவேண்டுமென்று தானே அவனும் பேசினான்?

ஆனால், விளைந்தது என்ன தெரியுமா?

''மிஸ்டர், இவ்வளவு ஆண்களுக்கு ஊடே பெண்ணான நான் வெற்றி பெற்றுவிட்டேனே என்கிறதிலே எனக்குத் தற்பெருமை கூடுதல்தான். அதுக்காக உங்ககிட்டே வந்து

என் பெருமையைத் தம்பட்டமடித்தேனா? நீங்கள் தோற்று விட்டீர்கள். அதை மறைக்கிறதுக்காக, எதற்கு வீணாக என்னைத் தாழ்த்திப் பேச வேணும்? நீங்க அக்கா தங்கச்சியோடே பிறந்தவர்தானே? தமிழ்ப் பண்பாட்டைப் பத்தி நீங்க நாலு பேர் மெய்க்கப் பேசுவீங்க; ஆனா அதே பண்பாட்டைக் காப்பாத்திக்கிட மட்டும் தெரியாது. என் மாதிரி தலைநிமிர்ந்து நடக்கிறதுக்குப் பழகுங்க. தலை குனியாதிங்க...... போங்க...! தமிழ்ச் சமுதாயத்திலே தமிழ்ச்சாதிக்கு மதிப்பும் கவுரவமும் அதிகம். அதைக் காப்பாத்துறதுக்கு உங்க அளவுக்குப் பாடுபடுங்க!... வம்பை விலை குடுத்து வாங்காதீங்க! அன்பை வாங்கறதுக்கு விலை கொடுக்க வேணும்!... போயிட்டு வாரீங்களா பிரதர்?'' என்று ஒரு போடு போட்டாள் தமிழரசி.

அவ்வளவுதான்.

இளவட்டம் தில்லைக்கூத்தன் தன் வாலைச் சுருட்டிப் பத்திரமாக 'ஸ்லாக் ஷர்ட்டின்' பைக்குள் வைத்துக்கொண்டு நண்பர் குழாத்துடன் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று தலைமறைந்து, ஓர் ஆலமரத்து முடுக்கில் நின்று நாலு சிகரெட்டை ஒட்டு மொத்தமாக இழுத்து முடித்ததும்தான் அவன் முகத்தில் வழிந்த அசட்டுக்களை கொஞ்ச நஞ்சமாவது மறையத் தொடங்கியது.

நடந்த நடப்பைச் சுற்றி நடந்து மீண்டாள் தமிழரசி. மார்புடன் அணைத்திருந்த புத்தகங்களைச் சற்றே நெகிழ்த்துக் கொண்டாள். இளைஞனைத் தலை நிமிர்ந்து நோக்கினாள்.

தில்லைக்கூத்தன் இப்போது கண்ணியமான மலர்ச் சிரிப்புடன் அவளிடம் ஒரு திருமண அழைப்பைக் கொடுக்கத் தயாராக நின்றான். பேனாவைத் திறந்து வைத்துக்கொண்டு, ''உங்க இனிஷியல் தெரியலே. இனிஷியல் என்ன?'' என்று கேட்டான்.

இக்கேள்வி அவளது முகமலர்ச்சியை உண்டது. என்றாலும், சமாளித்துக்கொண்டு, ''பேர் எழுதியாச்சில்ல. அது போதும்!'' என்று அவள் தடுமாற்றத்துடன் சொல்லி

முடிப்பதற்கும் அவன் அவளிடம், ""இது என் திருமணப் பத்திரிகை!'' என்று வெட்கத்துடன் விவரம் அறிவித்து அவள் வசம் மடலைச் சேர்ப்பித்து முடிப்பதற்கும் சரியாக இருந்தது.

ஸ்கூலுக்கு இரண்டுமுறை வந்து பார்த்தானுமே தில்லைக் கூத்தன்!...

நன்றியை உதிர்த்தபின், பஸ்ஸில் ஏறி அமர்ந்தாள்; டிக்கட் வாங்கினுள் மிஸ் தமிழரசி.

பிராட்வேயைத் தொடும் நாற்சந்தியில் குறுக்கு மறித்து ஓடிய சைக்கிளில் தில்லைக்கூத்தனைக் கண்டாள். அன்றொரு தினம் பள்ளி செல்லும் பாதையில் இதே யுவன் தன்னைக் கண்டதும் சைக்கிளை நிறுத்தியதை உணர்ந்து, முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டு மறுகித் திரும்பிவிட்ட சம்பவத்தை அவள் மறதியின் பிடியிலிருந்து துடைத்தெடுத்தாள். 'பாவம்!'— என்று அவள் உதடுகள் உச்சரித்தன. 'பாடம் சொல்லிக் கொடுக்க வாத்தியாரம்மா கிடைத்து விட்டாள் மிஸ்டர் தில்லைக்கூத்தனுக்கு! இனி அவருக்குப் பயமில்லை!' என்று தனக்குள் முடிவு செய்து அபூர்வமாகச் சிரித்துக்கொண்டாள்.

பஸ் புறப்பட்டது!

## பாசக் குதூகலம்

### ஐந்து

பாரதிக்குத் தெய்வங்கள் என்றுல் வெகு இஷ்டம். அவர்களைப் பார்த்தால்—பார்த்து எண்ணினுல், பாரதிக்கு ஏற்படக்கூடிய ஆனந்தத் திளைப்பு இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது.

பாரதி கவிஞர்.

அதனுல்தான், பராசக்தியை நேருக்கு நேர் நின்று கேட்கிறுர், 'சிரிக்கின்ற வரம் தா!' என்று.

இந்தப் பாடல் வரியை ஒரு நாளைக்கு ஒரு தரமாவது சொல்லிப் பார்க்காமல் இருக்கமாட்டாள் தமிழரசி.

பஸ் ஓட்டமாக ஓடிக் கொண்டிருந்த அந்நேரத்திலும்கூட அவளுக்கு அவ்வரி மறக்கவில்லை, அத்துடன், இடுக்கண் வருங்கால் சிரிக்கச் சொன்ன சித்தாந்தத்தையும் அவள் மறக்கவில்லை. ஆகவேதான், அவள் சிரித்தாள்; அதாவது, தன்னுள் சிரித்தாள். மூடியிருந்த சிவந்த அதரங்களை உள் வட்டமாகச் சுற்றியவாறு இருந்த சிரிப்பின் அலைகளை அவள் செவிகள் மட்டுமே கேட்டன. ஆனால், அவள் மனம் அவளையும் மீறிக் கொந்தளிப்புக் காட்டியது. என்ன பாடு பட்டும் அவளால் அதைக் கட்டுப்படுத்தக்கூட முடியவில்லை. ஏதேதோ சம்பவங்கள் சட்டை உரித்துக்கொண்டு ஏடு விரிந்தன.

எதை நினைப்பாள்?

எதை மறப்பாள்?

அனாதை என்ற ஏச்சுப் பேச்சைக் கேட்கச் சகிக்காத பிஞ்சுச் சிறுமி, மனம் வெறுத்துக் கிணற்றில் விழுந்த நிகழ்ச்சியை அவள் மறுபடியும் உணர்ந்து பார்த்தபோது, அவளுக்குச் சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன. 'நானும் ஓர் அனாதைதான். ஆனால், நான் மட்டும் உயிரோடு இருக்கிறேன்!'— இதற்கு மேலே அவளால் எதையும் தொடுக்க முடியவில்லை. காரணம், அவளுக்குக் கண்ணீர் கரையுடைத்துக்கொண்டு வந்ததுதான்.

டிக்கட் பரிசோதனை நடந்தது.

இந்த மனம் இருக்கிறதே மனம், அதற்கு ஒரு கண மேனும் சும்மாவே இருக்கத் தெரியாதோ?

"உங்க இனிஷியல் என்ன?"

தில்லைக்கூத்தன் கேட்ட கேள்வி இப்போது அவளை ரம்பமாக அறுத்தது. நெஞ்சத்தில் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன வண்ணத்துப் பூச்சிகள். மனத்தின் உள்ளே ஏற்பட்ட சலனம் உடல் வெளியில் வேர்வையாக வழிந்தது.

அவள் இடுப்பை நகர்த்தி நிமிர்ந்து குந்தினாள். உடைகளைச் சரி செய்தாள். நின்றிருந்த பிரயாணி ஒருவன் பிராணியாகத் தன்னை ஆக்கிக்கொண்டு, தன்னையும் தன்னைச் சுற்றியும் வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். 'உடன் பிறந்தானுடன் உடன் பிறக்காத சகோதரர் போலிருக்கிறது!' அவனை ஏளனமாகவும் அனுதாபத்தோடும் அவள் பார்த்தாள். அந்த இளவட்டத்தின் திருஷ்டி அவளிடமிருந்து விலகி, அவளுக்கு அருகில் இருந்த இடத்துக்குத் திருஷ்டி கழித்தது.

இப்போதுதான் தமிழரசிக்குத் தன் பக்கத்தில் இருந்த பெண்ணைப் பார்க்கத் தோன்றியது. பார்த்தாள்.

அந்த யுவதி நாகரிகத்தை உபாசிப்பவளாக இருக்க வேண்டும். உடம்பு மட்டும் ஈர்க்குச்சிதான். மற்றப்படி ஒன்றும் சோடை இல்லை. இடுக்கு விழுந்த கண்கள். அதை மறைக்க கறுப்புக் கண்ணாடி. 'இண்டு இடுக்கு, இல்லாமல் முகம் பூராவிலும் பவுடர் அபிஷேகம்—பவுடர்க்காப்பு. அம்மனுக்குச் சந்தனக்காப்பு சாத்துவது இல்லையா, அப்படி! கழுத்தில் ஒன்றையும் காணோம். சரிந்து கிடந்த மேலாக்கைச் சரி செய்து கொள்ளக்கூட அவள் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. பிசகிச் கிடந்த கவர்ச்சியை ரசிக்கத் தான் அந்தக் கழுகுக் கண்கள் அப்படி மொய்த்தனவோ?

தமிழரசிக்குத் தர்மசங்கடமாக இருந்தது. பக்கவாட்டில் திரும்பி, அந்த நாகரிகப் பழத்தின் தோளை மிருதுவாக நிமிண்டினாள். "இந்தாப் பாருங்க!... தூக்கமா?... மேலாக்கை எடுத்துப் போட்டுக்கிட்டு தூங்குங்க!" என்று ஆத்திரமாகக் கூறினாள் தமிழரசி. தன்னைச் செம்மை படுத்திக் கொண்ட அந்த 'நாகரிகம்' அசட்டுச் சிரிப்பைக் காட்ட வாயைத் திறந்தது. எட்டு ஊருக்கு 'வாடை' அடித்தது.

தமிழரசிக்குக் குமட்டியது, 'தமிழ் மணம்' அவள் பார்வைக்கு ஓடி வந்தது. அந்த யுவதி, "நீங்க படிக்கிறீங்களா?" என்று வாத்தியாரம்மாவிடமே வாத்தியாரம்மாவைப்

போலக் கேள்வியைச் சொடுக்கி விட்டாள். சாட்டை சொடுக்கின பாங்கு—மாதிரி.

"படிக்கலீங்க, படிப்புச் சொல்லித் தருகிறேன். தமிழாசிரியையாய் வேலை பார்க்கிறேன்!" கேட்டதற்குப் பதில் சொல்லாமல் போனால், நயமாகத் தோன்றாதே என்ற இக்கட்டுக்குப் பயந்து சொன்னாள்.

இடத்தைக் கேட்டாள்.

சொன்னாள்.

"ஓஹோ! அங்கேயா? ஆஜானுபாகுவான சில்க் ஷர்ட் பணக்காரர், சொக்கநாதன் மானேஜ்மெண்டிலே நடக்குதே அங்கேயா!" என்று கேட்டு 'ஒரு மாதிரியாக' அவளை ஓரக் கண் பதித்துப் பார்த்தாள், அந்தப் பாவை. குரல் அழுந்திற்று. அந்த அழகியின் திருப்பார்வை அவள் வரை திருப்திகரமானதாகவோ, அல்லது தன் வரை சாதகமானதாகவோ இல்லை என்பதைத் தமிழரசியால் ஊகித்துக் கொள்ள முடிந்தது.

"நீங்க என்ன செய்றீங்க?"

"நான் அர்மினியன் ஸ்டிரீட்டிலே ஒரு இங்கிலீஷ் கம்பெனியிலே ஸ்டெனோவா இருக்கேன்!"

மறு கேள்வியைக் கேட்பதற்கு யோசித்தாள். "உங்க பேர்?" என்றாள்.

"சுசீலா உங்க நேம்!"

"தமிழரசி!"

"ஓஹோ! இப்பதான் நினைவுக்கு வருது...! உங்க பேரை நான் முன்னமேயே கேள்விப்பட்டிருக்கேன், அம்மா!"

இப்போது, அந்தப் பெண்ணின் பேச்சில் அவசரமான ஒரு மரியாதை ஊடுருவியது. அதனால்தான், தமிழரசிக்கு 'அம்மா' பட்டம் சூட்டினாளோ?

"எனக்கொரு நண்பர் உண்டு. அவரது ஸிஸ்டர் உங்க ஸ்டூடண்ட்! உங்களைப் பத்தி ரொம்பப் பெருமையாச்

சொல்லுவா. நீங்க ரொம்ப ஸ்ட்ரிக்ட்டாம்! அவ சொல்லுவா!''

தமிழரசிக்கு அந்தப் புகழ்ச் சொற்கள் வெறியையோ, போதையையோ ஊட்டவில்லை. அவற்றுக்கெல்லாம் அவள் மயங்கவும் மாட்டாள்; மடங்கவும் மாட்டாள்.

''ஆமா, உங்களுக்கு எங்க பள்ளிக்கூடத்தின் போஷகரைத் தெரியுமா?'' என்று உள் மனத்தின் பயத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல்—மிகவும் சாதாரணமாகக் கேட்பவள்போலக் கேட்டாள் தமிழரசி.

''எனக்கு எதுக்கு அவரைத் தெரியணும்?''—இந்தக் கேள்வியை ஏன் அவள் அவ்வளவு மிடுக்கான கோபத்தோடு கேட்டாள்? இந்தக் கேள்வியையே அவள் எதிர் பார்க்கவில்லையா? இல்லை, இவ்வினா அவள் கௌரவத்துக்குப் பங்கம் விளைத்ததென்று எண்ணிவிட்டாளா? அப்படியென்றால்...?

ஏதேதோ பயங்கரமான கற்பனைகள் தமிழரசியின் பேதை இதயத்தை முற்றுகையிட்டன.

''மன்னிச்சுக்குங்க. நான் சாதாரணமாகத்தான் கேட்டேன்.''

சுசீலா தன்னுடைய வெறுமை கொண்ட ஒட்டகக் கழுத்தை வருடினாள்; சோளியின் இடது புறத்துக் கீழ்த் தொங்கலை கவர்ச்சி பூக்க இழுத்து விட்டாள். வெளுப்புத் தட்டிய உதடுகளை டவலால் தூசி தட்டினாள். ''அந்த மகானுபாவர் சொக்கநாதன் செக்ஸ் விஷயத்திலே ரொம்ப மோசம்னு பேர்!'' என்று மிக சாதாரணமாகச் சொல்லி நிறுத்தினாள், சுசீலா.

அப்பேச்சைக் கேட்டதும் தமிழரசிக்கு மனம் அதிர்ந்தது. 'அது உங்களுக்கு எப்படித் தாயே அவ்வளவு கனகச்சிதமாகத் தெரிந்தது?' என்று எதிர்க் கேள்வி வெடியை அவளுக்கு எதிரிலே வீசிப் போடத்தான் அவள் துடித்தாள்.

அதற்குள்ளாகச் சசிலாவே வாயைத் திறந்து, "எனக்கு எப்படித் தெரியும்னு கேட்டிடப் போறீங்க? எங்க பாட்டி சொல்லுவாங்க...! அந்த மனுஷரைப் பத்தி அவுங்களுக்கு நல்லாத் தெரியும்!" என்று முடித்தாள்.

சுசீலாவின் அழுத்தமான பதில் தமிழரசியை ஓர் அழுத்து அழுத்தி விட்டது. காற்று நிரம்பிய பலூனில் கண்ணுக்குத் தெரியாத துவாரத்தின் வழியே கண்ணுக்குத் தெரியாமலே காற்று வெளியேறியவுடன், பலூன் தொய்ந்து விடுவது போல அவளது உள்ளம் ஆனது. தன்னம்பிக்கையின் பிடி நழுவியது. அவள் மனம் துடித்தது. அந்தப் பெண் சுசிலா தன்னைப் பார்த்த பார்வை—தான் அலுவல் பார்க்கும் நிறுவனத்தை நிர்மாணித்தவரைப் பற்றிப் பிரஸ்தாபம் செய்த பேச்சு எல்லாம் அவள் மனத்தைச் சாறு பிழிந்தன. இவ்வளவு காலமாகக் கௌரவம், மதிப்பு என்று பொது நோக்கிலே எண்ணி வந்ததெல்லாம் வெறும் ஜாலம் என்றும் தன் சுயகௌரவம்,பேர் எல்லாம் மறைமுகமாக எப்போதோ காற்றில் பறந்து போய்விட்டிருக்க வேண்டுமென்றும், ஒழுக்கமில்லாத ஒரு ஸ்தாபகர் வைத்து நடத்தும் பள்ளியில் வேலை பார்ப்பதால் உலகிலே தன்னை எவ்வளவு பேர் தவறாக எடை போட்டார்களோ என்றும்... இப்படிப் பலபடியாக எண்ணி எண்ணி மனத்திற்குள் விம்மினாள். அப்படியே ஓடும் பஸ்ஸிலிருந்து கீழே விழுந்துவிடலாமா என்றுகூட அவள் சித்தபேதம் எய்தினாள்.

அதிர்ஷ்டவசமாக, அப்போது, அங்கே டிக்கட் விஷயமாகப் பிரயாணி ஒருவர் தரப்பில் ஏதோ தகராறு மூண்டது. அந்தக் கலாட்டாவின் சூழலில் அவள் தன் நிலை அடைந்தாள். சுசீலாவின் வாயைக் கிண்டினால் வேறு ஏதாகிலும் விஷயம் வருகிறதா என்று பார்க்க, அவள் பக்கமாகப் பார்த்தாள்.

சுசீலா வழியிலேயே இறங்கி விட்டிருந்தாள்.

அவள் போகும்போது தன்னிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போயிருக்கக் கூடாதா?

அந்தப் பண்பாட்டுக் குறைவு தமிழரசியைப் புண்படுத்தியது. ''எங்கள் ஸ்தாடகரைப் பற்றி இந்தப் பெண் சொன்னதெல்லாம் அப்படியே உண்மையென்று எப்படி நம்புவது?... பொய்க்கு எத்தனையோ அவதாரம். ஆனால், உண்மைக்கு ஓரே ஒரு அவதாரம்தான்!... உண்மையின் அவதாரம் இன்றைக்கு இல்லையென்றாலும் என்றைக்காவது ஒரு நாள் கட்டாயம் நமக்குத் தெரியாமல் போகவே போகாது! மெய்ப்பொருள் காண்பதறிவு!— ஆமாம், மெய்யான வாக்குதான்!... யார் எப்படி இருந்தால் என்ன? என் தெய்வமும் என் மனச்சாட்சியும்தான் எனக்குக் காப்பு! இந்த ஒரு தத்துவத்தைத்தானே எங்கள் தலைவி அடிக்கொருதரம் எனக்கு நினைப்பூட்டிப் பாடம் சொல்லிக் கொடுத்தார்கள்!... அம்மா! ... அம்மா!...''

'அம்மா' என்று தன்னுள்—தனக்குத்தானே அழைத்துக் கொண்டாள். தன்னில் எழுந்த பாசப் பிரளயம் தன்னுள் பரவியது.

திலகவதி அம்மையாரைப் பார்க்க வேண்டுமென்று துடித்து, ஆனந்தத் துள்ளலுடன் புறப்பட்டவளுக்கு வழியிலேயே மனத்துயரம் வந்தது. துயரத்தை அங்கேயே உதறிவிட வேண்டுமென்றுதான் அவள் எண்ணினாள். ஆனால், அப்படிச் செய்துவிடக்கூடிய பரிபக்குவம் அவ்வளவு சுலபமாகக் கைகூடி விடுவது இல்லையே! மனத்துயரில் கரைந்த மனத்தை வேறு நினைவில் கால்வாய் பிரித்துவிட எண்ணினாள். வெளிப்புறம் அவளது கண்கள் ஓடின. அந்தி மாலை மணம் பரட்பத் தொடங்கிய வேளை. நீலவானமும் நீலக்கடலும் அப்படி என்னதான் அந்தரங்கம் பேசினவோ? மீண்டும் 'தமிழ் மணம்' சஞ்சிகையைப் புரட்டினாள். '...ம் மா!' என்ற புதுமாதிரித் தலைப்பில் கதையொன்று வெளியாகியிருந்தது. கதாசிரியர் 'மறை நாயகன்' எழுதியிருந்த கதை அது.

'ஆர்ப்பாட்டம் செய்யாத நல்ல எழுத்தாளர் இவர். சுயமாகச் சிந்தித்து எழுதி வருகிறார். வளர்ந்து வரும்

சமுதாயத்துக்கு இவரது இலட்சியச் சிந்தனைகள் பெரிதும் பயன் நல்கும். சிலரைப் போல, பிறரைத் திட்டி, அதன் மூலம் குறுக்கு வழியில் வளர விரும்பாதவர், இவர். 'தமிழ் மணம்' அலுவலகத்தில் அலுவல் பார்த்தவர். இப்போது அவராகவே விலகிக்கொண்டு விட்டாராம். என்றாலும், அப்பத்திரிகையைப் பற்றி எப்போதுமே பெருமையாகப் பேசுகிறார். அதுதானே மனிதப் பண்பு!'

கதையைப் படிக்கத் தலைப்பட்டாள், தமிழரசி.

வானொலி நிலையம் தாண்டிவிட்டது.

தமிழரசி வலதுகைப் பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தாள்.

ஒரு பெரிய பங்களா, கிளிப்பச்சை நிறத்தில் ஒளிர்ந்தது—தொலைவிலே!

'அதோ, அம்பலவாணன் பங்களா!' என்று அவள் மனம் சுட்டியது. அப்பலவாணனுக்கு அனுப்பிய கடிதத்தின் நினைவு வந்தது. 'அந்த லெட்டரை மிஸ்டர் அம்பலவாணன் பார்த்திருப்பாரா? எப்படி முடியும்? ஊரிலிருந்து திரும்பினதும்தானே அவர் அதைப் படித்திருக்க முடியும்?' மேற்கொண்டு அவள் அதைப்பற்றித் தொட்டுப் பார்க்க விருப்பம் கொள்ளவில்லை.

மாதாகோவில் வந்ததும் சிலுவைக் குறி செய்து கொண்டாள்.

கதை ஓடியது.

ஓடிய பஸ் நின்றது.

கதை முடிந்தது. 'ஆஹா! அற்புதமான கதை!'

அவள் இறங்க வேண்டிய இடம் வந்தது.

குட திசை வயப்பட்டான் பகல் செய்வோன்.

தமிழரசி, கஸ்தூரி அன்னை அனாதை இல்லத்தை அடைந்தாள். 'மதர் கிட்டே ரொம்ப சமாச்சாரம் பேசவேணும்!' என்று தீர்மானம் செய்திருந்தாள்.

வான்முட்டி நின்ற அசோக மரங்கள் அவளை வரவேற்றன. பிறந்த வீட்டை மிதிக்கும் பாசத்தின் உரிமையுடன் அவள் வெளி வாசற்கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தாள். காவலுக்கு நின்ற சன்னாசித் தாத்தா அவளைக் கண்டதும், பொக்கை வாய் நிரம்பச் சிரித்தான். "வாம்மா!"— வரவேற்றான்.

தமிழரசி, "ஆமா, தாத்தா!" என்று நகை பூத்தாள். "உடப்பு சுகமாயிருக்குதுங்களா தாத்தா?" என்று க்ஷேம லாபம் விசாரித்தாள்.

நலம் சொன்னான் கிழவன்.

"மதர் இருக்காங்களா?"

"இருக்காங்களே!... மாம்பலத்திலேருந்து சொக்கநாதர் வந்திருக்காங்க. உள்ளே பேசிக்கிட்டிருக்காங்க!"

தன் பள்ளியின் சொந்தக்காரர் வந்திருப்பதாக அவள் புரிந்து கொண்டாள்.

அச்செய்தியை அவளுடைய மனம் வாங்கிக் கொண்டதும், அவளுடைய இயல்பான துடிப்புத் தளர்ந்தது. இருந்தாலும், அவள் நேராகச் சென்றாள். இருபுறமும் வளர்ந்து நின்ற அசோக மரங்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்ற வண்ணம் அவள் நடந்து சென்றாள்.

முகப்பில் படர்க்கொடி காவணத்தில் சொக்கநாதரின் பெரிய கார் நின்றது.

நடந்தாள்.

அழகு நடந்து கொண்டிருந்தது.

குமாரி திலகவதி அம்மையாரின் இருப்பிடத்தை அடைந்து, வரவேற்பறையில் வந்து அமர்ந்தாள் குமாரி தமிழரசி.

அறையில் குளுமையான நீலவண்ணம் பரவியிருந்தது. ஜாதி மல்லிகைச் சரங்களின் சாரம் ஊடும் பாவுமாக விரவிக் கிடந்தது. இதமான சுற்றுச் சார்பின் அழகும் அமைதியும் அப்போதைய அவளது உள்ளப் போக்கிற்கு மிகவும்

இதமாகவும் அமைதி ஊட்டுவதாகவும் அமைந்திருந்தன. ஆழித்தென்றல் குழந்தையின் ஸ்பரிசமாக அவளை அணைத்தது. சுற்றுமுற்றும் நோக்கினாள்.

உலகத்தை அன்பு என்னும் மையப் புள்ளிக்கொண்டு சுற்றி வட்டமாய் வளைத்த சத்தியத்தின் தர்மங்களைத் தெய்வ மனிதர்களாகவும் மனித தெய்வங்களாகவும் சந்தித்தாள் அவள்.

அன்பு அங்கே வாழ்ந்தது.

அறம் அங்கே வாழ்ந்தது.

இலட்சியம் அங்கே வாழ்ந்தது.

பாசம் அங்கே வாழ்ந்தது.

பண்பு அங்கே வாழ்ந்தது.

தேசப்பற்று அங்கே வாழ்ந்தது.

அவள் மெய்யுருகி வீற்றிருந்தாள். மேனி உருகி விழி பிரித்தாள்.

சந்தனக் கூடுகள் எரிந்து மணம் கூட்டிக் கொண்டிருந்தன.

கூடுகளின் பாதங்களைச் சாம்பல் துகள்கள் முத்தமிட்டுக் கொண்டிருந்தன.

அந்தச் சந்தன மணத்தையும் அந்தத் தியாகத்தில் உதிர்ந்து சாம்பலான அந்தத் தூள்களின் பவித்திரத் தன்மையையும் அவள் பார்த்தாள்; பார்த்தவாறே எழுந்து நின்றாள். அந்தச் சூழலில், அவளது மனக்கிழியில் ஓர் அன்பு உருவம் தோன்றியது. 'அம்மா!... உங்கள் உதாரணத்துக்கு ஓர் ஆதரிசமாகவா இந்தச் சந்தன மணத்தினைப் பரப்பி நிரூபித்துக் காட்டி வருகிறீர்கள்!'— இமைகளை நனைத்த ஈரத்தை நினைத்தாள். நெஞ்சம் நினைத்த திலகவதி அம்மையின் ஈரம், அவள் உள்ளம் முழுவதையுமே நனைத்ததே!

'குழந்தைகளே! தியாகத்தைப் பிரகடனப்படுத்துகிற வாழ்க்கை போலி!... தியாகம் செய்பவர்கள் அன்பால்

தான்—அன்பின் மூலம்தான் மற்றவர்களுக்குத் தங்கள் தியாகத்தை உணரச் செய்ய வேண்டும். அதுவேதான் பண்பு. அத்தகைய வாழ்க்கைதான் உண்மை; அசல்!' என்று திலகவதி அம்மையார் உபதேசம் செய்த வாசகங்களை அவள் நினைக்காத நேரம் உண்டா?

பஞ்சு மெத்தை ஆசனத்தில் மீண்டும் அமரப் போனள் தமிழரசி.

அதற்குள், அம்மையாரின் கலகலவெனும் ஒலி கேட்டது. உட்காராமல் நின்றுவிட்டாள்.

அனதை இல்லத்தின் மாதாவும் திருவாளர் சொக்கநாதனும் முன்னும் பின்னுமாக வந்தார்கள்.

"வாம்மா தமிழரசி! உடம்பு சுகமாயிருக்கிறதா?" என்று செல்லத்துடன் தமிழரசியின் தலையைக் கோதியபடி நலம் விசாரித்தாள் திலகவதி அம்மையார்.

"ஆமாங்க! சுகமாய் இருக்கிறேனுங்கம்மா!" என்றாள் தமிழரசி.

சொக்கநாதனுக்கு வணக்கம் செய்தாள் அவள்—தமிழரசி.

"நலமாம்மா தமிழரசி?" என்று அன்பாக விசாரித்தார் சொக்கநாதன்.

"ஆமாங்க, ஐயா!" என்று அன்பின் மரியாதையுடன் பதில் கொடுத்தாள் தமிழரசி.

தன் இருமருங்கிலும் திலகவதி அம்மையாரும் சொக்கநாதனும் நின்று கொண்டிருப்பதை எதிர்ப்புறமிருந்த நிலைக்கண்ணாடி அவளுக்குச் சுட்டியது. விழிகளை உயர்த்திப் பார்த்தாள். இனம் தெரியாத ஏதோ ஒருவிதமான பாசக் குதூகலம் அவளையும் அறியாமல் கொடி மின்னலாக அவளுள்ளே கீறிப் பரவியதை அவளது உள்ளுணர்வு சொன்னது. அவ்வுணர்வின் மயக்கத்தில் அவள் கட்டுண்டு நின்றாள்.

அப்போது :

"தமிழரசி, அவசரமாக இப்போது இவங்களோடு வாரன் ரோடு வரைக்கும் போய்க்கிட்டிருக்கேன். நீ நாளைக்குச் சாயங்காலம் அவசியம் இங்கே வந்திடம்மா!" என்றாள் அம்மையார்.

"நல்லதுங்க, மதர்!"

காரின் 'ஹார்ன்' ஒலிச் சத்தம் அவளது பூமணத்தை அதிரச் செய்துவிட்டது!

அதிர்ந்த மனத்துடன் அவள் திரும்ப வேண்டியவள் ஆனாள்.

## கடற்கரைக் கிளிஞ்சல்கள்

ஆறு

யார் சொன்னார்கள்?— காந்திஜி இறந்துவிட்டாரா?

பொய்; சுத்தப் பொய்!

அவர் மரணத்தை வென்ற மஹாத்மா ஆயிற்றே!

ஆம்;

காந்திஜி ஓர் உலகம்.

அவர் ஓர் அதிசயம்.

அதிசயமாக வாழ்ந்து, உலகத்தின் அதிசயம் ஆகிவிட்ட மனிதர் அவர்—அமர மனிதர் அவர்!

சொன்னதைச் செய்தார்!

செய்ததைச் சொன்னார்.

"அன்பு எதையும் கேட்காது; கொடுக்கத்தான் செய்யும்" என்று சொல்லவில்லையா? சொன்னபடியே அன்பின் பெயரால் எதையும் கேட்காமல், அன்பின் பெயரால் தன்னையே கொடுத்துக் காட்டவில்லையா?

மனதர்மமே அவராக—மனித தர்மமே அவரது அன்பின் புவனமாக இயங்கியும், இயக்கியும் வந்த அந்த மகாத்மாவுக்கு

இயற்கையென்றால் பிராணன் அல்லவா?— அதற்காகத்தான், தமக்குரிய ஓய்விடமாக இந்த மெரினா கடலோரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாரோ?

அதோ, காந்தி மகாத்மா ஆழித்தென்றலிலே—மயக்கும் மஞ்சள் வெயிலிலே அன்பே உருக்கொண்டு நிற்கின்றாரே!...

கல்லாய்ச் சமைந்துவிட்ட அந்த அன்பின் உள்ளத்தைப் பற்றிய சிந்தனையில் லயித்திருந்த தமிழரசி கல்லாகச் சமைந்து நின்றுவிட்டாள். தன் தோளைத் தொட்டு உசுப்பிவிட்ட உணர்வின் நடுக்கத்தை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினாள் அவள். இமை வரம்பில் விளிம்பு கட்டியிருந்த அரும்புமணிச் சரத்தை நாசூக்காக விலக்கினாள். பார்வையின் தடுமாற்றம் மாறியது. ஒரு தெளிவு பிறந்தது. நெஞ்சகத்தில் ஆறுதல் கனிந்தது.

தனக்குப் பக்கவசமாக நின்று தன்னையே வெறித்துப் பார்த்தபடி, தன்னுடன் வேலை பார்க்கும் சாவித்திரி நிற்கக் கண்டாள். கண்டதும், "வாங்க!" என்றாள், தமிழரசி.

'ஆமா' என்ற பாவனையில் அவள் ரசனை மிகுந்த சிரிப்பைக் காட்டினாள். "ஏது, ரொம்ப அபூர்வமா இருக்கே?"

தமிழரசி, "ஒன்றும் அபூர்வம் இல்லீங்க. இல்லத்துக்குப் போய் வந்தேன். காசு பணம் கொடுக்காமல் அமைதி கிடைக்கும் இடமில்லீங்களா, இது? அதுதான், இப்படி வந்தேன்" என்றாள்.

'நீங்கள்கூட நிம்மதியைத் தேடி வந்தீர்களா?' என்று கேட்கும் விதத்தில் அவளை ஊடுருவிப் பார்த்தாள் சாவித்திரி. தானும் நிம்மதிக்காகவே அங்கு வந்திருக்கும் உண்மையைச் சொல்லாமல் சொல்லிக் காட்டியது அவள் பார்வை.

நித்தியத்தில் அரும்பி, நித்தியத்தில் மலரும் அழகின் தத்துவம் போன்று அப்போதைய கடலும், அப்போதைய சூரியனும் விளங்கின. போதையும் போதமும் பரிவர்த்தனை ஆகிக் கொண்டிருந்தன!

''உட்கார்ந்திட்டுப் பேசலாமே!'' என்றுள் தமிழரசி: கையிலிருந்த புத்தகம் நழுவியது. அதை எடுக்கக் குனிந்த போது, கொண்டைப் பூங்கொத்தும் நழுவியது. இதை உடையவள் கவனிக்கவில்லை. உடன் நின்ற சாவித்திரி கவனித்தாள். அவள் இடது கைவிரல்களை அழுத்திக்கொண்டு குனிந்து எடுத்து அப்பூச்சரத்தைத் தமிழரசியின் கையில் வைத்தாள். மேனிச் செழிப்பம் தடுமாறி, ஒருவாறு நிலைப்பட்டது.

பூவைப் பெற்ற தமிழரசி மார்பகச் சேலையைச் செம்மைப் படுத்திக்கொண்டு, நீர் சுரந்த நேத்திரங்களால் தன் சிநேகிதியைப் பார்த்தாள்.

சாவித்திரி விரக்திமாருத அன்பான மெல்லிளஞ்சிரிப்பை மட்டும் சிந்திஞள். அவளது நெஞ்சகம் எம்பி எம்பித் தணிந்து கொண்டிருந்தது.

அந்த மெல்லிய சிரிப்புக்குப் பின்னே மறைந்திருந்த பயங்கரக் கொடுமையைப்பற்றி எண்ணவே பயந்தாள், தமிழரசி. ஆண்டவன் வழங்கிய பூவையும் பொட்டையும் விதி என்னும் பயங்கரக் கொடுமை பறித்துக் கொண்டதென்ருல், வாழ்வின் விதியைப் பற்றி என்னவென்பது? விதி என்ற ஒன்று, வெறும் மாயை என்று 'அழும்பு' பேச ஒரு கூட்டம் எந்தக் காலத்திலும் உருவாகிக்கொண்டுதான் வந்திருக்கிறது!—அப்படி விதி என்ற ஒன்று இல்லாதிருந்தால், சாவித்திரி இவ்வாறு 'மாஜி சுமங்கலி'யாக ஆகியிருப்பாளா?

'பாவம்!'—அனுதாபத்திற்குக் கண்ணீர் சொரியத் தெரியும்.

சாவித்திரி சொல்லியிருக்கிறுள்: நினைத்தால், அவள் வாழ்வு ஒரு கதைதான்!

ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிப் படிப்பில் ஏற்பட்ட அன்பின் சகவாசத்திஞல் கனிந்த நட்பாளஞகச் சாவித்திரியின் காதலன் சுந்தரேசன் இருந்து, பிறகு, கணவன் எனும்

பதவியை அடையக் காத்திருந்தான். அவனும் ஒரு பி. டி. அவளும் அவனும் மாறுபட்ட இனத்தவர். ஆகவே, வைதிக மும் நாகரிகமும் இரு துருவங்களாக மாறி, அவர்கள் இருவ ரையும் மாற்றிவிட முனைந்தன. கடைசியில் இருவரும் கணவன்—மனைவி ஆக ஆகி விடுவதென்ற வைராக்கியத்தைக் குறிஞ்சிக் கடவுளைச் சாட்சி வைத்து உறுதிப் படுத்தினர். சாவித்திரி கட்டறுத்துக்கொண்டு வெளியேறினாள். அந்தத் திருப்பத்துக்கு அவளது துணிச்சல் காரணமா? அல்லது அவளது அத்தியந்தக் காதல் முக்கியமா:—இரண்டுக்கும் தீர்ப்புச் சொல்ல விதிக்கு மட்டுமே தெரியும்!—ஆம்; அந்தத் தீர்ப்பைச் சொல்ல விதிக்கு மாத்திரம்தான் தெரிந்திருந்தது. அதனால்தான் போலும், திருமணமாகி, அவர்கள் இருவரும் கணவன்—மனைவியாக ஒரே ஒரு வாரம் இருப்பதற்குக்கூட விதி பொறுக்கவில்லை!—அவளுடைய தாலியைப் பொறுக்கிக் கொண்டு பறந்தே பறந்து விட்டது. 'நேக்கு அப்பவே தெரியும். கேட்டளோ? பாவிப்பொண்ணு இப்படி வீணா யிட்டுதே!' என்று பெற்ற தோஷத்தில் அகத்துக்காரருக்குத் தெரியாமல் நான்கு பாட்டம் அழுது கொட்டினாளாம் அவளைப் பெற்றவள்!

கதையாக ஆரம்பித்த வாழ்வு கதையாகவே முடிந்து விட்டது!

"உட்காரலாமே, டீச்சர்!"

"ஊம்!"

இருவரும் அமர்ந்தார்கள். வெண்மணல் வெளியை இரு ஜோடிப் பூங்கரங்கள் அளைந்து—அளந்து கொண்டிருந்தன.

அந்தியின் கடைக்கண் பணியில் குவலயம் சொக்கிக் கிடந்தது.

தன்னைப்பற்றி எண்ண வந்தாள் தமிழரசி; ஆனால், எண்ணியதென்னவோ, சாவித்திரியைப்பற்றி.

"நானே உங்க வீட்டுக்கு வரணும்னு இருந்தேன். என்னுடைய சொந்த விஷயமாய் உங்ககிட்டே கொஞ்சம்

கன்ஸல்ட் செய்யணும்னு நினைக்கிறேன்!'' என்று மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தாள், சாவித்திரி.

தமிழரசிக்கு அவள்மீது எப்போதுமே பாசத்தின் பிடிப்புக் கொண்ட தோழமையுணர்ச்சி நிலவுவது சகஜம். அந்நட்பின் உறவில் அந்நியோன்யமான அனுதாபமும் அத் தோழிக்காக அவளுள் ஏற்படுவதும் உண்டு. தன் பேரில் அவள் வைத்திருக்கக்கூடிய நல்லெண்ணத்தைத் தமிழரசி அறிவாள். இப்போது, அந்நிலை மேலும் நிலைப்புக் கண்டது.

''சொல்லுங்க, டீச்சர்!''

சாவித்திரி தன்னுடைய கீழ் நோக்கிய கண்களைத் தைரியத்துடன் மேல் நோக்கித் திருப்பினாள். அவளுடைய வலது கைவிரல்கள் அவளது வெறும் கழுத்தைத் தடவின. இடது புறக் கைவிரல்கள் அளகபாரத்தைத் தடவின. காதுப் பொட்டு இழைகளையும் பிசிறு தட்டிச் சேர்த்தாள்.

அவளுடைய செய்கைகள் அவளது தயக்கத்தைக் காட்டின. ஆனால், அவள் மனம் நிகழ்த்திக்காட்டிய போராட்டத்தைக் காட்ட அடையாளம் ஏதுமில்லையா?

என்ன என்ன, தமிழரசிக்கு வாழ்வே அர்த்தமற்ற ஒரு சுமையாகத் தோன்றியது. ''பிறப்பு என்பது ஒரு வரப் பிரசாதம்; பிறந்த பிறப்புக்கு ஓர் அர்த்தத்தை உண்டாக்கச் செய்வதே பிறவியை ஏந்தியதற்குரிய கடமையாகக் கொள்ள வேண்டும்!'' என்று குடந்தையில் ஓர் இலக்கியக் கலைவிழாவில் மாணவர் ஒருவருக்குத் தன் கையெழுத்துடன் எழுதிக் கொடுத்த வரிகளை இப்போது நினைக்கையில், பழைய சிந்தனைகள் வலுவிழந்து போய்விட்டதாகச் சந்தேகப்பட்டாள் தமிழரசி.

''தமிழரசி, என் மனம் என் அத்தான் மிஸ்டர் சுந்தரேசன் ஒருவருக்குத்தான் சொந்தம். எங்கள் பாசமும் காதலும் மிகமிகக் குறுகிய கால அளவுக்குள் பிறந்து வளர்ந்தாலும், அந்தக் குறுகிய கால இடைவேளைக்குள்ளாகவே நாங்கள் மனநிறைவுடன் வாழ்ந்துவிட்டதாகவே கருது

கிறேன் நான். ஓர் ஆயிரம் வருஷம் வாழும் வாழ்வை மன மொத்த தம்பதிகள் ஒரு கணத்தில் வாழ்ந்து விட முடியாதா?—முடியும் என்பதுதான் என் சித்தாந்தம். ஏனென்றால், எங்கள் வாழ்வே அப்படி அமைந்துவிட்ட ஒரு கதைதானே?... குறிப்பாக, அவர் இறப்பதற்கு முந்தின இரவில் நாங்கள் அனுபவித்த இன்பமான அமைதிக்கு அளவே கிடையாது. அதுவேதான் கடைசி இரவென்று அவருக்கு உள்ளுணர்வு எதுவும் அறிவித்திருக்குமோ என்னவோ?... ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். தான் இப்படி நெஞ்சடைப்பினால் அகால மரணம் அடைய நேருமென்பதைப் பற்றி அவர் முன் கூட்டியே கொஞ்சமேனும் சந்தேகம் கொண்டிருந்தால், எனக்குரிய ஒரு முடிவையும் அவரே கட்டாயம் எனக்குச் சொல்லிக் காட்டியிருப்பார்!... எனக்குப் பூவும் மஞ்சளும் மீண்டும் கிடைக்கும் அளவுக்கு அவர் வழி வகுத்திருப்பார்...! அத்தகைய நல்ல மனமும் நல்ல பக்குவமும் கொண்டவர் என் கணவர்!...

"ஆனால், இன்றைய என் மனநிலை, இந்த மூன்று வருஷங்களாக நான் பூண்டிருந்த வைராக்கியத்துக்கு ஒரு சோதனையாக அமைந்துவிட்டது. அந்தச் சோதனை எனக்கு நானாகவே இட்டுக் கொண்டதாக இருந்தாலும், அத்தகையதொரு திருப்பத்தைத் தன்வயப்படுத்திச் சிந்தித்து, எடைபோட்டு, முடிவுகட்டிவிடக் கூடிய மனவலு எனக்கு உண்டாகவில்லை என்றே நான் கருதுகிறேன். மனவலுக் குறை காரமணாக, நான் செக்ஸ் விஷயத்தில் சபலசித்தம் கொண்டுவிட்டிருப்பதாக நீங்கள் தப்புக் கணக்குப் போட, அவசரப்பட்டுவிட மாட்டீர்கள் என்றும் நான் அறிவேன்.

"எனக்கு என் மனம் காப்பு என்பதை நான் உணர்வேன். ஆனால், என் மனத்திற்கு ஒரு காப்பு தேவைப்படுகிறது. இந்தக் காப்பு இருந்தால்தான், நான் நானாக இருக்க முடியும் என்ற பயம் செறிந்த உண்மையும் என்னுள் விசுவரூபம் எடுக்கத் தொடங்கிவிட்டது. ஆகவே, எனக்கு ஓர் ஆண் துணை தேவை என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். இம்முடிவை

என் அத்தான் கட்டாயம் மானசிகமாக ஆசீர்வதிப்பார் என்றே நம்புகிறேன். என் மனச்சாட்சியும் அவ்வாறே நம்பிக்கை கொள்கிறது!...... இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயத்தை அறிய விரும்புகிறேன், டீச்சர்!......"

வர வர, சுருதி இறங்கி விட்டது. சாவித்திரி பேச்சை நிறுத்தினுள். பெருமூச்சை நிறுத்தவில்லை. இப்போது, அவள் வெட்கமும் பயமும் கலந்த தோற்றத்துடன் விளங்கினுள். தலையை உயர்த்தினுள். முகத்தைத் துடைத்துக் கொண்டாள். தொண்டையைக் கனைத்துக் கொண்டாள்.

"தமிழரசி!" என்று கூப்பிட்டு, அவளைக் கூர்ந்து நோக்கினுள் சாவித்திரி. ஒரு கணம் அவள் அதிர்ச்சி அடைந்தாள்.

காரணம் இதுதான் :

தமிழரசி மாலைமாலையாகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

"தமிழரசி!... சகோதரி!..."

நிதானமாகத் தலையை உயர்த்திப் பார்த்த தமிழரசி, பதனமாகச் சொன்னுள் : "ஒன்றுமில்லை. பயப்படாதீர்கள். ஒரு தர்மசங்கடமான பொறுப்பை என்னிடம் நீங்கள் சுமத்தினீர்கள். அதற்கு விடை சொல்ல வேண்டாமா? அதற்காகத்தான் உங்கள் நிலையில் என்னை ஆட்படுத்திப் பார்த்தேன்! மிஞ்சியது இந்தக் கண்ணீர் மட்டும்தான், சகோதரி!..."

நெற்றிப்பொட்டில் அறைபட்டாற் போலிருந்தது சாவித்திரிக்கு.

அந்த அதிர்ச்சி நீங்குமுன், "ஹல்லோ சாவித்திரி!" என்று ஒய்யாரமாகக் கூவிக்கொண்டே திரையுலக நாகரிகப் பாணியில் வந்து நின்றுள் ஒருத்தி— மப்ளரும் மண்டையுமாக!

சாவித்திரி தன்நிலை பெற்றவளாகி, நிமிர்ந்தாள். "ஓ... வாங்க!" என்றுள்.

"ஸிஸ்டர், இவங்கதான் பிரபல சினிமா ஸ்டார் நளின குமாரி! என்று தமிழரசியிடம் அந்த நட்சத்திரத்தை அறிமுகப்படுத்தினுள் சாவித்திரி.

நட்சத்திரத்துக்குக்கூட அறிமுகம் தேவையா என்று கோபம் கொண்டவள் போல, நளின குமாரி கைவிரலால் நெற்றியில் எதையோ தேடினுள். ஒருவேளை, நெற்றிக் கண்ணைத்தான் வலைபோட்டுத் தேடினுளோ? வலை தேடித் தான், பின் கொண்டை வலையை நாடினுளோ? என்ன கர்மமோ?...

மிருகக் காட்சிச் சாலையில் பார்ப்பது மாதிரி, அந்த நட்சத்திரத்தைப் பரிதாபமாகவும் அருவருப்புடனும் பார்த்தாள் தமிழரசி. அவள் உதட்டில் அணுவளவு சிரிப்பாவது மலரக் கூடாதோ? 'ஓஹோ!' என்று ஆணவ மாகத் தலையை ஆட்டிவிட்டு, காந்திஜியின் பக்கமாகத் திரும்பினுள்.

"பாபுஜீ!... உலகம் ரொம்பவும் விசித்திரமாக மாறிக் கொண்டு வருகிறதே!... கொண்ட கணவனையே 'ரத்து' செய்துவிட்டுத் திரிகிற இந்தப் 'பதிவிரதை'க்கும் இந்தத் தமிழ்ச் சமுதாயத்திலே ஒரு அந்தஸ்து ஏற்பட்டுவிட்டதே!..."

திரை நடிகை அங்கேயே நிற்கலாமா? அல்லது, நிற்கத் தான் ரசிக மகாஜனங்கள் அனுமதிப்பார்களா?

"நாம் புறப்படளாமா?" என்று சினிமா வசன பாணியில் 'ளா'வுக்கு ஓர் அழுத்தம் கொடுத்துக் கேட்டாள் நளின குமாரி. பரவி வந்த இருளில் நட்சத்திரத்தின் முகமும் இருண்டு, அம்முகத்தில் இதுவரை தெரியாமல் இருந்த சுருக்கங்கள் இப்போது துல்லியமாகத் தெரியவும் ஆரம்பித்துவிட்டன. ஆகவேதான், அவள் அவ்வளவு தூரம் பதட்டப்பட்டாளோ, புறப்பட்டுவிட?

தமிழரசியிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டாள் சாவித்திரி.

நடிகை மட்டும் அவளிடம் சொல்லிக் கொள்ளவில்லை.

அதை ஒரு நல்ல சகுனமாக மதித்தாள் தமிழரசி. உள்ளுக்குள் விஷமத்தனமான புன்னகை வெடித்தது. எழுந்தாள். காந்திஜிக்கு வணக்கம் செலுத்தினாள். 'என் மனத்தைக் காத்தருள், அண்ணலே!'— புறப்பட்டாள்.

அவள் புறப்பட வேண்டுமென்றுதான் நிலவு காத்திருக்க வேண்டும்.

அவளுடன் நிலவும் புறப்பட்டது.

வாழ்க்கைக்கு ஒரு நிதர்சனத் தத்துவமாகப் பொங்கிப் புரண்டது ஆழி.

வாரி இறைக்கப்பட்ட கடற்கரைக் கிளிஞ்சல்கள் ஒளி கூட்ட விண்ணில் கூட்டுச் சேர்ந்தன போலும்!

அங்கங்கே மனிதர்கள் பல்வேறு வகைப்பட்ட பரிணாமத் திரிபுகளுடன் இயங்கி—அல்லது இயக்கப்பட்டுப் பொழுதை ஓட்டிக் கொண்டிருந்தார்கள்.

தமிழரசி நடந்தாள்.

உழைப்பாளிகள் சிலை வந்தது.

அம்பலவாணனை முதன் முதலாகச் சந்திக்க நேர்ந்த சம்பவத்தை எப்போதும் சுட்டிச் சொல்லும் நாட் குறிப்பல்லவா அவ்விடம்?

அச்சம்பவத்தை எண்ணமிட்ட நெஞ்சு இனித்தது. அவ்வினிப்புடனே, அவள் மறுகி நடந்தாள். நெடுஞ் சாலையைக் கடந்தாள். பல்கலைக் கழகக் கட்டடங்களின் 'ஸ்டாப்பிங்'கில் நின்றாள். நின்றபடியே கண்களைத் திருப்பினாள். 'தமிழ்த் தாத்தா'வை நோக்கி அவளது தமிழ் மணம் அஞ்சலி செய்தது!

மறுகணம், "தமிழரசி!" என்னும் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

அவள் காலடியில் அவளது சிநேகிதி சுடர்க்கொடியின் ரோஜா நிறக் கார் நின்றது.

உற்ற தோழியின் வேண்டுகோளுக்கு இணங்கி, காரின் ஆசனத்தில் ஏறி அமர்ந்தாள் தமிழரசி.

சுடர்க்கொடி காரைச் செலுத்தினாள்.

தமிழரசி தற்செயலாகத் திரும்பிப் பார்த்தாள். அவள் நெஞ்சம் திடுக்கிட்டது.

அங்கே, பின் ஆசனத்தில் அம்பலவாணன் மலர்ந்த முகத்துடன் உட்கார்ந்திருந்தான்.

## முக்கோணமும் காதலும்

### ஏழு

அம்பலவாணன், சுடர்க்கொடி, தமிழரசி ஆகிய மூவரும் நைனியப்பன் தெருவில் இருந்த தமிழரசியின் வீட்டில் வந்து இறங்கும் வரைக்கும் பேச்சு மூச்சுக் காட்டவில்லை.

காரை நிறுத்தினாள் சுடர்க்கொடி. தமிழரசி உடனே கதவை அழுத்தித் திறந்துகொண்டு முதலில் இறங்கினாள். அதே சமயம் அம்பலவாணனும் இறங்கியதைக் கண்டாள்.

மிதத்துரிதமாகச் சாவியைக் கையிலெடுத்து வீட்டைத் திறந்தாள். விளக்குப் பொத்தானை அழுத்தினாள். "வாங்க!" என்று அம்பலவாணனைக் குளிர்ந்த நகை ஏந்தி வரவேற்றாள். பிறகு, "வா, சுடர்க்கொடி!" என்று உபசரித்தாள்.

பிரம்பு நாற்காலிகளில் இருவரும் தள்ளித் தள்ளி உட்கார்ந்தார்கள்.

புத்தர்சிலை வைக்கப்பட்டிருந்த மேஜையில் இருந்த ஊது வத்திக் குமிழில் புதிய ஊதுவத்திகள் சிலவற்றைப் பொருத்தினாள்; பிறகு, அவற்றில் தீயைப் பொருத்தினாள். சுகந்தம் இழை பின்னத் தொடங்கியது.

"நான் இங்கே வர்றது இதுதான் முதல் தடவை!" என்று மின்விளக்கின் நகையில், தன்னுடைய அழகிய உதடு

களின் நகையையும் இணைத்தவனாக, பேச்சைத் தொடங்கினான் அம்பலவாணன். 'டெரிலின் ஸ்லாக்கு'க்கும் அவன் சௌந்தர்யத்துக்கும் இணைந்த பொருத்தமே பொருத்தம்!

கைகளைக் கட்டிக்கொண்டு லேசாகத் தலையைத் தாழ்த்தியவளாக ஏதோ சிந்தனை வசப்பட்டிருந்த தமிழரசி, அவன் பேச்சைக் கேட்டுத் தலையை உயர்த்தி, "ஆமாங்க" என்று ஒப்புக்கொண்டாள். செவ்வந்திப்பூக்களின் காம்புகளை விரல்களாக்கிக் கொண்டிருந்த அவள், அவ்விரல்களை 'நிமிண்டி'க் கொண்டிருந்தாள். நெற்றியைத் தடவிக்கொள்ளவும் அவை உதவின.

அம்பலவாணனின் பேச்சு தமிழரசியின் இதயத்தை என்னவோ செய்தது. அதைச் சர்வசாதாரணமான நடைமுறைப் பேச்சாகக் கொள்ளமுடியவில்லை அவளால். 'நான் இங்கு வரும்போது மிகவும் சந்தோஷமாக வரவேண்டுமென்று கனாக் கண்டேனே!' என்று சொல்லாமல்—சொல்வதற்குப் பதிலாக, 'நான் இங்கே வர்றது இதுதான் முதல் தடவை' என்று சொல்லுவது மாதிரி அப்பேச்சை அவள் உணரலானாள். தன் தோழியிடம் கொடுத்துத் தபாலில் சேர்ப்பிக்கச் சொன்ன கடிதம் கட்டாயம் அம்பலவாணனின் கைக்குக் கிடைத்திருக்க வேண்டுமென்பதை அவள் தீர்க்கமாக அனுமானம் செய்தாள். தான் அளித்த ஏமாற்றத்தின் சோகம் தன்னைத் திரும்பிக் கவ்விக் கொண்டதை அவள் இந்தச் சில நாழிகைகளிலே பலமுறை அனுபவித்தது உண்மைதான். நெருப்பின்மீது நிற்பதுபோல இருந்தது அவளுக்கு. அவள் முகத்தில் கலக்கம், சோகம், ஆற்றாமை ஆகிய உணர்ச்சிகள் இழை பின்னின. இனி அங்குத் தாமதித்தால், கண்ணீர் தாமதிக்காது என்று அவள் புரிந்துகொண்டாள். ஒருக்களித்து இருந்த வெளிப்புறக் கதவை இடித்துக்கொண்டு வெளிப்புறம் சென்றாள். சற்றுப் பொறுத்து அவள் திரும்பிய போது, அவளது வதனம் தெளிவாகக் காணப்பட்டது.

"உட்காருங்க" என்று வீட்டுக்கு உடையவளையே உபசரித்தாள் சுடர்க்கொடி.

தமிழரசிக்குச் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

தன்னைக் கூப்பிடும் குரல் கேட்டு, தமிழரசி திரும்பவும் வெளிப்புறம் போய்த் திரும்பினாள்; தூக்குச் சட்டியைத் தூக்கிவந்தாள். நிரம்பப் பால் இருந்தது. ''இதோ, வந்திட்டேன்!'' என்று சொல்லி உள்ளே சமையற்கட்டுக்குச் சென்றாள்.

காபி அற்புதமாக மணத்தது.

''சாப்பிடுங்க!'' என்று கூறி, ஒரு குவளைக் காபியை அம்பலவாணனின் கையில் கொடுத்தாள். கவனமாக அவன் வாங்கிக்கொண்டான். இருதரப்பு விரல்களும் உரசி விலகின.

''சாப்பிடு, சுடர்க்கொடி!''

சுடர்க்கொடி அவளாகவே முக்காலியில் இருந்த மற்றொரு தம்ளரை எடுத்துக் கொண்டாள்.

''உங்களுக்குக் காபி...?'' என்று கேட்டான் அம்பலவாணன். வாயருகே காபியைக் கொண்டு போனவன் சடக்கென்று நிறுத்தினான்.

''எனக்கு வேண்டாம். இப்போது காபி குடித்தால் ராத்தூக்கம் கெட்டுவிடும்!'' என்று சமாதானம் படித்தாள், படித்துக்கொடுக்கும் ஆசிரியை. 'வளரும் இந்தியா' அவள் பிடிக்குள் இருந்தது.

''நீங்கள் மட்டும் சாப்பிடாமல் இருக்கலாமா?'' என்று சொல்லி, காலியாக இருந்த ஓர் எவர்சில்வர் டபராவை எட்டி எடுத்து, அதில் செம்பாதியை ஊற்றித் தமிழரசியிடம் கொடுத்தான் அம்பலவாணன்.

அவனையே இமைக்காமல்—சிரிக்காமல் பார்த்தாள் சுடர்க்கொடி.

ஏக காலத்தில் மூன்று ஜோடி உதடுகளும் 'நப்புக் கொட்டி' முடித்தன.

டபரா தம்ளர்களை ஒதுங்க வைத்துவிட்டு வந்து அமர்ந்தாள் தமிழரசி.

அம்பலவாணன் அறையைச் சுற்றிக் கண்களை அலைய விட்டான்.

'வானம் புவி புகழ் மன்னன்' இருந்தான்!

நேருஜியுடன் காந்திஜி உரையாடிக் கொண்டிருந்த மங்கலக் காட்சிக்கு, மலர்மாலை அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தது.

கீழ்த்திசையில் புத்தக அலமாரிகள் இருந்தன.

மேற்புறச் சுவரில் நற்சாட்சிப் பத்திரங்கள் சில பத்திரமாகக் கண்ணாடிச் சட்டங்களுக்கு மத்தியில் இலங்கின.

ஒரு பகுதியில் கண்ணாடி பீரோ. அதில் அவளுக்குரிய துணிமணிகள் அணிபெறத் திகழ்ந்தன.

அவன் எல்லாவற்றையும் வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்த சுடர்க்கொடி, "நான் இங்கே நிறையத் தரம் வந்திருக்கேன், அத்தான்!" என்று உட்பொருள் வைத்துச் சொல்லிவிட்டு, அடுத்த கணம், எதையோ மறந்து, பின் நினைவூட்டிக்கொண்டவள் போல் தடுமாறி முடிந்ததும், "தமிழரசி, நான் சொன்னேனே என் அத்தானைப் பற்றி, அவர் இவர்தான்!" என்று அம்பலவாணனைச் சுட்டிக் காட்டிச் சொன்னாள். சுட்டும் விழிச்சுடர்கள் பிரகாசித்தன. தங்கக் கழுத்தில் தங்கப் பூச்சரம் அழகுக்கு அழகானது.

"அப்படியா? நீ ஓட்டி வந்த காரிலே இவங்களைக் கண்டதுமே எனக்குப் புரிஞ்சுட்டுது, சுடர்க்கொடி!" என்றாள் தமிழரசி. அதரங்களில் கவர்ச்சி கசிந்தது.

சுடர்க்கொடி, "ஒஹோ!" என்று இழுத்தாள், தமாஷாக.

சிகரெட் டப்பாவை எடுத்துக் கொண்டான் அம்பலவாணன். 'பாண்ட்' சமன் ஆனது.

தமிழரசி இருப்புக்கொள்ளாமல் தவித்தாள். 'என் கடிதத்தைத் திருவாளர் அம்பலவாணன் பார்த்திருப்பாரா? பார்த்திருந்தால், என்னுடைய முடிவின் மூலம் என்

தோழிக்கு—என்னுடைய உடன் பிறவாச் சகோதரிக்கு ஒரு சிக்கல் தீர்ந்து, அவளுடைய காதல் பாதை தெளிவாகிவிட ஏதுவாகிவிடுமல்லவா? நான் கொடுத்த தபாலை ஒரு கால் அவன் பார்த்து, அதிலிருந்த விலாசத்தைப் படித்துவிட்டு, அதன் மூலம் என்னை அவன் மனத்திற்குள் சபித்தாலும் சபித்திருக்கலாமே! எப்படியோ என் கடமையை—எனக்கு நானே செய்து கொண்டாக வேண்டிய ஒரு பொறுப்பை வெகு யதார்த்தமாகச் செய்து முடித்துவிட்டதாகவேதான் நான் நினைக்கிறேன். மனம் என்றால் அதற்கென்று ஆசா பாசங்கள் ஆயிரம் இருக்கும். இதற்கு என்னுடைய இந்தக் கன்னி மனமும் விலக்கல்ல! ஆனால், அத்தகைய எனது ஆசா பாசங்களுக்காக எனது மனத்தீர்ப்பை நான் புறக்கணிக்க முடியுமா?' ஒரு நிமிஷத்திற்குள் ஒரு யுகம் நடந்து மீண்டு விட்டதோ?

தமிழரசி நெடுமூச்சை ஓசைப் படுத்தாமல் வெளியேற்றினாள். தன் தோழியையும் அம்பலவாணனையும் மாறி மாறிப் பார்த்தாள். அவர்கள் இருவரது நெற்றித் திடல்களிலும் வினாக்குறிகள் வளையமிட்டு இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. ஹிட்ச்காக் படத்தில் எதிர்பாராத பயங்கரத் திருப்பத்தைச் சந்திக்கத் தயாராக இருப்பதற்கு நேராக, அப்பொழுது, தமிழரசி இருந்தாள். அம்பலவாணனை முதலில் சந்திக்க நேர்ந்த அந்நிகழ்ச்சி அடிக்கடி அவள் கண்களுக்குள் நிழலாடி நின்றது.

"ஸிஸ்டர்!" என்று மௌனத்தைக் கலைத்தாள் சுடர்க்கொடி.

"சொல்லு, சகோதரி!" என்றாள் தமிழரசி. அவள் நெஞ்சு அடித்துக் கொள்ளத் தொடங்கியது. 'சகோதரி' என்னும் அழைப்பில் பாசம் இனித்தது.

"உங்க லெட்டரை அத்தான் பார்த்தாச்சு!" என்றாள் சுடர்க்கொடி. சொல்லித் தீரவேண்டியதைச் சொல்லிவிட்ட பாவத்தை, ஏந்திழையின் வதனம் ஏந்தியிருந்தது.

தமிழரசி இதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. சொல்ல என்ன இருக்கிறது? பேசாமல் அவள் அம்பலவாணனின் பக்கம் பார்த்தாள்.

சுடர்க்கொடி தன் சிநேகிதியின் சார்பாக நாற்காலியை நெருக்கிப் போட்டுக் கொண்டாள். ''என்ன பேசலேயே, தமிழரசி?'' என்று கேட்டாள்.

''நீதான் பேசுறியே சுடர்!''

''ஆமாம், நான்தான் பேசுகிறேன். நானேதான் பேசவும் வேணும். எஸ்... இட் இஸ் அப்ஸல்யூட்லி கரெக்ட்!'' —என்று ஒரு மூச்சுப் பேசி முடித்துவிட்டு, ஓர் இடைவெளி கொடுத்தாள் சுடர்க்கொடி. பிற்பாடு, மறுபடி தொடரலானாள் :

''தமிழரசி, இதுவரை நான் பேசினேன். இப்போது, என் இதயம் பேசப் போகிறது. இவர்கள் என் சொந்த அத்தான்—முறை அத்தான். ஆகவே, முறைப்படி எனக்குள்ள உரிமையின் பேரில்—நானும் அவரும் திருச்சியில் ஒன்றாய் உண்டு, ஒன்றாய் ஆடிப் பாடித் திரிந்த அந்த அறியாப் பிராயத்துச் சம்பவங்கள் வளர்த்துக் கொடுத்த அந்தப் பாசத்தின் உறவின் பேரில், நான் என் அத்தானைத் தான் மனப்பூர்வமாகக் காதலித்து வந்தேன். அவர் நினைவு என்னுள் சொர்க்கத்தை உருவாக்கியது; அவர் அன்பு என்னுள் புதிய உலகத்தை உண்டாக்கியது; அவர் உள்ளம் என்னைப் புதிய சுடர்க் கொடியாகப் பிறப்பித்தது. இத்தகைய விந்தைகள், என்னுள் காதலெனும் பவித்திரமான சக்தியைத் தோற்றுவித்தன. நான் என் அத்தானை மண மேடையில் சந்திக்கப்போகும் புனித நந்நாளுக்காகத் தவம் இருந்தேன்.

''அது தருணம்தான், அதாவது, நேற்றுத்தான்—எழும்பூரில் ரெயிலுக்காகக் காத்திருக்கையில்தான்—அவர் உங்களது அன்புக் காதலுக்குத் தவம் இருப்பதாகச் சொன்னார். உங்கள் கடிதத்தைப் போஸ்ட் செய்ய வேண்டுமென்றிருந்த நான், ஏதோ ஒரு கவனத்தில் கவரில் இருந்த

விலாசத்தைப் பார்த்தேன். அத்தானுக்குரிய தபால் என்று புரிந்தது எனக்கு. ஆகவே, அதை அவரிடமே நேரில் சேர்ப்பித்தேன். கடிதத்தைப் படித்த என் அத்தான் கண் கலங்கினுர். என் அத்தானின் விழிகளைத் துடைத்தேன். என் விழிகளைத் துடைத்துப் பழகிய என் ஆருயிர் அத்தானுக்கான கடமையைச் செய்ய வேண்டியவள் நான். ஆம்; இப்போதும் நான் என் கடமையைச் செய்தாக வேண்டும்!...

"உங்களைத் தேடிக்கொண்டு இதற்கு முந்தி ஒரு தவணை இங்கு வந்து திரும்பினேன். தேடிப்போன மூலிகை காலில் சிக்கிய கதையாக, உங்களை வழியில் பார்த்தேன். துப்பறியும் கதையில் வருகிற ஸஸ்பென்ஸ் போல, உங்களைக் காரில் ஏறச் சொல்லிவிட்டு, என் அத்தான் பின் சீட்டில் இருப்பதைப் பற்றிப் பிரஸ்தாபிக்காமலே இருந்துவிட்டேன். இதற்காக, நீங்கள் நாளைக்குத் தனிமையில் என்னைக் கோபிப்பீர்கள் என்பதையும் நான் அறிவேன்.

"சரி, நேரமாகிறது. என் கடமைக்கு வருகிறேன். ஸிஸ்டர்! இந்த அறையில் ஓர் அழகிய—உணர்ச்சி மிகுந்த—நூதனமான முக்கோணக் காதல் கதை நடந்து கொண்டிருக்கிறது. இந்த முக்கோணக் காதலில் ஒரு கதாநாயகன்! ஆனல், இரண்டு நாயகிகள்! இல்லையா?... பெரும் சிக்கல் தான்! ஆனுல், என்னுல் இதற்குத் தீர்வு காண முடியும்! என் அன்புக்குரிய அருமை அத்தானை நீங்கள் சிரிக்கச் செய்தால், நான் சத்தியமாக ஆனந்தக் கண்ணீர் சொரிவேன், அக்கா! உங்கள் தங்கையின் உயிரான வேண்டுகோளை நீங்கள் நிறைவேற்றுங்கள். இல்லாவிட்டால் என் அத்தானுடன் நானும் சேர்ந்து அழவேண்டியதுதான்!..."

சுடர்க்கொடி சிறுமியாகச் செருமினுள். கைகளை நடுக்கத்துடன் விரித்து, "அக்கா!" என்று தமிழரசியின் கைகளைப் பற்றிக் கெஞ்சினுள்.

தீக்குள் விரலை வைத்தவளாகத் துடித்தாள் தமிழரசி. அவளது நயனச் செம்புகள் ததும்பின. "சுடர்!... இந்த

அனுதையை ஏனம்மா சோதிக்கிருய்?'' என்று விசும்பினுன். அவளது கண்ணீரையும் விலக்கினுள்.

சுடர்க்கொடி தன்னுடைய 'ஸில்க்' புடவையின் முகத் தலைப்பைத் தமிழரசியின் முகத் தலைப்புக்கு நீட்டி அவளது விழிநீரைத் துடைத்தாள். ''நீங்க அனுதையா? யார் சொன்னது? நாங்களல்லவா இப்போ அனுதையாட்டம் தவிச்சிட்டிருக்கோம், உங்க ஜட்ஜ்மெண்டுக்காக!...'' என்று மொழிந்தாள். "நீங்கதான் எங்களைச் சோதிக்காமல் இருக்கவேணும்!"

தமிழரசி விரக்தியுடன் இதழ்களைப் பிரித்தாள். அம்பலவாணின் திசைக்கே அவள் திரும்பப் பயந்தாள். ''நான் தெய்வமல்லவே உங்களைச் சோதிப்பதற்கு!'' என்று வறட்சியாகப் புன்னகை செய்தாள். நெற்றிப்பொட்டு செழிப்பமாக இருந்தது.

"வரம் கொடுக்க வேண்டிய நிலைமையிலே நீங்க இருக்கிங்க. அப்புறம் என்ன? தெய்வமாக இருக்க ஒப்பலேன்னு, ஆல்ரைட்! நீங்க எங்களுக்குச் சாதகமான நல்ல வரத்தைக் கொடுத்திடுங்க, போதும்!...'' என்று வாய்விட்டுச் சிரித்தாள் சுடர்க்கொடி. மூக்குத்திக் கற்களில் சிரிப்பின் அலைகள் பிரதி பலிப்புச் செய்தன.

தமிழரசி துவண்டாள். உயிர்ப்புச்சத்து முழுவதும் வடிந்துவிட்டதோ என்னும்படியாக அவள் துவண்டாள். தமிழ்க் கடவுளைத் தியானம் செய்தாள். அன்பின் அண்ணலைப் பார்த்தாள்; ஆசிய ஜோதியை நாடினுள்; புனித வள்ளல் புத்தர்பிரானைத் தரிசித்தாள்.

கணங்கள் சில பேய்க் கணங்களாக முழங்கி மறைந்தன.

வீதியில் சீன வெடிகள் அலறின!...

தமிழரசி கண்களைத் திறந்தாள். ''சகோதரி! உன் அத்தானை உன்னுடைய அத்தானுகவே ஆக்கிக்கொள்ள முயற்சி செய். முயன்ருல் முடியும். இதுவே, நான் உன்னிடம் வேண்டும் வரம்!... இதுவே நான் உனக்குச் செய்ய

வேண்டிய மனிதப் பண்புமிக்க கடமையாக எனக்குத் தோன்றுகிறது. என் மனச்சாட்சி அப்போதுதான் என்னை வாழ்த்தும். இம்முடிவுதான் உலக வழக்கிற்குப் பொருத்த மாகவும் தோன்றும்! என்னைப் பெரு மனம் கொண்டு மன்னித்துவிடு, சகோதரி!'' என்று முத்தாய்ப்பு வைத்துச் சொல்லி, அவளைக் கையெடுத்துக் கும்பிட்டாள்.

கால மழை பெய்து அமர்ந்தது.

சிகரெட்டுப் புகைச் சுருள்கள் அந்த அறையிலிருந்து இப்போது பூரணமாக மறைந்துவிட்டன!

## புலன் விசாரணை

**எட்டு**

---

“வாம்மா, வா!'' என்று இதயத்து அன்பு முழுவதையும் சொற்களிலும் உதடுகளிலும் நிரப்பி, தமிழரசியை வரவேற்றாள்; பெற்றதாய் தன் மகளை வரவேற்பது போன்று வரவேற்றாள், கஸ்தூரி அன்னை இல்லத்தின் தலைவி திலகவதி அம்மையார். அவள் நெற்றியில் கஸ்தூரித் திலகம் மணத்தது!

தமிழரசி அன்பாக இளநகை சிந்திக்கொண்டே உள்ளே படியேறினாள், புனிதமான அழகின் பேரொளியோடு. சாந்துப்பிறை வெகு அமைப்பு.

பார்வையாளர்கள் கூடத்தில் அவர்கள் இருவரும் எதிரும் புதிருமாக அமர்ந்திருந்தார்கள்.

அழைப்பு மணியை அழுத்தினாள் தலைவி. ஓடி வந்த ஆயாள் மரியாதையுடன் நின்றாள். “ஒவல் இரண்டு கொண்டு வாங்கம்மா! எங்க தமிழரசிக்கு ஒவல்னு ரொம்பப் பிரியம்!'' என்றாள். காற்று கலைத்த வெள்ளை முடிகளைத் 'தனது' பண்ணினாள் தலைவி.

அம்மையாரிடம் அன்புக்குப் பஞ்சமேது?—அது சொல்லிச் சொல்லி வழிந்தது. அந்த அன்புதானே அவளுக்கு வாழ்வு! மெய்; அன்பின் ஆன்மாதான் வாழ்வு—தலைவியின் வாழ்வு!

ஆயா கொணர்ந்த கோப்பைகளைத் தமிழரசி எழுந்து வாங்கி, ஒன்றை மிகுந்த பணிவுடன் தலைவியிடம் சமர்ப்பித்தாள். "சாப்பிடுங்க மதர்!" என்றாள்.

வாங்கிக்கொண்ட அம்மையார், "உட்கார்ந்து நீயும் சாப்பிடம்மா!" என்று உபசாரம் செய்து ஔவலைச் சுவைக்கலானாள். இதழ்கள் குவிந்து விரிந்தன. கழுத்தில் இழைந்த சன்னச் சங்கிலி ஒளி கக்கியது. நெற்றிக் குங்குமம் துலாம்பரம்.

உச்சி விசிறி ஒய்யாரமாக ஊர்ந்தது.

ஊர்ந்த கதிர் மணிகளில் சூடு ஊர்ந்தது.

சுழல் அழமாரி சுழன்றது.

கைக்கு வந்ததை எடுத்தாள் தமிழரசி. 'அமெரிக்காவில் நேரு' என்ற ஆங்கில அனுபந்தம் அது. புரட்டினாள். அதன் ஏடுகளைப் புரட்டியதுபோது, அவள் தன் மன ஏடுகளையும் புரட்டிக் கொண்டாள்.

விவரம் புரிந்த நாள் தொட்டு அவள் மண் தொட்டு விளையாடி, மனம் தொட்டுச் சிரித்து மகிழ்ந்திடச் செய்த புனிதமான புண்ணியத்தலம் ஆயிற்றே இந்த இல்லம்!

ஈன்ற தாய் தந்தையர்களை இழந்த அனாதைச் சிறுவர்—சிறுமியர்களுக்குத் தந்தையாகவும் தாயாகவும் விளங்க ஓர் அன்னையைக் கொடுத்த அந்த இல்லம் அவளுக்கும் நிழல் தந்து, அன்பு தந்து, அங்கு ஓர் உன்னதமான உலகத்தையும் தந்தது. "மதர்... மதர்!" என்ற பாசக்குரல்கள் சதா ஆர்ப்பரித்தன!

அன்னையின் முகம் அறியாள்; தந்தையின் முகம் அறியாள். அப்படிப்பட்ட துர்ப்பாக்கியவதிக்கு, பாக்கியங்களின் கூட்டுறவுப் புள்ளியாக விளங்கிய திலகவதி அம்மைதான் அவளுக்கு

'அம்மா' ஆனாள். அம்மையும் அப்பனும் ஆனாள்; தெய்வத்தைப்போல. ஆமாம், தெய்வத்தைப் போலத்தான்!

தமிழரசி தன்னைப்பற்றிச் சிந்திக்கும் தருணங்களிலெல்லாம் அவளுக்குத் தன் பிறப்பின் புதிர் பற்றிய சிந்தனையும் கூடவே ஒட்டிவரும். ஒட்டியிருக்கும் அமைதி அப்போது வெட்டியோடும். 'நான் யார்?' தத்துவ விசாரப் பாவனையில் அவள் தன்னைத் தானே—தனக்குத் தானே கேட்டுக் கொள்வாள். இதற்கு விடை சொல்லத் தெரிந்தவன் 'ஒருவன்' தான் உண்டு!...

ஆனால், அவளோ, இத்தனை நாளும் இல்லாத திருநாளாக இப்போது தன் பிறப்பின் அந்தரங்கம் பற்றித் திலகவதி அம்மையாருக்கு ஏதாவது விவரம் தெரியுமா என்று கேட்டு விடத் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தாள். விவரம் புரிந்த நாட்களிலே எப்போதாவது இப்படியொரு மனச் சபலம் கிளர்ந்தெழுந்து புரட்சி பண்ணுவது உண்டு. அப்போதெல்லாம், 'என்னைப் பெற்றவர்களே அனாதை என்ற பட்டத்தை எனக்குச் சூட்டிவிட்டு என்னைப் பற்றிக் கவலைப் படாமல் மறைந்துவிட்ட பிறகு—அல்லது, தங்களை மறைத்துக் கொண்டு விட்டபிறகு, அவர்களைப் பற்றிப் பெரிதாக நான் மட்டும் எதற்காகக் கவலை கொள்ள வேண்டும்?' என்று சமாதானத்தைக் கற்பித்து, தன் கன்னி உள்ளத்துக்கு ஒரு போக்குக் காட்டித் தப்பித்துக் கொள்வது என்னவோ வாஸ்தவம்தான். ஆனால், வேறு சில தருணங்களிலோ, அவள் விபரீதமாக முடிவுகட்ட முனைவதும் உண்டு. 'ஒரு வேளை தகாத காதலின் விளைவால் நான் பிறந்திருப்பேனோ? அப்படித் தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், என் பெற்றோர்கள் என்னை ஏன் இப்படி நடுத்தெருவில் போட்டுவிட்டு போகப் போகிறார்கள்?...' என்று அவள் நினைத்து ஆராய்ந்து பார்க்கையில், அவளுக்கு நெஞ்சமே வெடித்துச் சிதறி விடும் போல ஆகிவிடும். தனியே அழுது புலம்புவாள். மனத்தின் துன்ப வெறி தணியும்போது, 'எது எப்படி ஆனாலும், என் பெற்றோர்களை நான் கண்ணை மூடுவதற்குள் ஒரு முறையாகிலும் தரிசித்துவிட வேண்டும். ஆம்; இன்று சமுதாயத்தில்

ஓர் அந்தஸ்துப் பெற்றிருக்கும் என்னை மகளாகப் பெற்ற பெற்றோர்களை—அவர்கள் தெய்வாதீனத்தால் உயிருடன் இருந்தால்—தேடிக் கண்டு பிடித்துவிட வேண்டும். அலகிலா விளையாட்டுடைய ஐயன் மனம் வைத்தால் நாளைக்கு என் தாய் தந்தையை என் முகத்துக்கு நேரே காட்டிவிட மாட்டானா?... ஈஸ்வரா!... செந்தில் குமரா!...' என்று சிந்திப்பாள். இறந்த காலத்தின் துன்பத்துக்கு ஆறுதல் சொல்லும் எதிர் காலத்தின் மனக்கனவு.

சர்ச் மணி கணீரென்று கேட்டது.

தமிழரசி சுயப்பிரக்ஞை அடைந்தாள்.

தலைவி தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தாள்.

மூளை மரத்துவிட்டாற் போலிருக்கவே, தமிழரசி எழுந்தாள். சுவரில் கொட்டை எழுத்துக்களிலே பொறிக்கப்பட்டிருந்த வாசகங்களை உன்னிப்பாகப் பார்த்தாள். "தெய்வத்தின் முன்னே நாம் யாரும் அனாதைகளல்ல. ஆண்டவன் தான் நமக்கு அம்மையும் அப்பனும்! நாம் பிறந்து விட்டோமென்றால், அதற்கு ஓர் அர்த்தம் கடவுளால் உண்டாக்கப்பட்டிருக்க வேண்டும். அதுதான் சிருஷ்டி ரகசியம். ஆகவே, நாம் நம் பிறப்பைப் பற்றி ஆராயாமல், நம் பிறப்பின் கடமையைச் செயற்படுத்துவதில் கருத்துச் செலுத்த வேண்டும். இதுவேதான், வாழ்க்கையின் மகத்தான உண்மையுமாகும்?"

இல்லத்தின் ஒவ்வொரு விழாவிலும் தலைவி வழங்கிய அறிவுரை அல்லவா இது?

தன்னுள் சிலிர்த்தெழுந்து தென்பு ஊட்டிய அமைதியின் நிறைவில் அவள் தலை நிமிர்ந்து கம்பீரமாக நின்றாள்.

"என்னம்மா, உன் முகம் தீவிரமான சிந்தனை வசப்பட்டிருக்கே?" என்று விசாரித்துக் கொண்டே வந்து ஆசனத்தில் அமர்ந்தாள் திலகவதி. பூத்திரைகளை ஊடுருவிப் பாய்ந்தது, கடலைத் தழுவி வந்த இளங்காற்று.

தமிழரசி தலைவியை ஏக்கத்துடன் பார்த்தாள். "என்னைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன், அம்மா!... நான் அனாதை என்கிற நினைவு என்னை அரித்தெடுக்கிறது. என்னைப் பெற்றவர்களைப்பற்றிக் கடைசி வரையிலும் உங்களுக்கு ஒரு விவரமுமே தெரியாதா, மதர்?" என்று பரிதாபமான நைந்த குரலில் வினவினாள் அவள்.

தமிழரசியின் நொந்த பேச்சைக் கேட்டுத் திடுக்கிட்டாள் திலகவதி. தமிழரசியை நெருங்கி அவள் தோளைத் தொட்டுத் தடவிக் கொடுத்தாள். அவளை நாற்காலியில் அமர்த்தினாள். இமை வட்டங்களில் பொடித்திருந்த கண்ணீர்ச் சிதறல்களை விலக்கினாள். "என்னம்மா, சொன்னே? நீ அனாதையா?... நீ அனாதை என்று உனக்கு உன் மனம் சொல்லிக் காட்டுகிறது? அப்படியென்றால், உன்மீது பாசம் சொரிந்த நான்கூட அர்த்தமற்ற ஒரு ஜடமாகவா உனக்குத் தோன்றி விட்டேன்?... 'அம்மா! அம்மா!' என்று நீ என்னிடம் பாசம் கொண்டிருந்ததெல்லாம் வெறும் பொய் தானா? என் கனவுகள்—கொள்கைகள்—கடமைகள்—லட்சியங்கள் அனைத்துமே பாழ் என்று நிரூபித்து நிற்கிறாய்? சொல்லம்மா தமிழரசி, சொல்!..." என்று கேட்டாள்.

திலகவதி அம்மையின் முகம் உணர்ச்சிச் சுழிப்பில் சிவந்தது. மூக்கின் முனை சிவந்தது. வெளுப்புத் தட்டியிருந்த உதடுகள் செருமலை மூடிக் கொண்டன. துடிதுடித்த இமைகளால் ஈரத்தை மூடிக்கொள்ள முடியவில்லை.

அன்னையை ஏறிட்டுப் பார்த்த தமிழரசி அஞ்சி விட்டாள். தன் கண்களைத் துடைத்துக் கொண்டே, "தெய்வம் கண்கலங்கக் கூடாதுங்க. உலகம் பொறுக்காது இந்தப் பாவத்தை!... என்னை மன்னித்துவிடுங்கம்மா, மன்னித்துவிடுங்க!" என்று கெஞ்சியவாறு, தலைவியின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள். கழுத்துச் சங்கிலி ஊசலாடியது. அன்னை திலகவதி அம்மையின் அன்புப் பரிசிலுக்கு அப்போது நிகழ்ந்து கொண்டிருந்த போராட்டம் தெரிந்திருக்கலாமோ? பாசப்பரிவுடன் தமிழரசியின் கைகளைப்

பற்றித் தூக்கினாள் திலகவதி அம்மை. ''நேற்று உன்னை வீணாக அலையவிட்டு விட்டேன், இல்லையாம்மா?'' என்றாள், தாய்மையின் தவிப்புடன்.

''அப்படியொன்றுமில்லைங்க மதர்!'' என்றாள் தமிழரசி, மகளின் சமாதானத்துடன்.

சுவர்க் கடிகாரம் பத்துமுறை ஒலி பரப்பி ஓய்ந்தது.

''அம்மா!''

''சொல்லுங்க, மதர்!''

''அந்தச் சுவரில் இருக்கிற வாசகத்தை நீ மறக்கவில்லையே?'' என்று, சற்று முன்னம் அவள் படித்த அந்த அறிவுரையைக் காட்டினாள் தலைவி.

''மறக்க முடியாதுங்க உங்க போதனைகளை! இப்போதும் பார்த்தேன், அம்மா!''

"நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்!" என்றாள் தலைவி. உள்ளத்திலிருந்த முடிவு, இதழ்களை அண்டிக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

''சொல்லுங்க!''

''உன் மனத்திற்கு அவசியமாகவும் அவசரமாகவும் ஒரு துணையை ஏற்படுத்தியாகணும். என்னம்மா நீ நினைக்கிறே?'' என்று நயமான சுவாதீனத்துடன் வினவி, அவள் கண்களைப் பரிசீலனை செய்தாள், அம்மை.

இம்மாதிரியான ஒரு கேள்வி, தன்னை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வத்தின் இதயத்திலிருந்து புறப்படுவது எவ்வளவோ இதமாகவும் இயல்பாகவும் அவளுக்குத் தெரிந்தது. ஆனாலும், புறப்பட்ட கேள்வி அவள் முகத்தில் வேர்வையைக் கொட்டியது; சிரிப்பில் நாணத்தைக் காட்டியது. மறுகணம், தன் காதல் விவகாரம் எதுவும் தலைவிக்குத் தெரிந்திருக்கக் கூடுமோ என்றும் ஓர் ஐயப்பாடு உண்டானது.

"சும்மா சொல்லு, தமிழரசி! உன் அம்மாகிட்டே சொல்றதுக்கு நீ வெட்கப்படலாமா? நீ தமிழாசிரியை. உனக்குன்னு ஒரு அந்தஸ்து, கவுரவம் எல்லாம் உண்டு; இந்தச் சமூகத்திலே, அந்தவிதமான அந்தஸ்து, கௌரவத்துக் கெல்லாம் உனக்கு ஒரு துணை கூடிவிட்டால், இன்னும் ஒரு மாற்று அதிகப்படியான மதிப்பு ஏற்படும், அம்மா!"

தமிழரசி இப்போது அம்மையைப் பாசம் பொங்கப் பார்த்தாள். "உங்க இஷ்டம் அதுவானுல், நான் அதையே கடமையாக் கொள்றேனுங்க, அம்மா!"

அம்மையார் சிரித்துக்கொண்டே, "ஓ. கே!" என்ருள். தன் மாணவியான ஆசிரியையின் முதுகில் தட்டிக் கொடுத் தாள். "சரி அம்மா, செஸ் ஒரு ஆட்டம் ஆடலாமா? ஒரு மாறுதல் இருக்கட்டுமே!" என்ருள்.

தமிழரசி இணங்கினுள்.

சதுரங்கக் காய்கள் உக்தியுடன் களம் மாறி, களம் புகுந்து விளையாடின.

தலைவிதான் ஜயித்தாள். "உன்னுலே கான்சென்ட்ரேட் பண்ண முடியலே. முற்றுகைக் கட்டத்திலேயே நல்லாப் புரிஞ்சிட்டது!" என்ருள்.

தமிழரசி என்ன சொல்வதென்று புரியாமல் சிரித்தாள். பிறகு, ரேடியோவை 'ட்யூன்' செய்தாள். மெல்லிசை வழிந்தது.

'மாபெரும் நாடு—மாபெரும் மக்கள்!" என்ற அரசாங்க விளம்பரத்தில் வீரர்களின் மகத்தான நாட்டுப் பணிகளைக் குறித்துப் போற்றப்பட்டிருந்ததைப் படித்தாள். பெண்குலம் ஆற்ற வேண்டிய கடமைகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருந் ததையும் படித்தாள்.

மணி பன்னிரண்டுக்குத் தமிழரசியும் அம்மையாரும் உண்டார்கள். இல்லத்தைச் சார்ந்த கோமதி என்ற யுவதியை மயிலை பாங்கர் ஒருவரின் தலைமகன் காதல் மணம்

செய்து கொள்ளப் போவதாகவும், சேகர் என்ற அனுதை இளைஞனைப் பெரிய இடத்துப் பெண் ஒருத்தி மனம் விரும்பித் திருமணம் புரிந்து கொள்ளப் போவதாகவும் தெரிவித்தாள், தலைவி. "உன்னைப் பற்றித் திருவாளர் சொக்கநாதன் அவர்கள் எப்போதுமே ரொம்பவும் அக்கறைப்படுகிறார் தமிழரசி!" என்று உணவு வேலை முடிந்து சொன்னாள்.

'ஊம்' கொட்டிக் கேட்டாள் தமிழரசி.

"எனக்கு ஒரு வாரம் டயம் கொடும்மா!" என்று கோரினாள் தலைவி.

"எதற்குங்க மதர்?" என்று ஒன்றும் புரியாமல் பாலகியை ஒத்துக் கெஞ்சினாள் தமிழரசி.

"உனக்கு ஏற்ற ஒரு நல்ல உள்ளத்தைச் செட்டில் செய்யறதுக்கம்மா!" என்று முன்னைக் காட்டிலும் தூக்குதலாகச் சிரித்தாள் திலகவதி.

தமிழரசிக்கும் வெட்கப்படத் தெரியும்!

## " மோகன்தாசுக்கு ஜே ! "

### ஒன்பது

'இதோ வந்துவிடப் போகிறேன்!' என்று பூச்சாண்டிக் காட்டிக் கொண்டிருந்தது முகில் வானம்.

அதற்குள் 'இதோ, நான் வந்துவிட்டேன்!' என்று குடியிருந்த வீட்டில் வந்து குதித்துவிட்டாள் தமிழரசி. இல்லத் தாய் கொடுத்த தீபாவளி விருந்தும் தீபாவளிப் பலகாரங்களும் இன்னமும் அவள் வயிற்றில் தேங்கியிருப்பது போல அவளுக்குத் தோன்றியது. இரண்டு நாள் நல்ல விருந்து. குடையை அதன் இடத்தில் சாத்தி வைத்தாள். கூடத்திலிருந்த படுக்கையை உதறிப் போட்டாள். அலமாரியைக் குடைந்தாள். நாட்குறிப்பு, எழுதும் தாள்கள், பேனு ஆகிய

வற்றை எடுத்து வைத்தாள். வானொலிப் பேச்சை அவள் தயார் செய்தாக வேண்டும். இரண்டு மூன்று நாளைக்குள் அனுப்பிவிட வேண்டும். 'தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள்' என்பது பேச்சின் மகுடம்.

'ஐம்பெருங்காப்பிய மகளிர், பாஞ்சாலி, மிதிலைச் செல்வி' என்று பட்டியல் வளர்ந்தது. 'பெண்ணின் பெருமை' நூல் வந்தது. காந்திஜியின் சிந்தனைகள் துணை நின்றன. பாரதியின் பாக்கள் ஒலித்தன. தமிழ்மறை கை விளக்காயிற்று!

ஜமுக்காளத்தில் சம்மணமிட்டுக் குந்தினாள் தமிழரசி. ஜன்னல்களின் வழியே மயங்கி வந்தன மாலைக்கதிர்கள். கோட்டை மல்லிகைப்பூக்கள் அவளைச் சுற்றிச் சிதறிக் கிடந்த படி, வாசனையைப் பெருக்கிக் கொண்டிருந்தன.

அவள் பேனாவும் கையுமாகச் செயற்பட்டாள். அவளது இலக்கிய மனம் ஒளி கூட்டத் தொடங்கியது.

கற்பின் மகளிரைத் தோற்றுவாயாகக் கொண்டு, இலக்கியத்தில் வாழ்ந்துவரும் பெண் திலகங்களை முதற் கட்டமாகச் சித்திரித்து, தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள் தொன்று தொட்டு இன்றுவரை கொண்டிருக்கும் நிலையான தகுதிகளைக் கட்டுரையின் அடுத்த கட்டமாக்க வேண்டும். பெண்மைக்கு வாழ்த்துச் சொல்லி, புதுமைப் பெண்ணுக்கு இலக்கணம் வகுத்த அறிஞர்களை நினைவுகூர வேண்டும். இவை மீண்டும் இரண்டு மூன்று பகுதிகளை இட்டு நிரப்பும். உலக அரங்கத்தில் இந்தியப் பெண்களின் புகழ் குறித்தும் ஒப்பு நோக்குச் செய்ய வேண்டும். தமிழ்ச் சமுதாயத்தில் பெண்களின் கடமைகளை நாட்டுப்பணிக்குக் காணிக்கை வைக்கும் சீரிய பணியில் இன்னும் விரிந்த அளவில் உட்படுத்த வேண்டும் என்கிற கருத்தை வலியுறுத்த வேண்டும். வணக்கத்துக் குரியது பிறந்த மண். அதேபோல, வணக்கத்துக்குரியது தாய்க்குலம். தாயும் மண்ணும்தான் வாழ்வு. அதுவே தான் வாழ்க்கையின் தியாக மனப்பான்மைக்கு ஒழுக்கம் மிகுந்த—உயிர்ப்பான உட்பொருள் என்னும் மையக்கருத்தும்

சொல்லப்பட வேண்டும். பின், அனைத்தையும் கோடிட்டுக் காட்டினால் முடிவுரை அமைந்துவிடும்!...

திடீரென்று எதையோ நினைவு கூர்ந்தாள். வரும் வழியில் சந்தித்த ஒரு பிச்சைக்காரனைப்பற்றி எண்ணினாள். இரண்டு கால்களும் இழந்திருந்த அவன், சிறிய வண்டியை ஓட்டிக்கொண்டு பிச்சைகேட்ட விவரம் தோன்றியது. ஒதுக்கிவிட முடியாத ஓர் உண்மையாக அவன் அவளுடைய மனத்தில் எழுந்தான். பத்துக் காசு போட்டுவிட்டு நகர்ந்தாள். அவன் நிறைவுடன் சிரித்து நினைவுடன் நன்றி சொன்னான்!

குறிப்புக்களை எண் வரிசையிட்டுக் குறிப்பெடுத்து முடித்ததும், அவள் ஓய்வுக்காகச் சில விநாடிகள் சும்மா இருந்தாள். பிறகு, பத்திரிகையைப் புரட்டினாள். ஞாயிற்றுக்கிழமைப் பதிப்பு, பாகிஸ்தானத்துடன் சண்டையிட்டு, பயன்படாத அளவில் படு ஊனம் அடைந்துவிட்ட நம் ராணுவ வீரர்கள் தலைமை நகரத்தில் தகுந்த சிகிச்சைகள் பெற்றபின் அவரவர்கள் தங்கள் தங்கள் இடங்களுக்குப் புறப்பட்டபோது, அவர்களைத் தற்காப்பு மந்திரி வழியனுப்பி வைத்த நிகழ்ச்சிகள் படங்களாகி அச்சிடப்பட்டிருந்தன. முகம் புரியாத—ஆனால், அகம் புரிந்த அவ்வீரத் திலகங்களுக்கு அவள் மனம் வீர அஞ்சலி செய்தது.

மழை பொழிந்தது.

ஜன்னல் கதவுகளை அடைத்து, விளக்குகளைப் போட்டாள்.

பாகிஸ்தானின் 'பாட்டன்' டாங்குகளுடன் சியால் கோட் பகுதியில் எதிர்த்துப் போராடி நாட்டுக்காக உயிர்த் தியாகம் புரிந்த ஹவில்தார் அப்துல் ஹமீதின் சீரிய தியாகத்தைப் போற்றி இந்திய அரசாங்கம் அன்னாருக்குப் 'பரமவீர சக்கரம்' வழங்கியிருக்கும் விவரம் கண்டிருந்தது. படத்திலிருந்த அந்த அமரத் தியாகிக்குத் தலைதாழ்த்தி வணக்கம் தெரிவித்தாள்.

'சரித்திரத்தைச் செய்திருக்கிறீர்கள். சரித்திரத்தில் வாழ்வீர்கள் நீங்கள் எல்லோரும்!'

ஜவான்களின் படங்களைக் கண்டதும், பட்டாளத்தில் பணிபுரியும் சீதையின் தமையனைப் பற்றிய ஞாபகம் வந்தது.

ஒரு நினைவுச் சிதறல்:

இல்லத் தலைவியுடன் பிரயாணம் செய்து, கோடை விடுமுறையைக் கழித்துவிட்டு, பள்ளிக்கூடம் திறப்பதற்கு நான்கு நாட்கள் முன்னதாக அவள் வீடு வந்து சேர்ந்தாள். அப்போது சீதை ஓடி வந்து, "ஏன்னோட பிரதர் வந்திருக் காங்க!" என்று தெரிவித்தாள். தமிழரசி நிலைப்படியில் நின்ற வாக்கிலேயே தலையை வெளியே நீட்டிப் பார்த்தாள். ராணுவ உடைகள் திகழ, சிரித்த முகத்துடன் வடக்கே புறப் பட்டுக் கொண்டிருந்தான் அவன். பெற்ற தெய்வங்களை வணங்கி ஆசி பெற்றுச் செல்லும் கட்டத்தில் அவனது அழகிய, கம்பீரமான முகம் அவள் பார்வையில் நெளிந்தது. அக்காட்சி அவள் மனத்தில் பசுமையாக இப்போதும் விளங்கிக்கொண்டிருந்தது. "உங்க குடும்பம் ரொம்பப் பாக்கியம் செய்தது, சீதை!" என்று பாராட்டிச் சொன்ன பேச்சு நேற்றுச் சொன்னது போலவே இருக்கிறது.

சீதையின் தமையன் பெயர்: மோகன்தாஸ்.

மழை நின்று நேரம் கடந்திருக்குமோ?

அவள் எழுந்தாள். சாளரக் கதவுகளைத் திறந்தாள். சீதளக் காற்று உடம்புக்கும் உள்ளத்துக்கும் உணக்கையாக இருந்தது.

பரபரப்புடன 'ஜே' ஒலிகள் விண்முட்ட ஒலிப்பது கேட்டு அவள் வாசலுக்கு வந்தாள்.

தாயின் மணிக்கொடிகள் ஊர்வலம் வந்து கொண்டிருந் தன. மத்தியில் ஜீப் ஒன்று கதர்க்கொடி அலங்காரத்துடன் பவனி வந்தது, தெரு வழியே! "மோகன்தாசுக்கு ஜே!..." என்ற கோஷங்கள் நெருங்கி வந்தன.

'ஜீப்'பில் பவனி வந்த மோகன்தாஸின் பேரில் தமிழரசியின் கனிவுப் பார்வை நிலைத்தது. அவள் கைகளைப் பாங்குற உயர்த்தி வணக்கம் தெரிவித்தாள். ராணுவ உடுப்புகள் திகழ வீற்றிருந்த மோகன்தாஸ் நன்றியுடன் அவளைப் பார்த்துப் பதில் வணக்கம் தெரிவித்துப் புன்முறுவல் காட்டினான்.

ஆம்; சீதையின் தமையன்தான்!

உள்ளே விரைந்தாள் தமிழரசி. செந்தில் குமரனுக்குப் போட்டிருந்த மலர்மாலையை ;எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

அடக்கமான தெருவில் அடங்க முடியாத மக்கள் கூட்டம்.

"நில்லுங்க! எல்லாரும் வண்டியை நிறுத்துங்க!" என்று எச்சரித்தார் தொண்டர் தலைவர்.

சீதையின் பெற்றோர்கள் மகிழ்ச்சிப் பெருக்கோடு 'ஜீப்' காரை நோக்கி ஓடி வந்தார்கள். தயங்கியபடி பின்னாலேயே வந்தாள் சீதை.

அப்போது-

'வாழ்க தியாகி மோகன்தாஸ்!" என்ற வாழ்த்தொலிகளுக்கும் கையொலிகளுக்கும் நடுவில் இரண்டு தொண்டர்கள் சேர்ந்து தமிழ்மகன் மோகன்தாஸை நாற்காலியுடன் தூக்கிக்கொண்டு வந்து, நடைபாதை இடைவெளியிலிருந்த குடிசைக்கு முன்பாகப் பாயில் வைத்தார்கள். கைக்குப் பிடிப்பான ஊன்று கோல்கள் இரண்டை ஒருவர் கொண்டு வந்து வைத்தார். மீண்டும் 'ஜே' கோஷங்கள் வானளாவின.

"ஐயோ, மகனே! ரெண்டு காலையுமே நீ இழந்துப் புட்டியாப்பா? என்று ஓலமிட்டார்கள், மோகன்தாஸின் தாயும் தந்தையும்.

"அப்பா, அம்மா! எதுக்காக நீங்க அழறீங்க? அழக் கூடாது. அழுதால், நான் கோவிச்சுப்பேன்! அழவே கூடாது! சிரியுங்கள்!" என்று வேண்டினான் வீரன் மோகன்தாஸ்.

சீதை பதறித் துடித்தவளாக, தன் பெற்றோர்களின் வாய்களைப் பொத்தினாள்.

தமிழரசி ஒதுங்கி நின்றவள், எட்டி வந்து பார்த்தாள். அவள் கண்கள் நிரம்பின. இதயம் நிரம்பியது. உணர்ச்சியின் பதுமை ஆனாள். மோகன்தாஸின் முன்னே ஓடி மார்பு மண்ணில் பதிய வணங்கி எழுந்தாள். கையில் ஊசலாடிக் கொண்டிருந்த மாலையை அவனுடைய கழுத்தில் போட்டு விட்டு மறு முறையும் கைகூப்பி அஞ்சலி செலுத்தினாள். உணர்ச்சியும் அறிவும் திருப்திப்பட்டு அவளுக்குத் தன்னிலை ஊட்டியபோது, அவள் தன்னையே இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்ற நூற்றுக்கணக்கான கண்களைப் பார்த்தாள். ஓடிய கண்ணீரைத் துடைத்துக் கொள்ள அப்போதுதான் அவளுக்கு ஓடியது.

தமிழரசியையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் மோகன்தாஸ். அவன் விழிகளில் மகிழ்ச்சிக் கண்ணீர் பெருகியது.

பாசத்துக்கு அன்பு பூப்பாலி செய்தது போலும்!

மோகன்தாஸின் செயற்கைக் கால்கள் இரண்டினையும் தொட்டுத் தொட்டுத் தங்களது ஊனக் கண்களிலே ஒற்றிக் கொண்டார்கள், அவனை ஈன்றவர்கள். அழுகையைத் துண்டிக்க முடியவில்லை அவர்களால்.

தமிழரசி, அவர்களை நெருங்கினாள். ''ஐயா, பெரியவரே! அம்மா... தாயே! நீங்க எவ்வளவோ பாக்கியம் செஞ்சிருக்க வேணும், இப்படிப்பட்ட வீரரை உங்க பிள்ளையாய்ப் பெற்றதுக்கு. நீங்க வாய்விட்டு அழக்கூடாது. மனம்விட்டுச் சிரிக்க வேணும். தாய்நாட்டு மானத்தைக் காப்பாற்றி, தாய்மண்ணைக் கட்டிக் காத்திட்ட கடமைக்காக உங்க மகன் அடைந்திருக்கிற இந்தக் கோலம் அவரைச் சரித்திரத்திலே சிரஞ்சீவியாய் வாழச் செய்திடுச்சு!... சீதை, நீ விஷயம் தெரிஞ்ச பெண். தாய் நாட்டைக் காக்கத் தங்கள் புதல்வர்களிடம் வேல் கொடுத்துப் போருக்கு அனுப்பின வீரத் தாய்மார்களைப் பத்தி நீ படிச்சிருக்கியே, அதைப்பத்தி உன்

பெற்ருேர்கள்கிட்ட சொல்லம்மா...'' என்று கேட்டுக் கொண்டாள்.

''அக்கா சொல்றது அவ்வளவும் நிஜம். அண்ணன் பெற்று வந்திருக்கிற மாபெரும் பரிசை நெனேச்சு நாம சந்தோஷப்பட வேணுமாக்கும்'' என்று தெரிவித்தாள் சீதை. எவ்வளவோ முயற்சி செய்தும், தேம்பலைக் கட்டுப் படுத்த முடியவில்லை அவளால்.

தலைமைத் தொண்டர் பழத்தட்டை எடுத்து வந்து தமிழ் மகன் முன்னே வைத்தார்.

''மோகன்தாஸ், பணத்தைப் பத்திரமா வச்சுக்குங்க. நாளை அல்லது நாளை மறுதினம் மறுபடியும் நாம் கனம் முதல் மந்திரி அவர்களைப் பார்க்கலாம். தலைவர் அவர்களும் டில்லி யிலிருந்து திரும்பிவிடலாம். அவங்களையும் சந்திப்போம்!... சரி, எல்லோரும் புறப்படுங்க. இப்போது எங்க வீட்டிலே வந்து தங்கிக் கொள்ளலாம். வேறு வீடு பார்த்ததும், அதில் நீங்க தங்கிக் கொள்ளலாம்!'' என்ருர் அவர்.

''வேறு வீடு பார்க்கும் வரையிலும் என் வீட்டில் தங்கலாம். நான் கஸ்தூரி அன்னை இல்லத்துக்குப் போய்க் கொள்கிறேன்!'' என்று சொன்ஞள் தமிழரசி.

''வேண்டாங்க அம்மா! உங்க எல்லோரது அன்புக்கும் நன்றிங்க. பிறந்து வளர்ந்து ஆளான இந்த மண்ணிலே ஆசைதீரப் படுத்துத் தூங்கிஞல்தான் எனக்கு நிம்மதி வரும். இப்போ புதுசா எனக்கு என்ன பெருமை வந்திட்டுது? என் தாய்த் திருநாட்டுக்காக—நான் பிறந்த பொன்ஞட்டுக்காக என்ஞலான எளிய—தூய்மையான கடமையை மனப்பூர்வ மாகச் செஞ்சேன். இது நான் செய்ய வேண்டிய கடமை. இது ரொம்ப சொற்பம். தாய் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செஞ்ச நூற்றுக்கணக்கான என் சகோதரர்களுக்குக் கிடைச்ச அந்தப் பாக்கியத்தைப் போல எனக்கும் கிடைச்சிருந்தால் மனம் ரொம்பவும் ஆறுதல் பட்டிருக்கும். முதல் மந்திரி அவர்களிடம் சொன்னதையேதான் இப்பவும் சொல்லு

கிறேன். தியாகத்தைப் போற்றுகிறதுக்கு நம்ம மக்கள் புரிஞ்சுக்கிட்டாங்க. அதுதான் எனக்குப் பெரிதும் ஆறுதலா யிருக்குதுங்க! நீங்க எல்லோரும் போயிட்டு வாங்க. உங்க அன்பை எப்பவும் நான் மதிச்சு வழிபட்டுக்கிட்டிருப்பேன்!'' என்று எல்லோரையும் பார்த்துக் கைகூப்பினுன் மோகன் தாஸ்.

எத்துணை அழகான கருத்துக்களைத் தாய்நாட்டு வீரன் செப்பிவிட்டான்.

''வாழ்க தமிழ்நாட்டு வீரர் மோகன்தாஸ்!'' என்னும் புகழுரைகள் ஓங்கி அடங்கின.

கூட்டம் கலைந்தது.

தொண்டர் தலைவர் தனிப்பட வந்து விடை பெற்ருர். போகையில் குறிப்பாகத் தமிழரசியிடமும் சொல்லி சென்ருர்.

மோகன்தாஸ் சிறுபொழுது அப்படியே மோனத்தில் இருந்தான். பிறகு, கண்களை மலர மலர விழித்தான். கால் பகுதிகளைத் தடவிவிட்டுக் கொண்டான். அவன் செயலைக் கண்டதும், அவனைப் பெற்ற தாய் அவன் காலடியில் அமர்ந்து தடவிக் கொடுத்தாள்.

ஒரு சிறுவன் வந்து மோகன்தாசுக்கு நமஸ்காரம் செய்து விட்டு, ''எனக்கும் வயசு வந்தானதும் நானும் உங்க மாதிரி தான் ஜம்முனு ஜவான் ஆகிவிடுவேன்!'' என்று வீர சபதம் எடுத்துக் கொண்டான். அவனை அள்ளி எடுத்து உச்சி மோந்தான் மோகன்தாஸ்.

''இந்த மாதிரி செல்வங்கள் இருக்கையிலே நம்ம நாட்டுக்கு என்னங்க கவலை!... பம்பாயிலிருந்து ஒன்பது வயசுப் பையன்—சாஷின் தர்கா என்று பேர்—விமானப் படை அதிபர் ஏர்மார்ஷல் அர்ஜுன் சிங் அவர்களுக்கு எழுதின லெட்டரிலே, தானும் பட்டாளத்திலே சேரத் தயார்னு எழுதியிருக்கிருனும். அவன்கிட்டே துப்பாக்கி

இருப்பதாகவும் இங்கிலீஷிலே லெட்டர் எழுதியிருக்காளும்! தம்பி, உன்னைப் போல உள்ள சிறுவர்கள்தானே நம்ம நாட்டின் நாளையத் தலைவர்கள்! உன் வீரம் வாழ்க!'' என்று பாராட்டி வாழ்த்தி வழி அனுப்பினுன்.

பிறகு, மோகன்தாஸ் தன் கழுத்தில் இருந்த மாலைகளைக் கழற்றினுன். தமிழரசி போட்ட மாலையை மட்டும் கையில் வைத்துக் கொண்டு, கண் இமைக்கும் நேரம் கண் இமைக்காமல் அதையே ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மீண்டும் பார்வையை உயர்த்திய தருணத்தில், இன்னமும் சிந்தனை வசப்பட்டவளாகவே தமிழரசி அங்கே நிற்பதையும் அவன் கவனித்தான்.

"உங்க பேரு என்னுங்கம்மா?'' என்று அவள் நெற்றிப் பொட்டைப் பார்த்துக் கொண்டே விசாரித்தான்.

"தமிழரசி!''

"ரொம்ப அழகான பேர்!''

"தமிழ் சேர்ந்த தமிழ்ப் பேராச்சுங்களே!''

சீதை தன் அண்ணனின் பக்கத்தில் அமர்ந்தாள். ஈரம் தண்டியது.கோரைப் பாயை இழுத்துவிட்டாள், தமையனின் முழுக்கால் சட்டையில் ஈரம் படாமல். "அக்கா மனசு ரொம்ப அழகானது அண்ணுச்சி!'' என்று சொல்லி, அவளைப் பற்றிய விவரங்களை எடுத்து வைத்தாள்.

அவன் கவனமாகச் செவிமடுத்தான்.

"உங்க நாட்டுப் பாசத்துக்கும் தேசக் கடமைக்கும் என் சார்பிலேயும் என் பள்ளிக்கூடத்தின் சார்பாகவும் நன்றியைத் தெரிவிச்சுக்கிறேன். நான் போயிட்டு வாரேனுங்க!'' என்று விடை கோரினுள் தமிழரசி.

அவன் இதயம் தோய்ந்த சிரிப்பால் அவளுக்கு வணக்கம் சொல்லி, ராணுவ முறையில் ஒரு 'சல்யூட்' வைத்து விடை கொடுத்தான்.

அந்திப் பூவையின் தடம் ஒற்றி நடந்த தமிழரசி தன் இருப்பிடத்தை அடைந்தாள். வீடு திறந்த மேனியாகக் கிடந்ததைக் கண்டாள். சுற்றுமுற்றும் ஒரு கண்ணோட்டம் செலுத்தி முடித்தாள். படுக்கை விரிப்பில் அமர்ந்தாள். எதிர்வசத்தில் அவள் மலர்விழிகள் மொய்த்தலைந்தன. 'குன்று தோறுடும் குழகன்' இன்னமும் அருட் சிரிப்பு மாருமல் காட்சி தந்தான்.

'தெய்வ பக்திக்கு அளிக்கப்பட்ட காணிக்கை நாட்டுப் பக்திக்குப் போய்ச் சார்ந்தது. கடமைக்கு ஆற்றிய கடமை!...'

## ஆத்ம நிவேதனம்

### பத்து

காலம் ஆகிய குழந்தை கடிகாரத்தின் முட்களோடும் நாள் காட்டியின் இதழ்களோடும் விளையாடிக் கொண்டிருந்தது.

தாய் மண்ணின் வீரன் மோகன்தாஸைச் சந்தித்த அந்தக் கணம் முதல், தமிழரசி புதிய துடிப்பும் புதிய பார்வையும் புதிய வல்லமையும் பூண்டிருப்பதாகக் கருதினாள். நாட்டிற்காகச் செய்யப்பட்ட தியாகத்திற்கு ஒரு வழிபாடு போல அவள் அன்று அவ்வீரனுக்கு மாலைபோட்டு வணக்கம் தெரிவித்த அச்செயலை இப்போது நினைத்தாலும் வியப்பாகவே தோன்றியது. 'உணர்ச்சிகளை நாம் ஆள வேண்டுமே யொழிய, நம்மை உணர்ச்சிகள் ஆளவிடக் கூடாது!' என்பாள் அவள். என்றாலும், அச்சம்பவம் அவளையும் மிஞ்சியதாகவே அமைந்துவிட்டது. அச்சம்பவத்தை அவள் வாழ்த்தவே செய்தாள். 'உலகத்திலே மனிதர்கள் இதயத்திற்குத் திரைபோட்டு மூடிவிட்டு, எதற்கெடுத்தாலும் நடிக்கத் தொடங்கிவிட்டார்கள் இப்போது.

சிரிப்பில்தான் போலிமுறை கையாளப்படுகிறதென்றால், அழுகையிலும் கூட செயற்கை ஒட்டிவிட்டது! பொய்யும் போலியும்தான் இப்போது உலகமாக மாறிவிட்டது!... இப்படிப்பட்ட உலகத்திலே, நான் என்னுடைய பரிசுத்த மான அன்பின் நன்றியுணர்வோடு, மோகன்தாசுக்குச் செலுத்தவேண்டிய காணிக்கையைச் செலுத்தி விட்டேன். வீரத்துக்கு வணக்கம் தெரிவித்துக் கும்பிட் டேன்; வீரத்துக்கு வாழ்த்துப் பாடி மாலை சூட்டி னேன். என்னுடைய இயல்பான கடமையுணர்வின் ஒரு பகுதி நிறைந்துவிட்டது; என்னுடைய மனிதப் பண்பின் ஒரு பகுதி நிறைந்துவிட்டது!... அப்படியென்றால், இன்னும் மறுபகுதி குறையிருக்கின்றதா?... அப்படியென்றால், அந்த மறுபகுதி...?'—சிந்தனையில் 'தொக்கி' நின்ற கேள்விக்குறி யுடன் மூக்கின் நுனியில் விரலை வைத்தவாறு ஆழ்ந்த யோசனையில் லயித்துவிட்டாள் தமிழரசி. இனம் புரியாத ஓர் உணர்வு இனம் புரிந்த அன்பைப் பந்தப்படுத்தி அவளை மோகன்தாஸ் பக்கமாக இட்டுச் சென்று கொண்டிருப்பதை அவள் அறியலானாள். இளமைத் துடிப்புக்கொண்ட மார் பகம் எம்பி எம்பித் தணிந்தது. சுவையுடன் தன்னுள் சிரித்துக் கொண்டாள்.

தமிழரசியின் மனம் தமிழ்ச் சமுதாயப் பெண்களைப் பற்றிய எண்ணங்களில் ஆழ்ந்திருந்தது. வானொலிப் பேச்சுக் குக் கட்டுரை தயாரிக்க வேண்டுமல்லவா? கழிந்த இரண்டு மூன்று இரவுகளாக இதே நிலை தொடர்ந்தது. தமிழ்ச் சமுதாயப் பெண்களின் வரிசையில் தனக்குரிய இடம் என்ன, தான் ஆற்ற வேண்டிய கடமை என்ன என்ற இரு பெரும் வினாக்கள் அவள் முன்னே மலையாக உயர்ந்து தோன்றின. கேள்விகளுக்குப் பதில் கொடுக்க விரும்பிய அவள் தன்னைத் தானே ஆராய்ந்தாள். ஏமாற்றமும் பெரு மூச்சும்தான் மிஞ்சின. 'நான் இன்னும் வாழத்தொடங்க வில்லை. ஆம்; நான் வாழத்தொடங்க வேண்டும். வாழ வேண்டும். தமிழ்ச் சமுதாயப் பெண்கள் வரிசையில் ஓர்

இடம் பெற்றுத் திகழும் வண்ணம், வண்ணம் பெற்று வாழ வேண்டும்!' என்ற திடசங்கற்பத்தின் அடித்தளத்தில் அவள் இராப்பொழுதுகளைக் கழித்தாள். பொழுது விடிய விடிய, அவளது நெஞ்சும் வைரம் பாய்ந்து திகழ்ந்தது. அதே போல, மோகன்தாஸைப்பற்றிய நினைப்புக்களிலும் புதிய தென்பு ஊடாடித் திகழ்ந்தது.

அன்று சாயங்காலம் சந்தித்ததைத் தொடர்ந்து, மீண்டும் அடுத்த நாள் காலையில் தமிழரசி இறங்கிச் சென்று மோகன்தாசைச் சந்தித்தாள். 'நாட்டின் மானத்தை—பெருமையை—பெயரைக் காத்து நின்ற வீரத்தைத் தேடிச் செல்கிறேன் நான்' என்ற பெருமிதத்துடன் அவள் நடந்தாள். நடைபாதையில் அவன் காணப்படவில்லை. ரிக்ஷா மட்டும் இருந்தது. அருகில் பார்த்தாள். சீதை அவளைக் கை தட்டிக் கூப்பிட்டாள். அவ்வீட்டை நாடி நடந்தாள். அங்குதான் அவர்களுக்கு வாசமாம். தேசீயவாதி ஒருவர் மோகன்தாஸின் குடும்பத்துக்குத் தம் வீட்டைக் கொடுத்து விட்டு, அவர் தம்முடைய வேறொரு வீட்டுக்குப் போய் விட்டாராம்.

தமிழரசியைக் கண்டதும் மோகன்தாஸ், "வாங்கம்மா" என்று வரவேற்றான். இளமீசை மேலேற, உந்திக்கமலம் வெளியேற்றிய தூய மலர்ச் சிரிப்பு மேலேறியது. "உட்காருங்கம்மா!"

சித்தடக்கமான மனை. முன்கூடத்தில்தான் மோகன்தாஸ் வாசம் செய்தான். புத்தக அலமாரி நிறைந்திருந்தது. பழைய இராணுவ உடுப்புகள் மூலையில் தொங்கின.

"என் கையால் போட்ட காபி இது. நன்றாகவே இருக்கும். இதை நீங்கள் அருந்தினால், அதில் என் மனம் பெரிதும் மகிழ்ச்சி பெறும்" என்று சொல்லி, காபியை லோட்டாவில் ஊற்றிக் கொடுத்தாள்.

"நீங்க?..."

"நான் வீட்டுக்குப் போனதும் சாப்பிடுவேன்!"

மோகன்தாஸ் அழகாகச் சிரித்தான். கன்னங்கள் ரோஜா நிறத்தில் குழி பறித்தன. காபியை அனுபவித்துக் குடித்தான். ''மிகுந்த நன்றிங்க!'' அவன் கைவிரல்கள் ஊன்றுகோல்களைப் பாசத்துடன் வருடின.

தமிழரசி பிளாஸ்கின் மூடியைத் திருகினாள்.

''உங்க அன்பு எனக்கு ரொம்பவும் ஆறுதலாயிருக்குதுங்க!''

தமிழரசி அவனிடமிருந்து பிரிந்து சென்றாள். அவனைப் பார்க்கப் போகும்போது சரி, அவனைப் பார்த்துத் திரும்பும் போது சரி, பலர் பதவிதமாகப் பார்த்த வேடிக்கைகளையும் அவள் கவனித்தாள். 'உலகத்துக்காக நான் அல்ல!' என்ற தன்னிறைவுப் போக்கு அவளுக்கு அமைதி ஊட்டியது.

மறுநாள் மாலையில் அவனும் அவளும் உரையாடிக்கொண்டிருந்தார்கள். போர் அரங்கத்தில் தாய்த் திருநாட்டுக்காகத் தான் ஆற்றிய கடமையின் பங்கைப்பற்றி விவரித்தான். அவளுக்கு மேனி நடுங்கியது. ''நான் கொடுத்து வைக்காதவன். எனக்கு இந்தக் கதி ஏற்பட்டிராவிட்டால், இந்நேரம், என் எதிரிகளில் இன்னும் பலரை ஆகாயத்தில் தூக்கி எறிந்து பந்து விளையாடியிருப்பேன்!''

ஆற்றாமையின் கண்ணீர் சிதறியது.

கண்ணீர்ச் சிதறல்கள் அவனது வேஷ்டியின் முனைகளை வருடிவிட்டன.

''உங்கள் பிறவிக்கு ஒரு நல்ல புண்ணியம் கிடைத்து விட்டது, மிஸ்டர் மோகன்தாஸ்!'' என்றாள் அவள். அவனைப் பெயரிட்டு அழைத்தது இதுவே முதல் தடவை.

அவன் பெருமூச்சை வெளியே அனுமதித்தவனாக முதுகை நிமிர்த்திக் கொண்டான். குறிச்சி 'கிறீச்' சிட்டது. ''நீங்க கொடுத்தனுப்பின மலரிலே உங்க கட்டுரை நேர்த்தியாக இருந்திச்சு. 'தூய்மைக்கு ஒரு தத்துவம்' என்கிற தலைப்பே நூதனமாக இருந்திச்சு. போரும் காதலும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் மாதிரி என்பதாகச் சொல்லாதவங்களே

யாக்கியில்லே. அப்படிபட்ட பொதுமொழியிலே எனக்குப் போரும் இருந்திச்சு; காதலும் இருந்திச்சு!...'' என்று சொல்லிவிட்டு அவளை நோக்கினுன்.

“ஆமாம், காதல் இருந்திச்சு இலக்கியத்திலே!...''

அவள் பாவ பூர்வமாகச் சிரித்தாள்.

''உங்களைப் போலவே எனக்கும் சூடிக் கொடுத்த நாச்சியார் என்ருல் மனசுக்கு ஒரு பிரியம். தேவர் குலம் சார்ந்த ஆழிமழைக் கண்ணனை ஒரு மானுடப் பெண் உள்ளத்தின் தூய்மையால் நேசித்து, அன்பால் பூசித்து, தவ வலிமையால் வென்ற அந்த ஆன்ம நேயத்தைப் பற்றிப் புதிய கண்ணேட்டத்திலே நீங்க எழுதியிருக்கீங்க!''

அவன் பாராட்டிய விதம் அவளுடைய எழுத்தார்வத்துக்குத் தூண்டுதலாக அமைந்தது. நன்றி நவின்ருள். திரும்பினுள்.

பல நிமிஷங்களின் இடையருத சிந்தனை உழைப்பு அவளுக்குரிய வானெலிப் பேச்சை உருவாக்கிக் கொடுத்தது.

தமிழரசி அன்றைக்குப் பள்ளிக்கூடம் செல்லும்போது கையுடன் மேற்படி கட்டுரையை எடுத்துச் சென்ருள். பகலில் கிடைத்த அவகாசப் பொழுதைப் பயன்படுத்திக் கொண்டு கட்டுரையைத் தபாலில் சேர்த்தாள். சுமை சொல்லிக் கொண்டு ஏறுகிறது. அது இறங்கும்போது, சொல்லிக் கொள்ளுவது கிடையாது. ஒரு கடமை முடிந்ததில் அவளுக்கு நிரம்பவும் நிம்மதிதான்!

மணி பதிெைன்று பதினைந்து. இனிமேல் அரைமணி நேரத்துக்கு அவளுக்கு ஓய்வுதான்.

ஆசிரியைகளின் கூடத்தை அவள் அடைந்தாள். அங்கே ஜலஜாவும் சாவித்திரியும் எதிரெதிர் அமைப்பாகச் சாய்ந்திருந்தார்கள். அவர்கள் இரண்டு பேரையும் பார்த்தபோது அவளுக்கு அது ஓர் அதிசயச் சந்திப்பாகவே தோன்றியது. சாவித்திரியின்மீது அவளுக்கு இருந்து வந்த அனுதாபமும்

நல்லெண்ணமும் ஜலஜா பேரில் உண்டாவது இல்லை; உண்டானதும் இல்லை! 'சாவித்திரி நல்லவள். அவள் கற்பையும் பெண்மையையும் மதிப்பவள். பாவம், ஜலஜா!...'

தன்னைக் கண்டு புன்முறுவல் பூத்த சாவித்திரியுடன் ஒரு நிமிஷம் பேசினுள் தமிழரசி. ஆனுல், ஜலஜாவைக் கண்டதும் அவளுக்கு அருவருப்பு மூண்டது. இந்த ரகசியம் ஜலஜா வுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனுல், ஏனே அவள் அங்கிருந்து கழன்று நழுவினுள். மின்னல் சேலை மின்னுமலிருக்காது. அவள் நடந்தாலே ஓர் ஒயில்தான்! 'சே!...'

இப்போது சாவித்திரியும் தமிழரசியும் மாத்திரம் இருந்தனர். சாவித்திரி சுற்றுமுற்றும் பார்த்தபின், தமிழரசியின் சார்பாக நெருங்கினுள். தமிழரசியின் நெற்றிக் குங்குமத்தையே குறியாகப் பார்த்த சாவித்திரி, தன் நெற்றியை நடுங்கும் விரல்களால் தடவிக் கொண்டாள். "டீச்சர்!" என்று அழைத்தாள்.

தமிழரசி புரிந்து கொண்டாள். அன்றைக்கு மெரினு சந்திப்பில் அவள் தன்னைப்பற்றிப் பேசிய பேச்சுக்குத் தொடர்பாக எதையோ தன்னைக் கேட்கப் போகிருள் அல்லது ஏதோ தன்னிடம் சொல்லப் போகிருள் என்பதுதான் விஷயம்.

அதற்குள் காலடி அரவம், அரவமாக நெளிந்தது.

ஜலஜா திரும்பியிருந்தாள். கையில் பிரித்திருந்த பத்திரிகை இருந்தது. அவள் தமிழரசியை விளித்தாள் :

"டீச்சர், டமிலரசி! ஹார்ட்டி கங்க்ராசுலேஷன்ஸ்!... நம்மகிட்டகூடச் சொல்லிக் கொள்ளாமல் நீங்க மாலை போட்டுட்டீங்களே! எங்களுக்கெல்லாம் டின்னர் எதுவும் வைக்க வேணும்! அட்லீஸ்ட் மரியாதைக் கோசரமானும் ஒரு வார்த்தை சொல்லியிருக்கப்படாதோ? நாங்களெல்லாம் ஒரு பட்டாளமாய்ச் சேர்ந்து வந்து உங்க விழாவை ராணுவ மரியாதையோடு ரொம்பவும் விமரிசையாய் நடத்தி வச்சிருப்போமே!..."

கை வளைகள் குலுங்குவதை நினைவூட்டிச் சிரித்தவாறு பேசி, அந்தப் பேச்சுக்கு உடனடியாகவே நிதர்சன நிருபணம் செய்பவளை ஒப்ப, கையிலிருந்த ஒரு தமிழ்ப் பத்திரிகையை எடுத்துக் காட்டினாள் ஜலஜா.

ஒன்றும் புரியாமல் 'திருதிரு'வென்று விழித்தாள் தமிழரசி. ஜலஜாவின் கேலிப் பேச்சு தன் உள்ளத்துத் தன்மான உணர்ச்சியைக் கோல்கொண்டு குத்திப் புண்ணாக்கு வது போலிருந்தது. நெஞ்சக் கொதிப்பு மிகுந்தது. அவள் அடக்கிக் கொண்டாள். ஜலஜா பிரித்துக் காண்பித்த இடத்தில் கண் பதித்தாள்.

அன்றொரு நாள், தாய்நாட்டு வீரன் மோகன்தாசுக்கு மண்ணில் மார்பு பதித்து வணக்கம் தெரிவித்த காட்சியும், அவனுடைய வீரத்துக்கு அஞ்சலி செலுத்தி மாலை போட்ட காட்சியும் படம் எடுக்கப்பட்டுப் பத்திரிகையில் வெளியாகி யிருந்தன. செய்திகளும் அடிப்புறம் அச்சாகியிருந்தன.

உணர்ச்சி பூர்வமான உள்ளத்தின் தூய்மையான அஞ்சலிக் கடன், இந்தப் பெண் பேயின் வக்கிரப் பார்வையில் எவ்வளவு கோணலாகப் பட்டிருக்கிறது?...

ஜலஜாவின் நையாண்டி மொழிகள் தமிழரசியின் உள்ளத்தின் உள்ளத்தில் வெஞ்சினம் ஊட்டின. "குமாரி ஜலஜாதேவி! நாம் இருப்பது பள்ளிக்கூடம். நாகரிகமாகப் பேசக் கற்றுக் கொள்ளுங்கள். என்னுடைய சொந்த விஷயங் களைப் பற்றி வியாக்கியானம் செய்ய நீங்கள் யார்?... நீங்கள் யாரென்று எனக்குத் தெரியும். மற்றவர்களுக்கும் தெரியும். உங்கள் இதயம் சூன்யம். அதுபோலவே, உங்கள் உணர்ச்சி களும் சூன்யமாகிவிட்டன. அதனால்தான், என்னுடைய அந்தரங்க சுத்தியான காரியங்கள், கடமைகள் உங்களுக்குக் கேலியாகத் தோன்றுகின்றன!

"நாம் பிறந்த நாட்டுக்காகத் தம்மையே தியாகம் செய்து கொள்ளத் துணிந்து, தம் இரு கால்களையும் இழந்து வந்தி ருக்கும் ஒரு வீரருக்கு அஞ்சலி செலுத்தி மாலை அணிவித்த செயலை இவ்வளவு கேலிக்குரியதாகப் பேசத் துணிந்திருக்

கிறீர்களே?— உங்களுக்கு வெட்கமாக இல்லையா?... இத்தனை சிறு வயதில் நான் என் மனத்திற்குச் சேர்த்து வைத்திருக்கக் கூடிய வல்லமை என்றென்றும் என்னைக் காப்பாற்றும். நாளையே அந்த வீரத் தியாகியை மணம் புரிந்து கொள்ளவும் நான் துணிவேன். வீரத்தை மதிக்கும் வீரம் எனக்கு உண்டு. ஆன்ம நேயத்தை ஒரு தவமாகவும் ஆத்ம நிவேதனத்தை ஒரு சத்தியமாகவும் வழிபட்டுச் சொல்லும் பேச்சு இது! மீண்டும், ஞாபகப்படுத்துகிறேன். தமிழரசி நெருப்பு!— மறந்துவிடாதீர்கள், 'நித்யகுமாரி!'...''

அவள் பேசி முடித்ததும், கலகலப்பான நகைப்புச் சத்தம் நாற்புறமும் படர்ந்தது. கூடுதலாக இன்னும் சிலர், கூட்டம் சேர்த்திருக்கக் கண்டாள். மாணவிகளும் பலர் கூடியிருந்தனர்.

'கிளியோபாட்ரா'வுக்கு நல்ல மூக்குடை! ஷேம்!...'

குரல்கள் சில வீரிட்டன.

ஜலஜாவுக்கு மூக்கு மேலும் சிவந்து தொலைத்தது.கண்கள் அசல் கொவ்வைப் பழங்களாக மாறின. ''பேரண்ட்ஸ் அட்ரஸ் தெரியாத அனாதைக் குட்டிக்கு வாய்க் கொழுப்பைப் பாருங்க!...'' என்று கொட்டிவிட்டு, தன் பேச்சுச் சத்தம் தேய்வதற்குள்ளாக, அவள் அங்கிருந்து நழுவிச் சென்றாள்.

ஜலஜாவின் ஏச்சைக் கேட்டதும் தமிழரசியின் மேனி அல்லாடியது. கண்கள் கசிந்தன. கைக்குட்டையை இதழ்களுக்குள் பொருத்தினாள். தலையைத் தாழ்த்திக் கொண்டாள். ''தெய்வம் ரொம்பவும் பாரபட்சம் உள்ளது!'' என்று வெளிப்படையாகச் சொல்லி விம்மினாள்.

தமிழரசியை நெருங்கினாள் சாவித்திரி.

நட்புக்குத் துணை ஆனது நட்பு...

ஆனால், காலம் அவர்களைப் பிரித்து வைத்து வேடிக்கை பார்த்தது!

# விதிக்குத்தான் விளையாடத் தெரியும்!

## பதினொன்று

**வா**ழ்க்கையின் கதை வெறும் அழுகையிலும், வெறும் சிரிப்பிலும் மட்டிலுமே அடங்கி ஒடுங்கி விடுகிறதா, என்ன?

ஊஹூம்!...

அவை இரண்டுக்கும் அப்பால் — அவை இரண்டுக்கும் பிடிபடாத அளவில் — பிடிகொடுக்காத அளவிலே, வாழ்க்கை விளையாடுகிறது.

இவ்விளையாட்டுக்கு மானுடப் பிறப்பு ஒரு சோதனைச் சாலை.

வாழ்க்கையோடு ஆண் விளையாடுகிறான்; பெண்ணும் விளையாடுகிறாள்.

அதேபோல, ஆணோடும் வாழ்க்கை விளையாடுகிறது; பெண்ணோடும் விளையாடுகிறது.

இத்தகைய விசித்திரமான ஆட்டத்தின் தீர்ப்பை வழங்க — ஆட்டத்திற்குத் தீர்ப்பை வழங்க வெறும் அழுகையாலும், வெறும் சிரிப்பாலும் முடிந்துவிடுமா, என்ன?

ஊஹூம்!...

அவை இரண்டுக்கும் அப்பால் — அவை இரண்டுக்கும் பிடிபடாத அளவிலே — பிடி கொடுக்காத அளவிலே, சூத்திரதாரியாக விதியும் வினையும் தெய்வமும் போட்டி போடுகின்றன!

ஆம்; இந்தக் கட்டத்தில்தான், சிருஷ்டி, புதிராக ஆகிறது!

முடிவு...?

பெண் ஆரம்பித்து வைக்கும் வாழ்வு என்னும் பொய்க் கதையை மண் உண்மையாகவே முடித்து வைக்கிறது!

பெரும்பாலும் அழுகையைப் பிரிந்து விலகியே வளர்ந்து விட்டவள் தமிழரசி.

ஆனால், சிரிப்பின் துணையை மிகவும் நுணுக்கமான ஒட்டுறவுடன் ஆண்டு அனுபவித்து உணர்ந்தவள் அவள்.

கஸ்தூரி அன்னை அனாதை இல்லத் தலைவியின் வளர்ப்பு முறைச் சிறப்பு இது.

ஆனால், தமிழரசிக்கு அந்த அழுகையும் அந்தச் சிரிப்பும் இப்போது அர்த்தமற்றதாகவே தோன்றின; அர்த்தமற்ற வெறுமைகளாகவே — சூன்யங்களாகவே தோன்றின. தன்னைப்பற்றி எண்ண எண்ண, ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. பிறவிப்பயன் என்றும், பிறவிக்கடன் என்றும் மானுடப் பிறப்பின் எல்லை நிலைகளைப் பற்றிக் கேட்டது — சிந்தித்தது — சொல்லியது எல்லாமே மாயப் பொய் என்பதாகவே அவள் கருதினாள். 'என்னைப் போன்ற அனாதைக்கு எதுவுமே உண்மையல்ல; எதற்குமே பொருள் இல்லை. எல்லாவற்றிலும் சோதனை தான்; எல்லாமே போராட்டம் தான்! நாதியற்ற அனாதை யென்றால், உலகுக்கு ஓர் அலட்சியம், ஓர் ஏளனம், ஒரு நையாண்டி!'

தோன்றிய எண்ணங்களே, எண்ணச் சுழிப்புக்களே அலை அலையாக — அலைச் சுழல்களாக அவள் மன ஆழியில் குமுறிக் கொந்தளித்தன. கடல் அலை அடங்கி விடும். ஆனால், மன அலை அப்படியா? அல்லவே!...

கடந்த சில நாழிகைப் பொழுதாக அவள் மனம் அடைந்து வந்த சலனம் இப்போது உச்சகட்டத்தை எட்டிப் பிடித்தது. 'அனாதை' என்ற சொல் ஒன்றே அவளுடைய மனத் தெளிவுக்கும் மனப்பலத்துக்கும் வாய்த்த பயங்கரச் சோதனையாகி அவள் முன் பயம் காட்டியது; விசுவரூபம் எடுத்துப் பயம் காட்டியது.

'நான் அனாதை' என்ற உண்மையை அவள் நித்த நித்தம் நினைவூட்டிக் கொள்ள ஏதுவாக இருந்தது. அவளது காலை நேரத்துக் கடவுள் பிரார்த்தனையின் தொடக்கத்தில், 'தான் அனாதை' என்ற இட்டு நிரப்ப முடியாத ஆறாத் துயரம் அவளை ஆட்டிப் படைக்கும். பிரார்த்தனையின் இறுதியிலோ, 'நான் அனாதையல்ல; மதர் சொல்கிற மாதிரி எனக்குத்

தெய்வம்தான் அம்மையப்பனுக இருக்கிருனே! நான் அனுதை அல்லவே அல்ல!' என்ற மாபெரும் நம்பிக்கை, அவளது மனக்குறை முழுவதையும் கணத்தில் மாயமாக மறைத்து விடும். அவள் அடையும் ஆறுதலுக்குக் கங்குகரை யிருக்காது.

ஆனல், இந்தச் சில நாழிகைகளாக, நிலைமை அப்படி அமையவில்லை. சலனம் எய்திய மனம், கங்குகரை உடைத்துக்கொண்டு விம்மியது. கண்ணீர் வெள்ளம் பெருகியது. 'பேரண்ட்ஸ் அட்ரஸ் தெரியாத அனுதைக் குட்டிக்கு வாய்க்கொழுப்பைப் பாருங்க!' என்று நிர் தாட்சிண்யமான வறட்டு இருதயத்தோடுஅவளை ஏசிய ஜலஜாவின் சொல்லம்புகள் அவளைக் கூறுபோட்டன. உலகிலே தன்னைப் போன்ற ஆயிரமாயிரம் அனுதைகள் உயிரோடு இருக்கையில், அவ்வுண்மை நிலையை மறந்துவிட்டு, தன்னைப் பற்றி மாத்திரம் அவள் நினைத்து நினைத்து நெக்குருகினுள். அழுகை என்ருல் சிரிப்பும் அதன் பின்னே தொடராமல் இருக்காது என்ற அனுபவ உண்மையை அவள் ஏற்கவில்லை.

'என் பிறப்பையே ஒரு துர்க்குறியாக எண்ணித்தான் என்னைப் பெற்ற ஜன்மங்கள் இருவரும் என் முகதரிசனத்தைக் காணக்கூட மனம் துணியாமல், இப்படி என்னை அனுதையாக்கிவிட்டு ஓடி ஒளிந்து கொண்டிருக்க வேண்டும். அதுதான் உண்மையாக இருக்க முடியும்! இல்லையென்ருல் அவர்கள் இருவரில் ஒருவர் மனம்கூடவா இளகாமல் இருந்திருக்கும்? அதற்குக் காரணம், குறுக்கு வழிப் பிறப்பாகத்தான் என்னுடைய ஜன்மம் இருந்திருக்க வேண்டும்! என் பெற்ருேரின் க்ஷணநேரச் சலனத்தின் வினையையும் விதியையும் நான் அனுபவித்துத் தீரவேண்டிய துர்ப்பாக்கியமான தலையெழுத்தை விதியும் வினையும் தெய்வமும் எனக்கு ஆணையென இட்டுவிட்டன!... என் வாழ்வில் ஏற்பட்டுவிட்ட இந்த ஊனத்தை — சாசுவதமான இந்த ஊனத்தை நான் அனுபவித்துத்தான் தீர வேண்டுமா?... அப்படியென்ருல், தினம் தினம் நான் செத்துச் செத்துப் பிழைக்க வேண்டியவள் தானு?'

இத்தகைய துர்ப்பாக்கியத்தை எனக்கு ஆணையாக எல்லை காட்டிவிட்ட அந்த விதிக்கு — அந்த வினைக்கு — அந்தத் தெய்வத்துக்கு நான் பயப்படத்தான் வேண்டுமா?...... ஊஹூம்! நான் பயப்பட வேண்டாம்! நான் பயப்படவும் முடியாது!...'

அகப் பேய் தலைவிரித்து ஆட்டம் போட்டது!

சிருஷ்டிப் புதிர், தத்துவமாக ஆனது!

தன்னை அனாதை என்று ஏசிய பேச்சைத் தாங்கமுடியாமல் கிணற்றில் விழுந்து இறந்துபோகத் துணிந்த பள்ளிச் சிறுமி முத்தழகிதான் அவளது நெஞ்சிலும் நினைவிலுமாக நீக்கமற நின்றாள். ஆனால், அந்த அனாதைச் சிறுமி முத்தழகியை அவள் தேடிப் பிடித்துப் படித்துக் கொடுத்த சீரிய வாழ்வுப் போதனைகள் அவள் நெஞ்சிலும் நினைவிலும் நிற்கவில்லை!

மத்தியான்னப் பள்ளிக்கூடத்தை முடித்துக்கொண்டு தமிழரசி வீட்டுக்கு வரும்போது வாங்கி வந்த 'தூக்கமாத் திரை'கள் நான்கை எடுத்துப் பிரித்து வைத்தாள். நெஞ்சிலும் மூளையிலும் ஏறியிருக்கும் பெரும்பாரம் இன்னும் சிறுநேரத்திற்கெல்லாம் இறங்கிவிடும். அவள் அவ்வெண்ணத்தால் அமைதிகொண்டாள். அத்தகையதோர் ஆறுதல் தேவைப்பட்டதாகவும் அவள் கருதினாள்.

'வரையோட்டுக்கும் ஆகாது இனி இந்த மண்பாண்டம்!' —இந்நினைவே அவளுக்கு ஒரு விடுதலையாகவும், அவ்விடுதலையே ஒரு சிரிப்பாகவும் அவளுள் மதிப்புப் பெற்றன. சிரித்தாள்!...

கன்னியின் பேய்ச் சிரிப்பும், இருட்டின் பேய்ச் சிரிப்பும் முயங்கின.

விளக்கின் விசையை இயக்கினாள்.

வெளிச்சம் பரவியது.

டைரியை எடுத்து வைத்துக்கொண்டு எழுதினாள்!

'என் பெயரில் விழுந்து விட்ட பழியைச் சுமக்கும் மனப் பக்குவம் இப்போது என்னைக் கைவிட்டு விட்டது. என்னுடைய கோழைத்தனம் என் மனத்திலிருந்து பிறக்கவில்லை. அது, என்னைப்பெற்ற புண்ணிய சீலர்களின் கோழைத்தனத்திலிருந்து பாரம்பரிய உரிமையுடன் என்னை ஒட்டியிருக்கிறது. என்னவெல்லாமோ கனவு கண்டேன்!... என் பிறவிக்கும் ஓர் அர்த்தத்தை உண்டாக்கிக் கொண்டுவிடலாம் என்றுதான் வைராக்கியம் பூண்டிருந்தேன். இறுதியில், எல்லாமே பகற்கனவாகிவிட்டன. என்னை விதியும் வினையும் தெய்வமும் சோதித்துவிட்டன. நான் இனி ஏன் வாழ வேண்டும்?... யாருக்காக நான் வாழ வேண்டும்?...'

அதற்கு மேற்கொண்டு அவள் மனம் மரத்தது; செயற்பட மறுத்தது. எரிந்து கொண்டிருந்த ஊதுவத்தியின் நறுமணம் அவள் உள்ளத்தைக் கவர்ந்திழுத்தது. ஊதுவத்தியையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அதன் பாதத்தில் சிதறியிருந்த சாம்பல் தூள்களிடத்தும் அவள் கண்பார்வை செலுத்தினாள். முன்பெல்லாம், அவள் இந்தச் சாம்பல் தூள்களைப் பக்தி சிரத்தையுடன் மதித்து வந்த ஞாபகமே இப்போது இற்றுப் போனதாகவே அவள் கருதினாள். இல்லையென்றால், அவற்றை எற்றி விடுவாளா?

தூக்க மாத்திரைகளைத் தெரிந்த கடையில் வாங்குவதற்குள் எவ்வளவு பாடு பட்டு விட்டாள்! அவற்றைக் கையில் எடுத்தாள். இதய பூர்வமான தூய மலர்ச் சிரிப்பைக் கடைசித் தடவையாக அவ்வறையில் சிதறச் செய்தவளாக, அவள் அம்மாத்திரைகளை—இட்டுக் கட்டிச் சொன்ன பொய்யின் உதவியுடன் பெற்ற அந்த மாத்திரைகளைச் சலனமின்றி, விழி பூக்கப் பார்த்தாள். அவை தும்பைப்பூ நிறத்தில் எத்துணை கவர்ச்சியாக மின்னின!... பொய்க்கு மினுக்கத் தெரியாதா, என்ன!...

"என் மரணத்திற்கு நானேதான் காரணம்!" என்று எழுதி அடியில் கையொப்பம் செய்திருந்த தாள் காற்றுடன் மல்லுக்கு நின்றது. 'இனிஷியல்' இல்லாத—தந்தையின்

பெயருக்குரிய தலைப்பெழுத்து இல்லாத — வெறும் கையெழுத்து!—இது செல்லத்தக்கதா?

'நான் இறந்தபின் எனக்காக வருந்துபவர்கள் யார் இருக்கிறார்கள்?' என்று அவள் தன்னையே கேட்டுக் கொண்டாள். இல்லத்தின் தலைவி தலைமையாகத் தோன்றினாள். உணர்ச்சிப் பிழம்பாக எழுந்து, அம்மையாரின் படத்தின் பாதத்தில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து எழுந்தாள். "அம்மா!... உங்கள் அன்பு மகத்தானது. அவ்வன்புக்குக் கைம்மாருக என் கடமையைச் செய்யக் கொடுத்து வைக்கவில்லை நான். இது என் பிழையன்று. விதியின் பிழை அம்மா, இது!... அம்மா!... தெய்வத்தை நான் கண்டதில்லை. ஆனால், உங்களை எனக்குக் காட்டி விட்டது தெய்வம்! நீங்கள் என் தெய்வம்! என்னை நான் இழந்துவிட்டேன். அதனால்தான், உங்களைக் கடைசி முறையாகத் தரிசிக்கும் நல்லதிர்ஷ்டத்தைக் கூட இழந்துவிட்டேன், நான். உங்களைப் போன்ற அபூர்வப் பிறவிகளைப் பகவான் வெகு அபூர்வமாகவே படைத்தளித்திருக்கிறான்!... அம்மா!... அம்மா!...'

அவள் தலைவிக்குக் கையுயர்த்தி அஞ்சலி செலுத்தினாள். அவள் அடிமனம், 'அம்மா! அம்மா!' என்று ஓலமிட்டது. அந்த ஓலத்தில், தன்னை ஈன்ற அம்மாவின் நினைவைக் கலந்தாள். அம்மையுடன் அப்பனையும் இணைத்து அழைத்தாள். முகம் அறியாத அவ்விருவருக்கும் வணக்கம் தெரிவித்தாள்.

நெஞ்சின் வைராக்கியப் பொலிவு அவள் கண்களைத் துலாம்பரமாக வைத்துக் கொண்டன.

தன் முடிவை அறிந்து, தனக்காக வருந்தும் அடுத்த உள்ளத்தை அவள் வேண்டியபோது, வீரத்தியாகி மோகன்தாஸ் 'ஆஜர்' சொல்லிப் பெயர் கொடுத்தான். ஒரு மணி நேரத்திற்குமுன், இருட்டில் உழன்று கொண்டிருக்கையில், அவன் ஊன்று கோல்களின் ஒத்தாசையுடன் தன்னைத் தேடிக்கொண்டு வந்து, "எப்பவும் வழக்கமாக வருகிறதுபோல வருவீங்களே? ஏன் வரலே? உடம்புக்குச்

சுகமில்லீங்களா, தமிழரசி?'' என்று பவ்யமாகப் பரிவைக் குழைத்துக் கேட்டுச் சென்ற அவனது பவித்திரமான உள்ளத்துக்கு அஞ்சலி செலுத்தினுள்.

அவளைச் சாரல் அணைத்தது.

உடலில் சிலிர்ப்புப் பரவியது.

தூக்கமாத்திரைகளைக் கையில் கொட்டினுள். அவற்றை வாய்க்கருகில் கொண்டுபோனுள். அம்மாத்திரைகளைச் சுவைக்கத் துடித்த நாக்கின் பசி இனி அடங்கிவிடும்!

ஒரு மாத்திரை உள்ளே விழுந்ததுதான் தாமதம், அவள் புதிதாகப் பிறப்பெடுத்த பாங்கிலே, கண்களை விழித்து விழித்துப் பார்த்தாள்; இதழ்களைப் பிரித்துப் பிரித்துச் சிரித்தாள். கையிலிருந்த மீதி மாத்திரைகளைத் தரையில் வீசினுள். 'என்ன அதிசயம்!... நான் இத்துணை நேரம் கோழைப் பெண்ணுகவா இருந்துவிட்டேன்? என் பிறப்புக்குப் பொருளில்லாமல் செய்துவிட வேண்டுமென்று திட்டமிட்ட என் தாய் தந்தையர்களுக்கு—அவர்களது இருதயமிழந்த போக்குக்குச் சாவல் விட்டு என் வைராக்கியத்தைக் கொடிகட்டிப் பறக்கச் செய்வேன். என் பிறப்புக்கு அர்த்தம் உண்டாக்கி வாழ்ந்து காட்டுவேன்!... என்னை அனுதையாக்கிய என் பெற்ருேர் உயிருடன் இருந்தால்—அவர்களைக் கடவுள் எனக்குக் காட்டினுல் அவர்களுக்கு நல்ல பாடம் சொல்லிக் கொடுப்பேன். தகப்பன்சாமிதான் எனக்கு இவ்வுபகாரத்தைச் செய்ய வேண்டும்!... பேய் ஒருத்தி ஏசினுள் என்பதற்காக, நானும் பேயாகி இத்தனை நாழிகைப் பொழுதுக்கு ஜீவ மரணப் போர் நிகழ்த்தி இருக்கிறேனே!... 'உனக்கு நீயே வழிகாட்டி' என்று புனிதவள்ளல் போதித்தார். அதன்படி, எனக்கு நானே வழிகாட்டியாயிருந்தால் இந்நேரம் நான் செத்த இடம் புல் முளைத்திருக்காதா? வாழப் பிறந்த நான்—வாழக் கடமைப்பட்ட நான் எப்படிக் கோழை ஆனேனே? ஏன் கோழை ஆனேனே?... என் பின் புத்தி எனக்கு மாளாத பழியை எழுதி வைத்து விட்டு மறைந்து விட இருந்ததே!... சே!... வெட்கம்... வெட்கம்!...

இடது கன்னத்தில் இருந்த மச்சத்தை அன்புதோய வருடியபடி தமிழரசி கண்ணாடிக்கு முன்பாகப் போய் நின்றாள். பேயை ஓட்டிய பின், முகத்தில் களை திகழக் கேட்க வேண்டுமா?... ''அம்மா!... தாயே!... என் தெய்வமே!'' என்று இல்லத் தாயின் படத்துக்கு நேராக ஓடிப் போய் மீண்டும் விழுந்து எழுந்தாள். ஆனந்தக் கண்ணீர் ஊற்றுக் கண் திறந்தது.

'என் பாவத்தைத் தடுத்தாட்கொண்ட அந்தப் புண்ணியத்துக்குப் பேர் என்ன சொல்லி அழைப்பது? விதியா? வினையா? இல்லை, தெய்வமா?...'

'முடியா மறையின் முடிவு' ஆன தெய்வத்தைத் தன் வயப்படுத்த அவளுக்குக் கண்ணீர் கை கொடுத்தது.

அப்பொழுது, கதவு தட்டப்படும் ஓசை காதுகளைத் துளைத்தது.

தமிழரசி இருட்டில் பளிச்சிடும் குங்குமப் புள்ளியாக வாசலுக்கு வந்தாள்.

மோகன்தாஸ் மோகனப் புன்னகைக் கோலம் சிந்திக் காட்சி தந்தான். ''ஒன்றுமில்லீங்க! கெட்ட சொப்பனம் கண்டேன். அதுதான் பயந்துபோய் எழும்பி உங்களைப் பார்த்திட்டுப் போகலாம்னு இப்பவும் ஓடி வந்தேன்!... உங்களுக்கு உடம்புக்கு ஒண்ணும் இல்லீங்களே?...'' என்று படபடப்பு மிளிர பதட்டத்துடன் கேட்டுக்கொண்டு உள்ளே ஊன்று தடிகளை நுழைத்துப் பிரவேசித்தான் அவன்.

''எனக்கு உடம்பு நல்ல சுகமாயிருக்குதுங்க'' என்று சொல்லியபடி அவனை வரவேற்றாள் தமிழரசி. ஆனால், அவள் கண்கள் மயங்கிச் சுழலத் தொடங்கியதைக் கண்டு மோகன்தாஸ் பதறித் துடித்தான்!

## பன்னிரண்டு

மந்தாரம் போட்டிருந்த வானத்தில் செங்கதிர்ச் செல்வன் வெள்ளோட்டம் வந்தால், வானம் மப்புக் கலைந்து எத்துணை குதூகலமாக விளங்கும்?—அப்படித்தான் இருந்தது மோகன்தாஸின் நிலையும். தமிழரசி அழகு மலர்க்கண்களைக் கண்டதும்தான் அவனுடைய செவ்வல்லிச்சீர் இதழ்கள் திறந்தன.

எந்தக் கணத்திலும் வந்து மோதக் காத்திருக்கும் எந்த விதமான ஆபத்துச் சோதனைகளையும் தீரமுடன் எதிர்க்க மனத்தைரியத்துடன் காத்திருக்கப் பழகிப் பக்குவப்பட்ட அவ்வீரன், சில வினாடிகளுக்குள் எப்படித் தவித்துப் போய் விட்டான்!

யுகப்பிரளயத்தின் பிடியை விட்டுத் தப்பிப் பிழைத்தாற் போன்று, யுக தர்மத்தின் நீதி மோன உருவெடுத்துக் காலத்தை விழுங்கிக் கொண்டிருந்தது.

கண்கள் மயங்கிச் சுழல, தமிழரசி தரையில் சுருண்டு விழுந்ததைக் கண்டதும் அவன் இன்னது செய்வது என்று புரியாமல் தடுமாறினான். எந்த உதவியையும் செய்யக் கூடாத நிலையில் அவன் இருந்தான். எந்த உதவியையும் ஏற்கக்கூடாத நிலையில் அவள் இருந்தாள். உடனே, ஊன்று கோல்களை விரைவுடன் நகர்த்திக்கொண்டு வெளிப்புறம் வந்து தன் தங்கையை அழைத்தான். அந்தப் பெண் சீதை ஓட்டமாக ஓடி வந்தாள். அண்டை அயல் என்று அன்பு செய்து பழகியவர்கள்—இரக்கத்தை ஒரு விலங்காகக் கொள்ளாமல், மனிதாபிமானமாகக் கொண்டு ஒழுகப் பக்குவப் பட்டவர்கள்—பாசம் காட்டுவதற்குக் கூலி கேட்கத் துணிவில்லாதவர்கள் என்ற வகையில் ஆணும் பெண்ணுமாக ஒரு சிலர் கூட்டம் கூடினர்.

முகத்தில் ஈரத்துணி பிழியப்பட்டது.

உபசாந்தியாகக் 'குளுகோஸ்' தண்ணீர் செலுத்தப் பட்டது.

கங்குல் கன்னிக்கு வாழ்த்துப் பாடிக் கொண்டிருந்தனர், வானத்து நட்சத்திரத் தோழிகள்.

அன்பு செய்த ஒற்றைக்கால் தவத்தினால், கருணை கண் திறந்தது. தமிழரசியும் கண் திறந்தாள். மெத்தையில் எழுந்து அமர்ந்தாள்.

மோகன்தாஸ், "தமிழரசி!..." என்று உந்திக் கமலத்தி லிருந்து தோய்த்தெடுத்த நிறைவான பாசத்தால் அழைத்தான்.

சூழ இருந்தவர்களின் மலர்ந்த முகங்களைப் பார்த்தாள் தமிழரசி. 'எனக்கு என்ன நேர்ந்தது?' என்ற பாவனையைப் பார்வையில் தேக்கினாள். மோகன்தாஸைப் பார்த்து, "என்ன நடந்தது?" என்று குறிப்பாகக் கேட்டாள்.

அவன் சொன்னான், அவள் திடீரென்று மயங்கி விழுந்ததைப் பற்றி.

அவளுக்கு நடப்பு உணர்வுடன் ஓடி வந்தது—மனத்தில்.

அவள் தேடி எடுத்தாள், சிதறிக் கிடந்த தூக்க மாத்திரைகளை. வாய்க்குள் போய்விட்ட ஒரு தூக்க மாத்திரையின் விளைவினால் வந்த கோளாறு இது என்பது அவளுக்குத் தெளிவாயிற்று. ஆனாலும் விழுங்கிய அந்த ஒரு தூக்கமாத்திரை எப்படித்தான் அவளது கோழைத்தனத் தையும் விழுங்கியதோ என்பது அவளுக்குப் புதிராகவே தோன்றிக் கொண்டிருந்தது.

"தூக்க மாத்திரைகள்தானே இவை?"

"ம்...!"

"உங்களுக்கு இவை ஏன் தேவைப்பட்டன?"

"மனம் சிறுபொழுது சலனம் அடைந்தது. அதன் சாந்திக்கு இவை தேவைப்பட்டன!"

""அப்படியென்றால்?...""

""பயப்படாதீர்கள். தெய்வம் எனக்கு ஒரு சோதனை வைத்தது. நான் பதிலுக்குத் தெய்வத்திற்கு ஒரு சோதனை வைத்தேன்! என்றால் தெய்வத்தை வெல்ல முடியுமா?—முடியவில்லை!... என் மனம் முற்றாத குறைதான் என் தோல்விக்குக் காரணம். நான் தெய்வத்தைச் சோதிக்கத் துணிந்ததற்கும் அதுவேதான் காரணம்! புரியவில்லையா?...

""என்னுடைய பிறப்புக்குச் சாட்சி சொல்ல அஞ்சி, என்னை அனாதையாக ஆக்கி, என் பிறப்பையே ஒரு பழியாக-ஒரு ஊனமாக—ஒரு கறையாகச் செய்த 'புண்ணிய'த்தைச் சுமந்துகொண்டு ஓடிவிட்ட என் பெற்றோர்களின் பழி என் பேரில் சுமந்தது. தெய்வம் அல்லது விதி, அல்லது வினை செய்த அநீதிக்கு என்னைச் சாடினாள் ஒருத்தி. பலர் மத்தியில் ஸ்கூலில் என் சக ஆசிரியை என்னை ஏசினாள். நிலை கலங்காத நான், நிலை கலங்கினேன். என் அகப்பேய் கட்டறுத்துக் கொண்டது. பின், கேட்கவேண்டுமா? இந்த மாத்திரைகளைச் சரணடைந்தேன். முதல் மாத்திரையை விழுங்கினேன். எஞ்சியிருந்த மாத்திரைகள் என் உயிரை விழுங்கக் காத்திருந்தன. அதற்குள், முதல் மாத்திரை என் உடலைத் தொட்டு, என் உள்ளத்தைத் தெய்வ வசத்தால் தொட்டதும் என் அகத்தைத் தொட்டு நின்ற பேய் ஓட்டமெடுத்தது. நான் விழுங்கிய மாத்திரையில் தெய்வம் வாசம் செய்திருக்க வேண்டும்! மீண்டும் நான் பிறந்திருக்கிறேன்! புதிதாகப் பிறப்பெடுத்திருக்கிறேன் நான்!""

அவள் பான்மையுடன் சிரித்தாள்.

விதிக்கு மாத்திரம்தான் சிரிக்கத் தெரியுமா, என்ன?—

தமிழரசி சாவின் தலைவாசலைத் தட்டிவிட்டு, மீண்டும் வாழ்வின் தோரண வாயிலைத் தொட்டிருப்பதாகவே அனைவரும் நம்பினர்.

சீதை ஆதரவாகத் தமிழரசியின் கேசங்களைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தபோது, தமிழரசி உதிர்த்த சொற்களைக் கேட்டதும் உணர்ச்சி பெருகி, பெருகி வந்த சு

நீரை மறைக்கத் தன் இமைகளைத் தடவி விட்டுக்கொள்ள மறக்கவில்லை.

''நான் உன் கையிலே சொல்லிக்கினு இருக்கலே. அது போல வாத்தியாரம்மா பொழைச்சுட்டாங்க, பாரு!'' என்றாள் பெண் ஒருத்தி—தன்னைக் கொண்டவனிடம். அவன் கைதான் அவனுக்குக் காது போலிருக்கிறது!...

வந்தவர்கள் தமிழரசியின் அன்புக்குப் பாத்திரமாகிச் சென்றனர்.

'இன்றையச் சலனமும் சாந்தியும் என் வாழ்வில் மறக்க முடியாத திரும்புமுனைப் பகுதிகள்தாம். அட்டியில்லை. எனக்கு நானே புடம் வைத்துக் கொள்ள எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. பொன்னான சந்தர்ப்பம். இனி நானுகச் சாவைத் தியானிக்க வேண்டிய இக்கட்டு ஏற்படாதென்றே நினைக்கிறேன். முகில் வானம் மழை பொழிந்து முடித்தது. மனம் வெளுத்துவிட்டது. இனி என் கடமை ஒன்றுதான் அதி முக்கியமாகச் செயல் வடிவு பெற்றாக வேண்டும். நான் பிறப்பெடுத்த கடமைக்குப் பயனுள்ள ஓர் அர்த்தத்தை என்னால் கொடுக்க முடிந்தால், அப்போது என் மனம் மிகுந்த ஆறுதலும் சந்தோஷமும் அடைய முடியும் இந்த நற்பயனுக்குத் தெய்வம்தான் எனக்கு நல்வழி காட்டவேண்டும். நான் அபலை; அனாதை. கேவலம் மானுடப் பெண். எனக்கு என்ன தெரியும்?'

நாட்குறிப்புக்கென்று உருவான சிந்தனைகள் இவை.

சீதையும் புறப்பட்டாள்.

நெஞ்சுக்கும் நினைப்புக்கும் சுகம் தரும் முறையில், சிந்தனைகள் முறை பயின்று தோன்றின. அந்தச் சுகத் தெளிவின் பூரணத்தோடு அவள் மோகன்தாஸைக் கூர்ந்து கவனித்தாள். தன்னைப் போலவே அவன் தன்னைக் கூர்ந்து கவனிப்பதைப் புரிந்து கொண்டாள். நையாண்டி செய்த ஜலஜாவின் முன்னே தீயாக உருவெடுத்து ரத்தம் துடிக்கப் பேசிய பேச்சின் முடிவில், 'இத்தனை சிறு வயதில் நான் என்

மனத்திற்குச் சேர்த்து வைத்திருக்கக் கூடிய வல்லமை என்றென்றும் என்னைக் காப்பாற்றும். நாளையே அந்த வீரத் தியாகியை மணம் புரிந்து கொள்ளவும் நான் துணிவேன்!... ஆன்ம நேயத்தை ஒரு தவமாகவும் ஆத்ம நிவேதனத்தை ஒரு சத்தியமாகவும் வழிபட்டுச் சொல்லும் பேச்சு இது!' என்று சூளுரைத்ததை அவள் இப்போது நினைவுகூர்ந்தாள். மீண்டும் புல்லரிப்புக் கிளர்ந்தது! அவள் கை சொடுக்கும் நாழிகை மெய்ம்மறந்தாள். புலன் ஒடுக்கம் சித்திக்கப் பெற்றவளது நிலையில் அவள் தோற்றம் தந்தாள். வெளித்தோற்றம் அவ்வாறு இருந்தது. உள்ளத்தின் உள்ளே ஓர் அழகிய நாடகம் நடந்து கொண்டிருந்தது. அந்த நாடகத்தை அவள் பார்த்தாள்; ரசித்தாள். ஆனல், முடிவைக் காட்டாமலே முடிந்து விட்ட அந்தக் கூத்தைப் பற்றி மீண்டும் நினைத்துப் பார்க்க எண்ணி, கண்களைத் திறந்தாள். கண்கள் திறந்த நேரத்தில் மனமும் திறந்தது. சொந்தக் கனவின் சொந்த முடிவாக அவள் 'அந்த ஒரு நினைவை' நெஞ்சில் எழுதிப் பார்த்தாள். அதே இனிய உணர்வுடன், புதிய பந்தமும் பாசமும் ஏந்தினள். இப்போது அவள் நேர்ப்புறமாகப் பார்த்தபோது, புலம்பு முத்துக்கள் விளையாட, உணர்ச்சியின் பிம்பமாக வீற்றிருந்தான், அவன்—மோகன்தாஸ்!

''மிஸ்டர் மோகன்தாஸ்!'' என்று கூப்பிட்டாள் அவள். குரல் பதறியது.

பதட்டம் ஏதுமின்றி அவன் தலையை உயர்த்தினன். ''உங்க அன்பிலே பங்கு பெறக் கொடுத்து வச்ச பாக்கியத்தை நெனைச்சேன். சந்தோஷத்திலே கண்ணீர் ததும்பிட்டுது!'' என்ருன்.

''உங்ககிட்டே நான் சொல்லவேண்டியதை இப்போது நீங்க என்கிட்டே சொல்லிட்டீங்க!...'' என்ருள் அவள்.

அண்டைவிட்டுச் சுவர்க் கடிகாரம் ஒன்பது முறை ஒலித்தது.

''ரொம்பவும் புதுமையாய் இருக்கீங்க நீங்க!''

''அப்படியா? பெண், புதிராகத்தான் இருக்கக்கூடாது!''

"நீங்க ஒரு குழந்தை! என்னையும் ஒரு குழந்தையாய் ஆக்கிட்டீங்க!"

அவள் நாணப் பூத்தூவி, மென் சிரிப்பில் பொன் தூவி, இதழ்க் கரைகளை உடைத்தாள்.

அவன் அந்தப் பூந்தளிர்ச் சிரிப்பில் சொர்க்கத்தைத் தரிசித்தான்.

அவள் மூச்சை வாங்கி மூச்சை வெளியேற்றினாள். அவனுடைய கால்கள் அவள் நெஞ்சில் கால் பரவின!...

சிறு பொழுது அவர்களுக்கு மத்தியில் அமைதி இருந்தது.

அப்போது சீதை உணவு கொண்டு வந்தாள். அன்பைத் தட்டவில்லை, தமிழரசி. அவள் வெட்கப்படாமல் சாப்பிட்டாள். அவன் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான். புது டில்லியில் ராஜாஜி—சாஸ்திரி சந்திப்பைப் புகைப் படங்கள் காட்டிக் கொண்டிருந்தன. அந்தப் படத்தை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் மோகன்தாஸ். அவன் பத்திரிகையை மடித்து வைத்தான்; தமிழரசியைப் பார்த்தபோது, அவள் தூக்குப் பாத்திரத்தைச் சுத்தம் செய்து வைப்பதைக் கண்டான். "ரொம்ப சீக்கிரத்திலே சாப்பிட்டுட்டீங்களே!" என்று கேட்டான். "சாப்பிடுறதுக் கெல்லாம் டயம் எடுத்துக்கலாமா? அதான் சீக்கிரமாகச் சாப்பிட்டுட்டேன்!" என்றாள் அவள்.

"டீச்சருக்கு எதிலுமே ஒரு ஒழுங்கு. பாத்திரத்தை நான் கழுவ ஒப்பவேயில்லீங்க, அண்ணாச்சி!"

சீதையை வீட்டுக்கு அனுப்பியதும், ஊன்றுகோல்களை இறுகப் பற்றிக்கொண்டு கவனமாக அவன் எழுந்தான். "உங்க உயிர் உங்களுக்கு மட்டும் சொந்தமில்லே. உங்கள் அன்பை நம்பி எத்தனையோ உள்ளங்கள் இருக்கின்றன. இதை மறந்திடாதீங்க!" என்று உருக்கமாக வேண்டிக் கொண்டான்.

அவன் பேச்சை ஆமோதிப்பவள்போல் அவள் முறுவல் பூத்தாள்.

அவன் ஊன்றுகோல்களின் துணையுடன் வெளியேறினான். அப்போது ஒருக்களித்திருந்த கதவு சோதித்தது. அவன் தடுமாறி விழப்போனான். தமிழரசி சமயமறிந்து அவனைத் தாங்கிக் கொண்டாள். வாசல் இறக்கம் வரை இறங்கி அவனுக்குத் துணையாகச் சென்றாள். "உங்களுடைய பொழுதுபோக்கிலே — ஆறுதலிலே — இன்பத்திலே இந்த அனாதையின் அன்புக்கும் ஒரு இடம் தாருங்கள்!" என்று கேட்டுக் கொண்டாள்.

அவன் உணர்ச்சி வசப்பட்டான். பேசச் சக்தியற்று நின்றான். அவளது தூய்மையான அன்புக்குத் தன் பார்வையால் நன்றியறிவு செலுத்தி, "ஜய், ஹிந்த்!" சொல்லி நடந்தான். ஊன்றுகோல்கள் சத்தமிட்டு நடந்தன.

அவன் சொல்வதையே பார்த்திருந்துவிட்டுத் திரும்பிய தமிழரசி, கதவுகளுக்கு நாதாங்கி அமைத்துத் திரும்பிப் படுக்கையைச் சார்ந்தாள். இரவுப் பிரார்த்தனை நடத்தினாள். வழக்கத்துக்கு மாறாக, நீண்டபொழுது தெய்வத்தை எண்ணித் தொழுதாள்.

"இறைவ! என்னை முடிவற்ற நிலையில் சிருஷ்டித்திருக்கின்றாய். அதுவே, உனது இச்சை! என் மண்பாண்டத்தை அடிக்கடி காலி செய்து, புத்துயிர் நிறைக்கின்றாய்!...

"உன்னுடைய அருட்கொடைகள் எனது சின்னஞ்சிறு கைகளில் கொள்ளக்கூடிய அளவே கிடைக்கின்றன. யுகங்கள் ஓடி மறைகின்றன. இன்னும் நீ கொட்டிக்கொண்டிருக்கிறாய். இன்னும் நிறைந்து வழிய இடமிருக்கிறது...!"

கீதாஞ்சலியின் இனிய சிந்தனையுடன் அவள் தலையணையைத் துணைக்கு அழைத்தாள். நாட்குறிப்பை எடுத்துப் பிரித்தாள். பிறகு, மூடி வைத்தாள். மீண்டும் சிந்தனை வசப்பட்டாள். அதன்பின் இருட்டினை வரவழைத்தாள். படுக்கையில் சாய்ந்தாள். 'நாள் கடத்தாமல் தலைவியைச் சந்திக்க வேண்டும். எனக்கான ஒரு நல்ல முடிவை உடனடியாகச் செய்தாக வேண்டும். கண்காணும் தெய்வம் எங்கள்

மதர்! அவர்களிடம் என் இதயத்தைத் திறந்துகாட்ட வேண்டும். என்னை அறிந்தவர்கள் எங்கள் தலைவி. அப்பால், அவர்கள் சொல்லும் சொல்தான் எனக்குத் தேவ கட்டளை!' என்று தனக்குள் எண்ணிக்கொண்டே வந்த போது, அவளையும் அறியாமல் அவளுள் இனம் விளங்காத ஏதோ ஓர் இன்ப உணர்வு அரும்பாக மலர்ந்து மணக்கத் தொடங்கியது!

## வீரமரபின் சரித்திரம்

### பதின்மூன்று

வானொலிப் பெட்டியின் திசைக்குத் தன் காதுகளைத் திசைத் திருப்பிக்கொண்டு சோபாவில் வசதியாகச் சாய்ந்திருந்த தலைவி திலகவதி அம்மையாருக்குச் சோதனை போலத் தும்மல் ஒன்று பறிந்தது. தொடர்ந்து பெய்த அடர்மழையின் மிதமிஞ்சிய குளிர்ச்சி அவளுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. "தடுமன்" பிடித்துவிட்டது. மேலைநாடுகளைப்போல் கணப்புப் பெட்டி எரிந்துகொண்டிருந்தது. அப்படி இருந்தும், அவள் மேனி வெடவெடத்தது. மூக்கை நாசூக்காக உறிஞ்சிக் கொண்டாள். கைப்பிடித் துண்டு தயார்!

பெண்டுலத்தின் அசைவைத் தவிர எங்கும் நிச்சப்தம்.

அசோக மரங்களின் இடைவெளியில் கனத்த இருள் செறிந்திருந்தது. மூடப்பட்டிருந்த மாடி ஜன்னல்களில் மோதி விலகிக் கொண்டிருந்தது கடலோரக் காற்று. ரம்மியமான இள நீலநிற வெளிச்சம் இதமாகப் பரவிக் கிடந்தது.

தமிழரசியைப் பார்த்துவிட்டு ரேடியோப் பெட்டியைப் பார்த்தாள் தலைவி.

"'தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள்' என்பது பற்றி குமாரி தமிழரசி அவர்கள் இப்பொழுது பேசுகிறார்கள்" என்று சென்னை வானொலி நிலையம் அறிவித்தது.

பதிவு செய்யப்பட்ட பேச்சு ஆரம்பமாகித் தொடர்ந்தது:

"........தொழுகைக்குரிய அன்புத்தாயும் நன்றிக்குரிய இன்பத்தாய் மண்ணும் இல்லையேல், உலகம் இல்லை; சரித்திரமும் இல்லை; அன்பு, அகிம்சை, கற்பு, சத்தியம், பொறுமை, தர்மம், தயை, ஈரம் என்பன போன்ற குணநலக் கொழுந்துகள் ஏற்றிவைக்கும் தீபமாகப் பெண் அமைகிறாள். பெண்மைச் சுடரின் தூண்டுகோலாக ஆணின் பொறுப்பும் ஆண்மையின் கடனும் அமைகின்றன. ஒளியும் நிழலும் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து கொள்கின்றன. இவ்விரு சக்திகளின் சங்கமத்தில் புதிய தத்துவம் அவதாரம் செய்கிறது. இந்தத் தத்துவம்தான் உலகம். இது உலகத்தின் சரித்திரம் மாத்திரம் அன்று; உள்ளத்தின் சரித்திரமும் இதுதான்.

"இத்தகைய பொதுவான நியதிக் கோட்பாட்டிலே, தமிழ்ச் சமுதாயப் பெண்களுக்கென்று தனி இடம் எப்போதுமே ஒதுக்கப்பட்டு வந்திருக்கிறது. அகம் கண்டு புறம் கண்டவள் தமிழச்சி. புறம் கண்டு அகம் கண்டவன் தமிழன். மனத்தின் பற்றுக்குக் காதலையும், மண்ணின் பற்றுக்கு வீரத்தையும் இரு கண்களாக்கித் திகழ்ந்தது தமிழ்ச் சாதி!..."

மெய்ம்மறந்து லயித்திருந்தாள் தலைவி; புகைச்சல் இருமலுக்குக் கடமைச் சித்தத்துடன் 'நூற்று நாற்பத்து நாலு' போட்டுவிட்டாள்!

தலைவியின் மனலயிப்பையே ஒரு பெரும் பாராட்டாகக் கொண்டாள் தமிழரசி.

ரேடியோப் பேச்சு நடந்து கொண்டேயிருந்தது:

"........தமிழ்ச் சமூகத்திலே பெண்களுக்கென்று சில தனிப்பட்ட எல்லைகள் உண்டு. எல்லைகளுக்கு அவர்கள் அஞ்சவேண்டியதும், எல்லைகள் அவர்களுக்குக் காப்பு ஆக வேண்டியதும்தான் சட்டம்; நியதி. இத்தகைய கடமை ஒழுங்குக்கு மனத்தவம், மான உணர்ச்சி, அந்தரங்க சுத்தம்

மனதர்மம், மனப்பலம் போன்ற செம்மைப் பண்புகள்தாம் கைகொடுக்க முடியும். சீதை, கண்ணகி, பாஞ்சாலி, சாவித்திரி முதலான உத்தம மாதரசிகளை நாம் கைத்தொழ வேண்டும்!

"பெண்மை வாழ்ந்தால்தான் உலகிலே அன்பு, தர்மம், சத்தியம் முதலிய நியதி நெறிகள் தழைக்கும். பாரதி அழகாகப் பாடுகிறான்: 'கலியழிப்பது பெண்கள் அறம்' என்று தொடங்கி, 'வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா; மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்' என்று சொல்லிச் செல்கிறான். 'உயிரைக் காக்கும்; உயிரினைச் சேர்த்திடும்; உயிரினுக்குயிராய் இன்பமாகிடும்' பெற்றியைப் பற்றி விளக்கம் செய்து, அப் பெற்றியையே பெண்மைக்குச் சிறப்பாகவும் ஆக்கிவிடுகிறான்.

"வாழ்க்கையிலே மனிதாபிமானத்தின் மனச்சான்றுடன் காதலிக்க, கனவுகாண, மணம் புரிய உரிமை கொள்ளும் பெண்ணின் கற்புநிறைக்குப் பூரணத்துவம் கொடுக்கும் சக்தி தாய்மைப் பண்புக்குத்தான் உண்டு. இந்த மகத்தான சக்திக்கு அடித்தளம் அமைத்துக் கொடுக்கும் தவம், தியாகம், பொறுமை, அறம், அன்பு போன்ற சிறப்பியல்புகள் வாழ்க்கைக்கும் அடித்தளம் அமைத்துக்கொடுக்கின்றன! ராஜ கோபுரத்துக்கு அமைந்த பொற்கலசமாகப் பெண் உயர்ந்து காட்சி தருகின்றாள். சரித்திரம் மீண்டும் நடந்து காட்டுகிறது!..."

தமிழரசி ஊன்றிக் கவனித்தாள். அம்மையார் கண் கொட்டினால்தானே! பேச்சுத் தொடர் நீண்டது. முடிவில்:

"பெண் எனும் பதம் புனிதம் நிறைந்தது. அதேபோல, பெண் எனும் சக்தி புனிதம் நிரம்பியது. பிறவிக்கு ஒரு பயன் வேண்டும். அந்தப் பயனுக்கு ஒரு பொருளாகி, ஒரு பொருள் கொடுக்க வல்லவள் பெண். அந்தப் பண்பாட்டுக்கு உயிராகவும் உயிர்ப்பாகவும் நிலவ அவள் பழகிவிட்டவள்; பழகிக் கொள்பவள்; பழகிக்கொள்ள வேண்டியவள். இந்த நியதியின் தர்மம் வாழ்ந்து, வாழ்த்தப்படும் போது, அவளே ஓர்

உதாரணம் ஆகிறாள்; அவள் ஓர் உத்தாரணமும் ஆகிறாள். ஆத்ம பலத்தை ஒரு காப்புக் கவசமாகவும், ஆன்ம நேயத்தை ஒரு பண்பாட்டு அன்பாகவும், ஆத்ம நிவேதனத்தை ஒரு சத்திய தர்மமாகவும் பயிலும் தியாகம் கோபுர தீபமாகிறது. நாடும் வீடும் அவளால் ஒளி பெற்று ஜீவனுடன் விளங்குகின்றன. ஆம்; பொற்புடைய இந்தப் புனிதமான இலட்சியம் ஒரு வீரமரபின் சரித்திரமாகி வாழ்கின்றது!...

வாழ்க பெண்மை!...

வெல்க பெண்மை!...''

பேச்சு முடிந்தது. பேசியவரின் பெயர் விவரத்தை மீண்டும் ஒரு தடவை சொன்னார் ரேடியோ நிலையத்தின் அறிவிப்பாளர்.

தமிழரசி மனக் குதூகலத்துடன் நிமிர்ந்தாள்.

'மதர்' இன்னமும் அதே மனலயிப்புடன்தான் இருந்தாள். தமிழரசியின் கை ஸ்பரிசம் பட்டதும்தான், அவள் சிந்தனை கலையப் பெற்றாள். ''நல்ல தெளிவும் புதிய திருஷ்டியும் உயர்ந்த லட்சியமும் உன் பேச்சிலே இடம் பெற்றிருந்திச்சு, தமிழரசி! உன் கீர்த்தி மென்மேலும் வளரவேண்டும்மா!'' என்று பாராட்டிச் சொல்லி, தமிழரசியின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டினாள், அம்மையார். அப்போது, தமிழரசியின் இடது கன்னத்தின் மச்சத்தை உற்றுப் பார்த்தாள். ''இந்த மச்சம் ரொம்ப அதிர்ஷ்டமானதின்னு சொல்லக் கேட்டதுண்டம்மா'' என்று அதிருஷ்டத்தைக் கண்டவளெனச் சொன்னாள்.

அம்மாவின் பேச்சை ஆதரிக்கவோ, அல்லது எதிர்க்கவோ அவள் விரும்பவில்லை. குழைவுச் சிரிப்புமட்டும் அவள் பக்கம் இருந்தது.

மழை கொட்டத் தொடங்கியது.

மணி எட்டு நாற்பது.

மழைக்காலத்தை உத்தேசித்து, தமிழரசியை அழைத்து அவள் பேச்சை முன்னதாகவே ஒலிப்பதிவு செய்து கொண்

டார்கள் ரேடியோ நிலையத்தினர். அப்படிச் செய்தது இப்போது வசதியாகப் போய்விட்டது. இல்லையென்றால், மழையில் போக—வரச் சிரமம்! தலைவியுடன் அமர்ந்து தன் பேச்சைத் தானே கேட்டது ஒரு புதிய அனுபவமாக இருந்தது, அவளுக்கு. தலைவியின் ரசிப்புத்தன்மையும் நேர்முகப் பாராட்டும் அவளுக்கு ஊக்கம் கொடுத்தன.

நடந்ததை மீண்டும் நினைத்தாள்.

அம்மையார் அன்று மத்தியான்னமே ஸ்கூலுக்கு 'டெலிபோன்' போட்டு, தமிழரசியுடன் தொடர்பு கொண்டாள். அதன் பேரில், கடமையை முடித்துக்கொண்டு நேராக இங்கு புறப்பட்டு விட்டாள்.

வழியில் நடந்த மனப் போராட்டத்தின் ஊடாக, சுய தரிசனக் கூத்தும் நடந்து முடிந்தது. அமைதியின் துணையுடன் நேராக அம்மாவைத் தேடி மாடிக்குச் சென்றாள் தமிழரசி.

அப்போது :

கண்ணாடிப் பெட்டியில் அடைக்கப்பட்டிருந்த மீன்களையும் அவற்றிற்கு ஜீவாதாரமாக அமைந்திருந்த தண்ணீரையும் ரசித்துக் கொண்டிருந்தாள் தலைவி. கண்ணாடித் தகடுகளில் தமிழரசியின் உருவத்தை அவள் இனம் கண்டிருக்க வேண்டும். ''வாம்மா, வா, உன்னைத்தான் எதிர்பார்த்திட்டிருந்தேன்'' என்றாள்.

தலைவியின் அப்போதைய ரசிப்புத் தன்மைக்கு அத்துடன் முற்றுப்புள்ளி வைத்தாள் தமிழரசி. இப்போது அவள் மீன் பெட்டியைப் பார்த்தாள். அவளது மூங்கில் தோள்களைப் பற்றுடன் பற்றிய தலைவி, ''தமிழரசி, நீ ஏனம்மா தற்கொலை செஞ்சுக்க முயன்றாய்? என்னை நரக வேதனைப் படும்படி வச்சிடப் பார்த்தியேம்மா!'' என்று பதட்டத்துடன், ஐயிரண்டு திங்களாகச் சுமந்து பெற்றவளைவிடக் கவலையாகக் கேட்டாள். வெளுத்திருந்த வதனம் மேலும் வெளுத்தது.

''என்னையும் மீறின ஒரு கொந்தளிப்பிலே அப்படிச் செஞ்சிடத்தான் இருந்தேன். என்னோட தாழ்வு மனப்

பான்மை எனக்குள்ளேயே நாடகம் நடத்திட்டுது! இனி அப்படி ஒரு கெட்ட ஞாபகங்கூட எனக்கு உண்டாகாது. உங்க அன்பு மேலே ஆணையம்மா இது!'' என்று 'நிச்சயம்' செய்தாள் தமிழரசி.

''என் வயிற்றிலே பால் வார்த்தாயம்மா!''

ஆஹா, அந்த மாணிக்கச் சிரிப்புக்குத்தான் எவ்வளவு பூரிப்பு!

அம்மாவுக்கு எப்படித் தெரிந்தது இந்த நடப்பு?

அரசாங்க அலுவலகத்திலிருந்து மோகன்தாஸ் என்பவர் இவ்விவரத்தைத் தெரியப் படுத்தினதாகத் தெரிவித்தாள். 'சீதையின் தமையனாகத்தான் இருக்க வேண்டும். 'செக்ரட்டேரியட்'டுக்குப் போயிருக்கையில் செய்திருக்கலாம். பரவாயில்லையே, இவருக்குக்கூட என் நாடி ரகசியம் தெரிந்திருக்கிறதே! எனக்குப் புத்திமதி சொல்லும்படி முதிர்ந்த அக்கறையுடன் கேட்டுக்கொண்டிருக்கிறார்!'

வேல்ஸ் இளவரசர் பெயரைக்கொண்ட அழகுப் பூஞ்செடிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த வராந்தாவில் பெஞ்சில் அமர்ந்து, இலங்கைத் தேயிலைத் தண்ணீரைச் சுவைத்தவாறு கேட்டாள் திலகவதி, ''அப்புறம் என்னம்மா முடிவு செய்தாய் உன் மாரேஜ் விஷயமாக?'' என்று.

அவளிடம் ஒரு வாரம் கெடு கேட்ட தலைவி இப்போது அவளையே புதுக் கேள்வியாகக் கேட்கிறாளே? கெடுதாண்டி நாட்கள் எத்தனையோ மறைந்துவிட வில்லையா?

தலைவி ஏதோ பேச வாய் தூக்கினாள்; அதற்குள் மணி எட்டு அடித்தது. "சரியம்மா! உன் பேச்சு ரேடியோவிலே முடியட்டும். அப்புறம் என் பேச்சை ஆரம்பிக்கலாம்'' என்றாள். விடிந்தால் ஞாயிறு ஆனபடியால், இராப்பொழுதில். கொஞ்சம் தாராளமாக எடுத்துக்கொள்ளலாம்!

கடந்த நினைவு முடிந்தது.

வானொலிப் பேச்சும் நிறைந்தது.

இப்போது இரவுச் சாப்பாட்டுப் பிரசினையும் தீர்ந்தது.

இனிமேல், தமிழரசியின் திருமண விஷயம்தான், மிச்சம். கடிகாரம் ஒன்பது அடித்தது.

படுக்கைக் கூடம்.

தாம்பூலத் தட்டை நகர்த்திக் கொண்டாள் திலகவதி அம்மாள்.

"தமிழரசி, முந்தின தடவை நீ இங்கு வந்திருந்த சமயத்திலே உன் மனநிலையைப் புரிஞ்சுக்கிட்டதும், உனக்கென்று ஒரு துணை தேவை என்பதையும் புரிஞ்சுக்கிட்டு, உன்கிட்டே என் மனசையும் திறந்து சொன்னேன். நீயும் என் இஷ்டத்துக்குச் சம்மதம் கொடுத்தாய். அதிலிருந்து உனக்கு ஏற்ற நல்ல வரன் விஷயமாய் யோசிச்சுக்கிட்டிருந்தேன். உன் பேரிலே ஸ்ரீமான் சொக்கநான் அவர்களும் கூடுதலான கவலையும் நல்லெண்ணமும் பாசமும் கொண்டிருக்கிற உண்மையை நான் அறிந்ததாலே, அவர் காதிலேயும் இதுபற்றிப் போட்டேன். அவரும் இது சம்பந்தமாய் ரொம்பத் தீவிரமாத்தான் இருக்கார்!... நாங்க இரண்டு பேரும் சில வரன்களைச் 'செலக்ட்' செஞ்சிருக்கோம். நாங்கள் அறிஞ்சமட்டுக்கும் இந்த மாப்பிள்ளைகள் சொக்கப் பச்சைதான்! பணமும் குணமும் கூடியிருக்கக்கூடிய இடங்கள்! உன்னை அழைச்சுக்கிட்டுப்போய் அவர்கள் ஒவ்வொருத்தரையும் தனித்தனியே நீ சந்திச்சு மனம் விட்டுப் பேசி அப்புறம் உன் மனதுப் பிரகாரம் நீ நிர்ணயிக்கிற வரனையே 'டிஸைடு' பண்ணிடலாம்னு தான் இருந்தேன்.

இதற்கு மத்தியிலே அம்பலவாணனும் சுடர்க்கொடியும் என்னைத் தேடி வந்தாங்க. அவங்க ரெண்டு பேரும் எனக்கு ரொம்பவும் வேண்டப்பட்ட குழந்தைகள். அவங்க 'பேரண்ட்ஸ்' இந்த இல்லத்துப் போஷணையிலே பங்கு பெற்றவங்க. வந்ததும், சுடர்க்கொடி நடந்ததையெல்லாம் சொல்லிச்சு. பிலிமிலேகூட நான் இப்படிப்பட்ட அதிசயத்தைப் பார்த்ததில்லேம்மா. தான் காதலிச்சுக் கல்யாணம் கட்டிக்கிடலாம்னு இருந்த தன்னோட அத்தானின் மனசு

புரிஞ்சதும், உடனே தன் அத்தானோட இன்பம்தான் பெரிசின்னு எண்ணி, அவர் காதலிச்ச உன்கிட்டவே தூது வந்து உன்னை எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டுக் கிட்டுதாம். நீ ஏத்துக்கலையாம்!... உன்னோட ஆருயிர்த் தோழிக்குக் குறுக்கே நிற்கிறதுக்கு நீ விரும்பாமல் ஒதுங்கிக்கிட விரும்பியிருக்கே!... அந்த மனசை நான் அறிவேனம்மா! ஆனால், அந்தப் பெண்ணே மனப்பூர்வமாகத் தன் காதலை விட்டுக் கொடுக்க ரெடியாய் இருக்குதாம்; தன் அத்தான் சந்தோஷமாயிருந்தால் அதுவே தனக்குப் பெரிய ஆறுதலாயிருக்குமென்பதாயும் சொல்லிச்சுது. அம்பல வாணனைப் பார்த்தேன். இருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்தால், உன் நினைவிலேயே அவன் இரண்டறக் கலந்து விட்டதாகத்தான் எனக்குத் தோணுதம்மா! பாவம், அந்தப் பெண்ணைப் பார்த்தாத்தான் எனக்கு ரொம்ப ரொம்பப் பரிதாபமாய் இருந்திச்சும்மா!...''

பேச்சை முடித்ததும், கிராம்பு ஒன்றைப் பல்லிடுக்கில் வைத்தாள், அம்மையார். தலைக்கொண்டையினின்றும் பிரிந்து தொங்கிய இழைகளை ஒற்றுமைப்படுத்திக் கொண்டாள்.

திலகவதி அம்மாள் பேச்சை நிறுத்தி விட்டு, தமிழரசியைப் பார்த்தாள். கிராம்பின் மணம் எச்சிலில் ஊறியது.

தமிழரசி கண்களைத் தீர்மானமான அழுத்தத்துடன் சுழலச் செய்தாள்.

''அம்மா! மிஸ்டர் அம்பலவாணனுடைய அன்புக்கும், தோழி சுடர்க்கொடியோட பாசத்துக்கும் நான் நிரம்பக் கடமைப்பட்டிருக்கேன். ஆனால், அன்பர் அம்பலவாணன் என்னை விரும்புறதும், நான் அவருக்குத் துணைவியாக வாய்க்கிறதும் இயற்கைக்குப் புறம்பானதாக என் மனச் சாட்சி சொல்லிடுச்சு!... ஒரு வேளை, நாங்க ரெண்டு பேரும் தம்பதியாய் ஆனால்கூட, உலகத்துக்கு அது ஒரு விசித்திர மான வேடிக்கையாகத்தான் தோணும்!... அம்பலவாணனுக்

காக என் தூய அன்பைக் கொடுக்கலாம். ஆனால், என்னோட தூய உள்ளத்தைக் கொடுக்க முடியலீங்களே!... என் பிறவிக்கு ஒரு பயன் கிடைக்க வேணும் என்கிறது என் கனவு. என் பிறப்புக்கு ஒரு அர்த்தம்—ஒரு நோக்கம் இருக்க வேணும் என்கிறது என் லட்சியம். என் கனவும் லட்சியமும் கைகூடினால், என் பெயர் முன் மாதிரியாகிடும்! அம்மா, நானே எனக்குரிய வரனை முடிவு செஞ்சிட்டேன். நம் தாய் மண்ணின் மானத்தைக் காக்கிறதுக்காகப் போராடிய ராணுவ வீரர் அம்மா அவர்!... அவர் பெருந்தியாகி! அவரையேதான் நான் கல்யாணம் செஞ்சுக்கப் போறேன். என்னோட கனவும் லட்சியமும் பலிதமடையப் போகிற பொன்னான வேளை நெருங்கிக்கிட்டு இருக்கிறதாகவே என் மனசு சொல்லிக்கிட்டிருக்குதுங்க, மதர்!'' என்று அவள் முடித்தாள்.

தலைவிக்கு வாயெல்லாம் பல்லானது. களிப்பு பிடிபட வில்லை. ''உன்னோட வாழ்க்கையிலே சகல செளபாக்கியங் களும் நிரம்பிய வழிய வேணும்னு ஆசீர்வதிக்கிறேனம்மா!'' என்று ஆனந்தப் பரவசத்துடன் சொன்னாள் திலகவதி அம்மையார்.

தமிழரசி மோனத் திளைப்பில் தன்னை மறந்து அப்படியே கட்டுண்டு கிடந்தாள்!

## 'வரி சங்கம் நின்று ஊத...!'

### பதினான்கு

சுந்தரக் கனவு ஒன்று கண்டாள் சுந்தரக்கன்னி. நீரில் ஊறிய சர்க்கரை கரைந்து நீருடனேயே ஐக்கியமாகி, அந் நீருக்கு இனிப்புச் சுவை தருவதைப்போல, தமிழரசி கண்ட கனவு அவளுக்குரிய நெஞ்சத்திலே இனிப்பை வார்த்தது கண்டபோதும் சரி, கண்டதை மீண்டும் மனத்திடைக்

கொண்ட போதும் சரி, அவள் அடைந்த அகமகிழ்வுக்கு எல்லையே இல்லை.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியைப் பற்றி நினைத்த வாறே, மாடியிலிருந்த தலைவியின் படுக்கைக்கூடத்தின் தெற்கு மூலையில் தமிழரசி படுத்துக் கொண்டாள். கோதையார் தாம் கண்ட கனு நிகழ்ச்சியினைத் தன் தோழிக்குக் கூறும் பாடல் கருத்துக்களையும் அவள் மனம் ஓதியது: 'தோழி! ஆயிரம் யானைகள் சூழ வலம் செய்து நாரணன் நடக்கிறான் என்று பூரணப் பொற்குடங்கள் வைக்கப் பெற்றன. தோரணங்கள் கட்டப்பட்டன. புண்ணிய தீர்த்தம் கொணரப் பெற்றது. மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்று ஊத, மதுசூதனன் வந்து என் கைத்தலம் பற்றினான். அவன் என்னை அணைத்துக்கொண்டு தீயை வலம் செய்தான். அவனே இப்பிறவிக்கும் இன்னும் ஏழ் ஏழ் பிறவிக்கும் பற்று ஆவான். அந்நாரணன் என் காலைத் தன் கையால் பற்றி அம்மி மிதிக்கச் செய்தான்!'

ஆண்டாளின் கனவுக் கோலத்தை அனுபவித்த மன ஈடுபாட்டில் அவள் அப்படியே உறங்கிப் போனாள். இவளுக்கும் கனவொன்று தோன்றியது. மாறி இதயம் புகுந்து ஆன்ம நேயப் பரிவர்த்தனை செய்து கொண்ட தமிழரசியும் மோகன்தாசும் மணமேடையில் மணமாலைகள் மாற்றிக் கொள்கின்றனர்; பிறகு, அவளுக்குத் திருப்பூட்டு கிறான் அவன். இருவரும் தீ வலம் வருகின்றனர். அவளுடைய வலது பாதத்தைத் தன்னுடைய வலது கையால் தூக்கி அம்மி மிதிக்கச் செய்கிறான் அவன். ஒருவர் சிரிப்பை மற்றவர்க்குப் பரிவர்த்தனை செய்து கொள்கின்றனர். கூடுவிட்டுக் கூடு பாய்ந்து கொண்டவர்களல்லவா?

அப்போது:

தமிழரசி வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். தானும் மோகன்தாசும் தீ வலம் வந்த காட்சி மீண்டும் மீண்டும் நினைவில் எழுந்தது. 'ஆஹா! என் அன்பர் எவ்வளவு அழகாக

நடந்து என்னுடன் தீ வலம் வந்தார்!' இன்ப நினைவு சிதறி வீசிய இன்பக் களிப்பின் உச்சத்தில் நின்றாள் அவள். எல்லாம் ஒரே ஒரு விநாடிதான். மறுகணம், அவள் தன்னை உணர்ந்து கொண்டாள். அவ்வுணர்ச்சியின் சுழிப்பில் மோகன்தாஸைப் பற்றிய சிந்தனையும் ஊடுருவியது. சலனத்தை ஒடுங்கச் செய்துவிட்ட சாந்தம் அவளிடம் அடைக்கலம் ஆயிற்று. இருட்டின் புலனுக்குத் தோதாகக் கத்தும் கடலின் முனகல் ஒலி ஒரே சீராகக் கேட்டுக் கொண்டிருந்தது. அவளுள் மெய்ச்சிலிர்ப்புக் கிளர்ந்தது. 'ஆல்ரைட்!... என் அன்பர் இவ்வளவு நடந்தது போதும்; இவ்வளவு நடந்துகாட்டியது போதும். ஆமாம்!'— மீண்டும் அவள் தூங்குவதற்கு விநாடிகள் சில ஆயின.

'இல்லம்' அவளுக்குப் பிறந்தகம் கணக்குத்தான். அங்கே அவளுக்கென்று ஒரு சில உரிமைகளும் இருந்தன. குளித்து முழுகினாள். இன்பக் கிளுகிளுப்புப் படர்ந்தது. உடை மாற்றினாள். புதிய உடலும், புதிய உள்ளமும் கொண்டு அவள் கடவுளைத் துதித்தாள். பிறகு, அம்மையின் படிப்புக் கூடத்துச் சோபாவில் வந்தமர்ந்தாள். தன் பையிலிருந்து எடுத்த அந்தப் பழைய பத்திரிகையைப் பாசத்துடன் புரட்டினாள். வீரன் மோகன்தாசுக்கு அவள் மாலை சூட்டி, வணக்கம் செய்த படங்களைத் திரும்பவும் அவள் பார்த்தாள். தன் இதயக் காதலை அம்மாவிடம் சொன்னதும், அவள் தாமதம் செய்யாமல் தன்னை இதயபூர்வமாக ஆசீர்வாதம் செய்ததும் அவளுக்குப் பேரமைதி தந்தது.

ஆனால், ஸ்கூலிலிருந்து மதியம் புறப்பட்ட அவள், இல்லத்துக்கு வந்த பிறகுதான் நல்ல மூச்சுவிட்டாள். இதற்கிடையில், குழப்பமும் பயமும் அவளைச் சூழவே, அவளுக்கு மூச்சுவிடக்கூட ஞாபகம் வரவில்லை. நல்ல வேளை! யார் செய்த பூஜாபலனோ, அவளுடைய உயிர் யாதொரு விக்கினமும் அடையாமல் சுக சௌக்கியமாகவே இருந்து வந்தது. தூக்கமாத்திரைகள் அவள் ஜீவனுக்கு நடத்திய சோதனையிலிருந்து தப்பிப் பிழைத்த பின்னர், "உங்க உயிர் உங்களுக்கு மட்டும் சொந்தமில்லை; உங்கள் அன்பை நம்பி

எத்தனையோ உள்ளங்கள் இருக்கின்றன. இதை மறந்திடாதீங்க!'' என்று ராணுவ வீரன் மோகன்தாஸ் எச்சரித்துச் சொன்ன உரிமைப் பாந்தவ்யத்தை அவள் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். புத்தம் புதிய அர்த்தமெல்லாம் தோன்றியது. இடைவழியில் இறங்காமல் கொள்ளாமல் அவளுடன் கூடவே வழிப்பயணம் செய்தன குழப்பமும் பயமும். 'அம்மா இந்நேரம் என் நிமித்தம் ஒரு முடிவைச் செய்து வைத்திருப்பார்கள். அவர்கள் முடிவும் என் முடிவும் எப்படியும் ஒன்று போலிருக்க முடியாது. ஒன்றுக்கொன்று மாறுகவேதான் இருக்கும். அப்படியென்றால், யார் முடிவுக்கு என் வாழ்க்கை பொருந்துவதாம்?' இந்தப் பயமும் குழப்பமும் அவளை ஆட்டிப் படைத்தாலும், இல்லத்தின் தலைப்பை மிதித்ததுடன் அவளுக்கு எங்கிருந்தோ அமைதியும் மகிழ்வும் ஓடி வந்து அவள் நெஞ்சில் தஞ்சமடைந்தன. 'என் இதயத்தை அம்மாவிடம் திறந்து காட்டிவிட்டால், அப்புறம் அவர்களே எனக்கேற்ற முடிவைச் சொல்லிவிடுவார்கள். பெரும்பாலும் எனக்கு அனுசரணையாகத்தானே அவர்கள் சொல்லுவார்கள்! என்னை அறிந்தவர்கள் மதர். அவர்கள்தான் என் தெய்வம்! அவர்கள் வாக்குத்தான் எனக்குத் தேவகட்டளை! ஒரு சமயம் என் கனவுக்கு எதிரிடையாக — என் தவத்துக்கு மாறுக அவர்கள் தீர்ப்பு வழங்கிவிட்டால்...?' — சிந்தனையைத் தொடர முடியவில்லை, அவளால். ஆனால் வழக்கம்போலக் குழப்பமும் அச்சமும் மாத்திரம் தொடர்ந்தன.

இந்நிலையுடன், இல்லத்திற்கு வந்ததும் வழக்கம்போல் அவள் நாலாபக்கமும் சென்று திரும்பினாள். படித்த இடம், விளையாடிய இடம் என்று அவள் ஒவ்வோர் இடமாக நினைவு படுத்திக்கொண்டு நின்றாள்; ஒரு வினாடி கண்களை மூடிக் கொண்டாள்; பழைய காட்சிகளை நினைந்து மகிழ்ந்து முடிந்ததும் கண்களைத் திறந்தாள். அம்மாவின் சந்திப்புக் கிட்டியது, தன் முடிவுக்கு ஆசியும் கிட்டிவிட்டது!...'

இதற்கு மத்தியில் அவள் மனம் எத்தகைய பயங்கரப் போராட்டத்தை நடத்திக் காட்டிவிட்டது!

இந்த மனத்திற்கு எதையும் மறக்கத் தெரியாதோ? எதுவுமே மறந்து போகாதோ? மரத்துப் போகாதோ?

பத்திரிகை காற்றில் ஓசைப்படுத்தியது. தமிழரசி சுயப் பிரக்ஞைக்கு வந்தாள். தலைப்புப் பக்கம் தலைமாறிக் கிடந்தது. வசம் அமைத்துப் பார்த்தாள். பழைய தாள்!—ஐ.நா. பந்தோபஸ்து சபையில் பாரதத்தை ஏசிய பாகிஸ்தானத்தின் நன்றி கொன்ற விவரங்களைக் காட்டிக்கொண்டிருந்தது அது! இது சம்பந்தமாகப் பள்ளியில் ஆசிரியைகள் கூடத்தில் பேச்சுக்கள் எழுந்தபோது, தன்னைப் போலவே உணர்ச்சிவசப்பட்டுப் பேசிய குமாரி கதீஜா பேகத்தையும் அது தருணத்தில் அவள் நினைத்துக்கொள்ள வேண்டியவள் ஆனாள்.

காலடிச் சத்தம் கேட்டது.

திரும்பினாள்.

அனாதை மனையின் தாய் திலகவதி அம்மையார் அங்கு வந்தாள். அவள் கையில் ஒரு 'பச்சை மண்' இருந்தது. அதன் கால்கள் இரண்டும் முழங்கால்களோடு அரைகுறையாகக் காட்சியளித்தன. செக்கச் சிவந்த பாதங்களுக்குப் பின்னணி கொடுத்தது, அம்மையின் கறுப்புப் புடவையின் மூன்றானை.

தமிழரசி அந்தக் குழவியை நெடுநேரமாகப் பார்த்தாள். "'படைப்புச் சிக்கலுக்கு ஒரு உதாரணம்!'' என்று அனுதாபப் பட்ட தலைவியின் மொழிகள் அவளது செவிகளில் எதிரொலித்தன. அவளது மனத்திரையில் மோகன்தாஸின் உருவம் பதிந்தது. 'எனக்கென ஆண்டவனால் சிருஷ்டிக்கப்பட்டவர் அவர். நான்தான் அவரைக் காலங்கழித்துப் பார்க்கிறேன். அதனாலென்ன? எங்கள் மனச் சந்திப்பு எங்கள் இருவரது ஜனன காலத்தின்போதே கூடியிருக்க வேண்டும். பிறப்பு என்பது வழி வழித் தொடர்பு உடையது என்று சொல்லப் படுகிறது! விட்டகுறை — தொட்டகுறையின் தாத்பர்யமே அதுதான்!' இன்பக்கனவு தந்த ஊட்டத்தின் நிறைவுடன் அவள் மீண்டும் அந்த மதலையைப் பார்த்தாள்.

தலைவியைப் பெரிதும் சிந்திக்க வைத்தது அந்த அனாதைப் பூ. இம்மாதிரி ஊனப் பிறப்புகளுக்கு உரிய புகலிடத்தில் அதைச் சேர்ப்பிப்பதைப் பற்றி அவள் வெகுதூரம் யோசித்தாள். 'சேக்ரட் ஹார்ட் மிஷன்' தான் உகந்ததென்று சொன்னார்கள்!

தமிழரசி, 'இந்த மாதிரிதானே நானும் ஒரு காலத்தில் கண்டெடுக்கப்பட்டு வளர்க்கப் பட்டிருப்பேன்? நானும் இருபத்திரண்டு வருஷங்கள் வாழ்ந்துவிட்டேனே! தெய்வத்தின் முன்னே யாருமே அனாதையல்ல என்கிற தத்துவம் எவ்வளவு உண்மை!... அந்த வேதவாக்கு பொய்யாயிருக்கும் பட்சத்தில், நான் பச்சை மண்ணாக இருந்த தருணத்திலேயே காய்ந்த மண்ணுக்குக் காணிக்கையாகி யிருக்கமாட்டேனா?...' என்று எண்ணமிட்டாள்.

புத்தக அலமாரியினின்றும் ஒதுங்கி மறைந்து கிடந்தது ஒரு நூல்—'நன்னூல் விருத்தியுரை'; அது அவளுடையது. அதை எடுத்துப் பைக்குள் திணித்தாள். இப்போது, மதிப்புக்குரிய திலகவதி அம்மையை ஆழ்ந்த அமைதி கனிய நோக்கினாள். ஆயா ஒருத்தியிடம் அந்தக் குழந்தையைக் குறிப்புடன் கொடுத்து அனுப்பிவிட்டு வந்து சோபாவில் சாய்ந்தாள். "பெண் குழந்தைக்கு இப்படியொரு ஊனத்தைப் பகவான் கொடுத்திருக்க வேணும். பெண் என்ன... ஆணாக இருந்திருந்தால்கூட ஊனம் என்று ஏற்பட்டுச்சின்னா அது ஊனம் தானே?..." என்று அவளைப் பார்த்துச் சொல்லி விட்டு, "இல்லையாம்மா?" என்று ஒரு கேள்வியைக் கேட்கவும் செய்தாள்.

தமிழரசி பக்குவம் செறிந்த புன்னகையை மனத்தெளிவுடன் வெளியிட்டாள். 'ஆம்' என்று தலையை உலுக்கினாள். அதே சூட்டுடன், "அம்மா! என்னுடைய காதலரை உங்களுக்கு அறிமுகப்படுத்துறதுக்கு முன்னதாக, அவர் படத்தை உங்களுக்குக் காண்பிக்க ஆசைப்படுறேனுங்க!" என்று மிடுக்குடன் தெரிவித்து, அதே உணர்வின் காம்பீர்யத் தெளிவுடன் பத்திரிகையில் வெளியாகியிருந்த படங்களைச் சுட்டு விரலால் அடையாளம் வைத்துக் காட்டினாள். அவள்

சுட்டிய இடத்தில், மோகன்தாஸின் உருவத்தோடு, அவனுக்குச் சொந்தமான அந்த இரண்டு ஊன்று கோல்களும் பளிச்சிட்டுத் தெரிந்தன.

தலைவி திலகவதி அம்மையார் பொங்கி வந்த மலர்ச் சிரிப்புடன் வெகு ஆவலாகப் பார்த்தாள்!

மறுகணம்:

''அம்மா!...'' என்று அவளையும் மீறிய கதியில்—அவளுக்கும் கட்டுப்படாத சுருதியில்—அவளால் தாங்கிக்கொள்ள முடியாத தவிப்பில் அலறினுள் அம்மையார். மிகவும் பெருமையுடன் திண்மையாக நின்ற தமிழரசியைப் பார்த்த போது, அவளது கண்ணின் கருமணிகள் பளபளத்தன.

தலைவியின் விரல்கள் மோகன்தாஸின் ஊன்றுகோல்களைத் தடவின. ''அம்மா, என்னுேட காதலர் ஒரு ஜவான். கடமை வீரர்! தாய் நாட்டின் நிமித்தம் அவர் சொந்தக் கால்களில் நின்று பணி புரிந்திட்டு, அந்தப் பணிக்குச் சாட்சியாக அவர் இப்போது செயற்கைக் கால்களோடே உட்கார்ந்துகிட்டு இருக்கிருரம்மா!... அவர் ரொம்பப் பெரிய தியாகியம்மா!...'' என்று உணர்ச்சி பொங்க விவரித்தாள் தமிழரசி.

''அம்மா தமிழரசி!... உன்னையே ஒரு உதாரணமாக ஆக்கிக்கிட்டுத்தான் நீ உன் ரேடியோப் பேச்சை எழுதினுயா?... நீயே ஒரு அற்புதமாக என் கண்களுக்குத் தோன்றுகிருயம்மா!... உன் தியாகத்தை — உன் துணிவை — உன்னுடைய தாய்மண் பாசத்தை எப்படிப் புகழ்கிறதின்னு எனக்குப் புரியலேயம்மா!... உன் பிறவிக்குப் பொருள் கிடைச்சிட்டுதம்மா 'தமிழரசி!...'' வரவர, அம்மையாரின் குரல் இறங்கி வந்தது. தமிழரசி மீதிருந்த கண் நோக்கை இன்னமும் அவள் எடுக்கவில்லை.

தமிழரசி உணர்வுகளின் பெருக்கத்தோடு நின்ருள்.

தலையை உயர்த்தினுள்.

அமைதியின் பொலிவு அவள் கண்களிலே இருந்தது.

அதே நிறைவுடன் தலைவியைப் பார்த்தாள்.

"அம்மா, நீங்க போற்றுகிற அளவுக்கு நான் என் கடமையைச் செய்கிறதுக்குத் துணிஞ்சேன்னு சொன்னல், அந்த ஒரு பக்குவமும் தெம்பும் உங்களுடைய தியாக சீலத்திலேருந்து நான் கிரகிச்சுக் கற்றுக்கிட்டதாகத்தான் இருக்க முடியும். இவ்வளவு காலமாக நீங்க உங்களையே, தியாகம் பண்ணிக்கிட்டு சமூகசேவை செய்து வர்றீங்களே அந்த ஒரு தர்மத்துக்கு—சத்தியத்துக்கு—அன்புக்கு—பாசத் துக்கு முன்னலே என் கடமை எம்மாத்திரம், மதர்?... என் நெஞ்சிலே மட்டும் நீங்க உயிர் வாழலீங்க, மதர்! நான் சிந்திக்கிறதிலே — பேசுறதிலே — படிக்கிறதிலே — படிச்சுக் கொடுக்கிறதிலே—எழுதிறதிலே ஏதாவது புதுமை இருந் தால், எல்லாவற்றுக்கும் உங்கள் உதாரணம்தான் எனக்கு ஆதாரம், மதர்! உங்களுக்கு என் ஆயுள் பரியந்தம் எவ்வளவோ கடப்பாடு கொண்டவளம்மா உங்க தமிழரசி!..."

இனிப்புக் கண்ணீர் வழிந்தோடியது.

இனி அவளால் பேச முடியாது. அவள் தொண்டை அடைத்துக்கொண்டு வந்தது. இமை வட்டங்களின் அடி வளைவுகள் வலித்தன. ஈரக்கசிவு இருந்தது. இதழ்களின் முனைகளிலே, "அம்மா, என்னுடைய கனவு நல்லவிதமாய் வெற்றி அடைய வேணும்னு இன்னொரு தரமும் நீங்க வாழ்த்தி ஆசீர்வாதம் செய்யுங்கம்மா!" என்று உணர்ச்சிச் சுழிப்புடன் தமிழரசி கெஞ்சினள்.

திலகவதி அம்மையார் ஒரு தாயின் ஸ்தானத்தில் நின்று தமிழரசியை மார்போடு ஆரத்தழுவி, அணைத்துக்கொண்டு, இரண்டாம் தடவையாகவும் வாழ்த்தினள்; ஆசி வழங்கி னள். ஒரு மாத்திரைப் பொழுது அவள் அப்படியே அயர்ந்து போனள். வாய் பேசாமல் கண்களை மூடிக்கொண்டு நின்றாள். கண்ணீர் பொழிந்தது. இந்தச் சமயம் தப்பினல் மறுசமயம் வாய்ப்பது அரிது என்று எண்ணியவள் போலப்

பதட்டப்பட்டு எதையோ சொல்லிவிடத் துடித்தாள், அம்மையார். ஆனால், அப்போதைக்கு அவள் இதழ்களைப் பிரிக்கவேயில்லை!...

மாரகச் சேலையைச் சீர் செய்துகொண்டு நேர்கொண்ட பார்வையைச் செலுத்தினாள்! தலைவியின் தடுமாற்றத்தை அவள் கவனித்தாள். "அம்மா! என்னங்க அம்மா?..." என்று பதறினாள். அதற்குமேல் எதுவும் வாயெடுத்துச் சொல்லும் நிலையில் இருக்கவில்லை தமிழரசி. பத்திரிகையை எடுத்து எட்டாக மடித்துப் பைக்குள் திணித்தாள். 'என் இதயத்தை அன்பர் மோகன்தாஸ் அவர்களிடம் சமயம் கணித்துத் தெரிவித்து விடவேண்டும்' என்று அவள் தன் மன டயரியில் குறிப்பு எழுதி வைத்தாள். காலைப் பலகாரத்தை முடித்துக் கொண்டதும் அவள் இங்கிருந்து புறப்பட முயன்றாள். அம்பலவாணனுக்கு உடல் நலமில்லை யென்று கேள்விப்பட்டதாக வருத்தத்துடன் தெரிவித்தாள் திலகவதி அம்மையார். இந்த அறிவிப்பு, தமிழரசியின் மன ஓடையின் நீரோட்டமாக இயங்கிச் சுழித்துக்கொண்டே யிருந்தது. நீரலைகளில் சலனம் எழும்பியது.

அம்பலவாணனின் பங்களாவுடன் மாடியில் இருந்த வண்ணமே தொலைபேசித் தொடர்பு கொண்டாள். இணைப்புக் கிடைத்தது. அவளது பெயரைக் கேட்டார்கள். சொன்னாள். "மிஸ்டர் அம்பலவாணனுடன் பேசவேண்டும்" என்று மறுபடி நினைவுறுத்தினாள்.

இப்பொழுது, அம்பலவாணன் குரல் கொடுத்தான். குரல் உற்சாகமாக இருந்தது. அவளுக்கு ஆறுதல் ஏற்பட்டது. நேரில் புறப்பட்டு வருவதாக அவள் சொன்னாள். அதைக் கேட்டதும், அவன் அடைந்த மகிழ்வை, அவன் தந்த குரலில் கேட்க முடிந்தது அவளால். பேச்சை முடித்துக் கொண்டாள். விடைபெற்றுப் புறப்பட்டபோது, அவள் தலைவியிடம் விவரம் சொன்னாள்.

"உன் அன்பு அமுதமாகப் பெருக்கெடுக்க வல்லது. அவசியம் அம்பலவாணனைப் பார்த்துவிட்டுப் போ. நீ இங்கு

வரும்போது, கல்யாணப் பத்திரிகை அச்சடிக்கும் தோதுடன் வரவேணும், தமிழரசி!''

''நல்லதுங்க, மதர்!''

மண்ணிடைக் காலூன்றி நடைபயிலக் கற்றுக்கொண்ட பெண் குழந்தை சிரிப்பின் திளைப்பில் காட்சியளிப்பதைப் போலத் தமிழரசியும் காட்சியளித்தாள். அவளது இடது கன்னத்தின் அழகிய மச்சத்தையே பார்த்தவாறு குமாரி தமிழரசிக்கு விடை கொடுத்தனுப்பினுள் குமாரி திலகவதி அம்மையார்!

## சுடர்க்கொடி

### பதினைந்து

விதியின் பாதை ஒருவருக்கும் புரியாதது.

வீதியின் பாதையோ எல்லோருக்கும் புரியும்; புரிந்தது.

சாந்தோம் வட்டத்தைவிட்டு விலகி மேற்கு நோக்கி நடந்தாள், தமிழரசி. மயிலாப்பூரின் கம்பீரம் அவளை வரவேற்றது. லஸ் முனைக்கு அழைத்துச் செல்லும் அந்தப் பெருஞ்சாலையின் தொடக்கத்திலேயே இருந்தது, அம்பல வாணின் மூன்று அடுக்கு மாடி வீடு. 'ஆனந்த விலாசம்' அது.

அந்தப் பெருமனையை இலக்கு வைத்து நடந்தாள், தமிழரசி. கால் பெற்றதே ஒரு பெரும் பேருகக் கருதிக் கொண்டே, அவள் வழி மிதித்து வழி தொடர்ந்தாள். உடன் தொடர்ந்த காலைப் பொழுதின் துணையுடன் அவள் நடந்தாள். வாசனைத் திரவிய சாலையை அவள் கடந்த போது, அவளுள் மருக்கொழுந்தின் வாடையாக அம்பல வாணனின் ஞாபகம் மணத்தது.

மாதா கோயிலுக்கு விரைந்து போனுர்கள், ஆண்களும் பெண்களும். இந்தப் பட்டியலுக்குப் பழமும் பிஞ்சும் விலக்கல்லவே!

அம்பலவாணனைச் சந்தித்த சம்பவத்தை அவள் மீண்டும் எண்ணமிட்டாள்.

இப்படித்தான் ஒரு ஞாயிற்றுக்கிழமை.

கோடை முடிந்து, பள்ளிக்கூடம் திறந்த புதிது.

அநாதை இல்லத்தைத் தரிசித்த பின்னர், மெரினாக் கடற்கரை ஓரமாக நடந்து உழைப்பாளிகளின் சிலைக்குப் பக்கமாக ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்தாள். மாலை மயங்கியது. மெல்லிய இருட்போர்வை மெல்ல விரிந்தது. இருளினால் கண்களுக்குக் குந்தகம் விளைய முடியாத வகையில், 'நியான்சைன்' விளக்குகள் எரிந்தன. கடலின் இரைச்சல் அவள் இதயத்தில் அடங்கி அடங்கி எழுந்தது.

கடல் மணலை வளைத்தவாறு, தன்னைப்பற்றியும், தன் எதிர்காலத்தைப் பற்றியும் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். முன்பு தன்னுடன் படித்த ஸ்டெல்லா மேரியை அப்போதுதான் அவள் வழி அனுப்பி வைத்தாள்.

மழைக்குணம் மாறி வந்தது. எனவே, தமிழரசி வீடு செல்ல எழுந்தாள். மேலாக்கை இடது தோள் பட்டைப் பகுதியில் கொய்து போட்டுக் கொண்டாள். நீல விதானத்தில் நட்சத்திரக் கன்னிகள் முத்துச் சுடரொளி சிந்திச் சிரித்தனர். அதன் அழகு, அலைக்குமிழ்களில் பட்டுச் சிதறியது. கொஞ்ச நேரம் கடலோரத்தில் நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். கடற்கரைக் கிளிஞ்சல்களைப் பாதங்களால் எற்றியவாறு நடந்தாள். 'பாவம், இந்தக் கிளிஞ்சல்கள் பயன் இழந்து போனபடியால், நாதி இழந்து போனபடியால், நாதி இழந்து இப்படிக் கிடக்கின்றன! ஆமாம்; பிறப்பு என்றால் ஒரு பயன் இல்லாவிட்டால், என்ன புண்ணியம்?... பிறவிக்கு ஒரு பயனும் ஒரு நோக்கமும் ஒரு அர்த்தமும் வேண்டுமென்றுதானே பெரியவர்கள் பேசியும் பாடியும் சென்றிருக்கிறார்கள்!...' என்று மன வேட்கையுடன் சிந்தனைக்குச் சூடேற்றி, அலை நுரை ஓரமாகக் காலாற நடந்தாள்.

நங்கூரம் பாய்ச்ச ஆயத்தம் செய்த இலங்கைக் கப்பல் ஒன்று தூரத்தில் தெரிந்தது. கரை நோக்கிச் சரிந்து நெளிந்து கொண்டிருந்த தோணிகள் பல தெரிந்தன.

பத்துத் தப்படிகள் கடந்திருப்பாள்.

அப்போது :

யாரோ ஓர் அபலைப் பெண்ணைக் கடலிலிருந்து காப்பாற்றிக் கரையில் கொண்டு வந்து போட்டான் ஓர் இளைஞன். விதி வலிது. அவன் தன் உயிரைத் திருணமாக எடைபோட்டு, பெண்ணைக் காப்பாற்றக் கடலில் குதித்ததற்கு ஒரு பலன் கிட்டாமல் போயிற்று. அந்தப் பெண் அப்போது சாவுக்கு அடிமையாகி விட்டாள்.

இம்முடிவைக் கண்டதும் அவ்விளைஞன் வாய்விட்டு அழுதான். யாரோ ஊர் பேர் தெரியாத ஓர் அபலைக்காக அப்படிக் கண்ணீர் பெருக்கிக் கதறிய அவனது ஈர நெஞ்சத்தைக் கண்டதும் தமிழரசிக்கு மன நெகிழ்ச்சி உண்டானது. அவனைச் சமாதானப்படுத்தும் பொறுப்பை அவளே எடுத்துக் கொண்டாள். அனுதைச் சவத்தைப் பற்றிப் போலீசுக்குத் தகவல் கொடுத்து ஆவன செய்த பிறகு, அவனைக் காரில் அனுப்பிவிட்டு அவள் பிரிந்தாள்.

அந்த யுவன்: அம்பலவாணன்.

அச்சந்திப்புக்குப்பின் ஒன்று, இரண்டு என்று சந்திப்புக்களின் எண்ணிக்கை வளர்ந்தது. நாட்களும் எத்தனையோ கண்கட்டு மாயமாக மறைந்து விட்டன.

ஒரு முறை கடல் மல்லைக்குப் 'பிக்னிக்' போயிருந்தார்கள், பள்ளியிலிருந்து. தமிழரசியும் சென்றிருந்தாள். காலத்தை வெற்றி கொண்ட கலையின் வெற்றிச் சிறப்பை ரசித்துக் கொண்டிருந்தாள், தமிழரசி. கடற்கரைக் கோயில் அவளுக்குக் கிடைத்தது.

பள்ளி இறுதி வகுப்புக்கு 'மாமல்லபுரம்' ஓர் உபபாடம். இப்பயணம் மேலும் உதவுமே!

அப்போது, அம்பலவாணன் அவளைச் சந்தித்தான். வணக்கம் சொல்லி, "சௌக்கியமா?" என்ற கேள்வியுடன்

சந்தித்துக் கொண்ட அவனும் அவளும் தனித்திருந்து உரையாடி மகிழ ஒரு வாய்ப்பு அவ்விடத்தில்தான் உருவானது.

அவனைப் பற்றிச் சில புள்ளி விவரங்களை அவள் நாளடைவில் அறிய முடிந்தது.

அவன் பெரிய இடத்துப் பிள்ளை. பணத்தைக் கொட்டிக் குவித்துவிட்ட படத் தயாரிப்பாளர் அவன் தந்தை. பி. ஏ. படிப்பு. நல்ல இதயம். மிகவும் அபூர்வமான குணம். இந்தப் பிள்ளைதான் தாய்தந்தையர்க்குச் சகலமும்.

அனாதை என்ற அளவில் தமிழரசியைப்பற்றி அவன் கண்கள் குளமாயின. "சிருஷ்டியிலே எவ்வளவோ புதுமைகள் இருக்கு. ஆண்டவன் முன்னாலே நாமெல்லாம் ரொம்ப அற்பம். ஆனாலும், சில சில உண்மைகளை நாம் உள்ளது உள்ளபடி புரிஞ்சிக்க முடியுது. எனக்குச் சகல வசதியும் இருக்கு. ஆனால், எனக்கு இது ஒரு பெரிய விஷயமாகத் தோணலே. அதேபோல, நீங்களும் உங்கள் மனக்குறையைப் பெரிசுபடுத்திக்காமல் இருக்க வேணும் என்கிறதுதான் என் அபிப்பிராயம்!"

அவன் பேச்சு புதுவிதமான அமைப்பில்தான் தொனித்தது. அவன் தொடர்ந்தான்: "தமிழரசி, உங்க சூழலிலே நான் இருக்கிறப்போவெல்லாம் என்னையும் மீறின அமைதி எனக்குக் கிடைக்குது! அதுக்கு உங்க அன்புதான் காரணமாக இருக்கவேணும்!"

அவளுடைய அன்பைப் பெரிதுபடுத்திப் புகழ்ந்த அவன், கடைசியில், அவளுடைய அன்பினை அவள் பெரிதாகப் புகழும் படி செய்துவிட்டான். அவளைத் தன் பங்களாவுக்கு அழைத்தான். அவளால் தட்டமுடியவில்லை. தோழிகளிடம் கேட்டுக்கொண்டு அவனுடன் காரில் சென்றாள். தோழிகள் அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். அவளோ மிகவும் இயல்பாகச் சிரித்துவிட்டு, "அன்பர் அம்பலவாணன் என் நண்பர். அவ்வளவுதான்!" என்று முத்தாய்ப்பிட்டு

விட்டாள். உலகத்தின் கொள்ளிக் கண்களை அவள் அறியாதவளா?

'ஆனந்த விலாச'த்தில் அவள் திக்குமுக்காடிப் போனாள், அவனுடைய அன்பான ராசோபசாரத்தைக் கண்டு. "அன்புடைமை என்பதற்கு ஓர் அதிகாரமே ஒதுக்கப்பட்டிருப்பதற்கு இப்போதுதான் காரணம் புரிகிறது; ஆனால், ஒன்று: உங்கள் அன்பைச் சுமக்கும் சந்தர்ப்பம் திருவள்ளுவருக்குக் கிடைத்திருந்தால் இன்னும் ஓர் அதிகாரத்தைக் கூட்டிப் பாடியிருப்பார்!" என்று ஒரு போடு போட்டாள், தமிழரசி. அவனைச் சிரிக்கச் செய்துவிட்டு, அவள் சிரிக்காமல் போய் விட்டாள். 'நல்ல நண்பர் இவர்!'

பழைய நினைவுகளினின்றும் மீண்டாள், தமிழரசி.

'ஆனந்த விலாசம்' வந்தது; தமிழரசிக்குத் தன் நினைவும் வந்தது.

அவள் பங்களாவிற்குள் பிரவேசித்தாள். கருநொச்சிச் செடிகள் தலை மட்டத்தில் அமைத்துக் கொடுத்திருந்த பாதை வழியே நடந்து சென்றாள். புங்கைப் பூக்கள் சிதறிக் கொண்டிருந்தன. இப்போது வருவது இரண்டாம் தடவை. பெருமனையின் அமைப்பும் அந்தமும் அவளுக்கு இதம் தந்திருக்க வேண்டும்.

அம்பலவாணனின் பெற்றோர்களைத் தமிழரசி அறிவாள். அவர்களிடம் அவள் விஷயத்தைச் சொல்லியபின் உள்ளே சென்றாள். 'மொஸைக்' தரை வெகு நேர்த்தி. கால் பாவி நடந்தாள். மனம் அடித்துக் கொண்டது. இரண்டாம் கட்டில் அம்பலவாணன் 'ஸ்பிரிங்' கட்டிலில் படுத்திருந்தான். நீண்டுயர்ந்த சாமான் மேஜை தன் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள மருந்து வகைகளை இட்டு நிரம்பி வழிந்தது. பாத ஒலி கேட்டு அம்பலவாணன் எழுந்தான். முதுகுத்தண்டுக்கு அணைவாகத் திண்டை நகர்த்திக் கொண்டான், அவன். அவளைக் கண்டதும், "வாங்க!" என்று உள்ளன்பு வழிய வரவேற்றான். அவளிடமிருந்து பதில் வணக்கத்தையும் பெற்றுக்கொண்டான்.

"உடம்பு இப்போது எப்படி இருக்குதுங்க?" என்று சுவாதீனமான பரிவுடனும் பாசம் முகிழ்த்திட்ட நட்புடனும் அவள் விசாரித்தாள்.

"நௌ ஐ ஆம் ஆல் ரைட்" என்றான் அவன்.

அவனைப் பார்த்துக்கொண்டு அவள் கூடை நாற்காலியில் குந்தினாள்; சடை நுனியிலிருந்த நீல ரிப்பன் அவளது நெஞ்சின் கீழோரத்தில் வந்து விழுந்தது. தள்ளிவிட்டாள்.

அருகில் கிடந்த 'டீபா'யில் இருந்த ஆரஞ்சுப் பழங்களை எடுத்து அவளிடம் கொடுத்தான். "சாப்பிடுங்க!..." என்றான்.

அவள் வாங்கிக் கொண்டாள். "மதர் சொல்லித்தான் உங்களுக்கு உடம்பு சுகமில்லை என்பது தெரியும் எனக்கு!" என்றாள் அவள்.

"எனக்குக்கூட மிஸ் திலகவதி அம்மாள் சொல்லித்தான் தெரியும்!" என்றான் அவன்.

அவள் சொன்னது, அவன் நலமிழந்து இருப்பதைக் குறித்து.

அவன் சொன்னது என்ன?...

தமிழரசி குழப்பத்தை அறவே தவிர்த்தாள். ஆனாலும், உள்ளூற ஒரு தவிப்புப் புழுங்கியது. அவனை அவள் ஏறிட்டுப் பார்த்தாள்.

அம்பலவாணனின் முண்டா பனியனுக்கு அழகு சேர்த்துக் கொண்டிருந்தது மைனர் சங்கிலி. "இல்லத்தின் தலைவியோடு போனில் பேசிக் கொண்டிருந்தேன். உங்கள் திருமணம் பற்றி விவரமாகச் சொன்னார்கள். ரொம்பவும் பெருமையாகச் சொன்னார்கள். உங்களைத் தெய்வப் பெண்ணாகவே நான் மதிக்கிறேன்!"

தமிழரசிக்கு இப்போது எல்லாம் விளங்கியது. அவனுடைய புகழுரை அவளுக்குப் பெருமையாகவே இருந்தது! அவன் பேச்சு அவளுக்குப் பெருமையாகவே இருந்தது! அவன்

பேச்சுக்கு அவள் மறுமொழியாக எதுவும் சொல்லவில்லை. மௌனமாகவே இருந்தாள். இரு விஞடிகள் கழித்து ''உங்கள் சந்திப்பை நான் ஒரு பெருமையாகவே எண்ணி எப்போதும் போற்றுவேன்,'' என்று மௌனத்தை விழுங்கிப் பேச்செடுத்தாள்.

''அப்படியா? மிகுந்த மகிழ்ச்சி. உங்கள் அன்பு எனக்கும் பெருமை தருகிறது. உங்கள் பாசம் எனக்கு எப்போதும் அருமருந்தாக அமையவல்லது. ரொம்ப நன்றி, தமிழரசி!''

அவள் ஆனந்தத்தின் நிறைவுடன் தோன்றிஞள். அதன் விளை பலஞக, அவள் கண்கள் கசியத் தொடங்கின. அவள் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். இனி அவள் புறப்பட்டு விட வேண்டும். உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி மீண்டும் வேண்டிக்கொண்டு எழுந்தாள்.

''நேரமாகிவிட்டதா? இன்னும் கொஞ்சம் நாழிகை என்னுடன் இருந்துவிட்டுப் போகக் கூடாதா? இனி நாம் எப்போது சந்திக்க முடியுமோ?...'' என்ருன். அவன். அவனையும் மீறிக்கொண்டு குரல் தளர்ந்தது. தொண்டையைக் கனைத்தபடி சமன் செய்தான். ''ஒரு சந்தோஷச் சமாசாரம் உங்களுக்குக் கிடைக்கப் போகிறது. இதோ, பாருங்கள்!'' என்று 'கூடமாக' உரைத்தபடி, ஓர் அழைப்பிதழை அவள் கைகளில் வைத்தான்.

சிரஞ்சீவி அம்பலவாணனுக்கும் சௌபாக்கியவதி சுடர்க் கொடிக்கும் நடக்கப்போகும் வதுவை விழா அழைப்பு தமிழரசியின் பார்வையில் ஆரம்பமும் முடிவும் தெரியாத இந்திரவில்லாக அழகுகாட்டி ஒளிர்ந்தது. 'ஆஹா!...'

தை பதிஞன்கில் திருமணம்!

உங்களுடைய பெருமனத்தையும் என் உயிர்த்தோழியின் மெய்த் தவத்தையும் நான் பாராட்டக் கடமைப் பட்டவள். இனி நான் நல்ல தூக்கம் தூங்கலாம்!'' என்று கூறி அவள் வாய் ஓயவில்லை.

சுடர்க்கொடி இரு கோப்பைகளில் சூடான காபியைச் சேர்த்து வந்து வைத்தாள். "சாப்பிடுங்க, தமிழரசி" என்று மாருத பாசத்துடன் அவளிடம் கோரினாள்.

"இந்தாங்க, அத்தான்!" என்று சொல்லி அம்பலவாண னிடம் காபியைச் சமர்ப்பித்தாள்.

"நீயும் கொஞ்சம் சாப்பிடு சுடர்க்கொடி!" என்றாள் தமிழரசி.

"நீங்க சாப்பிடுங்க. அவள் பங்கும் என் காபியில் இருக்கிறது!"

அம்பலவாணனின் உதடுகள் சுடர்க்கொடியின் பங்கை ஜாக்கிரதையாகக் காப்பாற்றிக் கொடுத்தன.

தமிழரசி நளினமாக நாணம் காட்டினாள்.

சுடர்க்கொடி சிரித்துக்கொண்டே தமிழரசியின் சார் பாக அமர்ந்தாள்.

குழந்தைகள் தினத்தன்று பிள்ளைகளுக்கு வழங்கப்படு வதற்காக இனிப்புப் பொட்டணங்கள் நூற்றுக் கணக்கில் தயாராகத் தொடங்கி விட்டன.

"உங்க கடமை உணர்ச்சி எனக்கு அதிகமாய்ப் பிடிச் சிருக்குதுங்க!" என்றாள் தமிழரசி.

"எல்லாம் நீங்க கற்றுத் தந்த பாடம்!" என்று ஒரே குரலாக அவர்கள் இருவரும் எப்படி இவ்வளவு கச்சிதமாகச் சொன்னார்கள்!

மத்தியான்னம் சிறப்பான விருந்துக்குப் பிற்பாடுதான் தமிழரசிக்கு அங்கிருந்து பயணப்பட 'பாஸ்போர்ட்' கிட்டியது.

## பதினாறு

மயிலாப்பூர்த் திருக்குளத்தை அடைந்ததும், கபாலீஸ்வரர்—கற்பகாம்பிகை தம்பதியை நெஞ்சில் இருத்தி நினைவிற்குள்ளாகவே தொழுதாள், தமிழரசி

அம்பலவாணனும் சுடர்க்கொடியும் புதுமணத்தம்பதியாகப் போகும் இனிப்புச் சேதியை அறிந்ததிலிருந்து அவளுடைய உள்மனம் அமைதியும் ஆனந்தமும் அடைந்தது. தன் அத்தானின் விருப்பத்துக்கு முதல் இடம் அளித்து, தன் காதலையே அழித்துக்கொள்ள முன்வந்த அவளுக்கு இப்போது தெய்வம் இரங்கிவந்து—இறங்கி வந்து ஒரு புதிய விடிவைக் காட்டியிருப்பது ஓர் அதிசயமாகவே இருந்தது. 'என் வாழ்க்கைப் பாதையிலே மின்னலாய்த் தோன்றியவர் அன்பர் அம்பலவாணன். அவர் நினைவை நான் மறக்காமல் இருப்பது என் தர்மம். அவர் அன்பை மறக்காமல் இருப்பது என் கடமை. சுடர்க்கொடி பொன் வியாபாரியின் மகள். அதனால்தான் அவளுக்கும் பொன்மனம் கைகூடி வந்திருக்கிறது போலும்! தங்கமான தோழி. இருவரையும் ஒரு நாளைக்கு அன்பர் மோகன்தாஸ் அவர்களுக்கு அறிமுகம் செய்துவைக்க வேண்டும். மகிழ்வார்!'

மனத்தில்தான் உயிர் உறைந்திருக்கிறது.

திருட்டாந்தம்: அம்பலவாணன்—சுடர்க்கொடி.

தன் இல்லத்தில் அவர்கள் இருவரும் வந்திருந்தபோது, முடிந்த முடிவாக, தான் சுடர்க்கொடியிடம் சொன்னதை நினைவு கூர்ந்தாள்: 'சகோதரி, உன் அத்தானை உன்னுடைய அத்தானாகவே ஆக்கிக்கொள்ள முயற்சி செய்! முயன்றால் முடியும். இதுவே, நான் உன்னிடம் வேண்டும் வரம். இதுவே, நான் உனக்குச் செய்யவேண்டிய மனிதப் பண்பு மிக்க கடமையாக எனக்குத் தோன்றுகிறது. என் மனச்சாட்சி அப்போதுதான் என்னை வாழ்த்தும்!...'

முயற்சிக்குக் கூலி கிடைத்தது!...

''சின்ன ஐயாவோட நிலைமை ரொம்ப எக்குத்தப்பாப் போயிடுச்சு போன வாரம். அவரைப் பார்த்துப் பார்த்து அவரோட மாமன் மகள் சுடர்க்கொடியும் நோய்ப்பட்டுப் போச்சு. ரெண்டு பேருக்கும் மனநோய் தானுங்கம்மா காரணம்!... சுடர்க்கொடி அம்மாவோட நிலைமை ரொம்பவும் பயத்தை உண்டாக்கினதும், சின்ன ஐயா சின்னப்பிள்ளை யாட்டம் கதறித் துடிச்சிட்டாருங்க. கடைசியிலே, அவர் சுடர்க்கொடி அம்மா கையைப் பிடிச்சுக்கிட்டு, 'இனி நீ என்னோட சொத்து' அப்புடின்னு சொன்னாரோ, இல்லையோ, உடனேயே அந்தப் பொண்ணு மறுபிறப்பு எடுத்த மாதிரி தெளிஞ்சு வந்திடுச்சு. 'இனிமே என் அத்தானுக்குப் பய மில்லை!' என்னு குதிச்சுது சுடர்க்கொடி!... இந்தக் கிழவிக்கு அவுங்க ரெண்டு பேர் கதையும் காரணமும் ஒரே அதிசயக் கூத்தாத்தான் இருக்குதுங்க!...'' என்று அந்தப் பங்களாவின் வேலைக்காரி வெளி வாசல் வரை வந்து பேசிய பேச்சு, தமிழரசியின் இதயத்தில் எதிரொலி பரப்பிக்கொண்டே யிருந்தது.

இயந்திர மனிதர்களைப் பிடரியில் பற்றி நிறுத்தி, ''இன்று நீங்கள் மனிதர்களாக வாழ வேண்டிய சுதினம். நீங்கள் யந்திரங்களுடன் 'டூ' போட்டு விடவேண்டும்!' என்று சொல்லாமல் சொல்லும் சாகஸம் இந்த ஞாயிற்றுக் கிழமை ஒன்றுக்குத்தான் உண்டு. இல்லையா?

அவள் வீடு செல்ல வேண்டும். பஸ்ஸை எதிர்நோக்கிக் காத்திருந்தாள். மோகன்தாஸ் அவள் கண்களுக்குள்ளே மாறி மாறி நின்றான்! 'என் அன்பரிடம் தருணம் பார்த்து என் இதயக் கனவைச் சொல்லிவிட வேண்டும். அவர் எனக்கு நல்வாக்குத் தருவார்; என்னை வாழ்த்துவார்! மதரின் நல்லாசி கிடைத்தது பெரும் அதிர்ஷ்டம். அதேபோல, அம்மையப் பனும் என் கடமையை வாழ்த்திவிட்டால், நான் பிறவிப் பயன் பெற்றவளாகி விடுவேன்!' நினைவுக்கொழுந்துகள் மருக் கொழுந்துச் சரம் தொடுத்தன. வாடை உள்ளத்தை நிறைத்தது. வாடை உடலை உறுத்தியது. 'என்னை ஆசீர்

வதிக்க என் தாய் தந்தையும் இருந்திருந்தால்...?' என்ற ஆசை வேரோடியபோது, அவள் மனம் பொங்கியது.

முன் நாள் காலையில் மோகன்தாஸைக் காணப் புறப் பட்டாள். அவர் தன்னுடைய பட்டாளத்துச் சிநேகிதர் ஒருவரை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சந்திக்க 'டாக்ஸி' எடுத்துக்கொண்டு போயிருந்தார். 'அவரைப் பார்க்காமல் எப்படி இத்தனை மணிகள் ஓடிவிட்டன?' சாந்தோம் இல்லத் துக்குப் புறப்படுவதற்கு முன்னதாக அவள் பார்வைக்கு இலக் கானது போட்டோ ஒன்று. பழைய ஆல்பத்திலிருந்தது. வித்தாரக் கதை சொல்லி, தனக்குக் குழந்தைப் பருவத்தில் அன்னம் பிசைந்தூட்டிய ஆயாளின் படம் அது. முதுமைக் கோலத்தையும் மறந்து அவள் தனக்காக எடுத்துக்கொண்ட சிரமங்களை அவள் சொல்லிக் கேட்டதுண்டு, தமிழரசி. அக் கிழவியைச் சில வருஷங்களுக்கு முன்னர் அவள் வழியில் சந்தித்தாள். அவள் சிரித்துக் கொண்டே தன்னை யார் என்று இனம் சொன்னதும்தான், தமிழரசிக்கு நினைவு வந்தது. கிழவியை மீண்டும் பார்க்கும் வாய்ப்புக் கிட்ட வேண்டுமேயென்று கவலை கொள்ளலானாள்.

மழை தூறியது.

பஸ் வரவில்லை.

தமிழரசி ஒரு வீட்டின் வெளித் தாழ்வாரத்தில் ஒதுங் கினாள். அது ஒரு பள்ளிக்கூடம் என்று தெரிந்தது; வாத்தி யாரம்மாவுக்கு ஆபத்து உதவி செய்துவிட்டது.

"ஹலோ, தமிழரசி!" என்று அவள் சிநேகிதி ஸ்டெல்லா மேரி அவளைத் தோள்பற்றிக் கூப்பிட்டாள். கைப்பையை வலது தோளில் தொங்கவிட்டவாறு, "ஓ..., நீங்களா?" என்று சொல்லி க்ஷேம லாபம் கேட்டாள், தமிழரசி.

இருவரும் உரையாடினர். அப்போது ஸ்டெல்லா சொன்ன ஒரு செய்தி அவளுக்குக் குலைநடுக்கத்தை உண்டு பண்ணியது.

யாரோ ஒரு ரௌடி இந்த ஸ்டெல்லாவின் கற்பைக் களவாட எண்ணியிருக்கிறான். ஊரடங்கும் வேளை. வீட்டில் அவள் மாத்திரம்தான் இருந்தாள். பலநாள் இவள்மீது கழுகுக்கண் பார்வை வீசிக் காத்துக் கொண்டிருந்தவன் போல அந்தப் பாவி வந்திருக்கிறான். அழகாக உடுத்திருந்தான். 'பட்டுச்சட்டை' பளபளத்தது. உடுப்புக்களில் மனிதனாகவும், உள்ளத்து உணர்ச்சிகளில் மிருகமாகவும் அவன் இருந்தான். ஸ்டெல்லா மேரிக்கு ஒன்றும் ஓடவில்லை. அண்டை அயலில் வீடே இல்லை. சிலுவைக் குறியிட்டு 'ஜபம்' செய்தபடி, தவித்தாள். அதற்குள், வந்தவன் அவளை நெருங்கிவிட்டான். அப்போது, யாரோ ஒரு முகமதியப் பெரியவர் அங்கு வந்திருக்கிறார். ஸ்டெல்லாவுக்குத் தெய்வத்தைக் கண்டதாகவே இருந்தது. தெய்வத்தின் ஆட்சிக்கருணை விநோதமாகவே தோன்றியது. அவள் விஷயத்தைச் சொன்னாள். வந்தவர் அந்தப் போக்கிரியை நையப் புடைத்தார். "இந்த மாதிரி இருக்கிற சமுதாயப் புல்லுருவிகளுக்குத் தெய்வம் பாடம் சொல்லித் தண்டனை கொடுக்கிறவரை விட்டு வைக்கப்படாது. கைக்கு மேலேயே பலன்களைச் சொல்லிக் காட்டிப்பிட வேணும்" என்று சொல்லி, அவனைச் சட்டத்தின் கைவிலங்குகளில் ஒப்படைத்தார். அவன் செல்வச் சீமான் ஒருவரின் செல்லப் பிள்ளையாம்!

தோழி சொன்னதைக் கேட்ட தமிழரசிக்கு உதிரம் கொதித்தது. "நானாக இருந்திருந்தால், காந்திஜி சொன்னது போல, அந்தப் பாவியை என் நகங்களாலும் பற்களாலும் குதறி எறிந்திருப்பேன்" என்று சூடு பறக்கச் செப்பினாள்.

"எனக்கு ஏற்றமாதிரி என் சிநேகிதர் மிஸ்டர் ஆல்பர்ட்டை எனக்குத் துணையாக ஆக்கிக் கொள்ளப்போகிறேன்" என்றாள் ஸ்டெல்லா மேரி.

"ஒரு பெண்ணின் வாழ்க்கை தன்னுடைய கணவனின் நிழலில்தான் பூரணம் பெறுவதாகச் சொல்கிறார்கள். உங்களுக்கு என் நல்வாழ்த்துக்கள்!" என்றாள் தமிழரசி.

பஸ் வந்து நின்றது.

"உங்க வருங்காலத்தைப் பற்றி என்ன முடிவு செஞ்சிருக்கீங்க?" என்று நட்புறவில் அறிய விரும்பினாள், பாங்கி.

"உங்க மாதிரி நானும் எனக்கு ஏற்ற ஒரு துணையைத் தேர்ந்தெடுக்கப் போறேன். அதற்குச் சீக்கிரமே சந்தர்ப்பம் வாய்க்குமென்றுதான் எதிர்பார்க்கிறேன்."

"அதுதான் கரெக்ட், டீச்சர்!... பெண் என்று சொன்னால், அவளுக்கு ஒரு காவல், துணை இருந்திருந்தால் தான் நல்லது. பெண்களிலே சில பேர் வாழ்க்கைப் பந்தத்திலே ஈடுபடாது, கன்னிகளாகவே இருந்திடுறாங்க. எனக்கென்னவோ, அம்மாதிரியானவர்களைப் பற்றி ஒரு உயர்ந்த அபிப்பிராயம் உண்டாகிறதில்லை. அவர்கள் போலி என்பது என்னோட வாதம்!..."

இன்னும் என்னவோ. 'திருவாய் மலர' அந்தக் கன்னி பிரயத்தனப்பட்டாள்.

அதற்குள், தமிழரசிக்குப் பொறுக்கவில்லை. "ஸ்டெல்லா! நீங்க ஒன்றிரண்டு பேர்களுடைய ஊழலை வைத்துக்கொண்டு ஒரு பொது அபிப்பிராயத்துக்கு வருவதானது தவறான முடிவாகும். மனசிலே ஊக்கம் இருந்தால் அப்புறம் வாழ்க்கையிலே சாதிக்க முடியாதது எதுவுமே இல்லே! தன்னையே எரிச்சுக்கிட்டுப் பிறருக்கு வெளிச்சம் கொடுத்து, பிறருடைய சந்தோஷத்திலே மனச்சாந்தி அடைகிற மெழுகுவர்த்திக் குணம் கொண்ட நிதர்சன தெய்வங்களாக எத்தனையோ கன்னிமார்கள் இருக்கிறார்களே!... நீங்க சார்ந்திருக்கிற மதத்திலேயே என் பேச்சுக்கு ஆதாரம் ஏராளம் இருக்குதே!..." வர வர — வளர வளர கனல் பறந்தது. நாமெல்லாம் சமுதாயத்திலே ஒரு குறிப்பிட்ட அந்தஸ்திலே வைக்கப்பட்டிருக்கிறவங்க. நாம் சிந்தனையிலே — பேச்சிலே — செய்கையிலே மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கத்தான் பாடுபட வேணும். இல்லையா, சகோதரி?" தமிழரசி சூடு பறந்திடப் பேசினாள்.

உதிர்த்த திவினைச் சொற்களுக்குரிய அறுவடையைச் செய்துகொண்டு, ஸ்டெல்லா மேரி புறப்பட்டாள்.

புறப்பட்ட பஸ்ஸில் தமிழரசி புறப்பட்டாள்.

பிராட்வேயில் இறங்கிய தமிழரசி. அந்தச் சூழ்நிலைக்குத் தப்பிப் பிழைக்கக் கண்களில் எண்ணெய் ஊற்றிக்கொண்டு நடந்தாள். அப்போது, ஜலஜா எதிர்ப்பட்டாள். அவளுடன் கை கோத்துக்கொண்டு புதிய மைனர் ஒருவன் பீடு நடை போட்டுக்கொண்டு வந்தான். அந்தி மாலையில் அவன் மீசையும் கிருதாவும் எடுப்பாகத் திகழ்ந்தன. நாகரிகம் அவளிடமிருந்துதான் பிறக்கிறதென்கிற பாவனையில் ஜலஜா 'வேஷம்' போட்டுக் கொண்டிருந்தாள். 'பாவம்! பரிதாபத்துக்குரிய சகோதரி. அவளைப் படைத்தவன்தான் அவளுக்கு மானத்தின் அருமையைக் கற்பிக்க வேண்டும்!' என்று எண்ணியவளாக அவள் வழி தொடர்ந்த போது, "அம்மா!" 'என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

அது ஒரு சிறிய சந்து. சந்தடியில்லாத சந்து.

குமாரி ஜலஜாவுடன் தொடர்ந்த மீசைக்கார வாலிபன் 'அம்மா' என்று மீண்டும் தமிழரசியின் பக்கம் திரும்பி அழைத்தான். அவனது கண் பார்வையைத் தமிழரசி எடை போட்டாள். குரலின் நிலையை அவள் ஆராய்ந்தாள். அவள் 'உஷாராக' ஆனாள். "என்னையா அழைச்சீங்க? என்ன வேணும்?" என்று அவளுக்கே உரித்தான நெஞ்சுத் திடத்துடன்—திட்டவட்டமான அழுத்தத்துடன் அவள் நெருப்புப் பொறி பறக்க வினவினாள். அவனுக்குத் தன்னிடம் என்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறது என்ற ஆத்திரம் அவள் குரலுக்கு 'வேகம்' பாய்ச்சியது.

"அம்மா! நெருப்புக் கொஞ்சம் வேணும்!" என்று கேட்டுக்கொண்டே, சிகரெட் கேஸின் பொத்தானை அழுத்தி ஒரு சிகரெட்டை எடுத்து வைத்துக்கொண்டான், அவன்.

"நெருப்பா? எங்கிட்ட ஏதுங்க?" என்று முகத்தினிலே வெஞ்சினம் தெறிக்க எதிர்வினா விடுத்தாள். அவள் உதடு

கள் படபடத்தன. மனத்தின் உட்புறத்தில் கொதிப்பு எழுந்தது.

“நீங்க நெருப்பு என்று கேள்விப்பட்டேன். அதுதான் உங்க கையிலே நெருப்புக் கேட்டுப் பார்த்தேன்!” என்று நையாண்டிச் சிரிப்பை வழிய விட்டவனாக, ஒதுக்கமாக நின்ற ஜலஜாவைப் பார்த்துக் கண்களை வேறு சிமிட்டினான்.

அவ்வளவுதான்!—தமிழரசி தீயானாள். “ஓஹோ! அப்படிங்களா? நெருப்பு வேணுங்களா? இந்தாங்க!” என்று சொல்லிக் கொண்டே, கைப் பையை இடது கையில் மாற்றிக் கொண்டு, அவனை நோக்கி நகர்ந்து ஓங்காரமாகச் சோற்றுக் கையை ஓங்கினாள். பத்திரகாளி இப்படித்தான் இருப்பாளோ? அவளது பற்களும் கைவிரல் நகங்களும் துருதுருத்தன.

அப்புறம், ஏன் நிற்கப் போகிறான் அந்தத் தடியன்?

தமிழரசி சுற்றிச் சூழ நோக்கினாள்.

இருவரும் ‘கடலே கதி’ என்று எங்கோ ஓடிவிட்டார்கள். ஆம்; ‘ஓடி’ விட்டார்கள். ஒருகால், கடலே கதி என்று போயிருக்கலாமோ? இவர்கட்குக் ‘கதி’ தர கடலுக்கு ஒன்றும் பைத்தியம் இல்லை.

அவள் பார்வைக்கு அடையாளம் வைத்தாள் சாவித்திரி. “ஸ்கூலிலே படிக்காத ரௌடி போலிருக்கிறது. அழகாகப் பாடம் சொல்லிக் கொடுத்தீங்க!” என்று மெச்சினாள் அவள். “ஓரமாக நின்று எல்லாவற்றையும் பார்த்துக்கிட்டிருந்தேன்!”

கொஞ்சப் பொழுதில் ஏதோ சலசலப்புக் கேட்டது. ஜலஜாவுடன் வந்த அந்தப் போக்கிரியின் தீய போக்கை மறைந்திருந்து கவனித்துக் கொண்டிருந்த தில்லைக் கூத்தன் அவனுக்குப் பிரத்தியட்சமான பாடத்தைத் போதித்துக் கொடுத்துவிட்டான். தமிழரசி செய்யவிருந்த கடமையை அவனே செய்துவிட்டுப் போனான். பாவம்! அந்தப் பைத்தியத்தின் முகம் பழுத்து விட்டது!...

தமிழரசியும் சாவித்திரியும் செம்புதாஸ் தெருவை மறித்து, அரண்மனேக்காரத் தெருவை மிதித்தார்கள். "தீமைகள் மலிகிறபோது, கண்ணன் தோன்றுவாஞம். அப்படித் தோன்றும் தெய்வம்தான் நமக்கு வீரத்தை அளிக்கிறது. பெண் எடுக்க வேண்டிய அவதாரம் ஒன்ரு, இரண்டா?" என்ருள் தமிழரசி.

வீட்டில் தமிழரசியைச் சற்று முன்னதாகத் தேடிப் பார்த்துத் திரும்பியிருக்கிருள் சாவித்திரி. வழியில் தமிழரசியைச் சந்திக்கவும் முடிந்தது.

வீட்டுக்கு அவளே இப்போது அழைத்தாள் தமிழரசி.

இருவரும் நடந்து சென்ற வழியில் பின் தொடர்ந்து வந்த சுசீலா, தமிழரசியை விளித்து, உடனடியாக அவள் தன்னுடன் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டாள்.

பஸ்ஸில் ஸ்ரீமான் சொக்கநாதன் அவர்களேப்பற்றிப் 'பொழிப்புரை' செய்த ஒல்லிப்பாவை அவள் என்று 'இனம்' கண்டு கொண்டாள். சாவித்திரியிடம் வீட்டுச் சாவியைக் கொடுத்தாள். "நீங்க வீட்டிலே போய் இருங்க" என்ருள்.

சாவித்திரி சாவியை அவளிடமே திருப்பிக் கொடுத்தாள். மீண்டும் வந்து அவளே வீட்டில் சந்திப்பதாகச் சொல்லிப் பிரிந்தாள்.

'இந்தப் பெண் சுசீலா என்னே ஏன் அழைக்கிருள்?' என்ற கேள்வியைத் தனக்குள் கேட்டுக் கொண்டே, வேண்டா வெறுப்புடன் சுசீலாவைத் தொடர வேண்டியவள் ஆனுள், தமிழரசி.

## ஆயாள் சந்திப்பு

### பதினேழு

நியாயமான ஆசைகள் கட்டாயம் நிறைவேறியே தீரும் என்பதற்கு நிகராகத்தான் அந்தச் சந்திப்பு வாய்த்தது. சுசீலாவுடன் வேண்டா வெறுப்புடன் சென்ற தமிழரசியின் கண்கள், அவளே மழலேப் பிராயத்தில் சீராட்டிப் பாராட்டி

வளர்த்த ஆயாளைத் தரிசித்தன. அவளுக்கு உண்டான உள்ளக்களிப்பு கரை உடைந்தது. இதயத்தில் மோதி வழிந்த மகிழ்வின் நீர்தான் கண்களுக்குள் 'மடை' மாற்றிப் பாய்ந்திருக்க வேண்டும்.

''என்னைத் தெரியுதா அம்மா?'' என்று நைந்த குரலில் கேட்டாள்; பிய்ந்த பாயில் படுத்திருந்தவள், கஷ்டப்பட்டு எழுந்து உட்கார்ந்தாள் அந்த முதுபெருங் கிழவி. அக் கேள்வி அவளைச் சுட்டிருக்க வேண்டும். ''ஏன் ஆயா அப்படிக் கேட்கிறீங்க? உங்களைத் தெரியாமல் இருக்குமா ஆயா? ரொம்பத் துரும்பாய்ப் போய்ட்டீங்களே!'' என்று கேட்டு விட்டு, அவளது சுர்க்குச்சிக் கைகளைத் தொட்டுத் தடவிக் கொடுத்தாள். இடுக்கு விழுந்து, பார்வையின் பொருள் தப்பிப் பதுங்கிக் கிடந்த கண்கள் சிந்திய கண்ணீரை அவள் துடைத்தாள். அப்பொழுது, அவள் கண்கள் நீரைப் பொழிந்தன. சில துளிகள் தடுமாறி, கிழவியின் முழங்கை களில் சிதறின. ''என்னும்மா இது?'' என்று நாக்குழறக் கேட்டாள்.

''உங்க கண்ணீர் ஆயா?'' என்றாள் தமிழரசி.

'அன்பு தானாகவே உணர்த்தப் படவேண்டும்; அன்புக்கு வேடம் கூடாது. அப்படிப் புனைவடிவம் ஏற்றால், அது அன்பல்ல!' என்பதாகக் கோகலே ஹாலில் 'மாதர் கலைக் கழகம்' ஒன்றின் சார்பாகப் பேசியபோது குறித்த ஒரு கருத்தை உரைத்துப் பார்க்க விழைந்தாள். கிழிந்த பாயின் ஓரம் அவளுக்குக் கருணை காட்டியது.

''இல்லேம்மா, எனக்காக நீ கண்ணீர் சிந்தியிருக்கே! இதுதாம்மா எனக்கு ரொம்பவும் ஆறுதல். என்னை நினைக் கிறதுக்கும் ஒன்றிரண்டு உள்ளங்கள் இந்தப் பயங்கர உலகத் திலே இருக்கு என்கிறதை நினைப்பதுதான் அம்மா எனக்கு நிம்மதி. இதுவும் இல்லாட்டி நான் செத்த இடம் எப்பவோ பூண்டு முளைச்சுப் போயிருக்குமே! இந்தப் பேத்திப் பொண்ணு தான் உன்னைப்பத்தி சமீபத்திலே சொல்லிச்சு. உடனே அது நீயாகத்தான் இருக்க வேணும்னு ஒரு திடம் எனக்கு

உண்டாச்சு. வழியிலே கண்டால் அழைச்சிட்டு வரச்சொல்லி யிருந்தேன்!'' கிழவிக்கு மூச்சு வாங்கியது. இரைப்பு எடுத்தது.

ஹைதர் காலத்திய வீடு அது. அதற்காக ஹைதர் அலி சரித்திரத்தின் முக்கிய ஏடுகளிலிருந்து பிழைத்தெழுந்து அந்த வீட்டுக்குப் 'பாத்தியதை' கொண்டாடச் சட்டம் இடம் தரமுடியாது. வீடு பழசு. அதில் இவர்கள் ஒட்டுக் குடித்தனம். உள்ளே சிதிலமடைந்திருந்த பகுதிகள் கூடுதல். அங்கு யாரோ ஓர் இளம் தம்பதி குடி இருந்தார்கள். அவர் கள் இருவரும் சீவிச் சிக்கெடுத்துச் சிங்காரித்துக் கொண்டு 'காற்று வாங்க'ப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். காற்று வாங்கப் பணமும் எடுத்துச் சென்றிருக்க வேண்டும்.

தமிழரசி எழுந்தாள். ஆயாளுக்குப் பழங்கள் வாங்கிக் கொடுக்க விரும்பினுள்.

அதற்குள் குறிப்பறிந்த சுசீலா ஒயில் சேர்த்து, அவள் குந்தியிருந்த கள்ளிப் பெட்டியை நீக்கி எழுந்தாள். அன்றைக் குப் பஸ்ஸில் பார்த்த அலங்காரத்தில் நூலிழை மாற்றுக் குறையவில்லை. அவளையும் அந்த வீட்டுப் பகுதிச் சூழ்நிலை யையும் மாறிமாறிப் பார்த்தாள் தமிழரசி. அவள் வற்புறுத் தியதன் பேரில், அவளிடம் சில்லறை கொடுத்தனுப்பினுள்.

''அம்மா!'' என்று தமிழரசியைக் கூப்பிட்டாள் ஆயாள்.

''இதோ இருக்கேன்!''

''என் பேத்தி எங்கே, காணோம்?''

''கடை வரைக்கும் போயிருக்கு! வந்திடும்!''

'ம்' என்று பெருமூச்சுக் கழித்தாள் ஆயா.

''காலம்பற உங்க போட்டோவை என் ஆல்பத்திலிருந்து எடுத்துப் பார்க்கிற சந்தர்ப்பம் ஏற்பட்டுச்சு. அப்போதிலி ருந்து உங்களைப் பத்திதான் ஞாபகம்!''

கிழவி பொறுக்கவில்லை.

''அப்படின்னு, இதுக்கு முந்தி இந்த ஆயாளை மறந்திட்டயா தமிழரசி?'' என்று கேட்டுவிட்டாள்.

“ஐயையோ! அப்படிச் சொன்னு, அது தர்மம் ஆகாது. ஆயா. உங்களைச் சதா நினைச்சுக்கிட்டுத்தான் இருப்பேன். ஆனு உங்களை வந்து பார்க்கிறதுக்கு உங்க இருப்பிடம் இப்பத் தானே தெரிஞ்சுது? உண்டு உறங்கிக் கண்ணை மூடுற இந்தப் பொய்யான வாழ்க்கையிலே அன்பும் பாசமும்தானே உண்மை? அந்தப் பாசத்தையும் அன்பையும்தான் எனக்கு வேதமாக மதிக்கப் பழகியிருக்கிறவள் நான். உங்களை நான் மறந்திடுவேனு ஆயா!” என்று குரல் கம்மக் கேட்டாள். “ஆமா, சுசீலா உங்களுக்குச் சொந்தப் பேத்தியா?” என்று தொடர்ந்தாள்.

“சொந்தப் பேத்தியா இல்லாட்டியும் எட்டத்துப் பேத்தி. தெற்கத்திச் சீமையிலே பிறந்தது. அப்பன் ஆத்தா இல்லாத பொண்ணு. பம்பாயிலே இதுமட்டும் வளர்ந்து வாழ்ந்திருக்குது. காலமும் ஓடிடுச்சு. ஆனு, உடம்பு எப்பவும் ஒத்துப்போய் ஓட முடியுமா? அதுக்குச் சீக்கு வந்து தட்டுத் தடுமாறி எப்படியோ என்னைக் கண்டிடுச்சு. அதுகூட பகவான் அனுக்கிரகமாத்தான் இருக்கும். போன மாசம் வரை நான் அதுக்கு நிழலாக இருந்தேன். இப்ப அது ஒரு கம்பனியிலே வேலைக்கு இருக்குது!... அதுக்கு ஜல்தியிலே ஒரு கால்கட்டுப் போட்டுப்புட வேணும்!”

அவளுக்கு அதற்கு மேல் பேசுவதற்குத் திராணி ஊறிஞல்தானே?

செங்காங்கடை பஜாரிலிருந்து மிதந்து வந்த சினிமாப் பாட்டு ஒன்று காதுச் சவ்வுகளைத் தாக்கியது.

சுசீலாவும் தாழம்பூவும் அவள் மனத்தில் ஒன்றுக்கொன்று இணைப்பான விந்தையை அவள் உணர்வு ஏந்தியது.

ஏந்தி வந்த பழங்களையும் ரொட்டியையும் ஏந்திழையிடம் கொடுத்தாள் சுசீலா. சாத்துக்குடிப் பழங்கள் கை மாறின. ஒரு பழத்தை உரித்துச் சுளை உடைத்து கொட்டை நீக்கிக் கிழவியின் வாயில் வைத்தாள். நாளெல்லாம் இப்படியே தொண்டு செய்துகொண்டே இருக்கலாம் போல

ஒரு பிரமையும், நாமெல்லாம் இப்படியே செய்துகொண்டே இருக்க வேண்டுமென்ற ஒரு தவிப்பும் அவளுள் சுழன்றன. "எனக்கு அன்னை இருந்தால்—அப்பா இருந்தால் நான் அவர்களை என் கண்களில் வைத்து இமைகளால் மூடிக் காப்பேன். அதேபோல, அவர்கள் என்னையும் காப்பார்களே!... அத்தகைய பேறு இருதரப்பிலுமே பூஜ்யமாகிப் போனதே!... தெய்வமே!' என்று அவள் மனம் புலம்பும் நேரங்களிலெல்லாம் அவளுக்கு ஒரு பிடிப்பாகத் தோன்றியவள் தலைவியே அல்லவா? 'அன்பு செய்திடல் வேண்டும்' என்று ஆணை பிறப்பித்த மண் இது!

சொக்கநாதன் அவர்களைப் பற்றிச் சுசீலா ஒரு சமயம் பஸ்ஸில் சொன்ன விவரங்களின் உண்மை நிலையை இப்போது அறிய முற்பட்டாள், தமிழரசி. சொக்கநாதனைப் பற்றிய கதையைத் தனக்குத் தன் பாட்டி சொன்னதாகச் சுசீலா தெரிவித்திருந்தாள். அந்தப் பாட்டி இந்த ஆயாளாகத்தான் இருக்கும் போலிருக்கிறது!...

செல்வச் சீமான் சொக்கநாதன் தன் பேரில் அளவு கடந்த பாசமும் அன்பும் அக்கறையும் கொண்டிருப்பதாகச் சமயம் நேரும்போதெல்லாம் இல்லத்தாய் நினைவுபடுத்தி வந்ததை இப்போது தமிழரசி நினைவிற் கொண்டாள். அவள் பூரணமாக அறிந்திருந்த தலைவியின் அன்பைப் போலவே, அவள் பூரணமாக அறிந்திராத சொக்கநாதனின் அன்பும் அவளுக்கு மிகுந்த ஆறுதலைக் கொடுத்தன. தன் பேரிலும் அன்பு சொரிய ஆண்டவனுக்குத் துணையாக மேலும் சில மனங்கள் இப்பரந்த உலகத்திலே இருக்கின்றன என்னும் உண்மையை அவள் நெஞ்சில் வாங்கிச் சிந்தித்த போழ்தில், அவளுக்கு அந்த உண்மையை வாழ்த்தி மகிழ வேண்டுமென்ற ஆசை வந்தது. அந்த உண்மைக்கு உருவம் சமைத்து நின்றவர்களுக்கு மத்தியில் இராணுவ வீரன் மோகன்தாஸ் கம்பீரமாகத் திகழ்ந்தான். மனக்கண் சித்திரித்த அக்காட்சி அவளுக்குக் கனவு போலவும் உணர்வு காட்டியது. கனவின் சுகத்தில் திளைத்தவளாக ஒன்றிரண்டு நிமிஷங்களைக் கடத்தினாள்.

அப்போது, "அம்மா!" என்று கூப்பிட்டாள் ஆயாள். தொண்டை கட்டிவிட்டது.

"இதோ இருக்கேன் ஆயா! பிஸ்கட் சாப்பிடுங்க. இனி நாளைக்குக் காலம்பற பழம் சாப்பிடலாம். இப்போ வேணும்- கூதல் காலம்!" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, தன்னுடைய பிறப்புப் பற்றியும், தன்னுடைய பெற்றோர் களைப் பற்றியும் ஏதாவது கிழவி அறிவாளோ என்கிற விவரத்தைக் கேட்டறிந்து கொள்ளலாமே என்ற தவிப்பு விநாடிக்கு விநாடி மேலோங்கி வந்தது. பரீட்சை முடிவை அறிய, பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ள பத்திரிகையை வைத்துக் கொண்டு பயமும் ஆர்வமும் சூழத் தயங்கி நிற்கும் மாணவியைப் போல அவள் தவிப்பு அடைந்தாள். பாங்கர் சொக்கநாதனைப் பற்றியும் கேட்டுப் பார்த்துவிட வேண் டாமா?

சுசீலா உள்ளே காபி போட்டுக் கொண்டிருந்தாள்.

"ஆயா!"

"சொல்லும்மா!"

"சொக்கநாதன் இருக்கிறாரே, அவரை உங்களுக்குத் தெரியுமா?"

"ஓ... அந்த மனிதரா? தெரியுமே!... மாம்பலத்துச் சீமான் தானேம்மா?..."

"ஆமாம்!"

"நான் சாந்தோம் கஸ்தூரி காந்தி அனாதை இல்லத்திலே வேலைக்கு இருந்தப்ப, அவரைத் தெரிஞ்சுக்கிட்டேன். இல்லத்தை வளர்த்து வருகிறவங்களிலே அவரும் ஒருத்தர். இப்போ எப்படியோ, அந்த நாளையிலே அவரைப் பத்தி நல்ல அபிப்பிராயம் இருந்தது கிடையாதம்மா!... நம்ம மதர் திலகவதி அம்மாகூட அவர்கிட்டே ரொம்பக் கவனமாத் தான் இருப்பாங்க! பணக்காரங்க இருக்காங்களே அம்மா, அவுங்க ஒரு தனி ஜாதி. எப்பவும் ஒதுங்கியேதான் இருப் பாங்க. அந்தச் சாதி நம்மளோட ஒட்டாது. நாமும் அவுங் களோட ஒட்ட முடியாதும்மா!..."

தூரத்துப் பார்வையில் காதில் விழுந்த 'பராபரிச் செய்தி களை முடி அவிழ்த்துப் பார்த்துச் சொன்னாள் ஆயாள். அவ ளுக்கு வெள்ளெழுத்து. தடுமாறினாள்.

அன்னை கஸ்தூரி இல்லத்தலைவி திலகவதி அம்மையாரின் தூண்டுதலால், தன் மனத்தில் அன்புத் தருவாகத் தானே வளர்ந்து நின்ற சொக்கநாதனைச் சாய்ந்துவிடாமல் பார்த்துக் கொண்டாள், தமிழரசி. பிறகு, மறு கேள்விக்கு வந்தாள் அவள்.

இன்னமும், சுசிலா காபித் தயாரிப்பில்தான் இருந் தாள். காபியில் சுவை பட்டாலும் படாவிட்டாலும், அவளது மெல்லிய விரல்களின் வெளுத்த நகக்கண்களில் அப்படிப்பட்டிருந்த நகச்சாயத்தில் அழுக்குப் படாமல் இருக்கவேண்டும், பாருங்கள்!

"ஆயா, நான் பச்சைக் குழந்தையாய் இருந்தது தொட்டு நீங்க என்னை வளர்த்திருக்கீங்க. அப்படித்தானே?"

"நீ பிறந்த முப்பது நாளைக்கெல்லாம் இல்லத்துக்கு வந் திட்டாய். அதிலிருந்து இல்லத்திலேதான் நீ வளர்ந்ததே. சொக்கநாதன் அவர்கள்தான் உன்னைப் பெரிய ஆஸ்பத்திரி லேருந்து எடுத்து வந்து தலைவி திலகவதி அம்மா வசம் கொடுத்தாராம். மதர் உன்கிட்டவே தன் ஒய்வையெல்லாம் கழிச்சாங்க. பச்சை மண் வாடை மாறும வந்த குழந்தை நீதாம்மா!... ஆனதாலே உம்மேலே கூடுதலான பாசம் அம்மாவுக்கு!"

ஆயாவின் வாய்மொழிகளை வாய்மை மொழிகளாகவே அவள் செவிமடுத்தாள். சொக்கநாதன் தன்னை ஆஸ்பத்திரியி லிருந்து கொண்டுவந்த செய்தி அவளுக்கு வியப்புணர்ச்சியை உண்டாக்கி வேடிக்கை காட்டியது. "அப்படின்னு, என்னைப் பெற்றவங்களைப் பத்தி உங்களுக்கு எதுவுமே தெரியாதா?... காற்று வாக்கிலே எதுவுமே காதிலே விழலையா?" என்று பரிதாபமாகக் கேட்டாள், அவள். இதயத்தின் துயரம் கண்களை அணைந்தது.

''உன்னைப் பெற்றவங்கள் விஷயமா எதுவும் எனக்குத் தெரியலே அம்மா! அனாதைன்னு முத்திரை குத்தப்பட்ட தின்னு, அப்புறம் அந்த அனாதையை ஆதரவோட வளர்க்கிற திலேதானே இல்லத்திலே கவலை காட்டுவாங்க! ஒருவேளை, சொக்கநாதத்துக்கு உன்னோட பிறப்புச் சம்பந்தமாய் ஏதானும் தெரிஞ்சிருந்தாத்தான் உண்டு! மதருக்கு அந்த ரகசியம் அநேகமாத் தெரிஞ்சிருக்க நியாயம் இல்லே!'' என்று நிறுத்தினாள். சுவரில் சாய்ந்திருந்த தலையை நகர்த்தினாள். சிணுங்கல் இருமல் சிணுங்கியது.

ஏமாற்றத்தின் வேதனையைத் தமிழரசி ஏற்க வேண்டிய துர்ப்பாக்கியம் வாய்த்தது. ''நீ பிறந்த நேரத்திலே, சொக்கநாதத்தோட கள்ளக் காதலிக்கும் ஒரு பெண்பிள்ளை உன்னை மாதிரி பிறந்திச்சாம். ஆஸ்பத்திரியிலே அதைப் பார்க்கையிலேதான் உன்னையும் அங்கே இருந்து வாங்கி வந்ததாகவும் ஒரு பேச்சு பின்னடி அடிப்பட்டுச்சு. சொக்கநாதன் அப்பாவுக்குப் பயந்த பிள்ளையாய் இருந்துகிட்டே ஒரு அபலைப் பெண்ணை ஏமாத்திக் கெடுத்து, கடைசியிலே அந்தப் பெண்ணை எங்கேயோ வடக்கே அனுப்பிச்சிட்டாராம். பெண்ணை மட்டும் எங்கேயோ ரகசியமாக வளர்க்கச் சொன்னாராம்!... அந்தப் பெண் குழந்தை உசிரோட இருந்திருந்தால், அதுவும் உன்னைப் போல இருக்கும்!... இப்போ அதெல்லாம் நமக்கு வேண்டாத கதை!...'' என்று வலுக்கட்டாயமாகத் தன் பேச்சை முடித்தாள் ஆயாள்.

சுசீலா காபியை 'உண்டாக்கி'க் கொண்டு வந்து விட்டாள். பெரிய சாதனைதான். கடைத்தேங்காய் கிடைத்து வழிப் பிள்ளையாரும் கிடைத்தால், தேங்காயை அதற்கு உடைத்துவிடலாம்!— தமிழரசியின் 'தனிப்பேச்சி'ன்போது அந்தப் பெண் இல்லாமல் இருந்தாளே, அதுவே பெரிய சாதனைதான்! கண்களை மூடிக்கொண்டு காபியை உள்ளே செலுத்தினாள். அடி மண்டி மிச்சம். அதுவே, அரைத் தம்ளர் இருந்தது.

தமிழரசிக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது, சுசீலாவின் காபியைச் சுவைத்தபோது. ஆனால், தன்னுடைய பிறப்பு மர்மமாகவே அமைந்துவிட்டதை நினைத்துப் பார்க்கையில், அதே சிரிப்பு அழுகையாக உருக்காட்டி விடும் போல அச்சுறுத்தியது. 'திருவாளர் சொக்கநாதன் என்னை ஆஸ்பத்திரியிலே எப்படிக் கண்டு பிடித்திருப்பார்?—ஒரு வேளை அவருக்கு என் பிறப்புக் குறித்துத் தடயம் ஏதாவது கிடைத்திருக்கலாமோ? என்னைக் கண்டெடுத்துத் தலைவியிடம் சேர்ப்பித்த அந்தப் பாசத்தில்தான் அவர் என்மீது அக்கறை கொண்டிருக்கிறாரோ? அன்னை திலகவதி அம்மையாருக்கு ஒரு சமயம் என் பிறப்பின் கதை தெரிந்திருந்து, அதை என்னிடம் மறைக்கிறார்களோ? முன்பு இரண்டொரு தருணங்களிலே என் பிறப்புப் பற்றிக் கேட்டபோதெல்லாம் ஒன்றுமே பிடிப்பாகச் சொல்ல வில்லையே அவர்கள்! எனக்குத் தெரியாமல் என் பெற்றோர்கள் எங்கோ ஒரு முடுக்கில் இருக்கத்தான் இருப்பார்களோ? ஈஸ்வரா! என்னை எவ்வளவு அதிர்ஷ்டக்கட்டையாக ஆக்கிவிட்டாய்!'—தத்துவ விசாரமும் தலை வேதனையும் மீண்டும் அவளை ஆட்டிப்படைத்தன. அவள் தன் மூளைக்கு ஒரு மாற்றம் உண்டாக்க வேண்டியவள் ஆனாள். ஆகவே, அவள் சுசீலாவை நோக்கினாள்.

"சுசீலா, உங்களுடைய கல்யாணச் சாப்பாட்டைச் சீக்கிரமே நானும் ஆயாளும் எதிர்பார்க்கிறோம்!" என்றாள் தமிழரசி.

"அது ஆண்டவன் கையில் அல்லவா இருக்கிறது, அக்கா?" என்று ஆண்டவன் தலையில் பாரத்தைப் போட்டாள் சுசீலா.

"அது உங்க கையில்தான் இருக்கிறது சுசீ!" என்று அழுத்தமாகக் கூறினாள் தமிழரசி.

ஒய்யாரக் கொண்டையைச் சிலுப்பிக்கொண்டு சுசீலா சிரித்தாள்!...

தமிழரசி அங்கிருந்து புறப்பட்டாள். பிராட்வேயின் குறுகிய இடை வெளியில் மடங்கினாள். அப்போது, காலையில்

இல்லத் தலைவி தன்னிடம் எதையோ சொல்லத் துடித்து, பின், அடங்கிவிட்ட நிகழ்ச்சியையும் அவள் மீண்டும் நினைத்துக் கொண்டாள்.

'ஒரு வேளை, என் பிறப்புப் பற்றி ஏதாவது சொல்ல நினைத்து, பிறகு நான் வருந்துவேன் என்று மறைத்திருப்பார்களோ?' என்றும் அவள் குறுக்கு வழியில் ஆலோசனை செய்தாள். அவளுடைய உள்ளம் உருகியது. அந்நினைவின் தவிப்பை ஒற்றிக்கொண்டே அவள் நடக்கத் தலைப்பட்டாள்.

மோகன்தாஸை ஒரு ரிக்ஷாவில் வைத்து இழுத்துச் சென்று கொண்டிருந்தான், ஒரு ரிக்ஷாவாலா.

அந்த ரிக்ஷாவாலா, மோகன்தாஸின் தந்தையே தான்!...

## சியால்கோட் பகுதியிலே....!

### பதினெட்டு

வானொலிப் பேச்சுக்குப் பிறகு, தமிழரசிக்கு மோகன் தாஸைச் சந்திக்கும் வாய்ப்பு சூடு ஆறித்தான் ஏற்பட்டது. தன்னை வளர்த்த ஆயாளைக் காணப் புறப்பட்டபோது எடுத்துச்சென்ற மனக் குழப்பத்தை அவளிடமிருந்து பிரிந்த போதும் பத்திரமாகச் சுமந்து திரும்பிக் கொண்டிருந்தாள். வழியில் மோகன்தாஸின் உருவம் கொடிமின்னல்போல் பட்டு விலகியது. 'அவருக்கு உடம்புக்கு முடியாமல் இருக்கக்கண்டு தான், அவரை அவர் தகப்பனாரே ரிக்ஷாவில் இழுத்துச் செல்கிறார் போலிருக்கிறது!...' என்னும் முடிவுக்கு அவள் வர எத்தனம் செய்ததுதான் தாமதம், அவளுடன் வேதனை புதுச் சொந்தம் கொண்டாட வந்துவிட்டது. பழைய சொந்தங்கள் என்று அவள் மனம் அறிய—மனம் உணர எதுவுமே இல்லையென்பதாலா இப்புது உறவு?

மோகன்தாஸின் உருவமும் உள்ளமும் அவளது விழிக் கடையில் நீந்தி விளையாடின. தூக்க மாத்திரைகள் சாப்பிட முனைந்த அந்தப் பைத்தியக்கார நிகழ்ச்சியின்போது, அவன் அடைந்த பதட்டத்தையும் அனுபவித்த துயரத்தை யும் அவள் எப்படி மறப்பாள்?—மறக்கவும் மாட்டாள்! மறக்கக்கூடாது என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட சம்ப வங்கள் உருவாகின்றனவோ?

வீட்டுக்கு வந்து விளக்குகளை எரியச் செய்தாள். ஓரிரு நிமிஷங்கள் ஓய்வு பெற்றுள். உடனே, மோகன்தாஸைக் காணப் புறப்பட்டாள்.—அதற்குள், அங்கே மோகன்தாஸின் உருவம் நிழலாடியது.

அவனை வரவேற்று, அவனது உடல் நலம் பற்றிக் கவலை யுடன் விசாரித்தாள் தமிழரசி.

''நாள் முச்சூடும் கொட்டுற பனியிலேயும் மழையிலேயும் கூட நான் என் தோழர்களுடன் துணை நின்று நம்ம எதிரி களைச் சாடியிருக்கேன். அப்போதெல்லாம் எங்களுக்கு எங்க உடம்பைப் பற்றிச் சிந்தனையே வராது. இப்ப, தண்ணீர் மாற்றம் தடுமனை உண்டாக்கிட்டது. இதைப் பார்த்ததும் எங்கப்பா என்னை ரிக்ஷாவிலே வச்சு டாக்டர் கிட்டே அழைச்சிட்டுப் போயிட்டார். எங்க அப்பா என்ன சொல்லி யும் என் பேச்சைக் காதிலேயே வாங்கிடலே. 'இதிலே என்ன தம்பி வெட்கம்? உன்னை வளர்த்து, ஆளாக்கி, படிக்க வைக்கிறதுக்காக நாங்க பட்ட கஷ்டம் கொஞ்சமா, நஞ்சமா? இதே ரிக்ஷாதானே நமக்கு எப்பவும் படியளந்து வருதுன்னு அப்பாவும் அம்மாவும் எனக்குப் புத்தி சொன் ஞங்க!...'' என்று நிறுத்தினன் மோகன்தாஸ்.

காட்சி மாற்றத்துக்கென்று ஓய்வு ஒதுக்கப்படுவது இயல்பு.

அவன் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

இதற்குள், தமிழரசி தன்னை ஈன்ற தாய் தந்தையைத் தேடி ஆயிரம் தரம் அலைந்து அயர்ந்தாள். 'என்னுடைய

அன்னையும் தந்தையும் எனக்கு இருந்திருந்தால், அவர்களைத் தலையில் வைத்துத் தூக்கிக்கொண்டு ஆடுவேன்!...'

எண்ணம் முற்றுப் பெறவில்லை! ஆயாள் சொன்ன 'ஜோஸ்யம்' ஓடி வந்தது.

"தமிழரசி!"

சிந்தனை கலைந்தது.

"உங்க ரேடியோப் பேச்சைக் கேட்டேன்!" என்று அவன் ஆரம்பித்தான்.

'மனம் ஒன்றிவிட்ட நிலையிலே, இம்மாதிரியான பாராட்டுப் பரிமாறல் தேவையல்ல!' என்று அவள் 'லஜ்ஜை' அடைந்தாள். ஆகவே, அவள் 'சரிங்க!' என்று பேச்சை முடித்துக்கொள்ளச் சிந்தை செய்தாள்.

ஆனால், அவனோ அப்போதுதான் தன் ரசிப்புத்தன்மையை விண்டுரைக்கத் தொடங்கியிருந்தான்: "உங்க பேச்சு பெண்களைப் பற்றி இருந்தாலும், எங்களுக்கும் ரொம்ப உபயோகமானது. ஆணும் பெண்ணும் அன்பால் ஒன்றி இணைஞ்சு, அறத்தால் இன்ப வாழ்க்கை நடத்தி, கடமையாலே அவங்க ரெண்டு பேரும் லட்சிய சித்தி பெற்று வாழ வேண்டிய தர்மத்தையும் பண்பாட்டையும் விநயமாகவும் விவேகமாகவும் சொல்லியிருந்தது உருக்கமாயிருந்திச்சு. உண்மை எப்போதும் உருக்கமானதுதான்!... உண்மை கசக்குமென்று சொல்லுவாங்க. எனக்கு இனிச்சுது. பிறப்பு என்று வந்தபின்னே அதுக்கு ஒரு மகிமையை உண்டாக்க வேண்டியது நம்ம கடமை. இது ஆணுக்கும் பொது; பெண்ணுக்கும் பொது. உள்ளத்தைத் தூங்கப் பண்ணி விட்டு, உடம்புக்கு உணவு கொடுத்துப் போஷித்துக் கடைசியிலே அதையும் தூங்கச்செய்யறதிலே என்ன நியாயம் இருக்கமுடியும்? தார்மிகக் குறிக்கோள் கொண்ட மனசு ஒத்த ஆணும் பெண்ணும் தம்பதியானால், அவங்களோட வாழ்வின் வளத்துக்கு ஈடேது? இணை ஏது?... சீதை, பாஞ்சாலி,

சாவித்திரி, நளாயினி, கண்ணகி போன்ற பேர் ஒவ்வொன் றிலேயும் ஒவ்வொரு உலகம் இருக்கிற விந்தையையும் அழகாகச் சொன்னீங்க. பாட்டு வரிதான் கொஞ்சம் கூடுதலாயிருந்தது. நீங்க தமிழ் ஆசிரியை. அந்த ஞானம் கூடுதலாய் வராமலிருந்தால், அது யதார்த்தமாயிருந் திருக்காது. எதுவும் இயற்கைக்குப் பொருந்தியிருந்தால் தானே நல்லது? அப்பத்தான் உலக சம்மதமும் கிடைக்கும்!... வாஸ்தவம்தான்! ஆத்ம பலத்தை ஒரு காப்புக் கவச மாகவும், ஆத்ம நேயத்தை ஒரு பண்பாட்டு அன்பாகவும், ஆத்ம நிவேதனத்தை ஒரு சத்திய தர்மமாகவும் பயிலும் தியாகம் கோபுர தீபமாகிறது—நீங்க சொன்ன இந்த மூன்று வாழ்க்கைத் தத்துவங்களும் சிருஷ்டியின் முப்பெரும் தத்துவங்களைப்போல எனக்குத் தோணுச்சு. உங்க பேச்சிலே உங்க மனவேள்வியும், உங்க இலட்சியமும், உங்க கனவும் அசலாகப் புரிஞ்சுது!''

அவள் பேச்சுக்கு விமர்சனம் செய்ய எண்ணி, அவனே ஒரு பேச்சு நிகழ்த்திவிட்டான். அவன் மொழிந்த ஆதரவான போற்றுதல்கள் அவளுக்கு எவ்வளவோ சக்தியைப் பொழிந்தன. 'என் மனக்கனவுக்கு அனுசரணையாக இவரது சிந்தனையின் மனமும் பக்குவம் அடைந்து வருகிறது போலும்!...'

விளக்கின் சுடரொளியில் அவன் அவளை ஊடுருவிப் பார்த்தான். இப்படி அவன் எப்போதும் பார்த்ததில்லை. ஒரு 'புதிய பார்வை!'— இவ்வுண்மையை அவள் உணர்ந் தாள். உடனே, அவள் வெட்கத்தை உணர்ந்தாள்! அன்பு மேவச் சிரித்தாள். கள்ள விழிப் பார்வைக்குப் பாங்கான கள்ளக் களிப்பாக இருக்கலாம்.

பற்றுக்கோடுகள் இரண்டும் விடை பெற்றன.

அவனது உள்ளன்பு மட்டும் அங்கே தங்கியது.

ஓடம் போகும்; கரை தங்கிவிடும்.

பின்புறம் இருந்த மாதா கோயில் மணி ஏழு முறை ஒலித்து ஓய்ந்தது.

தெய்வத்தை ஒரு நாளைக்கு ஆயிரம் தடவை நினைப்பது போல, தமிழரசி ஆயிரம் தடவை மோகன்தாஸைப் பற்றி நினைத்தாள்.

ஆண்டவன் காட்டும் அமைதியை மோகன்தாசும் காட்டத் தவறவில்லை.

அப்போது, மீண்டும் அவள் கழிந்த நிகழ்ச்சி ஒன்றில் போய் நின்றாள்!

அவனைச் சந்தித்த மூன்றாவது தினத்தில் அவன் சொன்ன அந்தப் பயங்கர நிகழ்ச்சியை அவள் மறுபடியும் சித்தத்தில் தேக்கினாள்.

அந்தச் சம்பவம், அவனது வீரத்திற்குக் கிட்டிய விழுப் புண்ணின் கதை அது.

“இந்தச் செப்டம்பர் மாதம் பத்தாம் தேதி; காலை வேளை. இந்தியத் தரைப்படையின் கானேடியர் அணி ஒண்ணு சியால்கோட் பகுதியிலே பிக்கிவிந்—கேம்ரான் சாலையிலேயே சீமா என்கிற ஒரு கிராமத்தண்டை ஒரு நெற்றிப் பொட்டான பகுதியை வசப்படுத்தித் தன்கிட்டே வச்சுக்கிட்டிருந்திச்சு. அந்தப் பக்கத்தைப் பகைவர்களுககு விட்டுக் கொடுக்கிற அளவுக்கு ஏமாந்திட்டால், அப்புறம் இவ்வளவு தொலை பாடுபட்டதெல்லாம் சீர்குலைந்து போயிடுமே!

“இந்த நிலைமையிலேதான், பாகிஸ்தானிகள் பாட்டன் டாங்கு அணியுடன் அந்தப் பகுதியைத் தாக்கினாங்க!... பீரங்கித் தாக்குதலினாலே அவங்க சம்பம் சாயலே. ஆனதாலே, அவங்க ‘பாட்டன்’ வந்தான், ஒசிப்பாட்டன்! எதிராளிகளின் டாங்குகள் நம்ம முன்னணியைத் துளைத்துக் கொண்டு முன்னேறின.

“அந்தச் சமயத்திலேதான், எங்களோட பீரங்கி அணிக்கு மதிப்புக்குரிய ஹவில்தார் அப்துல் ஹமீது தலைமை தாங்கினார். நிலைமை மோசமாயிட்டதை உணர்ந்த அவர், பீரங்கி பொருத்தப்பட்ட தமது ஜீப் வண்டியிலே அவர்

ஒருவராகவே பகைவர் கூட்டத்துக்குப் பக்கவாட்டிலே செலுத்திச் சென்றார். அவரைத் தொடர்ந்து நானும் என் சகாக்களும் பின்னாலே தனியாப் போனோம்!

"எதிரிகளின் பீரங்கித் தாக்குதலும், டாங்குத் தாக்குதலாலும் கடுமை ஆச்சு. அதையெல்லாம் பொருட்படுத்தாமல், பகைவருடைய முதல் டாங்கியைத் தம்முடைய பீரங்கியால் அபாரமாகச் சுட்டு வீழ்த்தினார் அப்துல் ஹமீது. அந்தச் சூட்டின் துடிப்போடவே, எங்க அணி புதிய நிலை ஒண்ணை அடைஞ்சுது. எதிராளிகளின் இன்னொரு டாங்கியையும் திக்கிரையாக்கினார் அவர். இதற்குள்ளே, விரோதிகளின் டாங்குகளிலே இருந்த துருப்புகள் எங்கள் ஹவில்தார் இருந்த இடத்தைக் கண்டுட்டாங்க! உடனே அவங்க எங்க டிவிஷனை நோக்கிச் சுட ஆரம்பிச்சாங்க. அப்துல் ஹமீதின் ஜீப்பை நோக்கி எந்திரத் துப்பாக்கியாலே கடுமையாச் சுடத் தொடங்கினாங்க. அப்பவும் அவர் மனம் தளரலே! இன்னொரு டாங்கியைச் சேதப்படுத்தினார்! காண்டீபனுக்குக் கண்ணன் போதிச்ச அந்த அஞ்சாமை, நெஞ்சு பலம், கடவுள் பக்தி போன்ற நம்பிக்கைகள் எப்போதும் போல அப்போதும் எங்களுக்குச் சமய சஞ்சீவியாய் வலுவூட்டின; நாங்க தைரியமாப் போராடினோம்! இதயமற்ற வெறியர்களைக் காடு மேடாக்கி அலைக்கழித்தோம்! 'போலோ பாரத் மாதா—கீ ஜேய்!' என்ற ஆர்வக் குரல்களை விண்முட்ட எழுப்பி, நம்ம எதிரிகளை மண்முட்ட அடிச்சோம்!... எங்களுடைய வல்லமையைக் கண்டு பொசுங்கின டாங்கிகள். அந்தப் பொறாமைப் பாவிகள் செலுத்திய பீரங்கிக் குண்டு ஒண்ணு நேரடியாய் எங்களைத் தாக்கிச்சு.

"அவ்வளவுதான் தெரியும்!

"திரும்ப நான் எங்க ராணுவ முகாம் ஆஸ்பத்திரியிலே தான் கண்களைத் திறந்து பார்த்தேன். பகைவரின் பீரங்கிக் குண்டுக்கு மதிப்பிற்குரிய எங்கள் ஹவில்தார் அப்துல் ஹமீது உயிர்ப்பலியான சோக வரலாறு எனக்குத் தெரிஞ்சது. எங்க அணியைச் சேர்ந்த பதினாறு பேர்களிலே மேஜரைச் சேர்த்து

இரண்டு பேர் உயிர் துறந்தாங்க! மலேயாளத்துக்காரர் ஒருத்தருக்குக் கண் ரெண்டும் போச்சு. இன்னொருத்தர் சிங். அவருக்குக் கை ரெண்டும் போச்சு. என்னாலே இந்தக் கால்களை மட்டும்தான் என் தாய்க்காக — தாய் மண்ணுக்காகத் தியாகம் செய்ய முடிஞ்சிது. நம்ம தலைவருங்களும், ராணுவ மேலதிகாரிகளும் எங்களைப் பாராட்டி ஆறுதல் சொல்லிக்கிட்டே இருந்தாங்க...! நான் பிறந்த பொன்னாட்டுக்காக, எங்க ஹவில்தாரைப் போல நானும் உயிர்த் தியாகம் செய்யும் பேறு எனக்குக் கிடைச்சிருந்தா, அது எனக்கும் என் தமிழ் மக்களுக்கும் பெருமை தந்திருக்கும்!...எங்க ஹவில்தார் பூசைக்குரிய தியாக சீலர்!..."

அவன் அத்துடன் தன் பேச்சை நிறுத்திக் கொண்டான்; விழிகளை மூடியபடி வீற்றிருந்தான். மெய்ம்மறந்த நிலையில் அவன் காணப்பட்டான். தன்னுடைய நிர்மலமான கண்ணீரை மாலையாக்கி, அந்தத் தியாகி ஹவில்தார் அப்துல் ஹமீதுக்குக் காணிக்கை செலுத்திக் கொண்டிருந்தான் மோகன்தாஸ்.

கடந்த கால நினைவோட்டங்களினின்றும் சுவாதீனமாக விடுபட்ட தமிழரசி இப்போது தன் வயப்பட்டாள். இமை அரும்புகள் சில சிதறின. அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

மேஜைமீது இருந்த வெண்மை மிகுந்த கடிதத்தாள்கள் அவளது பார்வைக்கு விருந்து வைத்தன. கடிதத்தாள்களின் மீது பேனா இருந்தது. அவள் சிந்தனை வசப்பட்டவளாக எழுந்து அவ்வறைக்குள்ளே குறுக்கும் நெடுக்குமாய் நடந்தாள். அவளுடன் அவளது சிந்தனைகளும் நடைபோட்டன. அவள் மனம் எழுச்சி கொண்டது. நடந்தவள் ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்தவள் போன்று ஆசனத்தில் வந்து அமர்ந்தாள். ஒருமுறை தன்னுடைய எழிலார் மதர் விழிகளை மூடிக் கொண்டாள். அவ்விழி விரிப்பில், புன்னகையும் புது நிலவுமாக மோகன்தாஸ் காட்சியளித்துக் கொண்டிருக்கக் கண்டாள், அவள். அவள் நெஞ்சத்தில் இன்பமும் ஆறுதலும்

பூத்தன. தாய் நாட்டு வீரன் மோகன்தாஸைச் சந்தித்து, தான் அவன் பேரில் கொண்டுள்ள பரிசுத்தமான காதலை வெளியிட்டுவிடத் துடித்துக் கொண்டிருந்தாள். அதற்குரிய புனிதமான வேளைக்காகக் காத்திருந்தாள்.

'என் மனத்தின் சுந்தரமான கனவுகளை அன்பர் மோகன்தாஸ் அவர்களிடம் எடுத்துரைக்கக் கடிதமே ஒரு நல்ல சாதனமாகும். அதுவே, சிலாக்கியமான வழியும்கூட. நேருக்கு நேராக நான் அவரிடம் என் காதலை வெளிப்படுத்துவதென்பது சிரமமான காரியமே! ஆகவே, கடிதத்தின் மூலமாகவே என் காதலை வெளிப்படுத்திவிட வேண்டும்!' என்று தீர்மானித்தாள். கடிதத்தாள்களை எடுத்து வரிசைப்படுத்திக் கொண்டு அமர்ந்தாள். பிள்ளையார் சுழி இட்டாள். கடந்த சில நாட்களாக அவள் தனக்குள்ளாகவே சிந்தித்து வைத்திருந்த வாசகங்கள் சிலவற்றை மீண்டும் மனத்தில் வாங்கிக் கொண்டாள். புனிதமானதொரு கடமையைச் செய்யப் போகும் பூரிப்புடன் அவள் பேனாவை இயக்கத் தொடங்கினாள். 'எனது மதிப்புக்கும் அன்புக்கும் உரிய திருவாளர் மோகன்தாஸ் அவர்கட்கு' என்று ஒரே வேகத்தில் எழுதி முடித்ததும், அவள் பேனா நின்றுவிட்டது. மோகன்தாஸின் பெயரை எடுத்த எடுப்பிலேயே குறித்து விளிப்பதை அவ்வளவு விவேகமான காரியமாக அவள் கருதவில்லை. ஆகவே, எழுதிய வரிகளை அடித்துக் கிறுக்கினாள். அந்தத் தாளைக் கசக்கிப் போட்டுவிட்டு அடுத்த தாளை வசப்படுத்தினாள்.

அடுத்த தாளின் தலைப்பில் அவள் எழுதத் தொடங்கினாள்.

'எனது மதிப்புக்கும் அன்புக்கும் உரிய தங்கட்கு' என்று, எழுதி முடித்திட்டாள். அவ்வரிகளிலே மன ஒட்டுறவு பின்னிக் கிடப்பதாகவே அவள் உணரலானாள். மேற்கொண்டு எழுதவேண்டிய விவரங்களை அவள் மனத்திற்குள்ளாகவே கோவைப் படுத்திக்கொண்டாள்:

அப்போது, ''தமிழரசி!'' என்று கூப்பிட்டபடி, சாவித்திரி அங்கு வந்தாள்.

தமிழரசி பேனாவை மூடி அக்கடிதத்தின் மீது வைத்து விட்டு, சாவித்திரியை வரவேற்றாள்.

நாற்காலியில் அமர்ந்த சாவித்திரி, மேஜை மீதிருந்த கடிதத்தைப் பார்த்தாள். ''லெட்டர் எழுதுறீங்களா, டீச்சர்?'' என்று கேட்டாள்.

தமிழரசி புன்னகை பூத்தவாறு, ''ஆமாம்'' என்று பதில் மொழிந்தாள். பிறகு, அவளை நோக்கிய வண்ணம், ''நான் என் காதலருக்குக் கடிதம் எழுத ஆரம்பித்தேன்'' என்றாள்.

சாவித்திரிக்கு வியப்பு மேலிட்டது. பேசாமல், தமிழரசியை இமைக்காமல், அவள் பார்த்தாள்.

''என்ன அப்படி விழிக்கிறீர்கள், டீச்சர்? நான் ராணுவ வீரர் மோகன்தாஸ் அவர்களைக் காதலிக்கிறேன். என் மனத்தைத் திறந்துகாட்ட இக்கடிதம்தான் எனக்குக் கை கொடுக்க வேண்டும்'' என்று கூறினாள் தமிழரசி.

மேலும், அதிசயத்தின் உருவம் ஆனாள் சாவித்திரி. ''மெய்யாகவா தமிழரசி?'' என்று சற்றுப் பலமான தொனியி லேயே கேட்டு விட்டாள்.

''நிஜமாகவே நீங்கள் ஓர் அதிசயப் பெண்தான்!''— இதற்குமேல் சாவித்திரியால் எதுவுமே பேச முடியவில்லை. அவளது சிவப்புக் கன்னங்களின் கீழ்ப்புறத்தில் சில நீர்த்துளி கள் தங்கின.

தமிழரசி கம்பீரமான பெருமை கொண்டு சிரித்தாள். சாவித்திரி தன்னுடைய மனப் போராட்டத்தைப் பற்றி முன்னர் சொல்லிய சம்பவத்தையும் அவள் நினைவு கூர்ந்தாள். 'சாவித்திரி தன் மனப்போராட்டத்தில் எப்படிப்பட்ட முடிவை நிர்ணயித்து வைத்திருக்கிறாளோ, தெரிய வில்லையே!'

மௌனமாக விநாடிகள் சில கழிந்தன.

தலைமை ஆசிரியையைச் சந்தித்ததாகவும், குழந்தைகள் தின விழாவுக்கு வீரர் மோகன்தாஸ் அவர்களையே தலைமை தாங்குவதற்கு ஏற்பாடு செய்யும்படியும் சொன்ன தகவலை வெளியிட்டாள் ஆசிரியை சாவித்திரி.

அதன் பேரில், சாவித்திரியை அழைத்துக் கொண்டு சென்றாள் தமிழரசி. மோகன்தாஸிடம் தன் சிநேகிதியை அறிமுகப்படுத்தினாள். பிறகு, விவரத்தை வெளியிட்டாள்.

மோகன்தாஸ் அப்பணியை மனப்பூர்வமான பெருமை துலங்க ஏற்றுக்கொண்டான். இருவரும் திரும்பினார்கள்.

தமிழரசியிடம் விடை பெற்றபோது, "டீச்சர் உங்களைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன்" என்று சொல்லிப் பூங்கரங்களைக் குவித்தாள் சாவித்திரி.

## 'ஜெய் ஜவான்!'

### பத்தொன்பது

நேருஜியின் இலட்சியக் கனவான குழந்தைகளின் அன்புமயமான உலகம் அங்கே உருவாகியிருந்தது.

காலை இளம்பரிதியின் மென்மை மிகுந்த கதிர்கள் பாங்குடன் விளையாடிக் கொண்டிருந்தன.

சாரதா பெண்கள் உயர்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானத்தின் மையத்தில் அமைக்கப்பட்டிருந்த அழகான பந்தலில் நேரு பிரானின் பெரிய படம் மலர்மாலை திகழக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. தலைமை ஆசிரியை சரோஜினி மூர்த்தியின் மேற்பார்வையில் ஏனைய ஆசிரியைகளும் அழகு நிறைந்த அந்தப் பந்தலுக்கு வெளிப்புறம் நின்று கொண்டிருந்தார்கள்.

பள்ளியின் நிறுவனர் திருவாளர் சொக்கநாதன் ஊரில் இல்லை. ஆகவே, அவர் இவ்விழாவில் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.

குழந்தைகளின் தாய் தந்தையர் இணை சேர்ந்து குழுமிய வாறு இருந்தனர்.

புதிய மகிழ்வின் பின்னலுடன் வாசற்புறத்திலேயே மனம் பதித்துக் காணப்பட்டாள் தமிழரசி. அவளை அண்டி வந்தாள் சாவித்திரி. தமிழரசியின் பொட்டும் பூவும் சாவித் திரியின் திருஷ்டியில் திசைமாறிச் சுழன்று கொண்டிருந்தன. அவர்கள் இருவரும் நெருங்கி நின்றார்களே தவிர, பேச் சொன்றும் அவர்களிடையே எழவில்லை.

'மன்னும் இமயமலை எங்கள் மலையே!' என்று 'கோரஸ்' பாடிக் கொண்டிருந்தார்கள் சிறுமிகள்.

பாடல் முடிந்ததும் இசைத்தட்டு போடப்பட்டது. அந்த இசைத்தட்டு பாடவில்லை. பேசத் தொடங்கியது. காங்கிரஸ் தலைவரின் பேச்சு அது. 'நம்முடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றால், நாம் நம்முடைய சொந்தக் கால்களிலேயே நிற்கவேண்டும்!' என்ற சொற் களில் எவ்வளவு அழுத்தம் பதித்துப் பேசிவிட்டார்!

வெகு அமைதியுடன் அப்பேச்சைக் கேட்டார்கள்.

இப்பேச்சைக் காந்தி ஜயந்தி அன்று நேரில் கேட்ட தைக் குறிப்பிட்டாள் தமிழரசி. சாவித்திரியும் கேட்டதாகச் சொன்னாள்.

அப்போது, குமாரி ஜலஜா அவர்கள் இருவரையும் ஜாடையாகப் பார்த்துவிட்டு, வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

"உங்ககிட்டே வம்புக்கு வந்து வாங்கிக் கட்டிக்கொண்ட ஜலஜாவின் லவரைப் பற்றி நம்ம ஹெட்மிஸ்ட்ரஸ் காதுக் குக்கூட எட்டி விட்டிருக்கிறது, டீச்சர்!" என்றாள் சாவித்திரி. அவள் தன்னுடைய வெறும் நெற்றியைத் தடவிக்கொண்டே சொன்னாள்.

"அப்படியா?" என்ற மட்டுடன் பேச்சைத் துண்டித் தாள் தமிழரசி.

''நீங்க மிஸ்டர் மோகன்தாஸ் அவர்களை 'லவ்' பண்ணுற உண்மையை அவள் அறிய நேர்ந்தால், அவள் அதிசயப்பட்டுப் போவாளாக்கும்!... அவள் உருவத்தோடு பழகிறவள்தானே, பாவம்!'' என்று மீண்டும் குறுக்கிட்டாள் சாவித்திரி.

தமிழரசி பொருள் புன்னகையுடன் நிறுத்திக் கொண்டாள்.

சுற்று மதிலின் வாசலைக் கடந்து வந்தது டாக்ஸி.

''அதோ, உங்க லவர் வந்து விட்டார், டீச்சர்!'' என்று பெருமையுடன் தெரிவித்தாள் சாவித்திரி.

''அவர் நம்ம நாட்டின் தியாகி டீச்சர்!'' என்று சொல்லிக்கொண்டே விரைந்தாள் தமிழரசி.

தலைமை ஆசிரியை முன் சென்று வீரர் மோகன்தாஸை வணங்கி வரவேற்றாள்.

தமிழரசியும் வணக்கம் சொன்னாள்.

கைப்பிடிகளின் துணையுடன் நடந்து வந்தான் வீரமகன் மோகன்தாஸ்.

ஜலஜா தனக்குத் துணையாக ஆசிரியை ஒருத்தியைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டு நகைத்ததைத் தமிழரசி காணத் தவறவில்லை!......

மோகன்தாஸின் கழுத்தில் பெரிய மாலை ஒன்றை அணிவித்தாள் சிறுமி முத்தழகி.

''ஜேய் ஜவான்!'' கோஷங்கள் முழங்கின.

உணர்ச்சிப் பெருக்குடன் தோன்றினான் மோகன்தாஸ். அவன் ஊன்று கோல்களைச் சார்ந்து நின்றபடி, ஆசிய ஜோதிக்குக் கரம் குவித்து அஞ்சலி செய்தான். விழிகளைக் கண்ணீர் மறைத்தது. துடைத்துக் கொண்டான். ''நேருஜி நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார். அதற்கு அத்தாட்சியாக இதோ, குழந்தைகளின் உலகம் உருப்பெற்றிருக்

கின்றது!'' என்று அற்புதமாக முன்னுரை அமைத்துக் கொண்டு அவன் தன்னுடைய தலைமை உரையை நிகழ்த்தினன். பாரத ரத்தினத்தின் இலட்சியங்களைச் சொல்லி முடித்ததும், நாட்டின் தற்போதைய நிலையைப் பற்றியும் நம் தாய்நாட்டு மண்ணுக்காக நாட்டுமக்கள் ஆற்றவேண்டிய கடமைகள் பற்றியும் எடுத்துரைத்தான். போர் முனையில் எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்த நம் வீரத்திலகங்களையும் அவன் நினைவூட்டினன். "வீரம் போற்றப்படும் போது, வீரம் வளர்கிறது; வாழ்கிறது; புத்துயிர் எடுக்கிறது! இவ்வுண்மைக்கு உங்கள் அனைவரது அன்பே எடுத்துக் காட்டாகும். தாய் மண்ணுக்கென நான் என்னுலியன்ற சிறுபணி புரிந்தேன். அது என் கடமை! அதற்கென, நீங்கள் எல்லோரும் உங்கள் அன்பைச் சொரிந்தீர்கள். அது உங்கள் கடமை! உங்கள் அனைவரது அன்பும் நல்லெண்ணமும் பொற்புடையவை. தலை வணங்குகிறேன், நான்!..." என்று பேச்சினை நிறைவு படுத்தினன்.

கூட்டம் மெய்ம்மறந்து ரசித்து, மேனி சிலிர்த்துக் கையொலி எழுப்பியது.

மோகன்தாஸ் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு டாக்ஸியில் திரும்பினன். தமிழரசி பெருமையின் கம்பீரமான லயிப்புடன் அவனை வழியனுப்பி வைத்தாள். அவள் அங்கிருந்து திரும்பிய போது, அவளையும் அறியாமல் புதிய தெம்பும் புதிய களிப்பும் ஊறின.

"நீங்க பாக்கியசாலி தமிழரசி!'' என்ற சாவித்திரியின் பாராட்டுரையின் துணை கொண்டு தமிழரசி வீட்டை அடைந்தாள்.

அவள் பார்வையில் அன்று எழுதத் தொடங்கியிருந்த கடிதம் அரை குறையாக இருப்பதைக் கவனித்தாள். அப்போதைய உணவுப் பிரச்னைக்கு ஒரு வழியாகத் தீர்வு கண்டபின், மீண்டும் அக்கடிதத்தைப் பூர்த்தி செய்ய விரும்பினுள். பேனு ஓடி நின்றது.

மோகன்தாஸிடம் சேர்ப்பிக்கப் படுவதற்கென்று முதலில் நகல் ஒன்றைத் தயாரித்தாள். எழுதியதைத் திரும்பப் படித்த போது, அவளுக்கு அக்கடிதம் நிறைவுகாட்டவில்லை. வார்த்தைகள் சரியாக விழவில்லையோ என்று அவள் பயந்தாள். அந்தக் கடுதாசியைக் கசக்கிப் போட்டாள். வார்த்தைகளைக் கசக்கிப் போட முடியவில்லை. மீண்டும் படித்துப் பார்த்தாள்.

"...உங்கள் தியாகத்தை வாழ்த்த வேண்டியது என் கடமை. நாட்டுக்காகத் தியாகம் செய்த தங்களுக்கு நான் என்னையே காணிக்கை வைக்கத் துணிந்துவிட்டேன். தங்களுக்குக் கிடைத்திருக்கிற புகழிலே—பெருமையிலே எனக்கும் பங்கு தாருங்கள்!... என்னுடைய இந்த நெஞ்சுரம் உங்களுக்கு அதிசயமாகத் தோன்றுகிறதா? எதுவும் இயற்கைக்குப் பொருந்தியிருந்தால்தான், அதில் உண்மைத் தன்மையும் இருக்க முடியும்? அப்போதுதான் உலக சம்மதமும் கிடைக்கும் என்று நீங்கள் பொதுவாகத் தங்கள் கருத்தை வெளியிட்டீர்கள். நான் தங்களை நேசிப்பது இயற்கையோடு ஒட்டிய மனித இயல்புதான். நான் உங்களைத் திருமணம் செய்து கொண்டபின், நீங்கள் உங்கள் கால்களை இழந்திருந்தால் அப்போது மட்டும் நான் தங்களை இழந்துவிட ஒப்புவேனா? மாட்டேனே!... ஒரு நாளும் மாட்டேன்! எனக்கு என் மனம் தான் தெய்வம்! என்னுடைய வாழ்வுக்கு என்னுடைய கடமைதான் சாட்சி! எனக்கு நான்தான் வழிகாட்டி! நான் பிறரைப் பற்றிக் கவலைப்பட விரும்பாதவள்!... என்னைப் பற்றிப் பிறர் கவலைப்படவும், கவலைப்படுவதையும் நான் கிஞ்சித்தும் விரும்பாதவள். என் கடமையில் என் கடமைப் பண்பும் மனிதப் பண்பாடும் கலந்திருக்கின்றன. என்னுடைய இக்கடமைக்குக் கருணை, தர்மம், தியாகம் போன்ற சொற்களைப் பொருள்கூற அழைக்காதீர்கள்...!"

அடுத்த தடவையாகவும் அவள் தன் கடிதத்தின் நகலை நெஞ்சு செலுத்தி உன்னிப்புடன் படித்துப் பார்த்தாள். அதில் தன்னுடைய இதயத்தின் மூலத்தைப் பார்க்க முடிய

வில்லை; தர்க்க வாதத்தைத்தான் அவள் படித்தாள். சொல்லிக் காட்டியவரையில் அதில் நியாய வாதம்தான் பேசியது. ஆனால், அதையே மடக்கிப் பிடித்து அவன் விபரீதமாக அர்த்தம் எடுத்துக் கொண்டால்...? தயங்கினாள். முற்றுப் பெறாத வினாக் குறிக்கும், விடை கிட்டாத ஆச்சரியக் குறிக்கும் இடையே தமிழரசி ஒரு முழு இரவை ஒரு முழுப் பகலாக்கிக் கொண்டாள். ஊதுவத்தியும் மெழுகுவர்த்தியும் அவளுக்குத் துணை ஆயின. மனத்தை ஒரு நிலைப்படுத்திக் கொண்டு நிமிஷங்கள் சிலவற்றைச் செலவு செய்தாள். பூவிலுள்ள நாற்றமாக அவளது உள் மனத்தின் அடித் தளத்தில் இறைமை கந்தம் பரப்பிக் கொண்டிருந்ததை அவள் அறிவு உணர்ந்தது. அவள் தன் மனத்துடன் ரகசியம் பேசுவதற்குச் செம்மையான நேரம் அது.

'நான் ராணுவ வீரர் மோகன்தாஸை நேசிக்கிறேன்!— ஆம்; உண்மை. நான் அவரைக் காதலிக்கிறேன். மனம் கூடுவிட்டுக் கூடு பாய்ந்த பரிவர்த்தனையில் கிடைத்த முடிவு இது. நான் அவர்மீது அன்பு கொண்டிருக்கிறேன்!— ஆம்; உண்மை!... அதேபோல, அவரும் என்பால் அன்பு பாராட்டிக்கொண்டுதான் வருகிறார். அதுவும் மெய்தான்!... சரி!...

'நான் அவரைக் காதலிப்பதில் உள்ள லட்சியம் என்ன?... அவர் ஒரு தேசத்தியாகி. அந்தத் தியாகத்தைப் போற்ற வேண்டும்; அந்தத் தியாகத்துக்கு நன்றி சொல்ல வேண்டும் என்ற கடமைதான் என்னை அவர் பக்கம் கணத்துக்குக் கணம் அழைத்துச் செல்கிறது. அவரை முதன் முதலாகச் சந்தித்தபோது, நான் அவருக்கு மண்ணில் மார்பு பதித்து வணங்கி, தெய்வத்திற்குப் போட்டிருந்த மாலையை அவருக்குப் போடவில்லையா?... நம்மையும் அறியாமலே நம்முன் சில சங்கற்பங்கள் கருவுற்று வளர்ந்து விடுவதில்லையா?...

'நானும் அன்பர் அம்பலவாணனும் நண்பர்களாகப் பழகினோம். ஆனால், அவரோ என் நட்பைக் காதலாக

உருமாற்றிக்கொண்டு என்னை மணக்க முன் வந்தார். எடுத்த எடுப்பில் மனம் சற்றே சபலம் கொண்டது. மானுடத்தின் ஆசாபாசங்களின் மனவிகாரங்களுக்கு நானும் சற்றே ஆளானேன். எல்லாம் ஒரு நொடிதான்! நொடியில் இறங்கு முன் தப்பித்துக் கொள்ளும் ரேக்ளாவைப் போல எனனை என் மனம் கட்டுப்படுத்தியும் விட்டது. அவரது அன்பு தூய்மையானது. ஆனாலும், சூழல்கள், அவரது அன்பை நெருப்பாகக் காட்டி பயமுறுத்தின! நானும் அவரும் தம்பதியானால், அது செயற்கையாக உலகத்தின் கண்களுக்குப் படும் என்று ஒதுங்கி விட்டேன்!... 'ஆம்; அதுவும் வாஸ்தவமே! இப்போது நான் அன்பர் மோகன்தாஸின் பேரில் நேசம் பூண்டொழுகுகிறேன். அதை ஒத்து அவரும் என்மீது நேசம் பாராட்டவே செய்வார். அவரது உள்ளார்ந்த அன்பும் பிரியமும் அவரது நேயத்தை விளக்கவில்லையா? சரி!... தியாகத்துக்கு—அதாவது, அவர் தாய் மண்ணுக்குச் செய்த தியாகத்துக்கு என்னையே தியாகம் செய்வதாக நான் எழுதியிருக்கிறேனே!— அது அவரின் இருதயத்தைக் குத்தாதா? சொல்லிக் கொடுத்த பாடமாக அச் சொல், என் செயலைக் கற்பித்துக் காட்டாதோ? அவர் ரொம்பவும் நுட்பமானவர். உணர்ச்சிகளைப் படிப்பவர். என் காதலைத் தவறுக எண்ணி விடவும் சந்தர்ப்பம் இருக்கும்!— அப்படியென்றால், நான் அவரை மணம் புரிந்துகொள்ள விரும்புவதற்கு அர்த்தம் என்ன? நாட்டின் நிமித்தம் போராடி, தன் கால்களைப் பறி கொடுத்த புனிதமான சீலர் அவர். அவருக்கு நானே கால்களாக இருந்து பணிவிடை செய்வதன் மூலம் என் மனத்துக்கு ஒரு ஆறுதலையும் அதன் மூலம் என் மனிதாபிமானத்துக்கு ஒரு பூரணத்தையும் உண்டாக்கிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பிறவி என்றால் அதற்கு ஒரு பயனும் ஒரு பொருளும் இருந்தாக வேண்டுமென்ற கொள்கையைப் பக்குவப் படுத்திக்கொண்டு வருகின்ற எனக்கு இக்கனவு பூர்த்தி பெற்றால் எவ்வளவோ மகத்தான அமைதி உண்டாகும். நான் எனக்காகத்தான் வாழ விரும்புகிறேன்!... நான் அவரைக் கல்யாணம் செய்து

கொள்ள முன் வந்திருக்கும் இச் செயலில் என் மனப் பக்குவம்தான் முதலிடம் பெற வேண்டும்; அந்த மனப் பக்குவம்தான் என்னுடைய இக்கடப்பாட்டுக்கு ஒரு நிறை. சரி!... நான், ஊனமடைந்த மோகன்தாஸை மணப்பது உலகின் கண்களுக்கு விந்தையாக— செயற்கைச் செயலாகப் பட்டால்...? வேடிக்கையான தர்க்கம்... குதர்க்கம்!... உலகுக்காக வாழ்ந்தவர்களின் கதை எனக்குத் தெரியாதா? எனக்கு என் வாழ்வுதான் லட்சியம்; என் கனவுதான் எனக்கு உலகம். இதே மோகன்தாஸ், நான் அவரை மணம் செய்து கொண்டபின் இதே முறையில் ஊனமடைந்துவிட நேர்ந் தால், அப்போது மட்டும் உலகம் எங்கள் ஜோடிப் பொருத்தத்தைச் செயற்கையாகக் கணித்து வம்பு பேசாதா?...

'ஆம்; என்னைப் போலவே, அன்பர் மோகன்தாசும் மனத்தை மதிப்பவர். இலக்கிய அறிவு அவருக்கு அந்தப் பாக்கியத்தை அருளியிருக்கிறது. என்னுடைய வானொலிச் சொற்பொழிவைப் பாராட்டிப் பேசுகையில் அவரது எண்ணங்கள்—என் எண்ணங்களுக்கு உடன்பாடு கொண்ட கருத்துக்கள் புரிந்தனவே!... என் ரேடியோ உரையிலே நான் கொண்டிருக்கிற மனத்தத்துவத்தை—என் லட்சியத்தை—என் கனவைத் தன்னால் புரிந்துகொள்ள முடிந் ததாகச் சொன்னாரே! நான் அவரிடம் வைத்திருக்கும் அன் பையும் பாசத்தையும் மரியாதையையும் கணக்கிட்டு, என்னை அவர் உள்ளத்தின் உள்ளே நேசித்துக் கொண்டுதான் இருப்பார். அவரது புதிய பார்வை அதற்கு அடையாளம். அவர் தன் இதயத்தை என்னிடம் திறந்து காட்ட மனம் துணியமாட்டார்— அவர் வசமுள்ள உடற்குறை காரண மாக!... ஆனால், நான் என் மனத்தை அவரிடம் நாளைக்கு வெளிக் காட்டும்பொழுது, அவர் துணிவுடன் என்னை—என் மனத்தை வரவேற்பாரல்லவா? எங்கள் மனம்—எங்கள் அன்பு—எங்கள் நேசம் சமுதாயத்துக்கு ஓர் அற்புதமாகவோ அல்லது அதிசயமாகவோ தோன்றாமல், ஓர் உண்மையின் கடமையாகத் தோன்றினால், அதுவே எனக்கு மகிழ்ச்சியை

ஊட்டும். ஆண்டவன்தான் அதற்குரிய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்!...'

இப்படிப்பட்ட நினைவுக் குவியல்களுக்கு மத்தியில் புரண்ட அவள், நாட்கள் சிலவற்றை இடை நழுவவிட்ட பின், அந்தத் திங்கட்கிழமை உபவாஸத்தின்போது முகத்தைக் கழுவிக்கொண்டு பக்தியுடன் பூஜையை முடித்த பின், அதே நிம்மதியுடனும் அதே சிந்தனைத் தெளிவுடனும் மீண்டும் ஒரு புதுக் கடிதம் வரைய முனைந்தாள். அன்று மோகன்தாஸைக் கண்ட தருணத்தில் அவளையும் அறியாமல் அவளது உள்ளுணர்வில் ஏற்பட்ட 'அந்தப் புனிதச் சக்தி'யின் தென்புடன் வார்த்தைகளைக் கொட்டினாள்.

ஒவ்வொரு சொல்லும் — சொல்லின் கோவையும் அவளது உள்ளார்ந்த அன்பிலிருந்து உதிர்ந்தது. 'தெய்வம் என்னைச் சோதித்தது போதும்; நீங்களும் என்னைச் சோதித்துவிட மாட்டீர்களே?' என்று எழுதியபோது, அவள் தன்னையும் அறியாமல் தேம்பிவிட்டாள். பிறகு, கடிதத்தை முடித்துக் கையொப்பம் செய்தாள். அக்கடிதத்தை நீலநிற உறையொன்றில் பொருத்தினாள். சமயமறிந்து அக்கடிதத்தை மோகன்தாஸிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்ற திட்டத்துடன் காற்றுட வாசல் பக்கம் வந்தாள்.

பாரதப் பிரதமர் லால்பகதூர் அவர்களின் சென்னை வருகைக்குக் கட்டியம் கூறின சுவரொட்டிகள். எத்துணை நிர்மலமாகப் புன்னகை பூக்கிறார் சாஸ்திரிஜி! ஆஹா!...

## 'மாறிப் புக்கு இதயம்!'

### இருபது

பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் இதயம் ஒன்றிய — பரிசுத்தமான — உணர்ச்சி நிறைந்த — அற்புதமான அப்பேச்சைக் கேட்டு மகிழ்ந்தாள் தமிழாசிரியை தமிழரசி! நாட்டுப் பாதுகாப்பின் நிமித்தம் பொது மக்கள் ஏகோபித்த மன ஒற்றுமையுடனும் நாட்டுப் பற்றுதலுடனும்

ஆற்றி வரும் தேசப்பணிகளைப் பாராட்டினார். பொது ஜனங்களின் இந்த ஒற்றுமை உணர்ச்சி எப்போதுமே நிலவிப் பண்பட்டு வந்தால், அவ்வுணர்ச்சியே நாட்டுக்கு மாபெரும் பாதுகாப்புச் சக்தியாக அமையுமென்றும் அவர் குறிப்பிட்டார். பெண் குலத்தின் அழகிய நாட்டுச் சேவைகளையும் அன்புப் பண்புகளையும் புகழ்ந்தார். எல்லோருக்கும் நாட்டின் சார்பில் நன்றி தெரிவித்தார் "ஜெய் ஜவான்!.........ஜெய் கிசான்!" என்னும் மந்திர ஒலிகளை முழக்கிய வண்ணம், தம் பேச்சை முடித்தார் பிரதமர்.

கூட்டம் முடிந்ததும், போர்முனையில் பணி புரிந்த தமிழ் நாட்டுச் சிப்பாய்களைக் கண்டு கைகுலுக்கி அவர்கட்குத் தம் நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொண்டார்.

வீரர்களின் மத்தியில் ஜவான் மோகன்தாஸ் முதலிடம் பெற்றுத் திகழ்ந்த காட்சியை நினைத்தவாறு அவள் கடலோரமாக வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். அவள்: தமிழரசி.

வழியில், "தமிழரசி!" என்ற அழைப்புடன் டாக்ஸி ஒன்று அவளை ஒட்டி நிற்கக் கண்டாள்.

டாக்ஸியில் மோகன்தாஸ் ராணுவ உடுப்புக்கள் மிளிர அழகாகக் காட்சியளித்தான். அவனது கைவிரல்களின் பிடிப்பில் ஊன்று கோல்கள் இருந்தன. "கூட்டத்துக்கு வந்தீர்களா?" என்று கேட்டான்.

"ஆமாங்க!" என்றாள் அவள்.

"டாக்ஸியிலேயே வீட்டுக்குப் போயிடலாமே! வந்து ஏறிக் கொள்ளலாமே!" என்று மிகவும் யோசனையுடன் விருப்பம் தெரிவித்தான். குரல் அழுத்தமாக ஒலிக்கவில்லை. தன் பேச்சை அவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ என்ற கவலையின் தயக்கத்துடன் அவனிடமிருந்து சொற்கள் வெளி வந்தன. சொல்லிவிட்டு, அவள் முகத்தை அவன் கவனித்தான். அதே நேரத்தில் டிரைவரும் பின்பக்கமாகத் திரும்பிப் பார்த்தான்.

தமிழரசி ஒரு கணத்தின் தாமதத்துக்குப்பின், "ஆகட்டுங்க!" என்றாள். அவன், தான் அமர்ந்திருந்த இடத்தின் கதவை அழுத்தித் திறந்துவிட்டான்.

அவள் ஏறிக்கொண்டாள்.

மோகன்தாஸ் மிகவும் ஒதுங்கி உட்கார்ந்துகொண்டான். அவனுடைய ஊன்றுகோல்கள் மாத்திரம் அவளுடைய கை ஸ்பரிசத்தில் அடங்கிக் கிடந்தன. அந்திக் கிரணங்கள் சிதறியிருந்தன.

தமிழரசியின் கன்னி மனம் அடங்காத மகிழ்வில் திளைத்துக் கொண்டிருந்தது. இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நிகழுமென்று அவள்தான் எண்ணியிருப்பாளா? இல்லை, அவன்தான் எதிர்பார்த்திருக்கக் கூடுமா?

ஆம்; சந்தர்ப்பங்கள் சந்திக்கவில்லையென்றால், வாழ்க்கையில் சுவைகளின் சந்திப்புக்கும் இடமிருக்காது அல்லவா?

மோகன்தாஸின் வீட்டின் வாசலில் வாடகைக் கார் போய்நின்றது. தமிழரசி முதலில் இறங்கினாள். மோகன்தாஸ் இறங்குவதற்கும் உதவினாள். யார் யாரோ வேடிக்கை பார்த்தார்கள்.

அவள் அவனிடமிருந்து பிரிந்து வீடு வந்து சேர்ந்தாள்.

கதவைத் திறந்தவுடன், அவள் காலடியில் கார்டு ஒன்று கிடக்கக் கண்டாள். அவசரமாக அதை எடுத்துப் படித்தாள். அவள் மனம் புயல் வசப்பட்டது. அவள் மீண்டும் அக் கடிதத்தைப் படித்தாள்:

"குமாரி தமிழரசி!

நீ ராணுவ வீரர் மோகன்தாஸைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாக அறிந்து திடுக்கிட்டேன். அந்த நொண்டியைத் திருமணம் செய்து கொள்ளும் வலு உனக்கு உண்மையிலேயே உண்டா? என்னால் நம்பவே முடியவில்லை. மற்றவர்கள்

உன்னைப் பிரமாதமாக மதிப்பிட வேண்டுமென்று தான் நீ இப்படி 'டூப்' அடித்துக்கொண்டு வருகிறாய்! பாவம்! அந்த ஜவான்! அவரை ஆசை காட்டி மோசம் செய்ய வேண்டாம்! நீ கேவலம் சாதாரண மானுடப் பிறவி என்பதை நான் அறிவேன். நீயும் அறிந்துகொள்! கெட்டிக்காரி புளுகு எட்டு நாளில் கூடவா அம்பலமாகாமல் போகும்?-பார்க்கலாமே! பிற பின்பு!......

இப்படிக்கு,

......................."

அடியில் கையெழுத்து எதுவும் இல்லாமல் இருந்தது. அக்கடிதத்தின் கையெழுத்தை அனுமானம் செய்து கொள்ளவும் அவளால் முடியவில்லை. அக்கடிதத்தின் வாசகங்களைப் படிக்க படிக்க அவளுக்கு ஆத்திரம் ஆத்திர மாக வந்தது. 'கடவுளே! நான் புகழுக்கு ஆசைப்பட்டா அன்பர் மோகன்தாஸைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்ளத் துடித்துக் கொண்டிருக்கிறேன்?... உலகத்தின் 'பார்வை' இத்துணை பயங்கரமானதா? அப்படியென்றால், என் லட்சியம் அர்த்தமற்றதா?...... ஊஹூம், இல்லை!...... இல்லவே இல்லை!...... யாரோ ஒருவன்—யாரோ ஒருத்தி என்பால் ஆத்திரப்பட்டு, அழுக்காறு கொண்டு எழுதியுள்ள 'பூதிப்படியான' கடிதம் இது! இதற்கு முகவரியில்லை; கையெழுத்து இல்லை. அதேபோல, இதற்கு நெஞ்சும் இல்லை!...... இக்கடிதத்தை அனுப்பிவிட்டால், அதன் மூலம் பயந்து நான் என் லட்சியத்தை விட்டுவிடுவேன் என்று எதிர் பார்த்திருப்பார்கள்!... பரிதாபத்துக்குரிய ஜன்மங்கள்!... ஆமாம், இந்த வேலையை ஒன்று ஜலஜா செய்திருப்பாள்; அல்லது அவளுடைய போலிக் காதலுக்குப் பாத்திரமான ஒரு ஆண் பிள்ளை செய்திருப்பான்......! கோழைகள்! ..'

அந்த அஞ்சலட்டையைச் சுக்கு நூறாகக் கிழித்துப் போட்டுவிட எண்ணினாள். மறுகணம், அப்படிச் செய்யாமல் அதை எடுத்துப் பீரோவில் ஓர் உறையில் திணித்துவிட்டு

அத்துடன் அதை மறந்துவிட்ட துணிவுடன் படுக்கையில் வந்து குந்தினுள். பின்னர், முகத்தைச் சுத்தப்படுத்திக் கொண்டு வந்தாள். காத்திருந்த மாணவிகளின் கட்டுரை நோட்டுக்களைச் செம்மையுறத் திருத்தினுள். 'ட்யூஷன்' சொல்லிக் கொடுத்தாள்.

'நாளைக்கு எப்படியும் அன்பர் மோகன்தாஸ் அவர்களிடம் என் கடிதத்தைச் சமர்ப்பித்துவிட வேண்டும்!'—இந்த ஒரே நினைவுடன் அவள் அன்றைப் பொழுதைக் கடத்தினுள்.

இரவு வந்தது.

எழுத்தாளர் மறைநாயகன் வந்தார். அதே தெருவின் இடது கோடியில்தான் அவர் வசித்தார். அவர் எப்போதாவது வந்து தமிழரசியிடம் உரையாடிச் செல்வார். அவரை வரவேற்று, அவரது 'ம்மா' என்ற கதையினைப் புகழ்ந்துரைத்தாள் தமிழரசி.

''மோகன்தாஸ் அவர்களைச் சந்தித்துவிட்டுத்தான் வருகிறேன். அவருக்கு உங்கள் பேரில் நிரம்பவும் மதிப்பும் மரியாதையும் இருக்கிறது'' என்ருர் அந்தக் கதாசிரியர்.

அந்த எழுத்தாளர் தெரிவித்துச் சென்ற சொற்களின் கூட்டுறவில் அவள் இதயம் எவ்வளவோ சாந்தி எய்தியது. தெய்வத்தை எண்ணித் தொழுதாள். படுத்து எழுந்தாள்.

அடுத்த நாள் பள்ளியின் கடமைகள் நிறைவேறின.

அன்னை பட்சணம் சுட்டு வைத்திருப்பாள் என்ற குதூகலப் பொலிவுடன் பள்ளியிலிருந்து வீடு நோக்கி விரையும் மாணவியைப் போல, ஆசிரியை தமிழரசியும் மனை நாடி விரைந்தாள்.

வீட்டை அடைந்து, பூட்டைத் திறந்தவுடன் சுற்று முற்றும் நோக்கினுள். ஏதாவது மேற்கொண்டு அனுமதேயக் கடிதம் வந்திருக்கிறதா என்று பார்த்தாள். அப்படி எதுவும் வரவில்லை. ஆறு பைசாவுடன் அந்த அனுமத்தேயத்

தின் சினம் அடங்கிவிட்டது போலும்! தன்னைக் கண்டு மறுகி மறுகிச் சென்று மறைந்தாளே ஜலஜா!...

சீனுக்காரனின் கள்ளத்தனமான ஊடுருவலைப் பற்றிய விவரம் வாசிக்கப்பட்டது — ரேடியோவில்!

தமிழரசி முகத்துக்குச் சோப்புப் போட்டுக் கழுவித் துடைத்தாள். கண்ணாடியின் முன் போனாள்.

மங்கலக் குங்குமம் இட்டுக் கொண்டாள்; மங்கள சௌபாக்கியமும், மாண்புறு பொலிவும் கூடின. முகத்தில் லட்சுமீகரம் களை கூட்டியது. நிலைக் கண்ணாடியிலிருந்து பிரிந்தாள் தமிழரசி. உள்ளத்தின் உள்ளே, நூதனமான ஆனந்தம் கிளை பிரிந்தது. கண்டுகொண்டிருந்த இன்பக் கனவின் மயக்கமும், அக் கனவு பலிக்க வேண்டுமேயென்ற பிரார்த்தனையும் அவள் வடிவில் இயங்கின. பரவியிருந்த மகிழ்ச்சி தவித்தது. அதுவே, ஓர் இன்ப வேதனையாகவும் பரிமளிக்கத் தொடங்கியது. சுரிகுழல் உச்சியில் இருந்த ஒற்றை ரோஜாப்பூவின் புனிதமான பரிமளம் அவளது தூய நெஞ்சை நிறைத்தது, நெஞ்சின் இனிய நற்கனவை நினைத்தது.

நிலவு மயங்கியும் மங்கியும் வீசிக்கொண்டிருந்தது.

வீசிக் கொண்டிருந்த சீதளக் காற்று கனிந்தும் கனத்தும் இருந்தது.

'மோகன் தாஸ்!'

பெயரை எழுத்து எழுத்தாகப் பிரித்து உச்சரித்தாள். உச்சரித்த வாய் இனித்தது; மணத்தது. ஒலி வடிவம் பெற்று எதிரொலி வடித்த இதயம் இனித்தது; மணத்தது.

எண்ணினாள்.

எண்ணிய கணத்தில் அவன் தோன்றினான்.

வீரம் பொலிந்த முகப் பொலிவு. அன்பு கனிந்த கண் மலர்ச்சி; பாசம் சிலிர்த்த இதழ்ச் சிரிப்பு.

மோகன்தாஸை முதன் முதலாகச் சந்தித்த மாண்பு மிக்க அந்த நேரத்தை ஞாபகப்படுத்திக் கொண்டாள்.

ஞாலத்தின் அதிசயத்தைக் காட்டிய கால அருமையாக அந் நேரம் தோன்றியது.

மேஜைமீது கண் பார்வைக்கு உகந்த காட்சியாக இருந்த அந்த இளநீல வர்ணக் கவரை மீண்டும் பார்த்தாள்; பார்வையை மீட்டிப் பார்த்தாள். இதய வீணையின் தந்தி களை மீட்டிப் பார்த்தாள்.

அன்பும் பாசமும் காதலெனும் உணர்வாகக் கசிந்தன.

தமிழரசி மெய்ம்மறந்தாள்.

மெய்ம்மறந்த நிலையில், மத்தியான்னம் பள்ளிக்கூடத் தில் அவள் பாடம் சொல்லிக் கொடுத்த கட்டம் அவளது நுண்ணறிவின் பாராட்டுக்கு ஆளானது.

விசுவாமித்திர மாமுனிவருடன் இராமபிரானும் இலக்குமணரும் மிதிலைக்கு வருகிறார்கள். வீதியில் வந்து கொண்டிருக்கும் அஞ்சனவண்ணனைப் பார்த்த பெண்கள், "இந்த இராமச்சந்திர மூர்த்தியே நம் சீதைக்குப் பதியாக வேண்டும்" என்று வாய் நிறைய வாழ்த்துகிறார்கள்.

கன்னி மாடத்தில் இருந்த மிதிலைச் செல்வி சீதை சாளரத்திலிருந்து கீழே நோக்குகிறாள். இராமபிரானைக் கண்டாள். இராமபிரானும் சீதையைப் பார்த்தார்.

சீதையும் இராமரும் ஒருவரையொருவர் நோக்கி இரு வரும் 'மாறிப் புக்கு இதயம்' எய்தினர்; அவர்கள் இருவரும், 'இரண்டு உடற்கு உயிர் ஒன்று' ஆயினர்!

இக்காட்சியை விவரித்தபோது தன்னையும் மீறிய இன்பக் களிப்பு எய்தினாள் அவள். இப்போது அந்நிலையினை எண்ணிப் பார்த்தபோது, இன்பக் கிளர்ச்சி அடைந்தாள். சீதையாகத் தன்னைப் பாவித்துப் பார்த்தாள். அவளது இளம் மேனி புல்லரித்தது!

அவள் தன் வயப்பட விநாடிகள் சில பிடித்தன. பின்னர், ஏதோ சிந்தனையுடன் பீரோவைத் திறந்தாள். பாங்குச் சேமிப்புப் புத்தகத்தை எடுத்தாள். பிரித்தாள்.

இருப்பில் இருந்த தொகைப் புள்ளியைக் கண்பார்த்தாள். "ஆயிரத்துப் பத்து' என்று தனக்குள் முணு முணுத்துக் கொண்டாள். எள்ளினுள் எண்ணெய் என அவளுள் ஒரு நிறைவு பூத்தது. பொன் செய்யும் மருந்து கிடைத்தது!

பீரோவின் மேல் தட்டில் புத்தம் புதிய கதர் வேஷ்டியும் கதர் சொக்காயும் இருந்தன. ஏர்முனைத் திருநாளன்று மோகன்தாசுக்குப் பொங்கல் பரிசளிக்கப் போகின்றாள்!

கனவு கண்டு விழிப்புப் பெற்ற நிலையில் அவள் தலையைச் சிலுப்பிக் கொண்டாள். ஒற்றை ரோஜாப்பூவின் இதழ் ஒன்று உதிர்ந்து அவளது சீரடிகளைச் சார்ந்தது. பீரோவை அடைத்தாள்.

ஆசைக் குழவியைத் தொடுவதுபோன்று, அந்த இளநீல வர்ணக் கவரைப் பவித்திரத்துடன் எடுத்துக் கச்சைக்குள் செருகிக்கொண்டு, வீட்டின் சாவியுடன் அவள் வெளியேறினாள். அவள் கால்கள் மோகன்தாஸின் வீட்டை நோக்கி நடந்தன. 'எனது மதிப்புக்கும் அன்புக்கும் உரிய தங்கட்கு!' என்ற தொடக்கம் அவள் நெஞ்சில் எழுந்தது. பிறகு, 'தெய்வம் என்னைச் சோதித்தது போதும்; நீங்களும் என்னைச் சோதித்துவிட மாட்டீர்களே?' என்ற வரிகளும் அவளது குமரி மனத்தில் விளையாடின.

கூர்வேல் நெஞ்சில் விளையாட அவள் நடை தொடர்ந்தாள். கோடியிலிருந்த ஸ்ரீ தண்டு மாரியம்மனைத் தொழுதபடி நடைதொடர்ந்தாள்.

கேள்வி ஒன்றைத் தெய்வத்தின் முன்னே வைத்துவிட்டு, அந்தக் கேள்விக்குரிய விடையைப் பெறுவதற்காக அவள் அதோ, நடந்து கொண்டிருக்கிறாள் — அந்தத் தெய்வத்திடமே!

## இருபத்தொன்று

"வணக்கம்!" என்று சொல்லிய கையோடு, கைகளைக் கூப்பி வணங்கியவாறு உள்ளே அடியெடுத்து வைத்த தமிழரசி, புதியதோர் உறவின் தோரண வாயிலில் அடியெடுத்து வைத்த புளகத்துடன் கூடத்தை அடைந்தாள். புதிய மனமும் புதிய கனவும் அவளை அரவணைத்துக் கொண்டிருந்தன.

கிள்ளை மொழிப்பிள்ளை ஒன்றை அள்ளி அணைத்து உச்சி மோந்தவாறு உட்கார்ந்திருந்த மோகன்தாஸ், "வணக்கம்" என்ற அறிவிப்பைக் கேட்டுத் தலை நிமிர்ந்து, குரலுக்குடையவளை இனம் கண்டு மனம் மலர்ந்து, "வணக்கம்... வாங்க!" என்று வணங்கி வரவேற்றான்.

பேசும் பொற் சித்திரத்தின் எழிலார்ந்த மயக்கத்தில் சிந்தை பறி கொடுத்த வண்ணம், மென்னகை புரிந்தவளாக, வழக்கம் போல அமரும் இடத்தை அடைந்து உட்கார்ந்தாள். ஒரு முறை அவள் தன்னைத் தானே பார்த்துக் கொண்டாள். மார்பின் மையத்தில் அந்தத் தங்கச் சங்கிலி வெகு எடுப்பாக மின்னியது.

அவனது இன்ப அரவணைப்பில் சுகம் சேகரித்துக் கொண்டிருந்த பிள்ளைக்கனியமுது, புது முகத்தைக் கண்டதும் பொக்கை வாயைக் காட்டி, அதில் அடங்காச் சிரிப்பினை அடக்கிக் காட்டி, தமிழரசியிடம் தாவிப் பாய்ந்து நத்தியது.

பொங்கிப் புரண்ட பூரிப்புடன் குழந்தையை ஏந்தினாள் அவள்.

"சௌக்கியமா?" என்று குசலம் விசாரித்தான் அவன்.

"ஆமாங்க!... நீங்க...?"

"நான் நல்ல சுகம்... நௌ ஐ ஆம் கொயட் ஓ. கே!..."

அவன் சிரிக்க, அவள் சிரிக்க, மதலையும் சேர்ந்து சிரித்தது.

சிரிப்பின் இனிய ரேகைகள், சிந்திக்கொண்டிருந்த ஒளித் திரட்சியில் மின்னின.

தமிழரசி தானும் குழந்தையாகி, குழந்தையிடம் கொஞ்சி விளையாடி, கெஞ்சி விளையாட்டுக் காட்டிக்கொண்டிருந்த கோலத்தை ரசித்த மோகன்தாஸ், பக்கவாட்டில் இருந்த புத்தகத்தை எடுத்து அதிலிருந்த புகைப்படமொன்றை ஒரு முறை நுட்பமாகப் பார்த்தான்; பிறகு, அப்படத்தை இருந்த இடத்தில் பொருத்தினன்; புத்தகமும் இருந்த இடத்தை அடைந்தது. அவன் பார்வையில் "டிரான்ஸிஸ்டர்' விழுந்தது. 'ட்ரான்ஸிஸ்டர்' பத்திரமாக இருந்தது. உண்மையான உள்ளம் பூண்ட திரையுலக நடிகர் ஒருவர் அன்புமனம் கொண்டு, அவனுக்கு அன்பளிப்புச் செய்தது அது! இயக்கினன்.

குழந்தை சொல்லாமல் கொள்ளாமல் வீரிட்டு அழுதது. அழுததுடன் நிற்காமல், அவளுடைய மார்பகத்தைக் குறி வைத்துத் தன் செப்புவாயை அழுத்த முரட்டுத்தனமான முயற்சியைக் கையாண்டது. அச்சமும் நாணமும் அவளைத் தவிக்கச் செய்தன. முகம் வேர்வையால் நிரம்பியது.

இந் நிலையைக் கவனித்து விட்டான் அவன். உடனே தடுமாற்றத்துடன் பிள்ளையை அவன் வாங்கிக் கொண்டான். அவளைப் பார்க்கவும் அவனுக்கு வெட்கம். ஆனல், அவளைப் பார்க்காமலும் இருக்க முடியவில்லை. எப்படியோ பார்த்தான். ஏனே பார்த்தான். இந்த இரு வேறு நிலைகளுக்கும் அர்த்தம் இல்லாமலா?

அவள் நளினமான முறுவலில் நாணத்தைக் கலந்தாள். இப்படியொரு காட்சியைத் தமிழ்ப்படமொன்றில் அபூர்வமாகக் கண்டு போற்றி ரசித்த அவளது ரசிகத் தன்மைக்கு நல்ல சோதனை நிகழ்த்திவிட்டது அந்தச் செல்வக் களஞ்சியம்.

திடீரென்று அடங்கிய குழந்தை, இப்போது திடீரென்று மீண்டும் அழத் தொடங்கியது.

அவள் கூர்மையாகப் பார்க்க வேண்டியவள் ஆனுள்.

பாவம், அங்கேயும் பாலமுத வேட்டை நடத்திக்கொண்டிருந்தது. "தங்கச்சி!" என்று குரல் கொடுத்தான்.

ஒன்றும் பிடிபடாத அதிர்ச்சியுடன் விழித்துக் கொண்டிருந்தாள் தமிழரசி.

"குழந்தை பக்கத்து வீட்டுச் சொத்து. அதை அனுப்பிச்சிடலாம்."

சீதை கெட்டிக்காரப் பெண். குழந்தையை வாங்கித் தோளில் சாமர்த்தியமாகச் சாத்திக்கொண்டு போய்ச் சேர்ப்பித்துவிட்டு மீண்டாள். "உங்க பேச்சைக் கேட்டேன். ரொம்பவும் பிரமாதமாக இருந்திச்சுங்க, டீச்சர்!... இதைப் பாடப் புத்தகத்திலே கட்டாயம் சேர்க்கணும். நல்லாயிருக்கும்!" என்றாள் சீதை.

குழந்தைக் கனவில் மனம் குழைந்திருந்த தமிழரசியின் காதுகள் சீதையின் ஆசையை வாங்கிக் கொள்ளத் தவறவில்லை. "சொல்லுறதோ, இல்லை, கேட்கிறதோ, அல்லது படிக்கிறதோ வாழ்க்கை இல்லை. செய்து காட்ட வேணும், சொன்னபடி!... அதுதான் வாழ்க்கை! அதுக்கும் ஒரு மனம் வேணும். அதிர்ஷ்டமும் வேணும்!" என்றாள். பேசி நின்றதும் அவள் உடல் கிடுகிடுத்தது. அவளது அடிமனத்தின் ஓர் ஓரத்தில், அவளுடைய உள்ளுணர்வுக்கும் புரியாத ரீதியில் ஏதோ ஒரு வகைச் சலனம் பிறந்தது. அவள் தன்னை உணர்ந்த கணத்தில், "நீங்க சொல்றது மெய்தான், டீச்சர்!" என்று ஆமோதித்தாள்.

சீதை உள்ளே சென்றாள்.

'அக்காள் என்று சொந்தம் கொண்டாடுவாள்: இப்போதுதான் நான் அவளுக்கு டீச்சராகத் தெரிகிறேன். எல்லாம் நன்மைக்கே!' நமட்டுச் சிரிப்புக்கு வேலை வைத்துவிட்டாள்.

அப்போதைய மங்கிய நிலவைப்பற்றி அந்த 'ட்ரான்ஸிஸ்ட'ருக்கு எப்படித் தெரிந்தது?

'மங்கியதோர் நிலவினிலே!' என்று பாட்டுப் படிக்கத் தொடங்கியது.

அவன் கேட்டான்.

அவளும் கேட்டாள்.

வரிக்கு வரி அவன் ஆழமாக அனுபவித்தான். ரசிப்பின் தூதுவர்களாக, அவனது உணர்ச்சிக் குறியீடுகள் அவன் முகத்தில் நாட்டிய முத்திரை பிடித்தன.

வரிக்கு வரி அவளும் ரசிப்புத் தன்மையைக் காட்டினுள். இருந்தாலும், அவனை அணைந்த வெட்கத்தையும் காட்டி விட்டாள்.

அந்தப் பாடலில் வருணனை ஒவ்வொன்றும் எத்துணை துல்லிதமாக அவளுக்கும் பொருந்தி வருகிறது!...

'ஆம்; அழகு எனும் தெய்வம்!'— தன்னை மறந்த லயந் தனில் முடித்தான் மோகன்தாஸ். அவன் கைகள் அவளை நோக்கிக் குவிந்தன.

தமிழரசிக்குப் புல்லரித்தது; உதடுகள் துடித்தன.

சாப்பிட்ட விவரம் கேட்டான் அவன்.

சாப்பிட்டதாகப் 'பொய்' சொன்னுள் அவள்.

அவளையும் கேட்காமல், வந்த பொய் அது.

பொய்யை ஏன் சொன்னுள்?

அவன் நேரத்தோடு சாப்பிட்டு விட்டான்.

"சும்மாயிருந்து பழக்கமில்லேன்னு மேலிடத்திலே தெரியப் படுத்தினேன். எழுத்துச் சம்பந்தப்பட்ட ஒரு வேலே போட்டுத் தருகிறதாகச் சொல்லியிருக்காங்க. துப்பாக்கிப் பிடிச்ச கைக்குப் பேனு வரப்போகுது!..." ஏக்கம் தொனித்தது.

அப்போது, வானத்தில் ஆகாயக் கப்பலொன்று பறந்த சத்தம் கேட்டது. அவனுக்கு யுத்த முனையின் நினைவு பீரிட்டிருக்க வேண்டும். 'கோலி சலாவ்... ஆகேபடோ!...' என்று சொல்லிக்கொண்டே துப்பாக்கியைத் தேடினுன். அந்தப் பதட்டத்தின் தடுமாற்றம் அவனை நாற்காலியிலிருந்து கீழே சாய்த்துவிடப் பார்த்தது. நல்ல வேளையாக. அடுத்த முறையாகவும் தமிழரசி அவனைத் தற்காத்தாள். "மிஸ்டர்

மோகன்தாஸ்! அது நம்ம விமானம். சுட்டுப் பிடாதீங்க!'' என்று தடுத்தாள்.

அவள் பேச்சை நம்பி, அவன் மெய்யுணர்வடைந்தான்.

அவர்கள் இருவரும் சிரிப்பைப் பரிவர்த்தனை செய்து கொண்டனர்.

மணி எட்டு இருபது.

தெருவோடு போன ஒரு விஷமக் கொடுக்கு, அவ்வீட்டின் முன்னே மணியை வலுவாக அடித்துக்கொண்டு மெதுவாகச் சைக்கிளைச் செலுத்திச் சென்றான்.

மார்பில் புரளும் தாலி மார்பை உறுத்துமா?

உறுத்தாது!

அதுபோலவே, அந்த இளநீல வர்ண உறையும் உறுத்த வில்லை. அதைத் துரிதமான நாகரிக மென்மையுடன் லாவக மாக எடுத்து வைத்தாள்.

''வேறே என்னங்க விசேஷம்?''

அவன் முரண்டு செய்த சங்கீதத்தை அமர்த்தினான்.

சுவரில் தொங்கிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பாராட்டைப் பார்த்தவாறு இருந்த தமிழரசி, அவன் பக்கம் திரும்பினாள். இருக்கையிலிருந்து எழுந்து கடிதத்தை அவ னிடம் சமர்ப்பித்தாள்.

அவன் வாசித்தான்.

''எனது மதிப்புக்கும் அன்புக்கும் உரிய தங்கட்கு:

நான் தங்களைச் சந்தித்த முதற் சந்திப்பு என்னுடைய வாழ்க்கையிலே மறக்கமுடியாத புனித நாளாகும்.

வீரத்தையும் தியாகத்தையும் நேரிடையாகத் தரிசிக்க இந்த அனாதைப் பெண்ணுக்கு ஒரு பொன்னான சந்தர்ப் பத்தை அளித்தீர்கள். நான் கொடுத்து வைத்தவள்.

அதனால்தான் உங்களிடம் இப்போது வரம் ஒன்று கேட்க ஊக்கம் கொண்டு வந்திருக்கிறேன்.

என் பிறவிக்குப் பயன் வேண்டும்; அதற்குப் பொருளும் வேண்டும்,

அந்தப் பாக்கியத்தை எனக்கு அருளும் புனிதக் கருணை வள்ளலாகத் தாங்கள் அமைய வேண்டும்.

தங்களை—தங்கள் மனத்தை—தங்களது வீரத்தை—தங்களுடைய நாட்டுப் பற்றை — தங்கள் தியாகத்தை நான் என்னுடைய இதய பூர்வமான அன்பால்—அன்பின் மனத்தால் — மனத்தின் தூய்மையால் நேசிக்கிறேன்.

'எடுத்தும் கொடுத்தும் அன்பை வாழ்த்தினால், அந்த அன்பு வாழ்ந்து விடும்!' — நீங்கள் அடிக்கடி சொல்லி வந்தது எனக்காகத்தானே?

தங்கள் உள்ளன்பும் மனதர்மமும் என்னை வாழ்த்தி, வாழ வைக்குமென்றே நான் கனவு காணுகிறேன்.

தெய்வம் என்னைச் சோதித்தது போதும்!

நீங்களும் என்னைச் சோதித்து விடமாட்டீர்களே?... அப்படியென்றால், நான் இனி அனாதை அல்லள்!

தங்களது அன்பிற்குரிய,
—தமிழரசி.''

கடிதம் முடிந்துவிட்டது.

அவன் அவளை நடுக்கத்துடன் ஏறிட்டுப் பார்த்தான். பிறகு, தனக்கு இரு மருங்கிலும் இருந்த அந்த இரண்டு ஊன்று கோல்களையும் பார்த்தான். அப்புறம், திரும்பவும் ஒருமுறை அவளைப் பார்த்தான். குற்றம் செய்துவிட்டு குழந்தை அச்சத்தோடு தாயைப் பரிதாபமாகப் பார்க்காதா, அதை நினைவூட்டியது அவன் நோக்கு.

''கடைசியிலே, இப்படி என்னைச் சோதிச்சிட்டீங்களே, தமிழரசி?'' என்று அவன் உதடுகள் துடிக்கத் தாழ்குரலில் கேட்டான். அவனுடைய இமையோரங்களில் பனித்துளிகள் சேர்ந்தன. ஒன்றிரண்டு சிதறி விழுந்தன.

அவளுக்குப் பொறி கலங்கிவிட்டது. கண்புலன் அறிவு மங்கி வந்தது. எதிரில் இருந்த அவனது கம்பீரமான உருவம், சலனமடைந்த நீரில் பார்ப்பதுபோலத் தெரிந்தது. "என்ன சொல்றீங்க நீங்க?" என்று திகிலுடன் வினவினாள் தமிழரசி. நெஞ்சை ஏதோ ஒரு சக்தி அடைப்பது போலிருந்தது. சமாளித்துக்கொண்டாள்.

"நீங்க அளிக்க முன் வந்த இந்த மகத்தான பாக்கியத்தை அங்கீகரிக்க முடியாத நிலைமையிலே நான் இருக்கிறேன். அதுக்காக என்னை நீங்க பெரிய மனசு பண்ணி மன்னிச்சிட வேணும். எனக்காக ஏற்கனவே ஒரு காதலி ரொம்பக் காலமாய்க் காத்துக் கிட்டிருக்கு! நீங்க என்னைத் தயவுசெஞ்சு தப்பாய் நினைச்சுக்காதீங்க!..." என்று அவன் சொல்லிய பேச்சின் ஒலி மறைவதற்குள், கீழே மறைந்து கிடந்த அந்தப் படத்தைப் புத்தகத்திலிருந்து எடுத்து அவளிடம் காண்பித்தான்.

கனை சூட்டித் திகழ்ந்த பூங்கொடியின் வதனத்தை அவள் படத்தில் பார்த்தாள். "பூங்கொடி என்கிற இந்தப் பெண் தான் என்னோட வருங்கால மனைவி!" என்றான் அவன்.

கண் இமைக்கும் நேரம், கண்களை இமைக்காமல் இருந்தாள் தமிழரசி. அந்த இமைப்பொழுதிற்குள் எந்தக் கடல் பொங்கி அவளை அரவணைக்கத் துடித்ததோ? எந்தப் புயல் சுழன்று வீசி அவளைத் திக்குமுக்காடச் செய்ததோ? எந்த எரிமலை கனன்று அவளைத் திமிலோகப் படுத்தியதோ?...

சிறுகச் சிறுக, அவள் நல்லுணர்வு எய்தினாள். இப்போது, அவள் சோர்வு இல்லாத சிரிப்பை வெளியேற்றினாள்.

கடல் என்றால் அடங்காதா, என்ன?

புயல் என்றால், ஒரு நாள் ஓயத்தானே வேண்டும்?

எரிமலை என்றால், அது சினம் தணியாமல் இருக்க முடியுமா?

"என்னை மன்னிச்சிடுங்க, மிஸ்டர் மோகன்தாஸ் .. உங்க நிலை எனக்குத் தெரியாது! என் பிழையைப் பொறுத்துக்குங்க!" என்று வேண்டினாள்.

மேஜை பரப்பில் ஊசலாடிக் கிடந்தது கடிதம்.

அவள் பேச்சினிலே வைரம் விளைந்தது.

சுடச்சுடரும் பொன்னுகை அவளது அழகிய முக விலாசம் புனிதம் பூண்டு பொலிந்தது.

"விடை தாருங்கள். போய் வருகிறேன்!"

எழுதிப் படிப்பது போன்று அவள் பேசினுள்.

"நல்லதுங்க!..."

மோகன்தாஸ் பச்சிளங் குழவி ஆனான்.

சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக்கொண்டு குமாரி தமிழரசி விடைபெற்றுள். தலையில் சூடியிருந்த ரோஜா இதழ்கள் வெளிறிச் சிதறின.

மங்கிய நிலவு மயங்கி மயங்கித் துணை சென்றது.

வரும் விதி இராத் தங்குமா, என்ன?...

## சாவித்திரிக்குக் காப்பு

### இருபத்திரண்டு

வீட்டுப் பூட்டைத் திறந்துகொண்டு தமிழரசி உள்ளே நுழைந்தவுடன், முதல் அலுவலாகத் தண்ணீர்ப் பானையை அணுகி, நாலைந்து குவளைத் தண்ணீரைக் குடித்தாள் மித மிஞ்சிய தாகமாக இருக்கலாம்; அல்லது, மனக் கொதிப்பு தாங்க முடியாதபடி இருந்திருக்கவும் கூடும். மேற்கொண்டு தேவையில்லை என்னும் அளவுக்குப் பருகிவிட்டதாக அவளால் உணர முடிந்தது. சாப்பிடாமலே அவளுக்கு ஏப்பம் பறிந்தது. பசியை அடக்கவும் நீர் அருந்தியிருப் பாளோ?

ஆங்கிலச் செய்தி வாசிப்பு காற்றில் மிதந்து வந்தது. வெளிக் கதவுகளை மூடிவிட்டு, கூடத்தில் இருந்த படுக் கையை விரிக்காமல் அதன்மீது குந்தினுள் அவள். இடது

கை விரல்களில் பதுங்கிச் சுருண்டிருந்த காகிதத்தை விரித்த போது, அது மோகன்தாஸின் விலாசம் எழுதப்பட்டிருந்த கவர் என்பது புரிந்தது. ஏன் அது மாத்திரம் அவளிடம் திரும்பிவிட்டது? அவளது காதற்கனவுக்கு ஒரு நினைவுச் சின்னம் வேண்டுமே என்ரு?

குழந்தையைத் தாய் அடித்து விடுகிருள். குழந்தையோ செருமிக்கொண்டு, அடித்த தாயையே சரண் அடைகிறது.

முருகனைச் சரண் அடைந்தாள் தமிழரசி.

அவன் வேல் முருகன் ஆனான்.

வேல் விளையாடி விட்டது.

வேல் விளையாடியதா?...

ஊஹூம்!

வினை விளையாடியது.

வினையா விளையாடியது?...

அல்ல!

விதி விளையாடிவிட்டது!

விதி விளையாடி விட்டதா?

பொய்!

மோகன்தாஸ் அல்லவா விளையாடி இருக்கிருன்?

அவள் இதயத்தைத் திறந்து வைத்துக்கொண்டு, கண்களை மூடிக்கொண்டாள். கண்ட கனவைக் கண்களுக்கு இடையில் 'புதைத்து வைக்க' விரும்பினுளோ? இன்பக் கனவு கண்டதாகவோ அல்லது, அந்தக் கனவு துன்பத்தைப் பரிசளித்ததாகவோ அவள் அசந்து மறந்தும்கூட நினைக்கக்கூடாது என்கிற நிர்ப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டவளாக, அவள் இயல்பானதொரு தோரணையுடன் நேத்திரங்களை மலரச் செய்தாள். அப்போது, உடலுறுப்புக்களில் உறைந்திருந்த உதிரம் முழுவதும் மண்டைக்கு ஏறிவிட்டதற்குச் சரியாக அவள் மூளை கொதித்தது. 'நான் கொடுத்து வைக்கவில்லை; அதனுல்தான், அன்பர் மோகன்தாஸின் அன்பை என்னுல் எடுத்துக்கொள்ளக் கூடவில்லை!'

இத்தகைய பயம் மண்டிய திருப்பம் ஒன்று தனக்கு ஏற்படுமென்று அவள் எதிர்பார்த்தாளா? இப்படிப்பட்ட துன்பம் அவளது இலட்சியத்தின் முடிவுக் கட்டமா? இம் மாதிரியான ஏமாற்றம்தான் அவள் வாழ்க்கையா? ஐயையோ!—என்ன வாழ்க்கை இது!...

'தெய்வம் என்னைச் சோதித்தது போதும்; நீங்களும் என்னைச் சோதித்துவிட வேண்டாம்!' என்று அவள் நம்பிய 'அந்தத் தெய்வ'த்திடமே வினா எழுப்பி, அதே வினாவுக்கு விடை வாங்கி வர 'அந்தத் தெய்வ'த்திடமே எவ்வளவு நம்பிக்கை கொண்டு சென்றாள் அவள்?—ஆனால், நடந்தது என்ன? முடிந்தது என்ன? அந்த வரிகளை எழுதியபோது, அவள் கண்கள் கண்ணீரைக் கூட்டிய விசித்திரத்தின் அர்த் தத்தை அப்போதுதான் அவளால் படித்துக் கொள்ள முடிந்தது. அவ்வாசகங்களைத் தேம்பலுடன் எழுதியபோது, ஊற்றெடுத்த கண்ணீரைக் காட்டிலும் பன்மடங்காக இப்போது பெருகிற்று.

அந்தத் தேம்பலைத் தமிழரசியின் மனம் அப்போது 'ஒலிப்பதிவு' செய்து வைத்திருக்க வேண்டும். இப்போது, அத்தேம்பல் அவளுள் எதிரொலித்துக் காட்டியது. உள் ஓலத்தின் பிரதிபலிப்பு துளிகூட அவளது முகவிலாசத்தில் தடம் காட்டவில்லை. புலன்களைச் சுட்டறுத்து விட்டவள் போல அவள் அந்தக் கணத்தில் காணப்பட்டாள். பலம் வழிந்து, பலவீனம் மிஞ்சிய நம்பிக்கை வறட்சியுடன் அவள் மீண்டும் தன்னைத் தானே நோக்கினாள். கண்களின் கசிவைத் துடைத்துவிடக் காத்திருந்தது அவள் மனம். சுவைப்பதற் காகக் கையில் ஆசையுடன் வைத்திருந்த முறுக்கைப் பருந்து கொத்திச் செல்வதைக் கண்டு குழந்தை ஏமாந்து அழுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?—அவளுக்குத் தன்னைப் பற்றி நினைக்க நினைக்க அவ்வுதாரணம்தான் நினைவு வந்தது. குழந்தைக்கு அழுவதற்காவது பாக்கியம் இருக்கிறது. ஆனால், அவளால் அவ்வாறு அழ முடியாது. தனிப்பாதை யில் போக விரும்பியவளுக்குக் காலொடிந்து போன மாதிரி

ஏமாற்றம் உண்டாகி விட்டது. அந்த ஏமாற்றத்தை மறக்க, அல்லது மறைக்க அவளால் அழக்கூட முடியவில்லை!

மோகன்தாஸுக்கு இரண்டு தடவை அவள் எழுதிய கடிதப்பிரதிகளையும் டிரங்குப் பெட்டியின் மூலையிலிருந்த கறுப்புக் கூட்டுக்குள் திணித்தாள்.

அடுத்த தடவையாக, இப்போதும் அவள் 'தூக்க மாத்திரை'களை நினைத்துக் கொண்டாள். மறுகணம், அவளது பகுத்தறியும் சக்தி, அப்பயங்கரமான நினைவைத் தூக்கி எறிந்தது!

'என் வாழ்விலே இனிமேல் என் நிலை என்ன?'

சுயநலம் மிகுந்த அவளது தன்மயமான ஆய்வு அவளை மிகவும் அச்சப்படுத்தியது. உந்திக் கமலத்தில் தாங்க வொண்ணுத நோவு எழுந்தது. மண்டை வலித்தது. மனம் 'அலை எறி கடல்' ஆனது. அவள் தவித்தாள், தடுமாறினுள், திகைப்புண்டாள். இல்லத் தலைவி திலகவதி அம்மையார் ஓடோடி வந்தாள்—நெஞ்சிலே கைகொடுத்தாள்—நினைவிலே!... அந்தத் தாயின் வாழ்க்கை தமிழரசிக்கு நம்பிக்கை ஆனது. துன்பங்களைக் கடந்தும் ஒரு வாழ்க்கை இருப்பதை அவள் அறிவாள்; ஆனுல், அவள் அதை இதுவரை மறந்திருந்தாள். இப்போது, அவ்வுண்மை ஞாபகத்திற்கு வந்து விட்டது. சந்திக்கும் துன்பங்களை—சோதிக்கும் சோதனைகளை எதிர்த்து வெல்லும் வைராக்கியம் மனத்திற்கு வேள்வி ஆக வேண்டும் என்னும் குறிக்கோளையும் அவள் சித்தத்தில் இருத்திஞள். சிரித்தாள். 'தெய்வமே, உன்னையன்றி நான் இல்லை! நான் உன் குழந்தை. அதனுல்தான் என்னையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டி விடுகிறுயா?'

வாழ்க்கைப் பாதையின் புதிய மடக்கத்தில் அவள் இனிமேல் நடக்க வேண்டும். அந்த நீண்ட பெரும் பாதையைக் கூர்த்த மதி பதித்துப் பார்த்தாள். அந்தப் பாதையை அவள் அவ்வளவு சுலபமாகக் கணித்துவிட முடியவில்லை. ஆனுல், அந்தப் பாதையின் தொலைவுக் கற்களாக,

தோன்றுமல் தோன்றிய தனது சமூகப் பணிகளின் உள்ளடக்கத்தை ஓரளவு அவளால் கணிக்க முடிந்தது.

'என் பிறப்பு புதிராக இருக்கலாம். ஆனால், என் வாழ்க்கையைப் புதுமையானதாக ஆக்கும் சக்தி என்னிடம் இருக்கிறது. என் பிறப்புக்குக் கட்டாயம் பயன் கிடைக்கச் செய்வேன். என் பிறவிப் பயனுக்கு ஒரு அர்த்தம் உண்டாக்கப் பாடுபடுவேன். எனக்கு நானே இனி துணை; காப்பு! மனத்தின் மணத்தாலும், இலட்சியங்களின் சத்தியத்தாலும் வாழும் வாழ்வுக்குச் சாவு ஏது? நல்வழி காட்ட எங்கள் அன்னை இருக்கிறுர்கள்!'

இவ்வாறு, டைரியின் அன்றைத் தேதியில் எழுதி முடித்துப் பேனுவை மூடினுள் தமிழரசி. தன் அன்பிலும் பணியிலும் பங்கு பெறக் காத்திருந்த ஆயிரக்கணக்கான அனுதைக் குழந்தைகளை—ஏழை எளியவர்களை—நடுத் தெரு நாராயணர்களை அவள் தரிசிக்க முடிந்தது!— மனத்திடை! அவர்களையெல்லாம் கையெடுத்துத் தொழுது, தன் பிறவியைப் பயனுள்ளதாக்கித் தரும்படி ஆசியை வேண்டிப் பெற்றுள்.

இப்போது, அவள் ஒரு புதிய ரத்த ஓட்டத் துடிப்புடன் எழுந்தாள். மரத்திருந்த கால்களைக் கவனமாக உதறிவிட்டு நடந்தாள். திசைமாறிக் கிடந்த மோகன்தாஸின் மார்பளவுப் படத்தைப் பவித்திரமான அன்புடன் தொட்டு எடுத்து அலமாரியின் மேல் தட்டில் மையம் பார்த்து வைத்தாள். அவள் கைகள் அஞ்சலி முத்திரை பிடித்தன.

மொட்டை மாடிக்கு வந்தாள் அவள். இருளின் பின்னே, மல்லீஸ்வரர் கோயில் கோபுரமும் கலங்கரை விளக்கும் தெரிந்தன.

அன்று தனக்கு வந்திருந்த ஊர்—பேர் இல்லாத கடிதம் இப்போது அவள் முன் விசுவரூபம் எடுத்தது. பசுமரத்தாணியாக நினைவில் அழுந்திப் பதிந்து விட்டிருந்த அந்த வரிகளின் நிர்த்தாட்சிண்யமான சவாலை அவளால் தாங்க முடியவில்லை.

'அந்த நொண்டியைத் திருமணம் செய்துகொள்ளும் வலு உனக்கு உண்மையிலேயே உண்டா?... பாவம், அந்த ஜவான்!... அவரை ஆசை காட்டி மேலும் மோசம் செய்ய வேண்டாம்!... நீ, கேவலம், சாதாரண மானுடப் பிறவி என்பதை நான் அறிவேன். நீயும் அறிந்து கொள்!...' என்ற அக்கடிதத்தின் வரிகள், அவளது மனச்சாட்சியில் பதிந்துவிட்ட சவுக்கடியின் வரித் தழும்புகளாக இப்போது தோன்றலாயின. சற்றுமுன் சேகரம் செய்திருந்த நெஞ்சுரம் இப்பொழுது அவளிடமிருந்து பிய்த்துக்கொண்டு ஓடிவிடத் துடித்தது என்பதை அவள் உணர்ந்தாள். 'இந்தக் கடிதத்தைத் தயாரித்து அனுப்பிய உள்ளம், மோகன்தாஸின் தீர்ப்பை அறிந்தால்—அதன் மூலம் நான் ஆதரவற்றுப் போய்விட்ட கதியற்ற நிலையைக் கேள்விப்பட்டால்—எவ்வளவு எக்காளமிட்டுக் கெக்கலிக் கொட்டிச் சிரிக்கும்!'...

அன்றொரு நாள், மோகன்தாஸின் தாய்நாட்டுப் பணிக்கென்று அவன் கழுத்தில் அவள் பூமாலை சூட்டிய காட்சியைப் பத்திரிகைப் படத்தில் சுட்டிக் காட்டி கேலி பேசிய குமாரி ஜலஜாவின் முகத்தில் அடித்தாற்போல அவள் சூளுரைத்த அந்த உளமார்ந்த பேச்சுக்களெல்லாம் இப்போது அர்த்தமற்றுப் போய்விட்டனவே!...

மீண்டும் கீழே வந்தாள். தமிழ்க் கடவுளின்முன் நின்று, கண்ணீரைச் சிதறவிடாமல் தொடுத்து, மாலை சூட்டினாள். அன்று வினை தீர்த்தானுக்குச் சூட்டப்பட்ட மாலையை எடுத்ததற்குப் பரிகாரமாகவா இப்போது மாலை தொடுத்தாள்?...

மீண்டும் ஜலஜாவின் ஞாபகம் வந்தது. "அவள் நாளைக்கு என்னிடம் வந்து, 'உன் சவால் என்னவாயிற்று?' என்று கேட்பாளல்லவா? அதற்கு நான் என்ன பதில் சொல்வேன்? அவள் கேட்காவிட்டால், மறுபடியும் ஒரு கடிதம் எழுதிவிட மாட்டாளா?... எழுதச் செய்து விடமாட்டாளா?..." என்று சிந்தித்துப் பார்க்கையில், அவளுள்ளிருந்து தன்மான உணர்ச்சி பீறிட்டுக் குமுறிக்கொண்டு மேலெழத் தொடங்கியது. 'வரட்டும்... பார்த்துக் கொள்வேன்!'... பற்கள் சத்தமிட்டு ஓய்ந்தன.

அப்போது, அங்கே சாவித்திரி வந்து கதவைத் தட்டினாள்.

கதவுகளைத் திறந்தவுடன் சாவித்திரியைப் பார்த்தாள் தமிழரசி. ஓர் அரைக் கணம், அவள் மலைப்புத் தட்டி நின்று விட்டாள்!

மின்னிய செயற்கையின் ஒளியிலே சாவித்திரி அழகே உருவமாகச் சமைந்து நின்று கொண்டிருந்தாள்!

பிறை நுதலில் பிறைப் பொட்டு.

அலைவிரி கூந்தலில் மணம் சிந்தும் பூங்கொத்து.

சாவித்திரிக்கு அவள் கனவு கண்ட 'காப்பு' கிட்டி விட்டதுபோலும்!

"சாவித்திரி!"

பெயரிட்டு அழைத்தாள், தமிழரசி.

சாவித்திரியின் முகம் தமிழரசியின் திக்குக்குத் திரும்பியது. அவளது உடம்பைப் போலவே முகமும் செழித்திருந்தது.

தோழியைப் புதிய பார்வையுடன் நோக்கினாள் அவள்.

"சகோதரி! எனக்குக் காப்பு கிடைத்து விட்டது!" என்றாள் சாவித்திரி, குதூகலம் பிடிபடாமல்.

"அப்படியா?" என்று கேட்டாள் தமிழரசி. வியப்புணர்ச்சியை அவள் கட்டுப்படுத்த முயன்றும், தோற்றாள்.

"ஆமாம்; எனக்குக் காப்பு கிட்டிவிட்டது. என் நெஞ்சில் வாழும் என் அன்பு அத்தானே இனி என்றென்றும் எனக்குக் காப்பாக இருப்பார், தமிழரசி!" என்றாள் சாவித்திரி. மிகுந்த உறுதிப்பாடு தொனித்தது, பேச்சில்.

சாவித்திரியை — திருமதி சுந்தரேசனை — இமைக்காமல் இமை வலிக்கப் பார்த்தாள். அவள் இமைகள் வலிக்கவில்லை. நெஞ்சில் அன்பு சுரந்தது. அவளை நோக்கிக் கை குவித்தாள் தமிழரசி.

சாவித்திரி ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். "உங்க முன்னே நான் ரொம்பவும் சாதாரணப் பெண்! என்னுடைய

இந்த மனவெற்றிக்கு உங்க பெண்மைச் சக்திதான் காரணம், டீச்சர்!'' என்ருள் அவள்.

உணர்ச்சியின் பிழம்பானுள் தமிழரசி.

சாவித்திரி தூவி விட்ட பூமணம் அறையின் சுவர்களுக்குள்ளேயே பரவிக் கொண்டிருந்தது. அதைப் போலவே, சாவித்திரியின் நினைவும் அவளிடை மணம் பரப்பியது.

தமிழரசி அன்றைக்குப் பட்டினி. கண்ணேடு கண் பொருதவில்லை, அவள்.

புலர்ந்தது.

மேற்கே வைகறை நிலவு ரத்தம் செத்துக்காட்சி கொடுத்துக் கொண்டிருந்தது.

# காலம் ஒரு புள்ளிமான்

## இருபத்துமூன்று

மூன்று நாள் லீவுக்குப் பிறகு, அன்றைக்குத்தான் தமிழரசி பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டாள். வழக்கமாக வீட்டைவிட்டுப் புறப்படும்போது, ஒரு முறை இடது பக்கம் பார்வையைத் திருப்பி மீட்டுக் கொண்டுதான் அவள் நடப்பது வழக்கம். அவ்வாறு, அவள் இடது புறம் திரும்புகையில், அவள் நோக்கிலே மோகன்தாஸின் இல்லம்தான் தென்படும். அந்த வீட்டின் வெளித்தோற்றமே அவளுக்கு ஓர் ஆறுதலைக் கொடுத்து வந்தது. அவ்வீட்டைப் பார்த்தாலே, மோகன் தாஸைப் பார்த்ததுபோலத்தான் என்றுகூட அவள் சமயங்களில் தனக்குத் தானே சமாதானப்படுத்திக் கொள்ளுவதும் உண்டு. ஆனால், இன்றே அவள் மோகன்தாஸின் வீட்டுப் பக்கம் பார்வையை நிலை நாட்டிய தருணம், அவளையும் அறியாமல் அவள் மனமும் நயனங்களும் கலங்கிக் குமுறின. ஏமாற்றத்தின் சலிப்புடன் பார்வையைத் திருப்பிக்கொண்டு அவள் நேர் வசமாகத் திரும்பி நடக்கலாஞள். தன்னம்பிக்கை

யும் நெஞ்சுப் பலமும் அவளது பாதை ஆயின. பிறப்பின் அருமை குறித்து அவள் படித்த — சிந்தித்த — சொன்ன பழங்கருத்துக்களை இப்போதும் நினைவிலும் நெஞ்சிலும் நிறைத்துக் கொண்டு அவள் வழி விலக்கி வழி நடந்தாள். விழி விலக்கி விழி தொடர்ந்தாள். மனத்தின் திண்மை அவள் முன்னே புதிய மண்ணைக் காட்டியது.

மாணவிகள் சிலர் தமிழாசிரியைக்கு வணக்கம் தெரிவித்து ஒதுங்கி நடந்தார்கள்.

பள்ளிக்கூடத்தின் வெளிப்புறக்கதவு வழியே அவள் நுழைந்தாள். அவளுக்கெனக் காத்திருந்த சாவித்திரியும் அவளைத் தொடர்ந்தாள். அன்றொரு நாள் இரவில் வீட்டுக்கு வந்து புதிய அதிசயத்தை விளைவித்துச் சென்ற புதுமைப் பெண் சாவித்திரியைப் பற்றிய சிந்தனையிலேயே அன்றைய இராப் பொழுதின் பெரும் பகுதியைப் போக்கிய விசித்திரத்தை அவள் மறக்க முடியாது. தன் வாழ்வில் இடைமறித்த துர்ப்பாக்கியங்களைப் புள்ளிக் கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டுமென்றிருந்தாள் அவள். ஆனால், அவள் தன் வாழ்வுக் கணக்கையா பார்த்தாள்? — இல்லையே! சாவித்திரி போட்டுச் சென்ற ஆச்சரியக் குறியின் லயிப்பிலேயே மெய்ம்மறந்து போனாளே தமிழரசி!...

சாவித்திரி இப்போது தமிழரசியை ஊடுருவிப்பார்த்தாள். "டீச்சர்! உங்க கண் வெளுப்புத் தட்டியிருக்கிறதே!... மனசுக்கு ஏதானும் உளைச்சலா?... இல்லாட்டி இப்படி ஆகாதுங்களே, தமிழரசி?" என்று துருவினாள் சாவித்திரி.

அவள் என்ன பதில் சொல்லுவாள்? தன் காதல் தோற்ற கதையைத் தன் சக ஆசிரியையிடம் அன்றிரவே சொல்லிவிடத்தான் தவித்தாள். ஆனாலும், அன்றிருந்த சூழ்நிலையில் அவளுக்குத் தன் தவிப்பை வெளிக்காட்டிச் சொல்லுவதற்கு வாய்க்கவில்லை. ஏனென்றால், அப்போதைய மனப்போக்கில், சாவித்திரி உண்டாக்கிக் காட்டிய வியப்புதான்

தமிழரசியைப் பெரும் அளவுக்குத் தவிப்புக் கொள்ளச் செய்தது!

இருவரும் பேசாமலே நடந்தார்கள்.

தமிழரசியின் கண்கள் ஜலஜாவைத் தேடிக்கொண்டிருந்தன. ஆனால், அவளைக் காணவில்லை. 'அவள் என்னிடம் வலிய வந்துகேலி பேசுவதற்குள் நானே அவளிடம் அன்று வந்த அனாமதேயக் கடிதத்தைப் பற்றிக் கேட்டு வம்பு வளர்த்துவிட வேண்டும்!' என்று துடித்தாள் அவள். ஆனாலும், அப்படி நடந்து கொள்வது நாசூக்காக இருக்காது என்பதையும் அவள் மறுகணம் உணர்ந்தாள். உருவாகும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி நடந்துகொள்ள வேண்டுமென்பதே அவளது முடிவான திட்டமாக அமையலாயிற்று!

தன் லட்சியம் சித்திபெறுமல் போன விவரத்தை முதலில் இல்லத் தலைவிக்குத் தெரிவித்துவிட வேண்டுமென்றும், அடுத்தபடியாக, சாவித்திரியிடம் பிரஸ்தாபிக்க வேண்டுமென்றும் அவள் ஆலோசித்தாள். ஆனாலும், எதற்கும் சந்தர்ப்பம் என்று ஒன்று வர வேண்டும். இப்போது, பள்ளிக் கடன் அழைத்தது. அவள் விரைந்தாள்.

இனி, தமிழரசிக்குத் தன் கடமைதான் உலகம், சட்டம், நீதி எல்லாம்!

எஸ். எஸ். எல். சி. வகுப்பின் ஒரு பிரிவில் கவி தாகூர் எழுந்தருளினார்.

மறுபிரிவில் கணியன் பூங்குன்றனார் மறுபிறவி கொண்டார்.

பத்தாம் வகுப்பை நாடிச் சென்றபோது, அவள் பார்வையில் முத்தழகி தென்பட்டாள். மூக்கின் மையத்தே கைகளைக் குவித்து, விழிகளை மூடியவாறு வணக்கம் செய்தாள். தமிழரசி சிரித்தபடி பதில் வணக்கம் செய்தவளாகத் தனக்குரிய வகுப்பறைக்குள் பிரவேசித்தாள். அவள் நுழைந்து மீளும்போது, காலைப்பள்ளி முடிந்ததற்கு அறிகுறியாக மணிச் சத்தம் கேட்டது.

வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள், தமிழரசி.

மீண்டும், அவள் மனம் அலை பாய்ந்தது.

திருமணப் பத்திரிகை அச்சடிக்கும் தோதுடன் வந்து விடுமாறு தன் இதயத்தின் அபிலாஷையைச் செப்பிய இல்லத் தாய் திலகவதி அம்மையாருக்கு என்ன பதில் சொல்வது, எப்படிச் சொல்லுவது என்று புரியாமல் தடுமாறினாள் தமிழரசி. ஒரு சமயம், தொலைபேசி வாயிலாகவே, மோகன் தாஸ் சொன்ன முடிவைச் சொல்லிவிடலாமா என்று முடிவு செய்வாள். மறுசமயம், அம்மாவிடம் நேரில் சென்று விவரத்தைச் சொல்வதுதான் மரியாதை என்று 'மேஷ ரிஷபம்' கணிப்பாள். எப்படியோ, தனக்குக் கிட்டிய ஏமாற்றத்தில், தன்னைப்போலவே, இல்லத்தின் அன்னையும் மனம் நொந்து போவாள் என்பதைத் தீர்க்கமாக அவள் உணராமல் இல்லை.

அன்று மாலை பள்ளி முடிந்ததும், அவள் முந்தி நடந்து சென்றாள். மண்ணடி வீதியில் கொஞ்சம் தக்காளி வாங்கிப் பிளாஸ்டிக் பையில் போட்டுக்கொண்டாள். பெண் விற்ற தால் 'கொசுறு' வேறு கிடைத்தது. அங்கிருந்து நடை யைத் தொடர்ந்தாள். வழியில் பழைய நொண்டிப் பிச்சைக் காரன் தள்ளுவண்டியில் அமர்ந்து கைகளால் வண்டியை இயக்கிச் சென்று கொண்டிருப்பதை அவள் கண்டாள். பத்துக் காசு அவள் இருப்பில் குறைந்தது!

புதிதாக வந்திருந்த குமாரி கதீஜா பேகம் அவளை நைனியப்பன் தெரு மடக்கத்தில் சந்தித்தாள். அவள் சொன்ன தகவல்கள் சில தமிழரசியைப் புண்படுத்தின. ''வானத்திலிருந்து இறங்கி வந்ததுபோல நடிக்கிறாள் தமிழரசி. எல்லாம் சுத்த ஹம்பக்!... அவள் ஏற்கனவே அம்பலவாணன் என்கிற பணக்கார வீட்டுச் செல்லப் பிள்ளையை 'லவ்' பண்ணினாள். அவன் கெட்டிக்காரன். தப்பிப் பிழைத்தான். இப்போது மிலிட்டரி ஆசாமி ஒருவன் கிடைத்திருக்கிறான். அவன் நொண்டி. அதனால்தான், அவன் இவள் பக்கம் சாய்ந்திருக்க வேண்டும். பார்க்கலாம்,

இந்தக் கதைக்கும் எத்தனை நாள் டயம் என்று!...'' என்று தன்னைப்பற்றிக் கதீஜா போகத்திடம் ஜலஜா அவதூறு பேசிய விஷயங்களை விஸ்தாரமாகக் கேள்விப்பட்டவுடன், தமிழரசிக்கு ரத்த நாளங்கள் துடித்தன. முந்தி வந்த மொட்டைக் கடிதத்துக்குக் காரணமானவள் குமாரி ஜலஜா தேவி என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள அவளுக்கு வெகு நேரம் ஆகவில்லை. ஜலஜாவை நேரில் சந்தித்து அவளை ஆத்திரம் தீர ஏசிப் பேசிவிட வேண்டுமென்று அவள் சினம் கொண்டாள்.

அவள் வீட்டை அடைந்ததும், சிறு பொழுதுவரை மனக்கிலேசத்துடன் அப்படியே பிரமை பிடித்து உட்கார்ந்து விட்டாள். பிறகு, இரவுச் சமையலுக்குத் தக்காளிப் பழங் களைத் துண்டு போடத் தொடங்கினாள். அப்போது, சீதை வந்தாள். ''எங்கே டீச்சர் உங்களைக் காணலே?'' என்று கவலை சேர்த்துக் கேட்டாள்.

''உடம்புக்குச் சுகமில்லை!'' என்று 'பொய்' பேசினாள், தமிழரசி. ''உங்க அண்ணாச்சி சுகமாக இருக்காங்களா?'' என்று அவளிடம் விசாரித்தாள், தமிழரசி.

''சுகமாக இருக்காங்க. அவங்ககூட உங்களைப்பற்றி என் கிட்டே கேட்டாங்களாக்கும்!'' என்றாள் சீதை.

''அப்படியா?'' என்ற கேள்வியுடன் அவள் பேச்சு முடிந்தது. 'அவர் முகத்தைப் பார்க்காமல் இருக்கத்தான் முடியவில்லை. என்ன செய்வது? கதை திசை தப்பிப் போய் விட்டதே!'

முகட்டில் இருந்த காகம் ஒன்று கரைந்தது.

விளக்குகள் ஏற்றப்பட்ட நேரத்தில், சாவித்திரி வந்தாள். அவளிடம் தனக்கு நேர்ந்த துர்ப்பாக்கியத்தைத் தெரிவித் தாள் தமிழரசி. கட்டுப்பாடான அமைதியுடன் பேசினாள் அவள்.

சாவித்திரி துன்பம் மிகுந்து காணப்பட்டாள். ''லவிதம் என்றும் விதி என்றும் சொல்கிறார்களே, அது இம்மாதிரியான

ஒரு முடிவைக் கொண்டுதான் போலிருக்கிறது!... நடந்ததைச் சொப்பனமாக எண்ணி மறந்து விடுங்கள். மிஸ்டர் மோகன்தாஸை மறந்து விடுங்கள், தமிழரசி!'' என்றுள் சாவித்திரி.

'மோகன்தாஸை மறந்து விடுங்கள்!' என்று அவள் தூண்டிய அந்த எச்சரிக்கை, தமிழரசியின் ஹிருதயப் பகுதியைத் தாக்கியது: துடி துடித்தாள். நெற்றிப் பொட்டில் கவண் கல் பட்டமாதிரி துடி துடித்தாள். ''சாவித்திரி! அப்படிச் சொல்லாதீங்க!—அன்பர் மோகன்தாஸை நான் மறக்க வேண்டுமா? ஐயையோ! அவர் என் காதலை ஏற்கவில்லை. அதற்கு அவர் சூழல்தான் காரணம். அதற்காக, அவரை மறந்துவிட முடியுமா? நம் தாய் மண்ணைக் காப்பாற்றப் போராடிய தியாகி அல்லவா அவர்! நாட்டின் மானம் காக்கத் தன் இரு கால்களையும் தியாகம் செய்த தீரர் ஆயிற்றே அவர்!... அவரையோ, அவரது அன்பையோ நான் இந்த ஜன்மத்தில் மறக்க முடியாது. அவர் தியாகி!—அவர் என்றென்றும் என் வணக்கத்துக்குரியவர்! அந்தப் பக்திப் பண்பாட்டின் துணையினால்தானே அவரிடம் என் மனமும் அதுவரை அண்டிக் கிடந்தது?...'' என்று நிலையை நியாயபூர்வமாக எடுத்துக் காட்டி விளக்கினாள், தமிழரசி.

''எப்படிப் பார்த்தாலும் நீங்க ஒரு அதிசயப் பெண்ணாகத்தான் என் கண்களுக்குக் காட்சி தர்றீங்க டீச்சர்!'' என்று நெஞ்சொட்டிப் பாராட்டினாள், சாவித்திரி.

மார்கழி வரப்போகிறது, பாருங்கள்.

அதனால்தான் குளிர் தாங்கவில்லை.

இருள் கொட்டியது.

பனியும் கொட்டியது.

இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு தான் சாவித்திரியால் அங்கிருந்து நழுவ முடிந்தது.

நிலவைப் பிடித்து விளையாட ஆசைப்படுகிறது, குழந்தை. ஆனால், அதற்கு நிலவு கிடைக்கவில்லை என்று

தெரிந்ததும், ஒரு பாட்டம் அழுகைப் படலத்தை விரித்து விட்டுப் பிறகு, 'கப்சிப்' என்று ஓய்ந்து விடுகிறது. அதன் ஆசை வேறு புதிய போக்கிற்குப் பாய்ந்து விடுகிறது. மீண்டும் சிரிப்பும் கும்மாளமும்தான். குழந்தைகள் உலகம் தனி. குழந்தைகளால் எதையும் ஆசைப் படவும் முடிகிறது; அதை ஒத்து, மறந்து விடவும் முடிகிறது! குழந்தைகளுக்குப் பகவான் அருளிய வரப்பிரசாதம் இந்நிலை!

தமிழரசி தன்னை நினைத்து, தன் விதியை நினைத்து, விதியின் வினையை நினைத்து, வினையின் தெய்வத்தை நினைத்து மௌனத் துன்ப வெள்ளத்தில் அவள் நாட்களையும் பொழுது களையும் ஓட்டினாள்.

தமிழரசி ஆசைப்பட்டாள்; ஆசைப்பட்டது வாய்க்க வில்லை. ஆனால், அந்த ஏமாற்றத்தை அவளால் மறக்கவும் முடியவில்லை. அவள் உயிர்க்கழுவில் ஊசலாடினாள். ஆற்றாமை அவளை நிரம்பவும் சோதித்தது. பால் தொட்டுப் பால் கறப்பது வழக்கம். இவள் துன்பத்தைத் தொட்டுத் துன்பத்தை வளர்த்தாள். தன் பிறப்பின் புதிரை எண்ணினாள்; வீரர் மோகன்தாஸைச் சந்தித்த முதற் சந்திப்பை எண்ணினாள்: அவனுடைய நாட்டுப் பணியின் காரணமாக, அவன் தன்னுடைய இரண்டு கால்களையும் இழந்து வந்த அந்தக் காட்சியால், நெஞ்சம் உருகி உணர்ச்சி வசப்பட்டு நின்ற அவள், தெய்வத்திற்குப் போட்டிருந்த மலர்மாலையை எடுத்துப்போய் அவன் கழுத்தில் போட்டுக் கும்பிட்ட அந்த மறக்க முடியாத நிகழ்ச்சியினைச் சிந்தித்தாள். அவனையே தன் துணையாக்கிக் கொண்டு, அதன் மூலம் அவனுக்குத் தான் ஒரு துணையாக ஆகிவிட வேண்டுமென்று இலட்சியக் கனவு கண்டு, முடிவில் எல்லாமே பொய்யாய், கனவாய், பழங் கதையாய்ப் போய்விட்ட விதியையும் சித்தத்தில் ஏற்றினாள்.

துன்ப நினைவுகளின் நிலைகள் அவள் இருதயத்தில் சங்கமம் ஆயின. அவள் நெஞ்சம் படபடத்தது; இருதயத் துடிப்பு துரித கதியில் இயங்கியது. அவள் இருந்த இடத்தைத் துறந்து நீங்கினாள்.

நீங்காத நினைவுகளாக, கஸ்தூரி அன்னை இல்லத்தின் தாய் குமாரி திலகவதி அம்மையாரின் அன்புப் பொழிவுகள் அவள் ஆத்மாவை இட்டு நிறைத்தன. அந்த அமைதியின் ஆறுதலே தனக்குக் கிடைத்த மகத்தான பாக்கியமாகவும் அவள் கருதி மகிழ்ந்தாள். அந்தத் தாயின் அன்பு வாழ்வே தனக்கு ஓர் ஆதரிசம் என்றும், அந்த அன்னையின் தியாக வாழ்வே தனக்கு ஒரு துணை என்றும் கொண்டு ஒழுகி வந்த நிகழ்ச்சியின் பின்னல்களை அவள் மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்து அமைதி கண்டாள். இந்நிலையிலே, தலைவியைச் சந்தித்துத் தன் ஆசை பொய்த்த சோகத்தை அவளிடம் சொல்லிவிட வேண்டுமென்று நினைத்தாள். ஆனால், அந் நினைவு அவளுக்கு நாட்களைக் கழித்தோடத்தான் கை கொடுத்தது. 'முதலில் திருவாளர் சொக்கநாதனைச் சந்திக்க வேண்டும்; அவரிடம் எனது பிறப்பு ரகசியத்துக்குத் தடயம் ஏதாவது கிடைக்கிறதா என்று முயல வேண்டும். இதுவே, இறுதி முயற்சி. அப்பால், என் எதிர்காலம் சமுதாயப்பணிக்கே அர்ப்பணம்! அப்போதுதான், என் பிறவிக்கு ஒரு பொருளும் பயனும் கிட்ட முடியும்! ஆம்; தலைவி இருக்கும்வரை எனக்குக் கவலை ஏது? துன்பம் ஏது?' என்று மனத்தில் கருத்துக்களை அடுக்கினாள். சொக்கநாதன் சந்திப்புக்குப் பிறகு, அவள் சாந்தோம் சென்று திரும்புவாள்!

காலம் ஒரு புள்ளிமான்!

போர் நிறுத்த வரம்பைத் தன் போக்கில் மீறிக்கொண்டு தான் இருந்தது பாகிஸ்தான்.

ஊடுருவல் வேலையில் தனது புத்தியைக் காட்டிக்கொண்டு தான் இருந்தது சீனா.

அங்கே, விண்வெளிக் கப்பல்கள் இரண்டும் விண்ணிடைச் சந்தித்தன.

இங்கே, பாரதி விழா கோலாகலம்தான்!

அன்றைக்குக் காலையில் தமிழரசி பள்ளிக்குப் புறப்பட்டாள். வழி நெடுகிலும் வாகுடன் விளங்கிக் கொண்டிருந்த

மாக்கோலங்களின் மகிமையை ரசித்தவாறு அவள் பள்ளி மண்ணை மிதித்தாள். பள்ளியின் தொடக்கத்துக்கு அடையாளமாக மணி ஒலித்தும்கூட, அங்கங்கே ஆசிரியைகள் இரண்டு பேராகவும் மூன்று பேராகவும் கூட்டம் கூடிக் காணப்பட்டார்கள். அப்பால், தலைமை ஆசிரியையின் தலை அங்கங்கே எட்டிப் பார்க்கத் தலைப்பட்டதும்தான், ஆசிரியைகளின் தலைகள் அவரவர்களுக்குகந்த வகுப்புக்களில் அடைக்கலம் புகத் தொடங்கின.

பள்ளியின் சுற்றுச் சார்பிலே சலனம் எழுந்து அடங்கிய விவரம் பற்றி ஏதும் தெரியாது தமிழரசிக்கு. எதையும் அறிந்து கொள்ளும் அக்கறையும் உண்டாகவில்லை அவளுக்கு. கடைசியில், ஸ்கூல் முடிந்து, மத்தியான்னச் சாப்பாட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள், அவள். அப்போது, சாவித்திரி ஓடி வந்து அவள் செவிகளில் தூவிய செய்திகளைக் கேட்டதும், அவள் பொறி கலங்கிப் போனாள்! 'பாவம்!... பரிதாபத்துக்குரிய பெண் ஜலஜா! ஏமாந்து விட்டாள்! பைத்தியக்காரி!...'

ஜலஜாவைப் பற்றிய சிந்தனையோட்டத்துடன் வட்டிலில் போய் அமர்ந்த தமிழரசிக்கு உணவு செல்லவில்லை!

## பக்தை மீரா

---

### இருபத்து நான்கு

மனம் வாழுகின்ற நெறி முறைகளின் தராதரத்தைப் பொறுத்துத்தான், மானுடப் பிறவியின் வாழ்க்கைக்கு அந்தஸ்து நிர்ணயிக்கப்படுகிறது; பெருமை அளவிடப்படுகிறது; மதிப்பும் வரம்பிடப்படுகிறது. இதுவே, மனிதத் தத்துவத்தின் படைப்பு ரகசியமாகவும் அமைந்துவிடுகிறது.

ஆம்; இதுவேதான், மனத்தின் வாழ்க்கை!— இதுவேதான் மானுடத்தின் வாழ்க்கையும்கூட!

வெள்ளிக்கிழமை எண்ணெய் ஸ்நானம் செய்து, பூசையை முடித்தபின், பலகாரம் சாப்பிட்டாள். பள்ளிக்கு இன்னும் நேரம் இருப்பதை அறிந்ததும், பழைய புத்தகங்களை எடுத்துக் கடை பரப்பினாள். ஆனால், அவள் மனமோ குமாரி ஜலஜாவைப் பற்றி எண்ணியது; ஜலஜாவுக்காக அனுதாபப்பட்டது. ஜலஜாவை எடை போட முயன்ற போதுதான், மனம் எனும் சக்தி ஒரு தத்துவமாகத் தமிழரசியின் சிந்தனையில் தெறித்து விழுந்தது. 'பாவம்!'— ஜலஜாவின் சார்பில் அவள் வருந்தினாள்.

தமிழரசி பள்ளிக்குப் புறப்பட வேண்டும்.

தமிழரசி தன்னைப் பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க, அவள் மனத்தில் இல்லத்தின் தாய் திலகவதியின் மதிப்பும் மாண்பும் நாளுக்கு நாள் உயர்ந்து உச்சத்தில் ஏறிக் கொண்டேயிருப் பதை அவள் இதயபூர்வமாக அறிந்தாள். திலகவதி அம்மையார் ஈடு இணையற்றதோர் அதிசயப் பிறப்பாகவே அவள் இதயத்தில் தோற்றம் தந்தாள். அவளை எண்ணிய போது, தான் ஓர் அற்பம் என்றும் அவள் உணரவும் தயாரானாள். அனாதைக் குழந்தைகளையே உலகமாகவும், அவர்களுக்குச் செய்ய வேண்டிய பணியே தன் ஜீவாதாரக் குறிக்கோளாகவும் கொண்டு இலங்கி வரும் அன்னையின் அன்புக்கு, பண்புக்கு, கடமைக்கு, இலட்சியத்துக்கு யார் தான் ஈடாக முடியும், இணையாக முடியும்?

பள்ளி முடிந்து வீடு திரும்புகையில், பழைய புத்தகக் கடையில் தற்செயலாக அகப்பட்டது, 'வருண குலாதித்தன் மடல்'. சொற்பக் காசுகள்தாம் செலவு. அவள் வெகு நாளாகப் படிக்க விழைந்த நூல் அது. அதைப் புரட்டிப் பார்த்தாள். மன்மதனைக் குறித்திட்ட அழகிய புதிய பதச் சேர்க்கைகளை ரசித்துக் கொண்டே மூடினாள். நிதானமாக ஒரு நாளைக்குப் படிக்க வேண்டுமென்றும் திட்டமிட்டாள். மேஜையடிக்கு வந்தாள். மகாத்மா காந்திஜியின் சுய சரிதை

இருந்தது. புரட்டியபோது, அவள் வேண்டிய 'பட்டினி விரதம்' அத்தியாயம் வந்தது. புலனடக்கத்துக்கு ஒரு சாதனமாகப் பட்டினி விரதம் இருக்கத் தொடங்கிய அண்ணலின் வாழ்வு விரிந்தது. 'இந்தப் பாடத்தை நானும் முயன்று செயற்படுத்த வேண்டும்.'

தமிழரசி பார்வையைத் திருப்பினுள். செய்தித்தாள் இருந்தது. அன்றைச் செய்திகளுக்குக் கிடைத்த வைரக் கிரீடமாகத் திருமிகு ராஜாஜீயின் எண்பத்தெட்டாவது பிறந்த நாள் விழா அமைந்து இருந்தது.

தமிழரசி இப்போது மோகன்தாஸை எண்ணினுள். அவனைச் சந்திக்காமல் விலகி இருந்த நாட்களையும் எண்ணினுள். அவளுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. மோகன்தாஸ் தனக்கு வழங்கிய தீர்ப்புக்குப் பின்னர், அவனைச் சந்திக்க வேண்டுமென்று அவளது உள்மனம் விரும்பிய தருணங்களிலெல்லாம் அவளது வெளி மனம் வெகு தூரம் சலனம் அடைந்தது. 'அன்பர் மோகன்தாஸ் அவர்களைச் சந்திக்கத் தான் விரும்புகிறேன். ஆனுல், எனக்கு ஏனே தயக்கம் அதிகரிக்கிறது. இதற்கு அவர் சொன்ன முடிவின் விளைவு காரணமல்ல. அவரைச் சந்திப்பதில் எனக்கு ஆர்வம் இருக்கிறது. அதன் மூலமாக, என் மனம் ஓரளவுக்கு அமைதியும் அடையக்கூடும். இதுதான் உண்மையுங்கூட. எனக்குக் கிடைத்த ஏமாற்றம் என் துர்ப்பாக்கியத்தின் விளைவு. அதற்காக, அவரை அன்றும் நோகவில்லை; இன்றும் நோக மாட்டேன். ஆனுல்... நான் அவரை மீண்டும் பார்ப்பதை அவர் வரவேற்பாரா?... ஒருவேளை நான் அவரை வலியச் சென்று காண்பதை அவர் தவருகக் கணிக்க நேர்ந்தால்?... ஈஸ்வரா!... என் பிறப்பு ஒரு புதிராக மட்டுமல்ல, ஒரு முழு நேரப் போராட்டமாகவல்லவா ஆகிவிட்டது!... என்ன பாவம் செய்தேன், நான்?' என்று அவள் தனக்குத் தானே ஆராய்ந்தபோது, அவளுக்கு எஞ்சியது கண்ணீரும் பெருமூச்சும் தான்!

இவ்விதமான குழப்பத்தின் அதிர்ச்சியில் நாட்கள் எவ்வளவோ கழிந்தோடிவிட்டன!

அவள் பீரோவைத் திறந்தபோது, எடுத்த எடுப்பில் தென்பட்டது அவளுடைய பாங்குச் சேமிப்புப் புத்தகம். 'எவ்வளவோ கனவு கண்டேன்!'— அவள் ஆற்ருமையுடன் பார்வையை விலக்கிக் கொண்டபோது, கதர்வேட்டியும் சட்டையும் அவள் குறிப்புக்கு இலக்காயின. 'அன்பருக்குப் பொங்கல் பரிசாகக் கொடுக்க வேண்டும்!...' திரும்பவும் வெய்துயிர்ப்புத் திரும்பியது.

கிரிதர கோபாலனை நெஞ்சு இணைத்து, நினைவு இணைத்து உருக்கத்துடன் அழைத்துக் கொண்டிருந்தாள் பக்தை மீரா' மானுடப் பெண்ணின் தெய்வக்கனவு பலித்த விந்தை ஒரு சரித்திரமாகவே பரிமளித்துவிட்ட பொற்பை வியந்தவளாக, அவள் கூடத்துக்கு வந்தாள். மோகன்தாஸைச் சந்திக்க வேண்டுமென்ற கிளர்ச்சி எழுந்தது. ஆகவே, முகத்தை அலம்பிக்கொண்டு கண்ணுடிக்கு முன் வந்தாள். பொட்டு பிரதிபலித்தது. ஆனாலும், முன்பிருந்த ஒரு தெளிவு இப்போது முகத்தில் இல்லை என்பதை அவள் உணர்ந்தாள். வேதனையின் நெட்டுயிர்ப்புக்குப் பின்னே, அவள் புறப்பட ஆயத்தமாகி, பூட்டுச்சாவியைக் கைக்கொண்டாள்.

அப்போது :

"தமிழரசி!" என்ற அன்பான குரலை முன்னேட விட்டவாறு வந்து நின்ருன் மோகன்தாஸ். உடலுக்கு இரு மருங்கிலும் ஊன்றி நின்ற கைப்பிடிகளை அழுத்தமாகப் பற்றிக்கொண்டு நின்ற அவன் அவளை ஏக்கத்துடன் பார்த்துவிட்டு, "என்னை மறந்திட்டீங்களா தமிழரசி?" என்று கேட்டான். அவன் கன்னங்களில் மழை பொழிந்தது!

தமிழரசி செய்வகை புரியாமல் திகைத்து நின்ருள். அவன் கேட்ட கேள்வியையும் வடித்த கண்ணீரையும் அவளால் தாங்க முடியவில்லை. அவளும் பதிலுக்குக் கண்ணீர் வடித்தாள். "உங்களை மறந்திட்டால், அப்புறம் என்னுலே உயிர்

தரிக்க முடியாதுங்களே!'' என்று தேம்பினுள். ''உங்களேப் பார்க்கிறதுக்குத்தான், இப்போது புறப்பட்டுக்கிட்டிருந் தேனுங்க!'' என்றும் சமாதானம் சொன்ஞள்.

''நான் இதுக்கு முன்னே பலமுறை வரத்தான் துடிச்சேன். ஆனல், நீங்க என் வருகையைத் தப்பாய் நினேச்சால் என்ன செய்கிறதுன்னு பயந்துதான் வராமல் இருந்திட்டேன்!'' என்று உள்ளத்தை மறைக்காமல் பேசினன்.

''ஐயையோ, அப்படியெல்லாம் இனிமேல் எண்ணுதிங்க. அன்புக்குக் கட்டுப்பட்டவுங்க நாம் ரெண்டு பேரும். ஆனதாலே, அன்புக்காகவே, அன்பு செலுத்தக் கடமைப்பட்டவங்களும் நாம்தான். அன்பை மதிச்சு — அன்பை வாழ்த்தும் பக்குவப்பட்ட உங்களுக்கும் எனக்கும் அன்புதாங்க எப்போதும் சதம்!... அந்த அன்பு நம்மோட தூய நட்பை — புனிதமான பாசத்தைக் கடைசிவரைக் காப்பாத்தாமல் போகாதுங்க!...''

அவளது மனமொழிகளே மெய்ம்மறந்து கேட்டான் அவன்.

தமிழரசி சுய உணர்வு அடைந்து அவனே நோக்கினுள்.

அவன் இன்னமும் நின்று கொண்டுதான் இருந்தான்.

பதறினுள் அவள். ''உட்காருங்க!'' என்று வேண்டினுள். தூக்க மாத்திரை சாப்பிட்டு அமர நித்திரை செய்ய முனேந்த கட்டத்தில் தன் நிமித்தம் கண்ணீர் பெருக்கிய மோகன்தாஸின் அற்புதமான மனப்பண்பு இப்போது அவளுள்ளே நிழலாடியது.

அன்றொரு நாள் தன் காதலுக்கு முடிவு வழங்கியபோது, அவன் கொட்டிய கண்ணீரையும் அவள் நெஞ்சத்தில் ஏந்திஞள். 'நீங்க அளிக்க முன் வந்த இந்த மகத்தான பாக்கியத்தை அங்கீகரிக்க முடியாத நிலேமையிலே நான் இருக்கிறேன். அதுக்காக, நீங்க பெரிய மனசுபண்ணி என்னே மன்னிச்சிட வேணும். எனக்காக ஏற்கனவே ஒரு காதலி ரொம்பக் காலமாய்க் காத்துக் கிட்டிருக்கு! நீங்க என்னேத்

தயவு செஞ்சு தப்பாய் நினைச்சுக்காதீங்க!...' என்று பரிவுடன் கெஞ்சிய சம்பவத்தையும் அவள் மனச்சான்று படம் பிடித்து வைத்திருந்து இப்போது அதைப் பிரித்துக் காட்டியது.

தாய் நாட்டு வீரன் மோகன்தாஸைக் கைத்தலம் பற்றக் காத்திருக்கும் அந்த முகமறியாப்பெண்ணின் நற்பாக்கியத்தை வியந்து உள்ளூறப் பலமுறை போற்றிப் பாராட்டியிருக்கிறாள், தமிழரசி. அந்தப் பாக்கியவதியை நேருக்கு நேராகச் சந்திக்கவும் துடித்துக் கொண்டிருந்தாள். அவளுக்குத் திருமணத்துக்கு முன்பாகவே ஒரு விருந்து வைக்க வேண்டுமென்றும் அவள் திட்டமிட்டிருக்கிறாள்!...

"தமிழரசி!"

அவள் சிலிர்த்துக் கொண்டு கண்களைத் திருப்பினாள். கைகளைச் சுவாமி விவேகானந்தர் மாதிரி மார்பை அணைத்துக் கட்டிக்கொண்டு நின்றாள் அவள்.

"இந்தாங்க!" என்று சொல்லி ஒரு வாழை இலைப் பொட்டணத்தை அவளிடம் நீட்டினான் அவன்.

"என்னோட ஏழைப் பெற்றோர்கள் இந்த ஏழைப்பிள்ளைக்கென்று இந்தப் பணக்கார இனிப்பைச் செஞ்சு கொடுத்தாங்க. அதிலே துளியை உங்களுக்காகக் கொணர்ந்தேன்!"

கைதொட்டுப் புசிக்குமுன்னே அந்த ஹல்வாவின் இனிப்பு பூராவும் அவள் மனத்தில் பரவியது. உணர்ச்சி சுழிக்க, ஆனந்தக் கண்ணீர் சுழிக்க, அவள் அந்த இனிப்பைப் பெருமையுடன் வாங்கிப் பாசத்துடன் சுவைத்தாள்; பிறகு, நன்றியறிவு சொன்னாள்.

"அன்புக்கு நன்றி தேவையில்லீங்க!" என்று மெல்லிளஞ் சிரிப்பை உதிர்த்தவனாக, அங்கிருந்து புறப்படப் பற்றுக் கோடுகளைப் பற்றினான்.

அப்போது, வாசலிலிருந்து, "அம்மா, தாயே!" என்ற குரல் கேட்கவே, தமிழரசி வெளியே சென்றாள். மோகன் தாசும் எட்டிப் பார்த்தான்.

வழக்கமாகக் காணப்படும் நொண்டிப் பிச்சைக்காரன் வண்டியில் 'ஜம்'மென்று வீற்றிருக்க, அவ்வண்டியை இழுத்து நின்ருள் ஓர் இளம்பெண். தெருவிளக்கின் வெளிச்சத்தில் அந்தப் பெண் அந்தமாகத் தோன்றிஞள். அவள் முகத்தில் பெருமையும் சாந்தமும் போட்டியிட்டிருந்தன. நெற்றியில் சாந்துப் பொட்டு. தலையுச்சியில் டிசம்பர்ப் பூக்கொத்து.

அந்தப் பிச்சைக்கார ஜோடியை இமை மூடாமல் பார்த்தாள், தமிழரசி. அவர்களைப் பார்த்துவிட்டு, அதே சடுதியுடன் மோகன்தாஸையும் பார்த்தாள். அவன் கலங்கிய கண்களைத் தரிசித்ததும், அவளுக்கும் கண்கள் கலங்கின.

"அம்மா, நேரமாயிடுச்சுங்க. ஏதானும் போடுங்க!" என்ருள் பெண்.

"இரும்மே! அவசரப்படுறியே!... பட்டணத்துக்கு வந்திட்டாலே ஒரு அவசரமும் கூடவே வந்திடும்போல!... இனிமே, மறு ரவுண்டு சுத்தவா போறோம்! அதான் இல்லையே! சோறு துண்ணுட்டு தூங்கப் போறோம்! அவசரப் படாதே!... நீங்க கோபப்படாதீங்க அம்மா!... பொண்ணு ரொம்பத் தங்கமுங்க! ரெண்டு காலும் போன இந்தப் பாழும் ஜென்மத்தும் பேரிலே கடவுளாட்டம் பச்சாதப்பட்டு எனக்குக் கடைசி பரியந்தம் துணை இருக்கிறதா வந்து என்னோட சேர்ந்திருக்குதுங்க!..." என்ருன் அவன்; அளவு கடந்த நன்றி கனிந்தது, அவனது இதயக் குரலில்.

கதி மாறிச் சுழன்றவாறிருந்த மன லயிப்பில், வாய் பேச நினைவிழந்து, கொஞ்சம் சாதம் குழம்பு கொண்டு வந்து கொடுத்தாள்.

பிச்சைக்காரன் காதலி கையெடுத்துக் கும்பிட்டாள்.

அந்தப் பெண்ணை நோக்கி மோகன்தாஸ் கும்பிட்டான். நல்ல வேளை, அக்குள்களில் அணைந்திருந்த ஊன்றுகோல்கள் தடுமாறிவிடவில்லை.

வண்டியை இழுக்கத் தலைப்பட்டபோது அந்த நொண்டியின் பார்வை அதிசயத்துடன் மோகன்தாஸின் கைப்பிடி

களையே வெறிக்க வெறிக்க நோக்கியதைத் தமிழரசி கவனிக்கவே செய்தாள்.

மோகன்தாஸ் அங்கிருந்து புறப்படும்பொழுது,"தெய்வங்களை நாம் மனித உருவங்களிலே சந்திப்பது சாத்தியமாகத்தான் அமைந்து விடுகிறது! இல்லீங்களா, தமிழரசி?" என்று சொன்ன பேச்சின் ஒலி அலைகள் இன்னமும் அவள் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன.

நாளைக் கழித்து ஞாயிற்றுக்கிழமை எப்படியும் சொக்கநாதன் அவர்களைச் சந்திக்க வேண்டுமென்ற நினைப்புடன் அவள் உணவு கொள்ள அமர்ந்தாள். சுற்றிக் கிடந்த பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டே அவள் சோற்றுக் கவளங்களை உருட்டிப் போட்டாள். எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட 'பாட்டன் டாங்கு'களைக் கொண்டே அமைக்கப்பட்டிருந்த 'பாட்டன் நகரின்' படங்களைப் பார்த்துச் சிரித்தபடி சாப்பிட்டாள்.

அவள் சோற்றுப்பானையைக் காலி செய்துவிட எண்ணிய மாத்திரத்தில், "அம்மா, தாயே!... என்னாலே பசியைத் தாளவே முடியலேம்மா! ரொம்பப் பசிக்குதம்மா!" என்று தீனக் குரலொன்று கேட்கவே, அப்படியே பானையை நிமிர்த்தி வைத்துவிட்டு எழுந்து கை கழுவினாள். மிச்சமிருந்த முக்கால்வாசிச் சோற்றைச் சருவச் சட்டியில் அள்ளி நிரப்பிக்கொண்டு வாசல்பக்கம் நாடி வந்தாள்.

அங்கே, அபலைப்பெண் ஒருத்தி நாற்பத்தைந்து ஆண்டுகளின் வாழ்க்கையிலேயே நலிந்து சலித்துவிட்ட தோற்றத்துடன் நின்றிருந்தாள். ஒரே மூச்சில் சோறு அவ்வளவையும் காலி செய்துவிட்டு, போதாததற்கு ஒரு செம்புத் தண்ணீரையும் குடித்தாள். அதற்கப்புறம், பலத்த ஏப்பம் ஒன்றையும் வெளியேற்றினாள். கை ஈரம் காயுமுன்னே, அந்த அம்மணி தமிழரசியின் இடது கன்னத்து மச்சத்தைத் தொட்டுப் பார்த்தாள். மறுகணம், "ஐயையோ, தெய்வமே! எம் மவளுக்கும் இதுபோலத்தானே இடது கன்னத்திலே ஒரு

அழகான மச்சம் இருக்குமே!... ஐயோ... எம் மவனே, ராசாத்தி!...'' என்று பாசவெறியுடன் அலறிச் சிரித்தபடி தலை தெறிக்க ஓட்ட மெடுத்தாள்!

சித்தம் பேதமடைந்து விட்டதா, அந்தத் தாய்க்கு?...

## மங்கள பவனம்

### இருபத்தைந்து

மகாலட்சுமியின் வடிவம் பூண்டு அந்தத் தெருவில் அடியெடுத்து வைத்தாள் தமிழரசி. அந்தத் தெருவின் பெயர்: மகாலட்சுமி தெரு. அத்தெருவின் பெயரைப் படித்ததுமே, அவள் மகாலட்சுமியின் மங்கள சௌபாக்கியத்தை உணர முடிந்தது. அவளே மகாலட்சுமியாகப் பொலிந்தாள். பிறை நெற்றியில் பிறைச்சாந்து: வாடாமல்லிப் பூச்சரம் கொண்டையில். ரோஜாப்பூ நிறப் புடவைக்குப் பொருத்தமாக ரோஜா நிறத்தில் சோளி. பாதரட்சைகள் 'சரசரக்க' நடந்தாள்.

நேற்று வானம் எப்படிப் பிளந்து கொட்டித் தீர்த்து விட்டது! அங்கங்கே குழிகளில் தேங்கிய நீர்வட்டங்களில் கொசுக்கள் ராஜ்யபாரம் நடத்தின.

இளங்கிரணங்கள் அவள் கண்களைக் கூசச் செய்தன. அவள் கைக்குட்டையை எடுத்து இடது கையில் பிடித்து நடந்தாள்; நெற்றியில் அணைத்துக் கொண்டு நடந்தாள். எதிர்ப்பட்டாள் காஞ்சனை. தமிழரசிக்கு நட்பு.

''உங்க சோளியும் சேலையும் ரொம்ப ஷோக்காக 'மாடச்' ஆகியிருக்கு! ஆமாம்; எதுவுமே ஒண்ணுக் கொண்ணு 'மாட்ச்' ஆனாத்தான் பொருத்தம் எடுப்பாவும், பார்க்கிறதுக்கு இயற்கையாவும் தோணும்.இல்லையா, மிஸ் தமிழரசி?''

தோழியின் பேச்சு அவளது காதுகளில் வி ந்த

''ஆமாம்!''—தமிழரசியின் இமைப்புருவங்கள் விரிந்து நெற்றி மேட்டைச் சுருக்கின. ''சௌக்கியமா, காஞ்சனை?'' என்று கேட்டாள்.

சுக சௌக்கியத்திற்கு இணக்கமான மறுமொழி பகர்ந்தாள், காஞ்சனை. அனுதை விடுதியில் தமிழரசியுடன் தங்கிப் படித்தவள், காஞ்சனை. எஸ். எஸ். எல். ஸி. வகுப்புக்கு வந்தாள். அவளுடன் சீதேவியும் தொடர்ந்திருக்க வேண்டும். இதே தியாகராயநகரின் பணக்கார விதவை ஒருத்தியின் பாசத்துக்குப் பாத்திரமானுள். முந்திய ஆண்டுவிழாவில் காஞ்சனை ஆடிய, 'ஆண்டாள் நடன'த்தில் மனம் ஈர்க்கப் பட்ட அவள், பிறகு தலைவியைக் கண்டு பேசி, காஞ்சனையைச் சுவீகாரம் எடுத்துக் கொள்ளும் நோக்கத்தைச் சொல்லி, விஷயத்தையும் வெற்றிகரமாக முடித்துக் கொண்டாள். தாய் தந்தை இழந்திருந்த காஞ்சனைக்குத் தாய் மட்டும் கிடைக்கவில்லை: ஒரு 'லகார'த்துக்கு நெருங்கிய சொத்தும் சுகமும் கிடைத்தன. அப்பால், அவளுக்குக் காதல் கிடைத்தது. அதன் பலனுகக் காதலனும் கிடைத்தான். பணக்கார மாப்பிள்ளை நல்ல பொருத்தம்தான். சுக சௌக்கியமான வாழ்வு. நல்ல பெண். பழங்கதையை அவள் மறப்பதில்லை.

''மிஸ்டர் அம்பலவாணன் சௌக்கியமா இருக்கிருரா?'' என்று கேட்டாள் அவள்.

தமிழரசி—அம்பலவாணன் சந்திப்புக்களை அவள் கண்டது உண்டு.

''நல்ல சுகமாக இருக்கிருர், அவர்!'' என்று பதில் சொன்னுள், தமிழரசி. காஞ்சனையைப் பார்க்காமல், சுவரில் ஒட்டப்பட்டிருந்த எழுத்தாளர் மாநாடு பற்றிய விளம்பரத்தைப் பார்த்தவாறு நின்ருள் அவள்.

''உங்க கல்யாணத்தை எப்போது வச்சிருக்கீங்க?'' அடுத்த கேள்வி இது. அம்பலவாணனுக்கும் தனக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருப்பது போலவும், அதற்கான மணவினை நாள் எப்போது என்று தெரிந்துகொள்ள விரும்பி

யவள் போலவும் அவள் கேட்ட கேள்வியில் அர்த்தம் தொனித்தது.

தமிழரசிக்குத் தர்ம சங்கடமாகப் போய்விட்டது. 'அம்பலவாணன் விஷயமாகக் கேட்கிருளா? அல்லது மோகன்தாஸ் விஷயமாகக் கேட்கிருளா?' என்றே மட்டுப் படவில்லை. இவ்விரு நினைவுகளையும் கடந்து, பொதுப்படை யாகவும் அவள் கவலைப் பட்டிருக்கலாமே!

"என் கல்யாண விஷயமாக இப்போது நான் ஒன்றும் தீர்மானம் செய்கிற நிலையிலே இல்லே, காஞ்சனே!"

அவளது பதிலைக் காது கொடுத்துக் கேட்ட காஞ்சனே, அவளைப் பரிவு சேர்த்துப் பார்த்தாள். "உங்களுக்கும் மிஸ்டர் அம்பலவாணனுக்கும் கல்யாணம் செட்டில் ஆகியிருக்கும்னு நினைச்சேன். அப்படித்தான் ஒரு நாள் அவர் தெரிவிச்சார். உங்க குணத்துக்கும் அவர் குணத்துக் கும் ரொம்பவும் பொருத்தமாச்சே!..."

தமிழரசிக்கு அந்த நெருக்கடி நிலை மனத்திற்கு உகந்த தாகத் தோன்றவில்லை. "மிஸ்டர் அம்பலவாணன் சுடர்க் கொடியைத்தான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிருர்" என்று சர்வ சாதாரணமாகச் சொன்ஞள். "மிஸ்டர் அம்பல வாணனை நண்பராகவே மதித்துத்தான் அவருடன் நான் பழகினேன்!"

காஞ்சனே, "அப்படியா? நான் உங்க மனத்தைச் சலனப் படுத்தி விட்டேனே என்று பயப்படுகிறேன், தோழி!" என்று சாதுர்யமாகச் சமாதானம் சொன்ஞள்.

தமிழரசிக்கு அங்கிருந்து கழன்ருல் போதுமென்ருகி விட்டது. புறப்பட்டாள். 'என்னை அம்பலவாணன் காதலித் தார். நான் நிராகரித்தேன். இப்போது, நான் மோகன் தாஸைக் காதலித்தேன். அவர் என்னை நிராகரித்தார்!...'

திருவாளர் சொக்கநாதனின் பங்களா அவரது கம்பீர மான ஆகிருதியை நினைப்பூட்டுவதுபோல, வெகு எடுப்பாக

மஞ்சள் பூச்சுடன் விளங்கியது. அது 'மங்கள பவனம்'. நடுவே பங்களாவை வைத்து, அதன் இருமருங்கிலும் உயர்ந்த பாக்கு மரங்கள் ஒய்யாரமாக நின்றன. தாயின் மணிக் கொடி பட்டொளி காட்டிப் பறந்தது.

தமிழரசி சுற்றுப்புற மதிலைக் கடந்து உள்ளே நுழைந் தாள். வாடாமல்லி நிறக் கார் நின்றது. அவளுக்கு அக் காட்சி அமைதியைத் தந்தது. காரைக் கண்டால் சொக்க நாதனைக் கண்டதற்குச் சமம்தான்!

ஒரு சம்பவத்தை அவள் மறக்க மாட்டாள். ஒரு மகளின் பாசத்துடன் அதைச் சித்தத்தில் தேக்கினாள்.

சம்பவம் சித்திரமானது.

வித்துவான் படிப்பில் மாகாணத்திலேயே முதலா வதாகத் தேறிய கையுடன் அவளை அழைத்துக்கொண்டு இங்கு வந்தாள் இல்லத்தின் தலைவி திலகவதி அம்மையார். "தம்முடைய பள்ளிக்கூடத்தில் உன்னைத்தான் தலைமைத் தமிழாசிரியையாகப் போட்டுக்க வேணும்னு உன் ரிசல்ட்டைப் பார்த்ததுமே எனக்கு 'போன்' செய்து விட்டாரம்மா. அவருக்கு உன்மீது இயல்பாவே உண்டாகி யிருக்கிற பாசத்துக்கும் உயர்ந்த அபிப்ராயத்துக்கும் இது ஒரு நல்ல அடையாளமம்மா. மனுஷர் ரொம்ப தங்க மானவர்" என்று புறப்படும்போதே அவளிடம் விவரம் கொடுத்திருந்தாள் அம்மையார். இல்லத்தின் வளர்ச்சியில் செம்பாதிக்கு மேலாகப் பொருளுதவி செய்து வருபவர் அவர் என்பதைத் தமிழரசி நன்கு அறிவாள். ஆகவே அவரது ஈரத்தை அனுபவித்த பல நூறு அனாதைகளிலே தானும் ஒருத்தி என்பதையும் அவள் அடிக்கடி எண்ணிப் பார்ப்பதும் வழக்கமாகிவிட்டது. அவர் கையால் அவள் எத்தனையோ பரிசுகள் வாங்கியிருக்கிறாள்! சிறுமியாக இருக்கையில் அவள் கன்னங்களில், அவர் எத்தனையோ தடவை செல்லமாகத் தட்டிக் கொடுத்திருக்கிறார்! 'தமிழரசி, தமிழரசி!' என்று அன்பு மொழி மொழிந்து அவள் படிப்புத் திறனைப் பாராட்டி ஊக்குவித்த தவணைகள் எத்தனை, எத்தனையோ!

சொக்கநாதன் மாடியில் அவளுடன் சில நிமிஷங்கள் உரையாடினார். அவளுக்குக் கொடுக்கப்பட்ட காபியை அவள் குடித்து முடிப்பதற்குள் அவர் அவளிடம் அவளது பதவி நியமன உத்தரவைக் கொடுத்தார். முன்கூட்டியே 'டைப்' செய்து வைக்கப்பட்டிருந்தது. ''உங்கள் எதிர் காலம் மிகவும் சிறப்பாக விளங்குமென்பது எனக்கு இப்போதே நன்ருகப் புரிகிறதம்மா! உங்களுக்கு எல்லா வகையான நல்லதிர்ஷ்டங்களும் வந்து சேர வேண்டுமென்று நான் வணங்கும் அம்பலவாணனைப் பிரார்த்திக்கிறே னம்மா!'' என்று வாழ்த்திஞர். எழுதி வைத்துப் படிப்பது போல இருந்தது அவர் பேச்சு. மாணவிக்குக் கிடைத்த பெருமையில் தலைவிக்கு அத்து மீறிய ஆனந்தம்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு, தந்தையைக் காணப் போகும் ஒரு புதல்வியின் பாசக் கிளர்ச்சிக்குத் தமிழரசியும் விலக்கின்றி இலக்காஞள்! ஆம்; என் வளர்ச்சியில் பங்கு கொண்டவர்களில் ஒருவர் இவர். என்னைப் பற்றி அக்கறைப் பட்ட நல்ல மனிதர்!'— இப்படி அவள் நினைவைப் பூச்சர மாக்கிஞள். பூவின் பரிமளம் அவள் உள்ளத்தை நிறைத்த போது, அப்பூமணத்தைத் திசை மாற்றி முயல்வதுபோல, ஆயாள் அன்றைக்குச் சொக்கநாதனைப் பற்றிக் கூறிய சங்கதிகள் அவளை ஆட்படுத்தின. 'உன்னைப் பற்றின பிறப்பு அந்தரங்கம் அந்தப் பணக்காரர் சொக்கநாதனுக்குக் கட்டாயம் தெரிஞ்சிருக்கத்தான் வேண்டும். ஏன்ஞ, உன்னை ஆஸ்பத்திரியிலிருந்து கொண்டு வந்து இல்லத்திலே சேர்ப் பிச்சதும் அவரேதானே!... நீ விவரம் தெரியாத கைக் குழந்தையாய் இருக்கையிலே அவர் உன்னைப் பார்க்கிறதுக் கின்னு வாரத்துக்கு ஒரு வாட்டி எப்படியும் விடுதிக்கு வராம இருந்ததே இல்லையம்மா!... நீ அவரைப் போய் பார்க் கிறதிலே ஒரு தப்பும் இல்லேம்மா!... அவர் மூலம் உனக்கு ஒரு நல்ல சமாசாரம் கிடைச்சதின்ஞ, நீ அடைகிற அந்தச் சந்தோஷத்திலே அமைதி அடைகிறவங்க என்னைவிட வேற யாரும் இருக்க முடியாது, தமிழரசி!...'

கிழவியின் பேச்சு ஏதோ ஒன்றை வெளிக்காட்டி ஏதோ ஒன்றை மறைத்ததுபோலப் பட்டது அவளுக்கு. அந்த 'ஒன்றை' அவள் அறியமாட்டாமலே, திரும்பிவிட வில்லையா?

நினைவுகள் நீங்கின.

முகப்பு மண்டபத்தை அவள் அடைந்தாள். அவளையும் அறியாமல் அவள் நெஞ்சின் அடித்தளத்தில் பாசம் இழை யோடிக் கொண்டிருந்தது. சேலைத் தலைப்பை நுனி கண்டு இழுத்து எடுத்து முகத்தை ஒற்றிக்கொண்டு சேலையைச் சீர் செய்தாள். கீழே காலணிகள் தங்கிவிட்டன. முன்பு, வந்திருக்கையில் முகப்பின் வலப்புறம் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த 'போகன் வில்லா' மலர்களை நோகாமல் விலக்கியபடி சுழல் மாடி வழியே மாடியை அடைந்துதான் சொக்கநாதனைப் பேட்டி கண்டார்கள். இப்போது, அவள் தனித்திருந்தாள். முகப்பைக் கடந்து, முன் ஹாலை நாடி னாள். மையத்திலிருந்த பெருங்கதவுகளில் ஒன்று திறந்தி ருந்தது. அரண்மனை போன்ற பெருமனை அது. நடுவில் எவ்வளவு பெரிய முற்றம்!— செட்டி நாட்டுப் பகுதியில் இருப்பது போல நிலா முற்றம்! பார்வையை மீட்டு முன்கூடத்தை அளந்தாள்.

கட்சி பேதம் கடந்து, மனிதாபிமானம் என்ற தார்மிக உணர்வு ஒன்றுடன், அவரவர்களின் தனித்தனிச் செயல்களைப் போற்றி மதிப்பளிக்கும் வகையில் சுவரைக் கோலம் செய் திருந்த சமுதாயப் பணியாளர்களின் படங்களைப் பிரமிப் புடன் பார்த்தாள் தமிழரசி. அவள் மலைப்பு அடங்கு வதற்குள், அவரவர்களின் உயரங்களுக்குத் தக்கபடி "ஆயில் பெயிண்டிங்"கில் காட்சியளித்த தேசத் தலைவர்களின் வண்ண ஓவியங்கள் வேறு அவளது ரசிப்பைக் கவர்ந்தன. மையத்தில் ஒரு வட்ட மேஜை. அது சிறிது நீண்டிருந்தது. அதற்கு இருபுறமும் வளைந்த இரண்டு தந்தங்கள். மேஜையில் 'பதில் வெட்டுத் தாஜ்மஹால்' கண்களைப் பறிக்கும் வெண்ணிறத் தில் வைக்கப்பட்டிருந்தது. கண்களைப் பறிப்பதற்குப் பதிலாகக் கண்களை ஆகர்ஷித்தன. அதற்குப் புறப்புலம்

போலப் பூக்கிண்ணம் ஒன்று பித்தளையில் இருந்தது. அன்றலர்ந்த ரோஜாப் பூங்கொத்து, சார்ந்த இலைகளுடனும் சார்பு கொண்ட முட்களுடனும் வைக்கப்பட்டிருந்தது. முட்களைத் திரையிடாமல், காட்சிக்குத் திரை விரித்திருந்த பான்மையை அவள் சிலாகித்தாள்.

தனித்திருந்த நாற்காலி ஒன்றைத் தனக்கு உடந்தை ஆக்கிக் கொண்டாள். தாற்காலிகச் சுவாதீனம். அவள் ரேடியோ இசையைக் கேட்டாள். தீட்சிதரின் சுபபந்துவராளி உருப்படியைச் சேலம் பாடகர் ஒருவர் பாடிக் கொண்டிருந்தார். அவள் மனம் மெல்லப் பிணைந்து வந்தது. அதற்குள்ளாக, நல்ல தோற்றத்துடன் கூடிய வாலிபன் ஒருவன் ஓடிவந்து, "வாங்க, அக்கா!" என்று வரவேற்றான். அவனுடைய அந்தப் பாசத்தின் அழைப்பு உபசாரம் அவளைப் பெருமைப் படுத்தியது. உடன்பிறந்தானைப் பார்ப்பது போலப் பார்த்தாள். 'அக்கா' என்ற பாசத்தின் அலைகள் அவள் மனத்தில் மோதி விலகின. அவன்: பூபாலன். சொக்கநாதனின் ஒரே மகன். "பகவானே! நான் அப்பாவைக் கண்டேனா?— அம்மாவைக் கண்டேனா?— அண்ணனைக் கண்டேனா, தம்பியைக் கண்டேனா?— இல்லை, அக்காளைத் தான் கண்டேனா? — தங்கையைத்தான் கண்டேனா?— என்று நான் ஏங்கித் துவண்டு மன வெறுப்பு அடையும் சமயத்திலெல்லாம் உன்னுடைய விளையாட்டுக்களை என்னிடம் ஆடிக்காட்டி விடுகிறாயே!..." அவள் மனம் பாசத்தின் சந்திப்பு நிலையமாக அமையத் துடித்தது.

"அக்கா, முந்தி ஒரு தரம் வந்தீங்க, கஸ்தூரி இல்லத் தலைவியோடே! இல்லீங்களா, அக்கா?"

அவள் 'ஊம்' கொட்டினாள்.

"தம்பியை நான் அப்போது பார்க்கலியே!" வெகு சுவாதீனமாகப் பேசினாள்.

"ரொம்ப அவசரமாப் போயிட்டீங்க. குறுக்கே வந்து பேச முடியுங்களா? அக்கா கண்ணுக்குள்ளவே நின்னுக்

கிட்டிருந்திங்க. இப்ப நேருக்கு நேரே வந்து உட்காந்திட்டீங்க!''

அவன் நயம்படச் சிரித்தான்.

''தம்பி, உட்காரலாமே!''

அவன் அமர்ந்தான். மரியாதையுடன் அமர்ந்தான்.

அப்போது, டெலிபோன் மணி ஒலித்தது. ''ஆமா... எஸ்... எஸ்... நான் அவரோட சன் பேசறேன். அப்பா பூஜையிலே இருக்காங்க... பூஜை முடிஞ்சதும் சொல்றேன்... உங்க பேரை இனிஷியலோட சொல்லுங்க...! இனிஷியல் தானே முக்கியம்?... சரி!.. மா. அங்கயற்கண்ணி! சரி தானே?... ஓ. கே!... வணக்கம்...!'' என்ற மிடுக்குக் குறையாமல் பேசி முடித்தான் பூபாலன்.

''நம்ம தமிழ்நாட்டு ஜவான் மோகன்தாஸுக்கு நீங்க மாலை போட்டுப் புகழ் அஞ்சலி செலுத்தினதைப் பேப்பரிலே பார்த்து ரொம்பவும் கொண்டாடினேன். உள்ளத்து உணர்ச்சியை அப்படியே செயலாக்கி, உங்களோட உள்ளொளியைக் காண்பிச்சிட்டீங்க!... நாடு அவரை மறக்காது! ஆனா, அவருக்குத்தான் இனிமே கஷ்டம். பாவம்! நானும் அப்பாவும் போய்ப் பார்த்தோம்!''

இன்னும் அவன் ஏராளமாகச் சொல்லத்தான் விரும்பினான். ஆனால், அவன் அனுதாபத்தைக் குறிப்பிட்டு, 'பாவம்' போட்ட அந்தக் குறிப்பு அவள் மனத்தை அதிரச் செய்தது. அதிர்ச்சிக்கு மாற்றாக, அங்கு அவளுக்குச் சமதையான வயசுப் பெண் ஒருத்தி அழகுக் களையுடன் வந்து நின்றாள். ''வாங்க!'' என்று பாந்தமுடன் முகமன் கூறினாள். ஈரத் தலையின் நுனி தளர முடிந்து குஞ்சம் போட்டிருந்தது.

தமிழரசி மரியாதை காட்டி எழுந்து, பின் அமர்ந்தாள். தன் இல்லத்தரசி தன்னைப் பார்க்க விழைவதாக ஒரு சமயம் சொல்லவில்லையா சொக்கநாதன்? அந்த இல்லத்தின் விளக்கு

இந்தப் புண்ணியவதியாகத்தான் இருக்க வேண்டும்! விளக்கின் உயிர் அந்தக் கண்களில் பளிச்சிட்டது!

"நீங்க..." என்று கேட்டுக் கொண்டே தமிழரசியின் பக்கத்தில் உட்கார்ந்தாள், அந்தப் பெண். தமிழரசியைப் பற்றிக் கேட்டவள், தன்னைப் பற்றிக் கேட்காமலேயே பதில் சொல்லத் தொடங்கினாள். "இந்தப் பங்களாவை ஆளுறதுக்கு வந்திருக்கிற இரண்டாவது ராணி நான். சிவகாமி என்பது என் பேர்!"

அவள் யூகித்தது பொய்க்கவில்லை.

"உங்களைச் சந்தித்தைப்பத்தி ரொம்பவும் சந்தோஷப்படுறேனுங்க. நான் ஐயாவோட பள்ளிக்கூடத்திலே தமிழ் போதிக்கிறேன். பெயர், தமிழரசி. முந்தி வந்திருக்கையிலே, உங்களையெல்லாம் பார்க்கிறதுக்கு முடியலே! அந்தப் பயணம் அலுவல் ரீதியாவே போய்விட்டுது!..." என்றாள் தமிழரசி.

"நானும் உங்களைச் சந்திக்கிறதுக்குப் பாசமாயிருந்தேன். அவர் கிட்டே கூட ஞாபகப்படுத்தினேன். ரொம்ப சந்தோஷமுங்க!" என்றாள் சிவகாமி.

"தம்பி, அக்காவுக்குக் காபி கொண்டு வரச் சொல்!" என்று அன்புடன் பூபாலனைப் பார்த்து அறிவித்தாள் அவள்.

சிவகாமியின் எளிய தோற்றமும் உயர்ந்த அழகும் தமிழரசிக்குப் பிடித்திருந்தன. சிவகாமி என்று அவள் பெயரைச் சொன்னதும் தமிழரசியின் இலக்கிய மனத்தில் தமிழ்ப் பேராசிரியர் கல்கி அவர்கள் படைத்த சரித்திரச் சிவகாமியின் உருவம் நிழலாடியது. அந்தச் சிவகாமியை அண்ணாமலை மன்றத்தில் கண்டு மகிழ்ந்த அந்தத் தினத்தை அவள் மறவாள்.

காஞ்சி மாநகரிலே பல்லவவேந்தரின் பேரவையில் மகாசிற்பி ஆயனரின் மகள் சிவகாமி நடன அரங்கேற்றம் செய்ததை எண்ணினாள். தமிழரசியின் நெஞ்சரங்கில் கால்

சலங்கைகளின் 'கலீர், கலீர்' எனும் இன்பநாதம் கேட்டது. அப்பர் தேவாரம் ஆரம்பித்து வைத்த சிவகாமியின் கதையை அதே அப்பர் தேவாரம் முடித்து வைத்த அதிசயத்தில் உள்ளடங்கிக் கிடந்த பல அதிசயங்களை எண்ணி வியக்கும் பொழுதல்ல அது என்பதை அவள் அறியாதவள் அல்லள்.

ஏழாம் நூற்றாண்டிலிருந்து திரும்பினாள், தமிழரசி. இந்தச் சிவகாமியும் அவளுக்கு ஓர் அதிசயமாகவே தோன்றினாள்.

இடப்பட்ட ஆணையைச் சிரமேல் தாங்கி, வேலைக்காரி கொடுத்த காபியைக் கைமேல் தாங்கி வந்தான் பூபாலன்.

காபியைக் கையேந்திப் பெற்றாள் தமிழரசி. சொக்கநாதனின் பாக்கியத்தை அவள் போற்றினாள். அந்தப் பாக்கியத்துக்கு ஆதார சுருதியாகத் தோன்றிய சிவகாமி எனும் ஜீவ வீணையை அவள் எண்ணியபோது, தன்னையும் அறியாமல் அவள்மீது அனுதாபம் ஏற்படுவதை அவள் தடுக்க முடியவில்லை. ஒன்றின் லாபம், மற்றொன்றின் நஷ்டமாகத்தான் இருக்குமோ? 'ஒன்றுக்கொன்று மாட்ச் ஆனாத்தான் பொருத்தம் எடுப்பாகவும், பார்க்கிறதுக்கு இயற்கையாகவும் இருக்குமென்று காஞ்சனா சொன்னாள்!'

மாடி ஏறிச் சென்ற சிவகாமி இன்னமும் திரும்பவில்லை. இதை உணர்ந்ததும் தமிழரசியின் மனம் சங்கடப்பட்டது. மெள்ள எழுந்தாள். எட்டிப் பார்த்தாள். பூபாலனைக் கூட காணவில்லை.

கடிகாரம் 'ஒன்பது' என்று மணி சொன்னது.

நேரு ஸ்டேடியத்தில் திரை நட்சத்திரங்கள் யுத்த நிதிக்காக நடத்திய பழைய நிகழ்ச்சிகளின் படங்களைப் பார்த்து விட்டு, பத்திரிகையை மடித்து வைத்தாள்.

''அத்தான்! அத்தான்!'' என்று சிவகாமி பலத்த குரலில் அலட்டிக்கொண்டிருந்த ஓலம் தமிழரசியின் காதுகளை அடைத்தது. தயக்கத்தைக் கடந்து, அவள் பதட்டத்துடன்

மாடிப்படிகளைக் கடந்தாள். மாடியின் வெளித் தாழ்வாரத் ஒதுங்கி நின்றாள் அவள்.

"அத்தான்! அத்தான்! ஏன் இப்படி அழறீங்க?..." என்று பதறினாள்; தெய்வத்தின் முன்னே கண்ணீர் வடித்து நின்ற தன் கணவரின் கண்களைத் துடைத்துக்கொண்டே செருமத் தொடங்கினாள், சிவகாமி.

## மாஜி மிருகம்

### இருபத்தாறு

தனவான் சொக்கநாதனின் கரிய பெரிய விழிகளில் கண்ணீர் கோத்து நின்ற காட்சியைத் தமிழரசி மீண்டும் ஒரு முறை மறைந்து நின்று பார்த்தாள்.

அஞ்சனம் தீட்டிய சிவகாமியின் மான்விழிகள் மீன் களாக மாறி நீந்திக் கொண்டிருந்த அவலக் காட்சியையும் அவள் இரண்டாம் தடவையாக உற்று நோக்கினாள். பங்க ளாக்களிலே கண்ணீருக்கு இடம் இருக்காது என்று நினைத் திருந்தாளோ, என்னவோ?—கண்ணீரைத் திரட்டிக் காட்டித் அந்த இரு பிரிவுச் சக்திகளை அங்கே அப்பொழுது கண்டதும், சற்றே நினைவு பிசகிப் போனாள். எல்லாம் கண் சிமிட்டும் நேரம்தான். பிறகு, தெய்வத்தைப் போலவே சிரிப்பும் அழுகையும் நடுவு நிலைமைக் கொள்கை கொண்டவைதாம் என்ற உண்மை புரிந்தது அவளுக்கு. கண்ணீர்த் துளிகள் அவளை மேலும் வியப்புக்கு உட்படுத்த வேலை இல்லாம லேயே போய் விட்டது.

புருஷனையும் மனைவியையும் தமிழரசி ஒரே நோக்கில் பார்த்தாள். வித்தியாசத்தின் இடைவெளி விரிந்தது. சிவகாமி தன் கணவரிடம் கெஞ்சிக் கொண்டிருந்தாள். "அத்தான்!... அத்தான்!..." என்று அழைப்புக்கள் ஒன்றன் பின் ஒன்றாக உதிர்ந்தன.

அப்போது, தமிழரசி உள்ளே நுழைய விழையவில்லை. அச் செயலை விவேகத்திற்குப் புறம்பாகக் கணித்தாள். புறத்தே ஒதுங்கினாள். சாளரத்தின் இடை நடுவில் அவள் விழிகள் வழி கண்டன.

"அத்தான்!..."

இது ஐந்தாம் தடவை. சிவகாமியின் நா வறண்டிருந்தது. அன்பு ஊற்றுக்கண் திறந்தது.

அப்போதுதான், சொக்கநாதன் அவளை ஏறிட்டுப் பார்த்தார். "நீயா? நீ ஏன் இங்கே வந்தாய்? பூஜை முடிந்தடியும் நான் வந்திட மாட்டேனா?" என்று செல்லமாகக் கடிந்துகொண்டார். பொய்க் கோபம் அது; பொய்ச் சடனை.

"சும்மாத்தான் வந்தேன், அத்தான்!"

அவளது கதுப்புக் கன்னங்களின் குழிகளில் ஒதுங்கியிருந்த ஈரத்துளிகளை அழகு பார்த்துவிட்டு, அவற்றை அவர் இடுப்புத் துவாலையில் பத்திரப் படுத்தினார். "சாமி முன்னாடி அழுதால்தான் எனக்கு நிம்மதியாக இருக்குது. இப்படிப் பட்ட காட்சியை நீ பார்க்கிறது இதுதான் முதல் தடவை போலிருக்குது!" என்றார் சொக்கநாதன். நெற்றித் திட்டில் சிந்தனைக்குக் குறைச்சல் இல்லை.

சிவகாமி ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

"அழறதுக்குக்கூட மனசு வேணும். செஞ்ச தப்புக்களை மனச்சாட்சி கிட்டே ஒப்புக் கொள்கிறதுக்கு வலுவும் நாணயமும் மனசுக்கு உண்டானால், அப்பவே, அந்த மனசு தன் தப்புக்களுக்குக் கழுவாய் தேடவேண்டி ஒரே மூச்சிலே அழுது தீர்த்துப்பிடும். நான் இந்த வகைக்குச் சொந்தக்காரன். ஆனா, குற்றவாளிங்க யார் இந்த லோகத்திலே அழத்துணியுறாங்க? அவுங்களோடே சேர்ந்து பவுடர் போட்டு நடிக்கத்தான் சிரிப்பு ரெடியாக இருக்குதே!..."

அடியும் இல்லாமல், நுனியும் இல்லாமல் தன் கணவர் பேசிய பேச்சு வேதாந்தமாகப் பட்டிருக்க வேண்டும், சிவகாமிக்கு. அவள் முன்னைப் போலவே, இப்போதும் விழித்

தாள். அர்த்தம் விளங்காத பாடலைக்கேட்டு மறுகும் கடைப்பிரிவு மாணவியைப் போல, அவள் காணப்பட்டாள்.

ஒதுங்கி நின்ற தமிழரசியின் மனம் சொக்கநாதனின் மனத்தை ஒட்டியிருந்தது. அவர் பேச்சின் உரை அவளுக்கு விளங்கி வந்தது. 'திருவாளர் சொக்கநாதன் ரகசியக் குற்றவாளியாக இதுவரை இருந்து வந்திருக்கிறார். அவரை அவர் மனச்சாட்சி இனி மேலும் மன்னிக்கத் தயாராக இல்லை. இப்போது, அதன் கெடுபிடிக்குப் பயந்து, தன் தவறுகளுக்குப் பரிகாரம் தேடிக்கொள்ள முனைந்து வருகிறார்!...'

அறிவு பூர்வமாக அவள் கற்பித்துக் கொண்ட முடிவில் அவள் ஒண்டினாள். அவள் வாதமும் உண்மையின் அடிப்படையில் அப்படியே பலித்துவிடுமென்று நம்பவும் அவள் இதயம் இடம் கொடுக்கவில்லை. காட்சி மாற்றத்துக்குத் திரை விழுகிற மாதிரி, அங்கே மௌனம் விரிந்தது. தமிழரசி கெட்டிக்காரத் தனமாகக் கீழ்த்தளத்தை ஒரே எட்டில் அடைந்து விட்டாள். அவள் முன்னர் அமர்ந்திருந்த இடம் மறந்து போயிற்று. அது ஒரு பெரிய விஷயமும் அன்று. மாடிக்குப் போய்த் திரும்பியது ஒரு குற்றமாகவே அவளுக்குப் பட்டது. ஆனாலும், மேலே போய்க் கீழே வந்ததும் ஒரு லாபம்தான் என்று அவள் சமாதானம் கொண்டாள். இல்லையென்றால், சொக்கநாதனின் உள்ளகம் எப்படி அவளுக்குத் தெரிந்திருக்கக் கூடும்? அவர் மனத்தின் ஒரு பகுதியையாவது அவள் அறிய முடிந்தது. ஒரு நாள் பஸ்ஸில் பிரயாணம் செய்த போது, சுசீலா அவளிடம் சொக்கநாதனைக் குறித்துச் சொன்ன விவரத்தை அவள் நினைக்காமல் இருக்கத்தான் முயற்சி செய்தாள்; ஆனாலும், அவளது அறிவின் விவேகம் அந்நினைவின் கதையை அவளது மனச் செவியில் திரும்பவும் படித்துக் காட்டி விட்டது. புறக் கண்களை மூடிக் கொண்டபோது, அகக் கண்கள் திறந்தன. அழகாகக் காட்சி தந்த சிலந்திக் கூட்டுக்கு ஓர் உருவமாகச் சொக்கநாதன் தோன்றினார்.

தமிழரசியின் செவிப் புலன் மாடிப்படிகளைச் சரணடைந்திருந்தது.

அப்போது, மாடிப்படிகளில் நுட்பம் செறிந்த காலடிச் சத்தம் கிளம்பியது.

"அப்படியா? தமிழரசி வந்திருக்குதா?" என்று கேட்டுக் கொண்டே இறங்கி வந்தார் சொக்கநாதன். பட்டாளத்துச் சிப்பாய் மாதிரி அவர் நிமிர்ந்து படிகளைக் கடந்தார். மார்பில் உரோமக் காடு. தொந்தி குலுங்கி விழுந்தது.

சொக்கநாதனைக் கண்டதும் மரியாதையுடன் எழுந்து கைகூப்பினுள் தமிழரசி.

பதிலுக்குக் கும்பிட்டார் அவர்.

"வாங்கம்மா, வாங்க!... வந்து ரொம்ப டயம் ஆயிட்டுதா? காலையிலே பூஜைன்னு கொஞ்சம் நேரம்தான் ஆகிடும். அப்போது யாரும் வந்து என்னையோ, சாமியையோ 'டிஸ்டர்ப்' செய்ய மாட்டாங்க. பரவாயில்லே. இன்னைக்கு உங்களுக்கு ஸண்டேதானே!" என்ருர்.

அவள் மௌனமாகத் தலையை அசைத்தாள்.

'எனக்கு மட்டுமென்ன, உங்களுக்கும் ஸண்டேதானே?' என்று ஒரு 'தமாஷ்' பேசிவிட வேண்டுமென்றுதான் அவள் விரும்பினுள். பள்ளிக்கூடத்தில் சாவித்திரி, கதீஜா பேகம், ஸ்டெல்லாமேரி, அன்னபாக்கியம் என்ருல் அவள் சொல்லி, கைதட்டலையும் வாங்கிக் கொண்டிருக்க முடியும்.

அவள் வாய்திறக்க யோசிப்பதற்குள் அவர், "என்னம்மா, தமிழரசி?" என்று பேச்சை மீண்டும் ஆரம்பித்தார். பால் வெண்ணீற்றுக் கோடுகள் எடுப்பாகச் சுருங்கின.

"உண்மைதானுங்க, ஐயா!" என்று அவரை நேராகப் பார்த்து ஆமோதிப்புக் கொடுத்தாள்.

அவர் பார்வை தாழ்ந்திருந்தது. பிறகு, அது பக்கவாட்டில் திரும்பியது. "இவள்தான் என் சம்சாரம்!" என்று அறிமுகப் படுத்தினுர். அவர் நன்றிப் பெருக்குடன் தம் துணையைப் பார்த்தபடியே சொன்னுர்.

''எல்லாவற்றையும் வந்தவுடனேயே தெரிஞ்சுக்கிட்டேன்'' என்றாள் அவள்.

அவர் தனித்துக் கிடந்த சோபாவில் சாய்ந்தார். ''உட்காருங்க'' என்றார். பூபாலன் கையில் வைத்திருந்த பிஸ்கட் கலர் சில்க் ஜிப்பாவை வாங்கி உதறினார். 'இஸ்திரி' போடப்பட்டிருந்த மடிப்புக்கள் கலைந்தன. அவர் அணிந்து கொண்டார். கழுத்துச் சங்கிலியின் அடியில் தொங்கியது பதக்கம். பதக்கத்தைக் காத்த நரிப்பற்கள் இரண்டும் கவர்ச்சியுடன் மிளிர்ந்தன. ''இது என் சன்!''

''தெரியும்; தம்பி பேர் பூபாலன்!'' என்று மௌனமாக நகை புரிந்தாள், தமிழரசி.

அவள் பேச்சைக் கேட்டதும், அவரது கரிய பெரிய கண்கள் மீண்டும் பெரிதாயின. 'தம்பி' என்று சுட்டிய அவளது உறவுச் சொல்தான் அவரது அதிசயத்துக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். நடப்பும் அதுதான். அவர் தம் மனைவியைத் தேடினார். சிவகாமி வந்தாள். வாடைக்காற்று அதிகரித்தது. காற்றுப் படாமல் பட்டை இழுத்து விட்டுக் கொண்டாள்.

''டிபன், ரெடிங்க!''

சிவகாமியின் அன்பில் தமிழரசியின் பூங்கரங்கள் கட்டுண்டன. 'வீட்டில் இடியாப்பம் சுட்டுச் சாப்பிட்டேன்' என்று அவள் சொல்லி விட்டால் மட்டும் போதுமா?

உணவுக் கூடம் மேற்குத் திசை நாகரிகப் போக்கில் அமைந்திருந்தது. சொக்கநாதனும் பூபாலனும் ஒரு வரிசையாக அமர்ந்தார்கள். எதிர்ப் புறத்தில் தமிழரசி. சமையற்காரி எடுத்துக் கொடுக்க, சிவகாமி எடுத்து வைத்துப் பரிமாறினாள்.

''நீங்களும் உட்கார்ந்து சாப்பிடுங்க!'' என்று சிவகாமியை வேண்டினாள், தமிழரசி.

''மேஜை, நாற்காலி, தட்டு முதலான ஆடம்பரங்களைப் பார்த்திட்டு, என்னைச் சாப்பிட அழைக்கிறீங்களா? உங்க

ளுக்குப் புரியாதா, புருஷன் சாப்பிட்டு முடிஞ்சுதானே பெண்சாதி சாப்பிட வேணும்?... நீங்க விருந்தாளி. நீங்க சாப்பிடுங்க! எனக்கென்ன, மெதுவாச் சாப்பிடுவேன்!...'' என்றாள் சிவகாமி. அவள் தமிழரசியின் தட்டில் கொஞ்சம் புதினா துகையலை எடுத்து வைத்து விட்டு, பூபாலன் பக்கம் திரும்பினாள். அவனுக்குக் கரண்டியினால் மிளகாய்ப் பொடி எடுத்து வைத்தாள். சொக்கநாதனைக் கவனித்தாள். தோசை வைத்தாள்; நெய் ஊற்றினாள். அவர் போட்டுக் கொண்டிருந்த ஜிப்பாவின் இடது தோள் பட்டையில் ஒரு கிழிசல் இருந்தது. அவரிடம் ஜாடை காட்டினான் அவள்.

உயிர் இணை சுட்டிய இடத்தைக் குனிந்து பார்த்த சொக்கநாதன் ஆண்மைச் செறிவுடன் சிரிப்பை உமிழ்ந்தார். ''கிழிசல் சட்டை எனக்கு ஒண்ணும் புதிசில்லே, சிவகாமி'' என்று நறுக்குத் தெறித்த மாதிரி விடை சொன்னார்.

தமிழரசிக்கு அவரது வெள்ளைப் பேச்சு பிடித்திருந்தது. அவர் உருவாக்க முயன்று கொண்டிருந்த யதார்த்த நடப்பைப் பற்றி அவள் சிந்திக்கச் சிந்திக்க, அவரைப்பற்றி அவள் செவிமடுத்த விஷயங்களை எல்லாம் பொய்க் கதையாகவே மதிக்கத் துடித்தாள் அவள். உண்மையை நெருங்க நெருங்க, பொய் விலகி விலகிப் போய்க் கொண்டிருப்பதாகவும் அவளால் கண்டு கொள்ள முடிந்தது. அந்த ஒரு நினைவு அல்லது முடிவு அவளுக்கு மிதந்த ஆரோக்கியத்தையும் ஊட்டத்தையும் கொடுத்தது. அவரைப்பற்றி முடிவிட அவளது மனிதாபிமானப் பண்பு அவசரப்பட்டது. சோதித்துப் பழகியவள் அல்லவா அவள்?—ஆகவே, அவள் நிதானமாகப் பார்வையை இழையச் செய்தாள்.

காபி குடித்தாள்; கை அலம்பினாள். முன்பிருந்த வரவேற்புக் கூடத்தை அடைந்தாள், தமிழரசி.

கை துடைத்த டவலை அங்கிருந்த கொக்கியில் மாட்டினார். ''தமிழரசியும் நானும் கொஞ்ச நேரம் மாடியிலே பேச வேணும். நீ கீழே உன் காலேஜ் பாடங்களைப் படிச்சுக்கிட்டு இரு. நம்ம மானேஜர் போன் பேசினால், எனக்குக் கனெக்ஷன்

கொடு. மத்தியானம் தமிழரசி அக்காவுக்கு இங்கேதான் சாப்பாடு. சின்னம்மாவுக்குத் தெரியும். எதுக்கும் நீயும் ஞாபகப்படுத்திடு'' என்று மகனிடம் சொன்னார். ''வாங்க, மேலே போகலாம்'' என்றார், தமிழரசியைப் பார்த்து.

தன்னுடைய பெற்றோர்களைப பற்றிய விருத்தாந்தங்கள் ஏதாவது இந்த நல்ல மனிதர் வாயிலாகக் கிட்டச் செய்ய வேண்டுமென்று படைத்தவனைப் பிரார்த்தனை செய்தவளாக, சொக்கநாதனைத் தொடர்ந்தாள் தமிழரசி.

மாடி வந்தது.

பூஜை அறையை அடுத்து இருந்தது, பெரிய அறை ஒன்று. அதுதான் அவரது தனியறை. மையத்தில் இருந்த உயர்ந்த முக்காலியின் மீது, வாலை முறுக்கிக்கொண்டு, திமிர் கொழித்துப் பாயத் துடித்த கறுப்புக்காளை ஒன்றின் பொம்மை இருந்தது. ஜப்பான் நாட்டின் கலாசாரம் பிரதிபலித்தது.

''உட்காருங்க,'' என்றார் அவர்.

அவள் உட்காருவதை அறிந்து அவர் உட்கார்ந்தார்.

அவள் சேலைக்கரைப் பகுதியை ஒழுங்கு செய்து கொண்டு வீற்றிருந்தாள். மீண்டும் அந்தக் காளைப் பொம்மை அவளது பார்வைக்குக் குறி ஆனது. இந்த இடத்தில் — ஒரு நல்ல உள்ளத்துக்குரிய இந்த இடத்தில் இம்மாதிரி ஒரு பொம்மை இருப்பது விநோதமாகவும், செயற்கையாகவும் அவளுக்குத் தோன்றலாயின. அந்தக் காளையை இமைக்காமல் பார்த்தி ருந்த அவள் எதையோ ஒன்றை மனக்குழியிலிருந்து தோண்டி எடுக்கப் பிரயத்தனப்பட்டாள். நினைவு வந்தது.

சுவாமி விவேகானந்தர் இங்கிலாந்தில் இருக்கும்போது, ஒரு நாள் ஆங்கிலேய நண்பர் ஒருவருடனும், மிஸ் முல்லர் என்ற தன் சிஷ்யையுடனும் உலவிக் கொண்டிருந்தார். அப்போது, வெறி கொண்ட பெரிய காளை ஒன்று அவர்களை நோக்கி ஆவேசமாகப் பாய்ந்து வந்தது. நண்பர் தப்பித்தார். ஆனால், ஆங்கிலப் பெண்மணி பயந்து தரையைச் சார்ந்தாள். காளையோ அவளைப் பாய்ந்து விடவேண்டும் என்ற வெறி

யுடன் நெருங்கிவிட்டது. உடனே, சுவாமிஜி மாட்டுக்கும் பெண்ணுக்கும் இடையில் நின்றுகொண்டார். தம் உயிர் போனால் பரவாயில்லை; அந்தப் பெண் உயிர் தப்பினால் போதும் என்ற தியாக உணர்வுடன் அவர் காளையின் திசை நோக்கிக் கும்பிட்டு நின்றார். அப்போதுதான் அந்த அதிசயம் விளைந்தது. வெறி மூள ஓடி வந்த அந்தக் கறுப்புக் காளை, சுவாமிஜியை ஏறிட்டுப் பார்த்ததும், வெறி அடங்கி உடனே திரும்பிவிட்டதாம்!...

தத்ரூபமாகக் காட்சி தந்த அந்தக் காளை, ஒரு கதையை — ஒரு நடப்பு உண்மையைச் சித்திரித்தது.

சொக்கநாதன் லேசாகக் கனைத்துக் கொண்டார். "அப்புறம் என்னம்மா விசேஷம்?" என்று கேட்கலானார்.

அவளோ, பேச்சை எப்படித் தொடங்குவது என்று விளங்காமல் பிரமை தட்டிக் காணப்பட்டாள்.

"அந்த ராணுவ வீரருக்கு நீங்கள் செஞ்ச மரியாதை ரொம்பவும் நியாயமானது. வீரத்தைப் போற்றிப் பழக்கப் பட்டது நம் நாடு. இல்லீங்களா?— அதனாலேதான், உங்க மனமும் அப்படிப் பக்குவப்பட்டிருக்குது!..." என்றார் அவர்.

அவள் மௌனத்தைக் கடைப்பிடித்தவாறு, குனிந்திருந்த தலையை மேலே உயர்த்தினாள். "அன்றைக்கு நீங்க அந்த ஜவானைப் பார்க்க வந்திருந்தது எனக்குத் தெரியலே. தெரிஞ்சிருந்தால், உங்களை என் வீட்டுக்கு அழைச்சிருப்பேன்" என்றாள். அவரை வரவேற்கும் வாய்ப்பை இழந்த துயரத்தை. அவளது கண்டத் தொனி காண்பித்தது.

"அந்த வழியிலே வந்த எனக்கு அப்படியே உங்களையும் பார்த்திட்டுத் திரும்பத்தான் ஆசை. ஆனால்...?"

அவள் பதட்டத்துடன் அவரை நிமிர்ந்து நோக்கினாள்.

"இரவுப் பொழுதிலே நான் உங்களைத் தேடி வந்தால், பார்க்கிறவுங்க உங்களைத் தப்பாக நினைப்பாங்களோ என்கிற

பயம் என்னை ஆட்டி வச்சிட்டுது. என்னாலே உங்களுக்கு அக்கம் பக்கத்திலே ஏதாச்சும் அவதூறு கிளம்பிடுமோ என்கிற நடுக்கம் என்னைத் தடுத்திடுச்சு!...''

மேலே விசிறி சுற்றியது.

ஆனல், தமிழரசிக்கோ வேர்வை கட்டு மீறியது. உணர்ச்சி நரம்புகள் புடைத்தெழுந்தன. அவளது நயனங்கள் கண்ணீரைத் திரட்டின. ''ஐயா!...'' என்று தடுமாறினுள்.

''அம்மா தமிழரசி! என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. இப்போதுதான் நான் மனிதனுக மாறி வந்துக்கிட்டிருக்கேனம்மா! ஆனல் நான் மாஜி மிருகமாக இருந்த உண்மையின் ஞாபகத்தை என்னுலேயும் மறக்க முடியாது; உலகத்தாலேயும் மறக்க முடியாது! அதாலேதான், — அந்தப் பழைய பயத்தினுலேதான் அன்றைக்கு உங்களைப் பார்க்காமல் திரும்பிட்டேனம்மா!''

சொக்கநாதனுக்குத் தொடர்பைப் பிடித்துப் பேசத் தெரியாவிட்டாலும் தொடர்பைப் பிடித்து விழி நீரைக் கொட்டத் தெரிந்திருந்தது!

மனப் பொன்னை மனச்சான்றின் தீயில் புடம்போட்டு எடுத்து உரைத்துப் பார்த்து, உரைத்த சொற்கள் போலும் அவை!

சொக்கநாதனின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கத் தெம்பிழந்து, மனம் கலங்கி கண் கலங்கி அப்படியே பதுமையாக உருமாறிக் கொண்டிருந்தாள் தமிழரசி.

## காட்டி மறைப்பவன்!

இருபத்தேழு

திருவாளர் சொக்கநாதனின் உருக்காட்டுப் படலத்தைக் கண்டு, உணர்ந்து, மனம் நெகிழ்ந்தாள் தமிழரசி. விழிகள் பீலி வளையல்களாகிக் கண்ணீரைச் சொரியத் தலைப்பட்டன. எதிர்ப்புறத்தில் மோனத்தின் சுழிப்பில் ஒன்றியிருந்த அந்தச் செல்வச் சீமானின் தேம்பல் ஒலிகளைக் கண்டதும், அவள் மனம் மேலும் பொங்கியது. வாழ்க்கை பொய்யென்று பொய்க் கணக்கிட்டுக்கொண்டு, பொய்யான போலி வாழ்வு வாழும் கணக்கிலடங்காத மனிதர்களுக்கு மத்தியில், வாழ்க்கை நிஜம் என்று அறிந்து, தம் தவறுகளைச் செப்பனிட்டுக் கொண்டு திருந்தி புதிய மனிதராக உருக்கொண்டிருந்த சொக்கநாதனின் உயர்ந்த பண்பை மனத்துக்குள்ளாகவே போற்றி வழிபட்டாள் அவள்!

அவரை அந்தத் துயர்மிகு சூழலில் மேலும் சோதித்துத் தட்டிப் பார்க்க அவள் விழையவில்லை. "ஐயா!... நீங்க பெரியவங்க. உங்களுக்குத் தெரியாததில்லே. உலகத்திலே யாருமே எப்போதுமே நல்லவர்களாக இருந்ததாகச் சரித்திரமே கிடையாதுங்க. தவிர்க்க முடியாத மாயப்பிரபஞ்ச வாழ்க்கையிலே, தவிர்க்க முடியாத சோதனை என்கிற விபத்துக்களை நாம் சந்தித்துத்தானே ஆகவேணும்...? உங்க பேச்சும் செயலும் ஒரே அதிசயமாத்தான் இருக்குது! நீங்க ஒரு அதிசய மனிதராகவே என் கண்களுக்குத் தெரியுறீங்க!... இதே பார்வை எல்லாருக்கும் வராமல் தப்பாதுங்க; தப்பவும் இயலாதுங்க, ஐயா!... அவள் இவ்வளவு கூடுதலான அழுத்தத்துடன் உண்மையைத் தெளிந்து சொன்னது அவளுக்குத் திருப்தியாகவே இருந்தது மாத்திரம் பெரிதல்ல; அவருக்கும் திருப்தி நல்கியதென்பதை அவள் கண்டு கொண்டதுதான் பெரிதாகத் தோன்றியது.

அந்தச் சூழலுக்குப் புதிய திருப்பம் உண்டாக்கவேண்டு மென்று தமிழரசி அவசரப்படலானாள். ஆகவே, எழுந்தாள். 'ரேடியோகிரா'மை நாடினாள். இயக்கினாள். 'புதிய வானத் தையும் புதிய பூமி'யையும் பாடிக் காட்டிக் கொண்டிருந்தது அது. அமைதி பையப் பையப் அவளை அண்டி வந்து கொண்டிருந்தது.

பாட்டு முடிந்தது.

ஆனால், அவள் பிரச்னை மட்டும் தீர்வு காட்டாமலே இருந்தது. "என்னைப் பெற்றவர்களைப்பற்றின சிக்கலுக்கு நான் மண்ணில் கண்மூடும் வரைகூட ஒரு விடிவு கிடைக்காது போலிருக்கிறதே!" என்று வருந்தினாள். அந்த வருத்தத்தின் உந்துதலில், அவள் வந்த நோக்கம் அவள் தொண்டைக் குழியில் சொற்களாக வடிவெடுக்க முனைந்தது.

அதே கணத்தில், அவளது இதயச் சலனத்தைக் கணித்துக் கொண்டவர் மாதிரி அவராகவே பேச்சைத் தூக்கி னார். "அப்பாலே, என்னம்மா விசேஷம்?" என்று விசாரித் தார். அதைத் தொடர்ந்து, "அம்மா தமிழரசி! உங்க மேலே நம்ம மதர் திலகவதி அம்மையாருக்கு ஏதேஷ்டமான பாசம். தான் பெற்ற பெண்ணைப் போலவே அவர்கள் உங்களை நினைச்சிருக்காங்க. நாங்க சந்திக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலேயும் ஒரு வாட்டியாகிலும் உங்களைப்பற்றிப் பேசாமல் இருந்ததே கிடையாதாக்கும்!... அம்மம்மா!... நீங்க பச்சைக் குழந்தையாயிருக்கிறப்ப, உங்களை வளர்க்கிற துக்கு அவர்கள் பட்ட சிரமம் கொஞ்சமா, நஞ்சமா? அவங் களைப் போல ஒரு தியாகப் பிறப்பை நாம் இந்த ஜன்மத் திலே தரிசிக்கவே முடியாதம்மா!... அடடே!... மதரைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? ஆனாலும், என் மனசுக்கு, அவங்களோட உண்மையான சேவையைப் பற்றிப் பேசுகிற திலே ஒரு ஆறுதல் கிடைக்கும். அதுக்காகத்தான் நானும் என் வாயாலே நாலு வார்த்தை அந்தத் தலைவியைப் பற்றிச் சொன்னேன்!..." என்று முடித்தார். பிறகு, மறுபடியும்

அவளைப் பார்த்தார், ''சரியம்மா! வேறே விசேஷம் என்ன?'' என்று மீளவும் கேட்கலானார்.

தியாகத்தின் உருவான திலகவதி அன்னையின் நினைவாட்டத்திலேயே ஆலவட்டம் சுற்றிக் கொண்டிருந்தாள், தமிழரசி. சொக்கநாதனின் விசாரிப்புக் குரல் அவள் கண்களைத் திறக்கச் செய்தது. 'தான் பெற்ற பெண்ணைப் போலவே அவர்கள் உங்களை நினைச்சிருக்காங்க!' என்று இல்லத் தலைவியைப்பற்றி அவர் சொன்ன வாசகத்தின் பாசத் திளைப்பிலிருந்து விடுபட்டு மீள முடியாமல் தவித்தாள். விநாடிகளின் ஓட்டத்தில் அவள் மெள்ள மெள்ளத் தன்னுணர்வு அடைந்தாள். ''ஐயா! எனக்குத் தாயும் தந்தையும் அவங்கதான்! அவங்க என் பேரிலே வச்சிருக்கிற அன்புக்கும் பாசத்துக்கும் நான் ஏழேழு பிறப்புக்கும் அவர்களுக்குக் கடமைப்பட்டவள் ஐயா!... என்னைப் பெற்றவங்களைப் பற்றி யாதொரு விவரமும் தெரிஞ்சுக்க முடியாத பாவியாக நான் ஆகிட்டாலும், மதரோட உருவத்திலே தானுங்க நான் எனக்குரிய தாயையும் தந்தையையும் தரிசிச்சுக்கிட்டிருக்கேன்!...'' என்றாள் அவள். கைக்குட்டைக்கு வேலை கிடைத்தது.

''உண்மைதானம்மா, உண்மைதான்!''

தமிழரசி நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு சொக்கநாதனை ஏறிட்டுப் பார்த்தாள். குத்து விளக்கின் எரிதிரியிலிருந்து தெறிந்து விழும் சுடராக ஒரு பழைய ஞாபகம் அவளுள் தோன்றியது. ஒரு சமயம், அவள் இல்லத்திற்குச் சென்றிருந்த போது, தலைவியும் சொக்கநாதனும் கூடத்தை வந்தடைய, அவர்கள் இருவருக்கும் மத்தியில் தான் நின்ற காட்சியைப் பிரதிபலித்துக் காட்டிய நிலைக் கண்ணாடியில் அக்கணம் தெரிந்த அம் மூன்று முகவிலாசங்களின் அமைப்பைச் சந்தித்த சடுதியில், தன்னையும் அறியாத வகையில், இனம் விளங்காத ஏதோ வகைப் பாசம் தன்னுள்ளே முகிழ்த்துப் பரவிய விந்தையை இப்பொழும் அவள் நினைத்துக் கொண்டாள். அந்தச் சிலிர்ப்பினூடாக அவள் கனி இதழ் வாய் திறந்தாள்: ''ஐயா! என்னோட பிறப்புப்பற்றி உங்க

ளுக்கு ஏதாவது விவரம் தெரியுங்களா?... என்னைப் பெற்ற தாய்—தந்தையைப் பற்றின ரகசியம் ஏதாவது உங்களுக்குப் புரியுங்களா?'' என்று சோகத்தின் உச்சத்தில் அமர்ந்து கேட்டாள்.

அவள் கேட்ட கேள்வியைச் செவிமடுத்தது தான் தாமதம், சொக்கநாதன் ஒரு கணம் அப்படியே சிலையாய் மலைத்துப் போனார். சோபாவில் சாய்த்திருந்த முதுகை நிமிர்த்திக் கொண்டார். தமிழரசியைப் பட்சத்துடன் பார்வையிட்டார். "தமிழரசி!... அம்மா, தமிழரசி!... அதைப் பத்தி எனக்கு எப்படியம்மா தெரிஞ்சிருக்க முடியும்...?'' என்று பேச முடியாமல் திணறினார்.

ஆயாள் முன்னர் சொன்ன விஷயங்களை அவள் ஞாபகம் செய்தாள். பிறகு, தொடரவேண்டியவள் ஆனாள். "நான் பச்சைக் குழந்தையாய் இருக்கிறப்ப ஏதோ ஒரு ஆஸ்பத்திரி யிலேருந்து என்னை நீங்கதான் கொண்டு வந்து மதர்கிட்டே இல்லத்திலே கொடுத்தீங்களாமே?...''

புருவங்களில் துளிர்த்திருந்த முத்துக்களை விரலால் ஒதுக்கினார் சொக்கநாதன். "ஆமாம்மா! உண்மைதான்! நான்தான் உன்னைப் பச்சை மண் மாறாமல் கொண்டு வந்து மதரிடம் சமர்ப்பித்தேன்!... பம்பாயிலிருந்து மதர் திரும்பி வந்து, இந்த இல்லத்தோட பொறுப்பை ஏற்றுக்கிட்டுக் கொஞ்ச நாளேதான் ஆகியிருந்த நேரம் அது. எனக்கு வேண்டப்பட்ட நர்ஸிங் ஹோமிலே அனாதைக் குழந்தை ஒண்ணு இருக்கிறதாகச் சொன்னாங்க. அப்பவே நான் திலகவதி அம்மாவுக்குப் 'போன்' செஞ்சேன். உடனே, கொண்டு வரும்படி சொன்னாங்க. கொண்டு போய்க் கொடுத் தேன். மற்றப்படி வேறே எதுவும் உன்னைப்பற்றி அந்த நர்ஸிங் ஹோமிலே சொல்லவும் இல்லே; எனக்கும் வேறே எதுவும் தெரியாதேயம்மா! இதுபற்றி மதருக்கும் தெரிஞ் சிருக்க நியாயமில்லை. தெரிஞ்சிருந்தால் கட்டாயம் உன் கிட்டே சொல்லாமல் இருக்கவே மாட்டாங்களே!... உங்களு டைய துர்ப்பாக்கியமான நிலைமையை நினைச்சுப் பார்த்தால்,

அப்பப்பா, எனக்கு நெஞ்சே வெடிச்சிடும் போல இருக்கு தம்மா!..." அவர் சொல்லி முடித்து, தமிழரசியை நோக்கினார்.

தமிழரசி மனவொடுக்கம் சித்திக்கப் பெற்றவள் போல அப்படியே சலனமற்று உட்கார்ந்திருந்தாள்!

மனத்தவிப்பைப் பெருமூச்சாகக் கழித்தவாறு அவர் காணப்பட்டார். பிறகு, அருகிருந்த மேஜை இழுப்பை இருந்த வசத்திலிருந்தபடியே திறந்து சுருட்டு ஒன்றை எடுத்துக் கொளுத்தினார். பர்மிய நாட்டுச் சுருட்டு இங்கே புகைக்க வேண்மென்று அதன் மண்டையில் விதித்திருக்கிறது!

கால் மேல் கால் போட்டபடி, சாய்ந்திருந்தார், சொக்கநாதன். ஜிப்பாவின் பொத்தான்களை எடுத்துவிட்டார். உச்சிக் காற்று இதமாகப் படர்ந்தது. சுருட்டின் சுகந்தம் அவரைச் சுற்றியது.

தமிழரசிக்கு அங்கே இருப்புக் கொள்ளவில்லை. எழுந்து நின்றாள். மேஜைக்கு நடந்தாள். ஆங்கில ஏடு ஒன்று இருந்தது. இவ்வாண்டு இலக்கியத்துக்காக நோபெல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர் மைக்கேல் ஷோலோகோவைப் பற்றிப் படமும் குறிப்பும் வெளியாகியிருந்தன. அவள் அதைப் படித்துக் கொண்டே வந்தாள். டயரியைப் புரட்டியதும் பழைய நிகழ்வை மீண்டும் நினைவூட்டிக் கொள்வதைப் போல, அன்றொரு நாள் திடீரென்று சந்தித்து,பின் திடீரென்று ஓடிவிட்ட அந்த அபலைத் தாயைப் பற்றிய எண்ணம் அவளது அடிமனத்தில் வெளிச்சம் காட்டித் தோன்றியது. உடனே, மேற்படி சம்பவத்தை மறுமுறையும் நினைவூட்டிக் கொண்டாள். உண்டு முடிந்ததும், அந்த அம்மணி தன் கன்னத்து மச்சத்தைத் தொட்டுப் பார்த்த விதம் அவளுக்கு அதிசயத்தை ஊட்டியது. மறுகணம், "ஐயையோ, தெய்வமே! என் மகளுக்கும் இதுபோலத்தானே இடது கன்னத்திலே ஒரு அழகான மச்சம் இருக்குமே! ஐயோ... என் மகளே ராசாத்தி!" என்று

பாசவெறியுடன் ஓலமிட்டுச் சிரித்து மறைந்த விந்தையும் அவள் மனத்தை உலுக்கி எடுத்தது. அன்று விடியும் வரை அவளுக்கு அந்த அபலைத் தாயைப் பற்றிய ஞாபகம்தான். 'உண்மையாகவேதான் அந்த அம்மாளின் மகளுக்கும் என் மாதிரியே இடது கன்னத்திலே மச்சம் இருந்திருக்குமோ? எங்கே போயிட்டுதாம் அந்த அம்மாளுடைய மகள்?... ஒரு வேளை, தீயவழியிலே குழந்தையைப் பெற்று, ஊருக்குப் பயந்து, அதை அனாதையாய் விட்டுட்டு ஓடிப்போய் விட்ட தாலே, அவளுக்கு இப்படிப் புத்தி தடுமாறிப் பைத்தியம் ஏற் பட்டிருக்குமோ? ஆமாம், அதுதான் நடப்பாக இருந்திருக்க வேண்டும்! இல்லாட்டி, பெற்ற மகள் தாயைவிட்டு எங்கே போயிருப்பாள்...? பாவம்!' என்று ஆலோசனை செய்தாள். புலரிப் பொழுதில் அவள் தன்னுள் பரிதாபமாக ஆசைப்பட்ட அந்த ஒரு நினைவையும் அவள் மறைக்க ஒப்பவில்லை. 'பைத்தியம் பிடித்த இந்தத் தாயாவது என்னைத் தன் அருமை மகளாக உரிமை கொண்டாடியிருக்கலாகாதா? தெய்வமே!' என்று எவ்வளவோ ஏங்கித் தவமிருந்தாள். ஆனால், விடிந்தது என்னவோ, பொழுது மாத்திரம்தான்!...

மேஜையடியிலிருந்து மீண்டும் நாற்காலியைச் சார்ந் தாள். அன்று ஆயாளுடன் பேசிக் கொண்டிருக்கும் நேரத் தில், அவள் சொன்ன வாக்குமூலத்திலிருந்து சொக்கநாதன் வாயிலாக ஏதாவது ஆறுதல் கிடைக்குமென்று ஆர்வத்தோடு நம்பிக்கை வைத்திருந்தாள். இன்று அந்த நம்பிக்கையும் தவிடு பொடியாகிவிட்டது. தன் பெற்றோரைப் பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்று இல்லத்தின் தலைவிதான் எப் போதோ சொல்லி விட்டார்களே! "ஆண்டவனைக் 'காட்டி மறைப்பவன்' என்பார்கள். அது எத்தனை மெய்யான சேதி!..." என்று தனக்குத் தானே வாய்விட்டுப் பேசிக் கொண்டாள் தமிழரசி.

சொக்கநாதன் அப்பேச்சைக் காதில் ஏந்திக் கொண்டு "என்னம்மா?" என்று திகிலுடன் வினவினார்.

அப்போதுதான் அவளுக்குத் தன்னுடைய பேச்சின் தவிப்புப் புரிந்தது. "ஒண்ணுமில்லீங்க. என்னைப் பற்றி யோசித்தேன். ஆண்டவனைப் பற்றிப் பேசிவிட்டேன். அவ்வளவுதான், ஐயா!" என்றாள். "ஒரு நாள் இரவிலே, தன் அருமை மகளைத் தேடிக்கிட்டு யாரோ தாய் ஒருத்தி வந்தாள். அவளுக்கு வேண்டுமட்டும்; சோறு படைச்சேன். என் மச்சத்தைப் பார்த்திட்டு, தன் மகளுக்கும் இப்படியொரு மச்சம் இருப்பதாகச் சொன்னாள். சொல்லி முடிச்சதும், அழுகையிலே சிரிப்பைக் கலந்துவிட்டபடி, ஓடி மறைஞ்சிட்டாள், அந்த அன்னை. அந்தத் தாயாவது என்மீது சொந்தம் கொண்டாடமாட்டாளா என்றுகூட இந்தப் பைத்தியத்தின் பேதை நெஞ்சம் ஏங்கித் தவிச்சுதுங்க. இதை நினைச்சுப் பார்த்துக்கிட்டிருந்தேன்!... அவ்வளவு தான்!..." நெடுமூச்சுக்கள் இழைகோலம் பின்னின.

"அம்மா, தமிழரசி! தெய்வம்தான் நமக்குத் தாய் தந்தை எல்லாம். உங்களுக்குப் புதிதாகவா நான் சொல்லித் தரப் போறேன்?... நீங்க இனிமேல் பழங் கவலைகளை மனசிலே எண்ணிக் குமையாதிங்க. மனத் துன்பம் உடம்பை அரிச்சுத் தின்றுவிடுமம்மா!... உங்ககிட்டே பேசிக்கிட்டிருக்கிற இத்தனை பொழுதும், எனக்கு எவ்வளவோ அமைதியாயிருக்குது!... இதே உணர்வை, உங்க மூலம் தானும் அனுபவிச்சதாக மதர் திலகவதிகூட ஒரு தரம் சொன்னது ஞாபகத்துக்கு வருது!... இங்கே நான் தவம் இருந்துகிட்டிருக்கேன், உங்க பேரிலே பாசம் சொரிய! அங்கே மதர் திலகவதி இருக்காங்க, உங்க பேரிலே தன் உயிரையே சொரிந்து கொண்டு! இந்த ரெண்டு ஜீவன்களையும் சோதிச்சுப்பிடாதீங்க, தமிழரசி!" என்று நாத் தழுதழுக்கக் கெஞ்சிய சொக்கநாதன், தமிழரசியின் கைகளைப்பற்றித் தம் கண்களில் ஒற்றிக்கொண்டு விம்மினர்.

தன்னை மறந்து அழுதாள், தமிழரசி. பிறகு, அவள் தான் அவரைத் தேற்றவேண்டியவளாகவும் ஆனாள். "வாங்க சாப்பிடப் போகலாம்!... அதோ அம்மாவும் வந்தாச்சு!" என்றாள்.

## இருபத்தெட்டு

"ஐயா! நான் இனி அனாதை இல்லீங்க!" என்று நெஞ் சுணர்ந்து, நினைவு பிணைத்து, பேரமைதிப் பெருங்குரலில் சொல்லிப் பிரிந்து வந்தாள், தமிழரசி. அவள் சொன்ன அந்த இதயமொழி இன்னமும் அவளை அரவணைத்து மகிழ்ந்து கொண்டிருந்தது. பாசத்தின் சரித்திரம் இன்று நேற்று வந்ததல்ல!

ஒரு புறம் கிறிஸ்துமஸ் வியாபாரச் சுறுசுறுப்பும், மறு புறம், பொங்கல் விழாச் சந்தடியும் காணப்பட்டன.

உஸ்மான் சாலையைக் கடந்து, அவள் பஸ் நிலையத்தை அடைந்தபோது, அந்தி மாலை அழகுக் காட்டத் தொடங்கி யிருந்தது.

ஜார்ஜ் டவுனுக்குச் செல்லும் பஸ்ஸுக்காகக் காத்திருந் தாள், அவள்.

பிச்சைக்காரி ஒருத்தி தன்னுடைய ஏழு குழந்தைகளுடன் பிச்சை கேட்டு வலம் வந்தாள். 'அலகிலா விளையாட்டின் ரகசியத்தை அறிவது சுலபமல்ல!' என்ற அபாய அறி விப்பைச் சுட்டாமல் சுட்டிக் கொண்டிருந்த பிச்சைத் தட்டில் அவள் போட்ட காசுகளும் இணைந்தன. பணக்காரப் பெரு மகன் ஒருவரிடம் வந்து அந்தக் குழந்தைகள் யாசகம் கேட்டனர். அந்தப் புண்ணியவான் அசைந்து கொடுக்க வில்லை. உடனே, பிள்ளைகள் பாட்டுப் பாடத் தொடங்கா மல் என்ன செய்வார்கள்? பாட்டு என்றால், கோஷ்டி கானப் பாட்டு. வந்தது வினை — யாருக்கு? — அந்தச் சீமானுக்கா? அல்ல! — அவரது சுருட்டுக்கு. அதை வீசி விட்டு, யானை ஓடுவது போல ஓடி விட்டார்!

தர்மமும் பிழைக்கவில்லை!

அந்த ஏழைச் செல்வங்களும் பிழைக்கவில்லை.

தாயும் மகளும் ஆறாத் துயருடன் பார்வை தந்தனர். அவர்களைச் சுற்றி மறுகி மீண்டும் நெருங்கி, 'அந்தப் பணக்காரரின் சார்பில்' என்று மனத்திற்குள் நினைத்துக்கொண்டே, இன்னொரு பத்துக் காசையும் கொடுத்தாள்.

அவள் வீட்டிலிருந்த பாங்குப் புத்தகத்தை எண்ணினாள். அதற்குப் புதிய பொருள் கொடுத்துவிட வேண்டுமென்று அவள் கொண்ட எண்ணம் வலுவடைந்து வந்தது. தாய் நாட்டு மண்ணையும் தாய்நாட்டு அனாதைகளையும் வாழ்த்தி வணங்கும் ஈரம் அவள் மனத்துக்கு எப்போதுமே உண்டு. 'சிருஷ்டிப் புதிர் வேடிக்கைதான்! இதோ, அபரிமிதமான குழந்தைகளுடன் ஓர் ஏழைத் தாய்! மறுபக்கத்திலே, குழந்தைக்காகத் தவம் கிடக்கும் அபலைப் பெண்களும் இருக்கத்தான் இருக்கிறார்கள்! அத்துடனாவது சிருஷ்டி, தன் புதிர் விளையாட்டை நிறுத்திக் கொள்கிறதா என்றால், அதுவும் இல்லை!... இன்னொரு நிலையைப் பார்த்தால், தாய் தந்தையற்ற அனாதைக் குழந்தைகள்!... எல்லாவற்றையும் கடந்து வேறுபுறம் பார்த்தால், குழந்தை குட்டிகளைப் பிரிந்து தவிக்கும் தாய் தந்தைமார்கள்! அந்தோ! வாழ்க்கை பயங்கரம்! பரிதாபம்!'

இன்னமும் பஸ் வரவில்லை.

ஆகவே, அவள் மனம் 'மங்கள பவன'த்தில் போய் நின்றது.

மதியச் சாப்பாட்டின் போது, சொக்கநாதன், அவரது மனைவி, அவர் மைந்தன் ஆகிய மூவரும் தன்மீது அக்கறை காட்டி, அன்பு காட்டி உபசாரம் செய்ததை அவள் வாழ் நாளிலே மறக்கவே இயலாது.

பாயசம் போட்டாள், சிவகாமி. "அம்மா, தமிழரசி! இவளை என்னால் மறக்கவே முடியாதம்மா! மனத் தர்மத்தின் பேரால் என் வாழ்வுக்கு ஒரு மறுமலர்ச்சி அளித்த புனிதவதி அம்மா இவள்!" என்று நினைவு தோய்ந்த நிலையில் அவர் தம் மனையாட்டியைப் பாராட்டினார்.

"இவுங்களுக்கு இதே வேலைதான்! நீங்க பாட்டுக்குப் பாயசத்தைச் சாப்பிடுங்க, தமிழரசி!" என்றாள் சிவகாமி.

"அம்மா, நீங்களும் சரி; ஐயா, நீங்களும் சரி, என்னை இனிமே நீங்க ரெண்டு பேரும் ஏக வசனத்திலே சாதாரணமாய்க் கூப்பிடுங்க. அதுதான் எனக்கு மனசுக்கு ஆறுதல் தரும்!... ஆமாங்க!" என்று நெடுநேரமாகச் சொல்ல வேண்டுமென்றிருந்ததைச் சொல்லிவிட்டாள்.

கெட்டிக்காரி!

"நீ மோகன்தாஸைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாக மதர் சொன்னாங்களே!..." என்று குறுக்கிட்டார் சொக்கநாதன்.

"என் ஜன்மத்தோட ஒட்டின துரதிர்ஷ்டம் அந்தப் பாக்கியத்துக்கும் உலை வைத்துவிட்டதுங்க!..." என்றாள் அவள்.

"என்னம்மா, சொல்லுறே? மோகன்தாஸ் வலிய வந்த சீதேவியைக் காலால் எட்டியா உதைத்துவிட்டார்!" என்று சினம் ஏந்தி வினவினார்.

"அவருக்கு முன்னமேயே யாரோ காதலி ஒருத்தி இருக்குதுங்களாம், ஐயா!"

"மதருக்கு இந்த விஷயம் தெரியுமா?"

"ஊஹூம், அவங்களுக்குத் தெரிஞ்சால், வருந்துவாங்க. அதனாலேதான் அவங்களைப் பார்க்கப் போகாமல்கூட ஒளிஞ்சுகிட்டு இருக்கேன். கல்யாணப் பத்திரிகை அச்சடிக்கிற தோதுடன் வாம்மான்னு சொன்னாங்களே மதர்! அந்தத் தோதுக்கு இருந்த வழி அடைபட்டுப் போயிடுச்சுங்களே!... இப்ப அவங்ககிட்டே போய் என்னத்தை நான் சொல்வேணுங்க?"

"அதுக்கென்னம்மா... கூடிய சீக்கிரமே இன்விடேஷன் அடிச்சிடலாம்!... எஸ்... எஸ்... ம்... ஓ. கே!" முன்பகுதியை அவளுக்குச் சொல்லிவிட்டு, பின் பகுதியைத் தமக்குச் சொல்லிக் கொண்டார். தானே மாப்பிள்ளையை முடிவு

செய்வதாகத் தெரிவித்துக் கெடு கேட்ட தலைவி திலகவதியின் அன்பை அவள் ஆராதித்தாள்.

சொக்கநாதன் தொலைபேசிக் கருவியின் எண்களைச் சுற்றினார். இரண்டு மூன்று முறைச் சுற்றிப் பார்த்தபின் 'ரிஸீவ'ரை அலுப்புடன் வைத்தார்.

''ஐயா, எனக்குக் கொஞ்ச நாள் அமைதி தேவைப் படுதுங்க. இதையேதான் நான் எங்க மதர்கிட்டே சொல் கிறதாக இருக்கேனுங்க!'' என்று தீர்மானத்தின் பிடிப்புடன் அவள் முத்தாய்ப்பிட்டாள். பிறகு, அவள் அண்ணாந்து பார்த்தாள், ஏதோ சிந்தித்த பாவனையில்.

பெரிதாக்கப்பட்ட படம் ஒன்று அவள் பார்வையை ஈர்த்தது. நடுத்தர வயசுடன் ஒருவர் காணப்பட்டார். அழகான உருவம்.

துண்டு கொண்டு கழுவாயின் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார் சொக்கநாதன். பிறகு, தமிழரசியைப் பார்த்தார்.

''தமிழரசி, ஏனம்மா அப்படிப் பார்க்கிறே அந்தப் படத்தை?...'' என்று சோபாவின் அடிப்பகுதி வரை இடுப்பை நகர்த்திச் சாய்ந்த வண்ணம் வினவினார். பிறகு, அதே மூச்சோடு அவராகவே பேசவும் செய்தார்.

''அந்தப் படத்தில்தான் நான் கண்ணாரக் கண்ட தெய்வம் இருக்குது. தெய்வம் தெய்வமாக இருக்கிறதிலே அதிசயமில்லே. மனிதன் தெய்வமாய் இருக்கிறதுதானே அதிசயம்! அப்படியொரு அதிசயம்தான் அம் மனிதர். அந்த ஆள் எனக்குத் தோழர். ஓட்டாண்டியாய்ச் சுற்றிக் கிட்டிருந்த எனக்கு அன்புப்பிச்சையிட்ட நல்ல மனிதர் அவர். அவர் பிஸினஸில் எனக்கும் சட்ட ரீதியாகப் பாதிப் பங்கு கொடுத்து என்னையும் முன்னேறச் செஞ்ச தீரர் அவர்.

''வயசிலே எனக்கு அவர் தம்பியாய் இருந்தாலும், பாசம் காட்டுறதிலே எனக்கு அவர் அப்பாவாயிருந்தார். அவர் கதை பெரிசு, எனக்கும் அவருக்கும் உள்ள கதையும்

பெரிசு!... ஒரு தரம், அவரோட கல்யாண சம்பந்தமாய்ப் பேசிக்கிட்டே நாங்க ரெண்டு பேரும் சென்ட்ரல் ஸ்டேஷனண்டை நடந்தோம். வழி மறிச்ச லாரி ஒன்று என்னை அரைச்சுப் போட ஓடி வந்திருக்கு. நான் கவனிக்கலே. அவர் கவனிச்சிட்டார். உடனே, குறுக்கு மறிச்சுப் பாய்ந்து என்னைக் காப்பாற்றிட்டார். அதுக்குப் பரிசாக அவர் தன்னோட உயிரையே காவு கொடுத்திட்டார்; என் உயிர் நண்பரை ஜீவன் பிரிகிற மட்டும் என்னாலே மறக்கவே முடியாதம்மா!...

இவ்வாறு, அவர் தழலாய்க் கனிந்து, தண்ணீராய் உருகிச் சொன்ன நடப்பையும் அவள் மறக்க முடியாதல்லவா? 'இப்படிப்பட்ட நல்லவரைப் பத்திக்கூட அபவாதம் கிளப்பிவிட லோகத்திலே ஜனங்கள் தயாராகக் காத்துக்கிட்டுத்தான் இருக்கிறாங்க. தவறுகள் செய்தவன் திருந்தினால்கூட, உலகம், அவன் முன்பு செஞ்ச தவறுகளைத் தான் நினைச்சுக்கிட்டிருக்கும் போலிருக்குது; திருந்திவிட்ட புதுக் கதையைப்பற்றிச் சட்டை செய்யாது போலிருக்குது! வேடிக்கையான உலகம்! விந்தையான உள்ளங்கள்!...'

பஸ் வந்து விட்டது.

'மங்கள பவன'த்துக்குப் பறந்த மனப்பறவை திரும்பியது.

தமிழரசி ஏறி அமர்ந்தாள். சற்றைக்கெல்லாம், அவளுடைய தோழி கதீஜா பேகம், காது வளையங்கள் குலுங்க வந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்தாள். நுங்கம் பாக்கத்தில் 'நர்ஸிங் ஹோம்' ஒன்றில் ஜலஜா அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் அவளைப் பார்க்கப் போவதாகவும் செய்தி சொன்னாள். "நீங்களும் வருகிறீங்களா, டீச்சர்?" என்றும் கேட்டாள்.

விழி சிமிட்டும் நாழிகைக்கு அவள் மௌனம் சாதித்தாள். கதீஜாவிடம் தன்னைக் கீழ்த்தரமாக மதித்து ஏசிய பேச்சைக் கதீஜா மூலம் கேள்விப் பட்டதிலிருந்து ஜலஜா

வைச் சந்திக்க வேண்டும்; அது சம்பந்தமாக வம்பு வளர்க்க வேண்டும் என்றுதான் அவள் காத்திருந்தாள். அவளது ஆத்திரத்துக்கு, முன்பொரு தினம் வீடுதேடி வந்த அனுமதேயக் கடிதமும் தூபம் போட்டுக் கொண்டிருந்தது. இரட்டிப்பான கோபத்துடன் ஜலஜாவை எதிர் நோக்கியிருந்த நேரத்தில், அவளை எதிர் நோக்கிச் சென்றது வியாதி. 'ஒழுக்கத்தை அவள் மதிக்கவில்லை; ஆனால், நோய் அவளை மதித்துவிட்டது!'

பஸ் புறப்பட்டது.

டிக்கட்டுகள் சகிதம் கண்டக்டர் வந்தார்.

கதீஜாவை முந்திக் கொண்டு, தமிழரசி இரண்டு டிக்கட்டுகள் வாங்கினாள். அவளிடம் ஒரு டிக்கட்டை நீட்டினாள். ஆனால், அவள் இறங்கிய இடத்திலேயே தமிழரசியும் இறங்கி விட்டதைக் கவனித்த கதீஜா பெரிதும் வியந்தாள்.

"நானும் ஒரு நாளைக்குப் போய்ப் பார்க்க வேணும்னுதான் இருந்தேன். ஆனாலும், ஜலஜா என்னை ஏசிய தப்புப் பேச்சுக்கள் என்னைத் தடுத்திட்டுது. நானும் கேவலம் சாதாரணமான மானுடப் பிறப்புதானே? எனக்கு மட்டும் மனக் கொதிப்பு உண்டாகாதா, அவள் பேச்சையும் ஏச்சையும் கேட்டு?... ஆனாலும், ஜலஜா மாதிரி மனப் பலவீனம் வேறே யாருக்கும் வரமுடியாது! வரவும் வேண்டாம்! அந்தப் பலவீனத்தைத்தான் பெரிய மனம்பலம்னு ஜலஜா நினைச்சுக் கிட்டிருந்தாள். இப்போ, ஏமாந்தாச்சு!... மனம், கற்பு, சமூகம் என்கிற பதங்களுக்குரிய உண்மையான மதிப்பு இப்போவாகிலும் ஜலஜாவுக்குப் புரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன்! எனக்கு முன்கோபம் ஜாஸ்தி. அது ஒரு குறைதான்! ஆனாலும், எனக்கு இதயம்னு ஒண்ணு இருக்குது. அதனாலேதான் இப்போ நான் உங்களோட வந்துகிட்டிருக்கேனாக்கும்!..." என்று நடையைத் தொடர்ந்து, பேச்சையும் தொடர்ந்தாள்.

ஏரிக்கரைப் பகுதி விரிந்தது.

அவர்கள் தென் வசத்தில் நடையைத் திருப்பினார்கள்.

புன்னை மரங்களின் நிழலில் ஒரு கும்பல் கூடியிருந்தது.

விலகிச் சென்றபடியே வேடிக்கை பார்த்துக் கொண்டே தோழிமார் இருவரும் நடந்தார்கள். இருவரின் துணையுடன் மூன்றாவதாகக் காற்றும் துணை சேர்ந்தது. கதீஜாவின் "ஆர்லான் வாயல்' மஞ்சள் வெயிலுக்குக் கனபொருத்த மாகத் திகழ்ந்தது. தமிழரசியின் 'மூறிமேனி' மாலை ஒளியில் ஒளிர்ந்தது.

மர நிழற் கூட்டத்தில் திடீரென்று சூடு பிடித்துவிட்டது போலிருக்கிறது. நடப்பு புகைந்தது. விஷயம் இதுதானாம்; சேரிக்கன்னி ஒருத்தியை ஓர் இளசு ஆசை காட்டி மோசம் செய்ய முயன்றிருக்கிறான். உடனே, கைமேல் பலனாக அந்தப் பாவிக்கு நல்ல பாடம் கற்றுக் கொடுத்து விட்டா ளாம் அவள். அவனுடைய பற்களின் பட்டியலில் நான்கோ ஐந்தோ காணவில்லையாம்!

அவர்கள் இருவரது காலணிகளின் அடிச்சுவடுகள் பதிந்து சென்றன.

தமிழரசியின் கல்யாணத் திட்டத்தை அறிய விரும் பினாள், தோழி.

""இப்போதைக்கு நான் என் கல்யாணத்தைப் பற்றி நினைப்பதாக இல்லை. உங்க காதிலே விழுந்திருக்கலாம். மிஸ்டர் மோகன்தாஸுக்கு முன்னமேயே காதலி காத்துக் கிட்டிருக்காம். எனக்கு அது பின்னாலேதான் தெரிய வந்திச்சு. ஜலஜா உங்ககிட்டே என்னைப்பற்றித் தப்பாய்ப் பேசினாள்!... ஆனா, என்னோட இந்த நிலைமை—அதாவது, என் மனக்கனவு எனக்குத் தோல்வியை உண்டாக்கி விட்ட இந்த நிலைமை—ஜலஜாவுக்கு இன்னும் கொஞ்சம் கூடுதலான அகம்பாவத்தைத்தான் கொடுக்கும்!... கொடுக்கட்டுமே!... எனக்குப் புரியாமலில்லை! ஆனால், என்றாவது ஒரு தினம் இந்தத் தமிழரசியை உலகம் புரிஞ்சுக்கத்தான் செய்யும்! என் மனம் என் கையிலே! என் விதி என் பிடியிலே!... பார்க்

கலாமே!...” என்று ‘ரோஷ’மாகப் பேசித் தீர்த்தாள், தமிழரசி.

கதீஜாவுக்கு விரைவிலேயே நாகூரில் ‘நிக்காஹ்’ நடை பெற்று விடுமாம்!

ஜலஜாவுக்கு வேலை போய் விடுமாம்!—ரகசியம், ரகசியம்!...

‘நர்ஸிங் ஹோம்’ வந்தது.

இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

ஓய்வு வேளையானதால், பார்வையாளர்களின் எண்ணிக்கை கூடியிருந்தது.

அந்தக் கூடத்தின் கோடியிலிருந்த கட்டிலில் படுத்திருந் தாள் குமாரி ஜலஜா. அவள் முகம் அலங்கோலமாக வெளுத்துக் கிடந்தது. காலடியோசை கேட்டதும் அவள் கண்களை மலரத் திறந்தாள். முதல் தொடுப்பில், அவள் பார்வையில் தமிழரசிதான் கம்பீரமாக விழுந்தாள். அவ் வளவுதான். தட்சணமே, வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். “வாங்க, தமிழரசி,... வாங்க, கதீஜா!” என்று முகமன் மொழிந்தாள். இருவரையும் கட்டிலிலேயே அமரும்படி கேட்டுக் கொண்டாள்.

“உடம்புக்கு இப்போ எப்படி இருக்கு?... உங்க தோற்றமே உருமாறிப் போயிட்டுதே!” என்று வருந்தினாள், தமிழரசி.

“இப்போ கொஞ்சம் தேவலாம்!...” என்று சொல்லிய ஜலஜா, இருந்திருந்தாற்போல, தமிழரசியின் கைகளைப் பரிவு சேரப் பற்றிக் கொண்டு, “டீச்சர்! தயவு செஞ்சு என்னை மன்னிச்சிடுங்க!... உங்க கையைத் தொடக்கூட எனக்கு அருகதை இல்லே!... உங்களோட மனத் துணிவு, மனச் சுத்தம், மனப் பண்பு—இதுகளுக்கு முன்னாலே நான் ஒரு அற்பம்!... இந்தச் சில நாளாத்தான் எனக்கு உலகமே

இன்னதின்னு தெரிய ஆரம்பிச்சிருக்கு டீச்சர்!...'' என்று சொல்லிக் கலங்கினுள்.

தமிழரசி மௌனமாகக் குந்தியிருந்தாள்.

பிறகு, கதீஜாவின் பக்கம் திரும்பி அவளைக் குசலம் விசாரித்தாள். அவளும் பதில் சொன்னுள்.

இருவருக்கும் நல்ல காபி கிடைத்தது.

இருவரும் ஜலஜாவிடமிருந்து பிரிந்து திரும்பினார்கள்.

ஜார்ஜ் டவுன் வந்ததும், தமிழரசியும் கதீஜாவும் திசைமாறிப் பிரிய வேண்டியவர்கள் ஆயினர்.

தமிழரசி வீட்டை அடையட்டும் என்று பெருமனம் கொண்டு காத்திருந்தாற் போன்று அந்தியும் சாய்ந்தது.

பர்மா பஜாரை வேடிக்கை பார்த்த பின்னர், அவள் வீட்டைத் திறந்து விளக்குப் பொத்தானை அழுத்தினுள். உள்ளே இருந்த வாக்கிலே வெளியே எட்டிப் பார்த்தாள். எதிர் வீட்டில் பரபரப்பானதொரு சூழல் உருவாகியிருந்ததை அவளால் காண முடிந்தது. விசாரித்ததில், தகவல் கிடைத்தது. புதிதாகக் கல்யாணம் செய்து கொண்டு புதிதாகக் குடித்தனம் வைத்த ஜோடியில் பெண்ணுக்கு உடல் நிலை கவலைக்கு இடமாக இருக்கிறதாம்—மனைவியின் நிலைகண்டு நிலைகுலைந்து கதறினுன் புருஷன். அவன் அழுகை அவள் மனத்தில் எதிரொலித்தது.

எதிர் வீட்டை அடைந்தாள் தமிழரசி.

டாக்டர் ஊசி மருந்தைச் செலுத்தி முடித்தார்.

புதுமணத் தம்பதிகள் என்னும் மெருகு மங்கிக் காணப் பட்ட அத்தம்பதியை அவள்—தமிழரசி நோக்கினுள். அப் பெண் அவனைச் சோதித்துவிட ஆசைகொண்டு தான் இன்னமும் கண்களைத் திறக்காமல் இருக்கிருளா? அவளுக்கு அவன் பேரில் கோபமா? அவன் பாவம், மண்டையில் அடித்துக் கொண்டு கதறினுன். அவளது சாந்தம் நிறைந்த வதனத்தைத் தொட்டுத் தொட்டுக் கதறினுன்.

தமிழரசியின் மனம் சஞ்சலப்பட்டது. 'நான் ஒரு வேளை இம்மாதிரி படுக்கையில் படுத்துக் கண்களை மூட நேர்ந்தால், எனக்காக கண்ணீர் சிந்துபவர்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள்?' என்றதொரு விபரீதமான கேள்வியை அவள் தன்னுள் எழுப்பிக் கொண்டாள். இல்லத் தலைவியின் தலைமையில் பட்டியல் நீண்டு கொண்டே போயிற்று. கடைசியில், அவள் தனக்குத்தானே ஆறுதல் பூத்த பெருமிதத்துடன் சிரித்துக் கொண்டாள்.

அதே நேரத்தில், அந்தப் பெண்ணின் கணவனும் அமைதியாகச் சிரிக்கத் தொடங்கியிருந்தான்!... இனி அவனுக்குக் கவலையில்லை.

தமிழரசி மகிழ்ந்தாள்.

அவள் நிம்மதியுடன் அங்கிருந்து குறுக்கே மறித்து நடந்தாள். வீட்டிற்கு வந்தாள். டிசம்பர் லீவு முடிந்ததும், நடத்தப்பட வேண்டிய பாடங்களுக்குக் குறிப்பு எழுதினாள். 'இல்வாழ்க்கை — ஏலாதி — திருமருகல் நிகழ்ச்சி — தங்கைக்குக் கடிதம் — இப்படி எழுதிக்கொண்டே போனாள். வகுப்புக்களும் பாடங்களும் கூடி விலகிக் கொண்டே இருந்தன!

சடக்கென்று பேனாவைக் கீழே போட்டாள். எதையோ நினைத்துக் கொண்டவள் போல, அப்படியே பிரமை தட்டி உட்கார்ந்திருந்தாள். அவளது அழகிய முகம் வெளிறியது. கண்களை இறுக மூடிக் கொண்டாள். அவள் தன்னுடைய இருதயப் பகுதியை விரல்களால் அழுத்தினாள். மூச்சை அடைப்பது போலிருந்தது. வேர்வை கொட்டியது. அடுத்த இரண்டொரு நிமிஷங்களில் அவள் தெளிவு பெற்றாள். "தெய்வமே!..." என்று அழைத்தாள்.

அவள் எழுந்து வீட்டைப் பூட்டினாள்.

தெய்வம் அழைத்ததோ?

பாலமுதம் அருந்த ஓடும் மழலையாக அவள் விரைவு பாய்ச்சி நடந்தாள்.

அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் தருவாளாமே? உங்களுக்குத் தெரியுமா?

## இருபத்தொன்பது

ஸ்ரீகாளிகாம்பிகைத் தாயைச் சேவித்துவிட்டுத் திரும்பிய போது, தமிழரசியை எதிர்நோக்கிப் புதிய அதிசயமொன்று காத்திருந்தது. அவள் படிக்கட்டில் ஏறியபோதுதான், நந்தியாக வழி மறித்து நின்ற காரைப் பார்த்தாள், அவள். உடனே, "அம்மா!" என்று மகிழ்வுக் குரலெடுத்து விளித்தாள்.

வேண்டிய வரம் ஈந்துவிட்டாளோ, உலகாளும் அன்னை!...

முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த கஸ்தூரி அன்னை அனாதை இல்லத்தின் தலைவி குமாரி திலகவதி அம்மையார் மெல்லத் தலையை நீட்டிக் கண்ணாடிக் கதவின் இடுக்கு வழியாகப் பார்த்தாள். கதவைத் திறந்துகொண்டு இறங்கினாள்.

அதற்குள் தமிழரசி பூட்டைத் திறந்தாள். வீடு தேடி வந்த அன்னையைக் கண்டதும், அவளுக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. சாவித்துவாரத்தை 'வாகு' பார்த்துப் பொருத்தித் திறப்பதற்குள்ளாக, அவள் திணறிப் போனாள். என்றாலும், கடைசியில், அவளே வென்றாள். விளக்குகள் ஒளியை உமிழ்ந்தன.

"வாங்க, மதர்!" என்று மரியாதையுடன் வரவேற்றாள். தேக்கு நாற்காலியை எடுத்து முன் வசமாகப் போட்டாள். மேலாக்கைக் கொய்து எடுத்துப் போட்டுக் கொண்டாள்.

திலகவதி கொண்டை வலையை இடது கையால் அழுத்தியபடி நாற்காலியில் குந்தினாள்.

ஆகாஷ் வாணியின் சென்னை வானொலி நிலையம் பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தது. அதன் அலைகள் சாளரக் கம்பிகளின் வழியே உட்புறத்தே நுழைந்து விலகின.

தாயின் காலடியில் பாசத்தோடும் அன்போடும் நின்று கொண்டிருக்கும் மகளைப் போல, தமிழரசி இல்லத் தலைவியின் காலடியில் நின்றாள்.

அவளை ஆதரவு கொழிக்கும் பார்வையால் அளந்த திலகவதி, அவளது பூங்கரங்களைப் பிடித்து, அழகிய சிவப்பு விரல்களைப் புஷ்பங்களை வருடுவது மாதிரி பவ்யமாகத் தடவிக் கொடுத்தபடி, "என்னம்மா தமிழரசி! நீ உன் மதரை மறந்திட்டையம்மா?...'' என்று மிகுந்த ஏக்கத்துடன் கேட்டாள். தலைவியின் வினா அவள் நெஞ்சைச் சுண்டி இழுத்தது.

"என்னை மன்னிச்சிடுங்க, மதர்!... உங்களைப் பார்க்கிறதுக்கு வரணும்னு பலமுறை நினைச்சேன். ஆனால், என்னையும் அறியாமலேதான் நான் வர முடியாமல் இங்கேயே தங்கிட நேர்ந்திட்டுதுங்க!... நான் அங்கே வராமல் இருந்தாலும், என் மனசு நீங்க வளர்த்து ஆளாக்கின இந்த மனசு — சதா சர்வ காலமும் உங்களையேதான் சுத்திக்கிட்டு இருந்திச்சுங்க அம்மா!..." என்று உண்மையை ஒப்புவித்தாள்.

ஒரு நாள், மோகன்தாஸைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கையில், வழக்கம்போல அவள் இல்லத் தலைவியைப்பற்றிப் புகழ்ந்துரைத்துக் கொண்டிருந்தாள். அதைக் கேட்ட அவன், "ஏதேது, உங்களுக்கு உங்க மதரைப் பற்றி மணிக்கு மணி பேசாமல் போனால், உங்க மண்டை வெடிச்சிடும் போலிருக்கே!... நீங்க உங்க இல்லத்துத் தாய்க்கிட்டே வச்சிருக்கிற அன்பும் பாசமும் இவ்வளவு மகத்தானதாக இருக்குதே! இவ்வளவு தூரம் உங்க மனசைக் கவர்ந்த அந்த தெய்வத்தாயை நானும் ஒரு முறை சந்திச்சு என் வணக்கங்களைச் சமர்ப்பிக்க வேணும்னு விரும்புகிறேன், தமிழரசி!'' என்று தன் உள்ளக் கிடக்கையை வெளியிட்டான், அவன்.

அந்தச் சம்பவத்தை எண்ணி ஆறுதல் கொண்ட நிலையில் அவள் அம்மையைப் பார்த்தாள்.

தலைவிக்குச் சொந்தமான கண்களின் கோடியில் நீர் இருக்கக் கண்டாள். அவள் உடல் குலுங்கி அடங்கியது.

பின்னர், சுவரில் தொங்கிக் கொண்டிருந்த பிளாஸ்கை எடுத்தாள்.

"மதர், இருங்க. ஒரு செகண்டிலே வந்திடறேன்!" என்று புறப்பட முனைந்தாள்.

"உன் எண்ணத்தை நான் செகண்ட் பண்ணமாட்டேன், தமிழரசி!... அம்மா, எனக்கு உன் அன்புதான் தாயே வேணும். காபி ஒண்ணும் வேண்டாமம்மா!'' என்று உணர்வுகளைச் சொற்களாக்கினாள் திலகவதி.

மொழிக்கிளர்ச்சிப் புயல் வீசிக்கொண்டிருந்த நேரத்தில் இப்படித்தான் அம்மையார், தமிழரசியைத் தேடிக்கொண்டு வந்துவிட்டாள். "உன்னைத் தேடி வந்ததம்மா! அதனால் தான், உன்னைத் தேடி வந்துவிட்டேன்!'' என்றாள். அப் போதும், இதுபோலத்தான் காபி எதுவும் வேண்டாமென்று மறுதளித்தாள். தலைவி என்றால் அந்த இல்லத்திற்குள்ளே ஒரு தனிப்பட்ட பயம்! தலைவி என்றால், இல்லத்திற்கு வெளியே ஒரு தனித்த மரியாதை!...

"பாலாச்சும் கொஞ்சம்...'' என்று இழுத்தாள் தமிழரசி.

"நீ என்னம்மா இப்படி இருக்கிறே? நமக்குள்ளே இந்தச் சம்பிரதாயம் அது இதெல்லாம் வேணுமம்மா!... நீ நல்ல சந் தோஷத்தோட இருந்தால் அதுதான் அம்மா எனக்குமகத்தான ஆறுதலைத் தரும். அதுக்காகவேதான் நிதமும் நான் கவலைப் பட்டுப் பகவானை வேண்டிக்கிட்டு இருக்கேன்!... தெய்வம் எனக்கு கொடுத்திருக்கிற எத்தனையோ குழந்தைச் செல்வங் களுக்குள்ளே நீதானம்மா செல்லமகள்! செல்வத் தலை மகள்!...'' என்று மெய்யுருகி மொழிந்த திலகவதி அம்மை யார், உணர்ச்சி வசப்பட்டு நின்ற தமிழரசியை வாரி அணைத்துக் கொண்டாள்.

அவர்கள் இருவரது மேலாக்குப் பகுதிகளிலும் அங்கங்கே ஈரம் படிந்திருந்தது.

அந்தப் பழைய ஞாபகத்தின் இனிய உணர்வின் தன்மயமான ருசிக் கலவையுடன் தலையை உயர்த்தினாள் தமிழரசி.

'இந்தத் தாய் எனக்கு இருப்பதே போதும் என்றுதான், என்னைப் பெற்ற அன்னையையோ, தந்தையையோ என் கண்களிலே கடவுள் காட்டவில்லையோ?' என்று மறுகினாள் அவள்.

"உட்காரம்மா!" என்றாள் தலைவி. அவள் பார்வை, சுவரில் கொலு வீற்றிருந்த தன்னுடைய புகைப்படத்தில் நிலைத்தது. பெருமிதம் கொண்டாள்.

பெருமையுடன் நின்று கொண்டிருந்தாள் தமிழரசி. பிறகு, அவள் உட்கார்ந்தாள். கோயிலுக்குப் போய்த் திரும்புகாலில் வாங்கி வந்த மாலைப் பத்திரிகையை மேலோட்டமாகப் புரட்டினாள். பழமைப் பண்பாட்டினைப் போற்றிக் காப்பது எழுத்தாளர்களின் கடமையாகுமென்பதை வற்புறுத்திப் பேசிய மரபு வழித் தாகங்களைப் பற்றிய விவரங்கள் கண்டிருந்தன.

ஊதுவத்தி மணம் கமழ்ந்தது.

"அம்மா!..."

தமிழரசி பத்திரிகையை மார்புற அணைத்தபடி, அன்னையின் முகத்தைப் பார்த்தாள்.

"எனக்கு வேண்டப்பட்ட பம்பாய்க் குடும்பத்தினர் வந்திருக்காங்க. அவர்களோடு சில இடங்களுக்கு போயிட்டு இல்லத்துக்கு வந்தேன். கொஞ்சம் பொறுத்து, திருவாளர் சொக்கநாதன் அவர்களைப் பார்க்கிறதுக்குப் புறப்படுவதாக இருந்தேன். எனக்குத் தெரிஞ்ச பம்பாய்க் குடும்பம் அவருக்கும் பரிசயமானது. வந்த விருந்தினர்களும் அவரைப் பார்க்க விரும்பினாங்க. அப்பதான், அவர் நாலாவது தடவையாக என்னோட டெலிபோனிலே பேச முயற்சி செய்திருக்கிறார். நல்ல வேளையாக, நான் அப்போது இருந்துவிட்டேன். அவர் என்னோடு பேசினார். அவர்

சொன்னார் விஷயங்களை எல்லாம்!... ஆமாம், அந்த ராணுவ வீரர் கடைசியிலே, இப்படிச் செஞ்சிட்டாரே அம்மா, தமிழரசி?...'' என்று சொல்லி வருந்தினாள் தலைவி. அப் பேச்சில், கேள்வியின் பாவம் குறைந்தும், கவலையின் ஆட்சி மிகுந்தும் குரல் கொடுத்தது.

''அவருக்கு ரொம்பக் காலமாய் ஒரு காதலி இருக்கிறாளாம். அவளைத்தான் கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போறாராம் அவர்!... என் விதிதான் என்னைச் சுத்திக்கிட்டேயிருக்குதே மதர்!... ஆனால், மிஸ்டர் மோகன்தாஸின் கடமையையும், அதைப் பார்க்கிலும் அவரது காதலியோட கடமையையும் நாம் போற்றத்தான் வேணுமுங்க!...'' என்று தண்ணளியின் இனிமை மிளிரப் பேசினாள் அவள். அவள் தமிழரசி!

அலுங்காமல் குலுங்காமல் நிதானமாக நின்றெரியும் குத்து விளக்காகத் தமிழரசி விளங்கினாள்.

''உன் எண்ணம், பேச்சு, செயல் எல்லாமே என் மனசிலே ஒரு சரித்திரமாகவே இடம் பிடிச்சிட்டு வருகுதம்மா, தமிழரசி!'' என்றாள் அம்மையார். தமிழரசியின் பண்பியல், தலைவியின் முகத்தில் பெருமையாக ஏற்றம் புரிந்தது!

தலைவி புறப்பட விரும்பினாள்.

அப்போது, சற்றும் எதிர்பாராத விதமாக அங்கு மோகன்தாஸ் வந்து நின்றான்.

அவனை வியப்பு விரியப் பார்த்தாள், தலைவி.

தமிழரசி அவனை வரவேற்றாள். பிறகு, தலைவியிடம், ''இவங்கதான் ராணுவ வீரர் மிஸ்டர் மோகன்தாஸ்!'' என்று பழக்கப்படுத்தினாள்.

''ஓஹோ! அப்படியா?'' என்றாள் தலைவி. சிரிப்புக்கூட்ட முனைந்தன உதடுகள். சிரிப்புப் பிறக்கவில்லை.

அப்போது :

ஊன்று கோல்கள் இரண்டிலும் உடம்பைச் சார்பு படுத்திக் கொண்டு, தலைவியை நோக்கிக் கைகள் இரண்டையும் பக்தியுடன் குவித்துக் கும்பிட்டான், அவன்.

உட்காரும்படி வேண்டினாள் தமிழரசி.

மோகன்தாஸ் பேசினான்: "உங்களை நேரிடையாகப் பரிசயம் இல்லையானாலும், உங்களைப் பற்றி ரொம்ப தூரம் நான் அறிவேனுங்க!..."

திலகவதி தலைமுடியைக் கோதி விட்டுக் கொண்டே, "அப்படியா?..." என்று கேட்டுச் சிரித்தாள். அவன் பார்வை இப்போது தமிழரசியின் பக்கம் இருந்தது. அம்மையின் சிரிப்பில் புதுத் தெம்பு ஊர்ந்தது. "ஓஹோ, எங்க தமிழரசி தான் உங்களுக்கு என்னைப் பற்றிச் சொல்லியிருக்கும்! ஏம்மா, அப்படித்தானே?..." என்றாள் அவள்.

தமிழரசி மௌனப் புன்னகை புரிந்தாள்.

தமிழரசி தூக்க மாத்திரை சாப்பிடத் துணிந்த அந்தப் பயங்கரத்தைத் தொலைபேசி மூலம் சொல்லி, அவளுக்கு நல்ல புத்தி சொல்லி அவளைக் காக்கும்படி, தான் கவலையுடன் வேண்டிக் கொண்ட பழைய சம்பவத்தையும் அவன் நினைவூட்டினான். அரசாங்க அலுவலகத்தில் தலைவியை முதன் முறையாகப் பார்க்க நேர்ந்ததையும் அவன் தெரிவித்தான்.

சலனம் ஏதுமின்றி இருந்தாள் திலகவதி அம்மை. இரண்டு நிமிஷங்கள் நழுவின. "உங்க பேச்சு ரொம்பவும் அழகாக இருக்கிறது, மிஸ்டர் மோகன்தாஸ்!" என்று சொன்னாள்.

அவன் முகம் ஏனோ மாறியது. அவன் தமிழரசியின் விழிகளைச் சந்திக்கப் பயந்து கீழே தலையைக் கவிழ்த்தான். "மிஸ்டர் மோகன்தாஸ்! உங்களைச் சந்திச்சதிலே நான் ரொம்பவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். நீங்க தாய் நாட்டுக்காகச் செஞ்சு காட்டின அருப்பெரும் சேவைக்காக எங்க இல்லத்தின் சார்பிலேயும் உங்களுக்கு நன்றி

சொல்லிக் கொள்கிறேன்!...” தலைவி இன்னும் ஏதோ கூறத் துடித்தாள். ஆனால், கூறவில்லை. ‘உங்களுடைய தியாகத்தைப் போற்றி, உங்களுக்கும் தமிழரசிக்கும் கல்யாணம் நடக்கும் போது, பெரிய விருந்து ஒன்று வைக்க வேணும்னு ஆசையாக இருந்தேன்! ஆனா, அதுக்குள்ளே நீங்க இப்படிச் சோதனை செஞ்சிட்டீங்களே?’ என்று பேசிவிடத் துடித்த துடிப்பு அந்தத் தாய் உள்ளத்துக்கன்றோ தெரிய முடியும்?

நன்றியுடன் மீண்டும் வணங்கினான் அவன்.

“ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வந்தீங்களா?” என்று மோகன்தாஸிடம் குழைவுடன் விசாரித்தாள், தமிழரசி.

“போயிட்டுத்தான் வந்தேன். அநேகமாய் இன்னும் சில நாளையிலே, இந்தக் கைப்பிடிகள் இல்லாமலே, சரளமாக தான் நடக்கலாம்னு சொன்னாங்க!” என்று குதூகலப் பொலிவுடன் கூட்டினான் மோகன்தாஸ். “டாக்டர்கள் தேற்றிச் சொல்கிறதாட்டம் நான் சுதந்திரமாக நடக்க முடிஞ்சிட்டால், அப்புறம் எனக்குள்ள பாரமும் கவலையும் மின்னல் வீசி மறைகிற நேரத்துக்குள்ளே இருந்த இடம் தெரியாமப் போயிடும்!” என்று தொடர்ந்தான் அவன்.

தமிழரசி, “ரொம்ப மகிழ்ச்சிக்குரிய தாக்கல் இது! நீங்க பயப்படத் தேவையில்லீங்க!... உங்க இஷ்டப் பிரகாரமே நீங்க இனி தனியாவே நடந்திடலாமுங்க!” என்று ஆறுதல் மொழிந்தாள், தமிழரசி.

தலைவியிடம் மோகன்தாஸ் விடை வாங்கிச் சென்றதும், தலைவியும் எழுந்தாள். கால்கள் மரமரத்துப் போனதால், கொஞ்சம் சிரமப்பட்டுத்தான் அவள் எழும்ப வேண்டியதாக இருந்தது. தமிழரசியின் கழுத்தில் தொங்கிய தங்கச் சங்கிலிப் பதக்கத்தை தொட்டு மகிழ்ந்தபின், “அப்புறம் என்னம்மா!...” என்று கேட்டாள். எதையோ சொல்லவும், எதையோ கேட்டுக் கொள்ளவும் விழைந்தவளாக அவள் போக்கு தெரிந்தது.

ஆனால், தமிழரசியோ வாய் திறக்கக் காணோம்!

"உன் மனக் கஷ்டங்களினாலேதான் நீ இல்லத்துக்கு வராமல் இருந்திட்டே. இப்படியே இருந்தால் அப்புறம் என்னம்மா ஆகிறது?... மனநோய் பொல்லாததம்மா!... மோகன்தாஸ் சந்திப்பு உண்டாகிறதுக்கு முன்பாக ஒரு நேரம் உன்கிட்டே டயம் கேட்டேனே, அந்த வேண்டுகோளை மறுபடியும் புதுப்பிச்சுத் தா அம்மா!... நானும் அன்பர் சொக்கநாதனும் கலந்து ஒரு நல்ல வரனாகச் செட்டில் செய்திடுறோமம்மா!..." என்று கெஞ்சினாள், இல்லத்தின் தாய்.

தமிழரசியின் ரத்த ஓட்டத்தில் புதிய ஊற்றுக்கண் திறந்தது. "அம்மா, என்னைப் பெரிய மனத்துடன் பொறுத்தருளுங்க, நீங்க என் மதர்!... நீங்களேதான் எனக்கு வழி காட்டும் தெய்வம்! ஆகவே, உங்க மாதிரியாகவே நானும் கன்னியாகவே இருந்து என்னால் ஆன சமுதாய சேவை செஞ்சு, உங்களைப் போலப் புனிதமானதொரு சமூக அந்தஸ்தைப் பெற்று, என்னுடைய மீதிக் காலத்தையும் கழிச்சிடுறேனுங்க... மதர்!..." என்று வைராக்கியத்தின் மலர் தொடுத்தாள். எடுப்பான மூக்கின் இருபகுதிகளையும் தடவி விட்டுக் கொண்டாள். நுனியில் சிவப்புக் கட்டியது. 'இந்தச் சமுதாயம் எனக்கு அளித்திருக்கின்ற நல்ல பெயரையும், உயர்ந்த அந்தஸ்தையும் நான் என் வாழ்நாளின் கடைசி வரைக்கும் காப்பாற்றிக்கொண்டு, அந்த உயர்ந்த கவுரத்துடனும், அந்த நல்ல பெயருடனும் என் கண்களை மூடிவிட வேண்டும் என்று கனவு காண்கிறேனம்மா!' என்று அடிக்கடி இதயம் திறந்து பேசிய அந்தத் தலைவியின் கனவைத் தமிழரசி இப்போதும் சிந்தை செலுத்தினாள். அவள் பெருமையுடன் தலைவியை நெருங்கினாள்.

தலைவியின் அழகிய சிறிய விழிகள் நனைந்திருந்தன. ஆற்றாமையுடனும் பரிதாபத்துடனும் தமிழரசியைப் பார்த்தபடி எழுந்தாள். "கிறிஸ்துமஸ் அன்றைக்கு நீ என்னுடன் தான் தங்க வேணுமாக்கும்!" என்று அன்பால் அவளை ஆணை இட்டாள்!... அந்த ஆணையைத் தமிழரசியின் மனத்தில் தேக்கி வைத்து விட்டு, தலைவி காரைச் செலுத்திச் சென்றாள்.

ஒரு தம்ளர் பாலுடனும் இரண்டு மலை வாழைப் பழங்களுடனும் அன்றைய இரவுச் சாப்பாட்டை முடித்தாள் தமிழரசி. கதவை அடைத்துவிட்டு, படுக்கையை உதறிப் போட்டாள். ஏதோ நினைவு உந்த, அவள் பீரோவைத் திறந்த போது மோகன்தாஸின் படம் அவள் பார்வையில் தென்பட்டது. அந்தப் படத்தையே இமைக்காமல் ஓரிரு விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு, நீள மூச்சுடன் பீரோவையும் மூடினாள். இருட்டில் அவள் படுக்கையை அண்டினாள். நடைபாதைக் குழந்தை ஒன்று வீறிட்டுக் கொண்டிருந்தது!

இரவு - பகல் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந்தன.

அறிவு நூல்கள் வந்து கொண்டும், திரும்பிக் கொண்டும் இருந்தன.

தோழிகள் வந்து கொண்டும் போய்க்கொண்டும் இருந்தனர்.

அன்று தினம், இல்லத்தில் கிறிஸ்துமஸ் பொழுதைக் கழித்தாள், தமிழரசி. மனச் சாந்திக்காக அவள் தவம் இயற்றிக் கொண்டிருந்த நேரத்தில், தலைவிக்குத் தொலைபேசிச் செய்தி ஒன்று வந்தது. அதை அவள் தமிழரசிக்கும் அஞ்சல் செய்தாள். தன் ஆசை அத்தானுடன் மணவறையில் குந்தி மகிழுவதற்காக, தைப்பெண்ணை உளமார வரவேற்று, வீட்டின் தலை வாசலிலேயே நின்று தவம் செய்து கொண்டிருந்த சுடர்க்கொடி இப்போது மரண வாசலிலே நின்று கொண்டிருக்கிறாளாம்!......

இதுதான் செய்தி!

## முப்பது

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தாறும் ஆண்டு "ஜாம் ஜாம்" என்று பிறந்துவிட்டது!

இந்திய - பாகிஸ்தான் நாடுகளின் அடிப்படைச் சிக்கல் களுக்குத் தீர்வு கண்டு, சமரசம் காணும் சமாதானப் பணி யில், பாரதத்தின் பிரதமர் லால்பகதூர் அவர்களும், பாகிஸ் தான் அதிபர் அயூப்கான் அவர்களும் தாஷ்கண்ட் நகரிலே முழுமூச்சுடன் செயற்படத் தொடங்கிவிட்டார்கள்!

செய்தியின் விருத்தாந்தங்களை மிகுந்த கவலையுடனும், கூடுதலான அக்கறையுடனும் வாசித்து வந்தாள், தமிழரசி. அன்று தாய் மண்ணின் மானத்தைக் காக்கும் கடமையில் புயலாய்ச் சீறி எழுந்த அதே லால்பகதூர், இன்று நாட்டின் அமைதியைக் காக்கும் இலட்சியத்தில் தென்றலாய் நிலவி வரும் அந்தப் பண்பை — அந்தப் பொற்பை — அந்தக் கடமையை எண்ணி எண்ணிப் போற்றினுள்; துதித்தாள்; மகிழ்ந்தாள்! மெய்ம்மறந்த நிலையில் லால்பகதூர் பற்றிய சிந்தனையில் அமிழ்ந்துவிட்டாள், அவள். அந்தச் சிறுபொழு தில் லால்பகதூரின் தியாகம் செறிந்த செம்மை வாழ்வின் பெரும் சரித்திரத்தை அவள் நினைவு கூர்ந்தாள்!—

ஏதோ ஒரு பள்ளியின் விழாவுக்குச் சாஸ்திரியை அழைத் திருந்தார்களாம். சின்னஞ்சிறு உலகம் அது. சிறுவர்களும் சிறுமி யர்களும் குழுமியிருந்தார்கள். தலைமை தாங்கிப் பேச ஆரம்பித் தார் பிரதமர். "என்னுடைய இந்தச் சிறிய உருவத்துக்காகத் தான், சின்னஞ்சிறு பிள்ளைகளாகிய உங்கள் முன்னே பேசு வதற்கு என்னைத் தேர்ந்தெடுத்து வரவழைத்திருப்பீர் களென்று நம்புகிறேன்!" என்றாராம். இப்பேச்சை அவள் கடைசியாக எண்ணி முடித்தாள். கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் ஊற்றெடுத்தது.

தன் கை வண்ணத்தால் உருவான 'அம்மன் ரதம்' புள்ளிக் கோலத்தை ரசித்த வண்ணம் புதுமைக் கோலம் தாங்கிப் புறப்பட ஆயத்தமானுள் தமிழரசி.

அரையாண்டுப் பரீட்சைக்கு மாணவிகள் கொடுத்திருந்த விடைத்தாள்களை விடுமுறையில் திருத்தி வைத்திருந்தாள். அவற்றை எடுத்துக் கொண்டு பள்ளிக்குச் சென்ருள் தமிழாசிரியை. பள்ளியை அடைந்து, வருகைப் புத்தகத்தில் வழக்கம்போலக் கையொப்பம் செய்தாள். 'இனிஷியல்'— அதாவது, தலைப்பெழுத்து இல்லாத தன்னுடைய பெயருக்கு நேராகக் கையொப்பம் செய்தபோது, வழக்கம் போலவே அவள் மனம் பிரளயம் ஆகி அடங்கியது. பிறகு, விடைத் தாள் கட்டுகளைத் தலைமை ஆசிரியையின் அவ்வறையிலேயே வைத்தாள். அங்கிருந்தபடியே அவள் சுடர்க்கொடியுடன் பேசினுள். உடம்பு தேறி வருவதாக ஆனந்தத்துடன் சுடர்க்கொடி தெரிவித்தாள்.

மரண வாசல் வரைக்கும் போய்விட்ட சுடர்க்கொடியைக் காப்பாற்ற அவளே சதமென்று அவள் பக்கத்திலேயே நாலைந்து நாட்கள் வரை தமிழரசி மனம் ஒன்றி இருந்தாள். ஆண்டவனின் தண்ணளி சுடர்க்கொடியைக் காப்பாற்றியது; அவளை இனியேல் மணப்பந்தலில் உட்காரச் செய்துவிடுவாள் தமிழரசி! புனர்ஜன்மம் எடுத்தவள் போலப் பொலிவுடன் சிரித்த அம்பலவாணனின் அன்பும் பரிவும் எழிற்கொடியான சுடர்க்கொடியை இனி கட்டிக் காத்துக் கொள்ளாதா? தை பதினுன்கில் அம்பலவாணன் — சுடர்க்கொடி திருமணம்! மணப்பெண் தோழி யார் தெரியுமா! — தமிழரசிதான்!... ஆமாம், சாட்சாத் தமிழரசியேதான்!

பள்ளிக்கடமை, தமிழாசிரியை தமிழரசியை நாள் தோறும் அழைத்துக் கொண்டேயிருந்தது!...

பள்ளிக்கூடத்தில் மாலைப் பாடங்களை முடித்துக்கொண்டு தமிழரசி வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். விளையாட்டு மைதானத்தைக் கடந்து வந்தபோது, சிறுமிகள் "சறுக்கல் விளையாட்'டில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்

தை ரசித்தாள். உள்ளூற மனத்தின் அடிவாரத்தில் பரவி யிருந்த கோபத்தின் சாயல் லேசாக மறைந்து கொண்டிருப் பதாக அவளால் ஊகம் செய்ய முடிந்தது.

மத்தியான்னம் அவள் சாப்பாடு முடிந்து கல்வி ஆலயத் துக்கு வந்து கொண்டிருந்த போது, அவள் ஒரு காட்சியைக் கண்டாள். பெரிய இடத்தைக் சார்ந்த மாணவி ஒருத்தி ஆடம்பரமான ஓர் இளைஞனுடன் சிரித்துப் பேசிக் கொண் டிருந்தாள். அந்த இளைஞன் அத்து மீறிய அவசரப் போக் குடன் சிகரெட்டை ஊதித் தள்ளிக் கொண்டிருந்தான். ஒரு நிதானமிழந்த தன்மையை அவனிடமிருந்து அவள் உணர்ந் தாள். அப்போது, அவள் மனத்தில் ஜலஜாவின் பரிதாபநிலை தான் தோன்றியது. ஜலஜாவை ஆசைகாட்டி மோசம் செய்து விட்ட அவளது காதலனை—ஒரு முறை தன்னிடம் நெருப்பு கேட்டு வாயாடி வந்த அந்தப் பாவியைப் பற்றிய பயம்தான் அவளுக்கு ஏற்பட்டது. ஆகவே, இந்தப் பெண்ணுக்கு எச்சரிக்கை செய்துவிட வேண்டுமென்று எண்ணியவளாக அவள் ஸ்கூலுக்குச் சென்றாள்.

அதற்கு ஏற்ற தோதாக, கடைசி வகுப்பு முடிந்ததும், அந்த மாணவி தங்கத்தைத் தனியே அழைத்துப் பேசினாள். தன் கவலையையும் அந்தக் கன்னித் தங்கம் மேற்கொள்ள வேண்டிய கவலையையும் உள்ளடக்கி, "தங்கம், உலகம் ரொம்பக் கெட்டுக் கிடக்குதம்மா! இந்த மாதிரி காதல் வியவகாரத்திலே ரொம்பவும் உஷாராக இருக்க வேணும்!... முதலிலே ஒழுங்காகப் படி. அப்புறம், உங்க வீட்டிலே உன் இஷ்டத்தைச் சொல்லி உன் காதல் விவகாரத்தை முடித்துக் கொள்ள முயற்சி செய், தங்கம்! குப்பை கூளங்களைத்தான் குப்பைத் தொட்டியிலே போட முடியும். பெண்மையின் சிறப்புக்களையும் குப்பைத் தொட்டியிலே போட்டுவிட முடியுமா? கண்ணைப் பார்த்து நடக்காவிட்டால் அப்புறம் விபத்துக்கு உள்ளாக வேண்டியதுதான்!" என்று உலகப் பாடம் போதித்தாள் தமிழ்ப் பண்டிதை.

எட்டத்தில் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தன நாய்கள்.

என்னவோ பதிலுக்குப் பதில் சொல்ல முயன்று, பின் வாயை அடக்கிக்கொண்ட அந்தப் பெண், தன் பேச்சை வேண்டா வெறுப்புடன் ஏற்றுத் தலையை ஆட்டிக்கொண்டு சென்றதை உணர்ந்தாள், தமிழரசி. 'என்ன பேசத் துடித் தாள், அந்த மாணவி?... ஒரு வேளை நானும் அம்பலவாண னும் சிரித்துப் பேசிப் பழகிய சம்பவங்களைக் கண்டு, அதைப் பற்றிச் சொல்லிக் காட்ட எண்ணியிருப்பாளோ? பாவம், அறியாப் பெண். அவள் புத்திக்குச் சொன்னேன். அதைப் புரிந்துகொண்டு பிழைத்தால் தப்பித்தாள். இல்லையேல், இவள் பணம் நாளைக்கு இவள் மானத்துக்கு எவ்வகையில் காப்புக் கொடுக்க முடியும்? என்னைப் போல எச்சரிக்கை யோடும், தற்காப்புணர்வோடும் இவள் நடந்து கொள்ளப் பழகினால் இவளுக்குக் கவலை ஏது? கஷ்டம் ஏது?...' அவள் மனம் ஏனோ அதிர்ந்தது. அமைதியின்மையின் குமிழ்கள் குறுகுறுத்தன. அந்த மனநிலையுடன் அவள் சறுக்கல் விளையாட்டைப் பார்த்தாள். 'விளையாட்டிலே சறுக்கி விழலாம், பார்க்கத் தமாஷாகத்தான் இருக்கிறது. ஆனால், வாழ்க்கையிலே சறுக்கி விழுந்துவிட்டால், அது எத்தனை படுபயங்கரமான நிகழ்ச்சியாக ஆகிவிடும்!...

சாவித்திரி பேச்சுத் துணைக்குக் கிட்டினாள். இந்தச் சில நாட்களாக அவளைப் பார்க்கும் போதெல்லாம், அவளை நினைத்துக்கொள்ளும் போதெல்லாம் அவள் ஒரு புது விதி யாகத் தன்னுள் நிலவி வருவதை அவள் பூரணமாக அறிந்தாள். அந்தப் புதிய விதியே 'உண்மை'யாகவும் அவள் கொண்டாள். இருவரும் பேசிக்கொண்டே நடந்தார் கள். "டீச்சர், உங்களை நினைச்சால், உங்களைப் பார்த்தால் எனக்குப் புது உத்சாகமும் புதுத் தெம்பும் வந்திடுது!" என்றாள் சாவித்திரி.

தமிழரசி அடக்கமாகச் சிரித்தாள். அச்சிரிப்பு விரக்தி யுடன், ஏமாற்றத்தின் பிடிப்புடன் வெளியேறி விளையாடியது. "டீச்சர்! நீங்கதான் எனக்கு ஒரு அதிசயமாக இருந்து வருநீங்க. உண்மையும் அதுதான்!... நீங்க உங்களை

நிரூபிச்சுக் காட்டிட்டீங்க! ஆனால், நான் என்னை நிரூபிச்சுக் காட்ட முடியாமல் போயிட்டுதே!...” என்றாள் தமிழரசி, இதயத்தின் இதயத்தில் ஊமைத்தனமான அழுகை ஒப்பாரி வைத்தது.

சாவித்திரி ஒன்றும் பேசத் தோன்றாமல் அவளுடன் நடந்தாள்.

தமிழரசி தன் மாணவிக்குப் புத்தி சொன்ன விஷயங்களை மறக்க முடியாமல் பாதங்களை நகர்த்திக் கொண்டிருந்தாள். மாணவி தங்கம் தன்னிடம் ஏதோ பேச வாயெடுத்த காட்சி அவளது அகத்தை உறுத்திக்கொண்டேயிருந்தது. தன்னையும் அம்பலவாணனையும் பிணைத்து அபவாதம் பேசி ஏசிய அனாம தேயக் கடிதமும் அவள் நிம்மதியைக் குலைத்தது.

வெளி முகப்பு வாசலை இலக்கு வைத்து அமைக்கப் பட்டிருந்த நடைபாதையின் இருமருங்கிலும், வண்ணம் நிறைந்த பூச்செடிகள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. அவற்றின் எழிலை ரசித்தவர்களாக இருவரும் சிறுபொழுது வரையிலும் அங்கேயே நின்றார்கள்.

அப்போது, பின்புறமிருந்து ஏதோ சலசலப்பு விளைந்தது.

பின்புறம் திரும்பிப் பார்த்தார்கள் ஆசிரியைகள் இரண்டு பேர்களும்.

“டீச்சர், ஒரு நிமிஷம் வாங்க... அந்தப் பக்கம் போயிட்டுத் திரும்பலாம்” என்று தூண்டினாள், தமிழரசி. பேசிக்கொண்டே அவள் பரபரப்புடன் திரும்பினாள் பள்ளிக் கூடத்துக் கட்டடத்தை நோக்கி. அன்றொரு நாள், உணவு சாப்பிட்டுவிட்டு, தன் மச்சத்தைத் தொட்டு மகிழ்ந்து, பேசி மறைந்த அந்தத் தாயின் உருவத்தை அவள் தொலைவி லிருந்தே இனம் கண்டு கொண்டாள். அதனால்தான், அவள் பரபரப்பு எய்தி விரைந்தாள். தன் மகளுக்கும் எனக்கு இருப்பதுபோல இடது கன்னத்தில் மச்சம் இருப்ப தாகச் சொன்னாள் அவள். மகளைப் பிரிந்ததால்தான் அவள் அன்று அப்படிச் சித்தபேதம் எய்தியவளைப் போலத் தலை

தெறிக்க ஓடி மறைந்தாளா? குழந்தை பிறந்தவுடனேயே அவள் அதைப் பறி கொடுத்து விட்டாளா? அல்லது, இடையில் தான் தாயும் மகளும் பிரிய நேர்ந்ததா? அப்படியென்றால், அவள் கணவன் எங்கே?...' என்ற ஐயப்பாடுகள் எண்ணங்களாக மாறின. எண்ணங்களுக்கு அளவேது?

அந்த அம்மணியாகிலும் தன் பேரில் உரிமை கொண்டாடமாட்டாளா என்று விசித்திரமான ஏக்கத்துடன் முன்னர் தவியாய்த் தவித்த அந்தச் சில கணப் பொழுதுகளையும் அவள் நெஞ்சில் கொண்டாள். ஆசைக்கு வெட்கம் ஏது? அவள் தீவிரமான துடிப்புடன் நடந்து அக்கூட்டத்தை அணுகிப் பார்த்தாள். அன்றொரு நாள், தன்னை அனாதை என்று விளையாட்டுத் தோழிகள் ஏசியதைச் சகிக்காமல் கிணற்றில் போய் விழுந்து பிழைத்து மறுபிறப்பு எடுத்த அந்த அனாதைச் சிறுமி முத்தழகியை இறுக்கமாகப் பிணைத்தபடி நின்று கொண்டிருந்தாள், அந்த அம்மாள். "நீதாண்டி கண்ணே நான் பெற்ற மகள். தெய்வம் என்னை அனாதையாக்கிப்பிடலை உன்னையும் அனாதையாக்கிப் பிடலை!" என்று விழிப்பூ உதிர்த்தாள்.

சிறுமி முத்தழகியின் பால் வதனம் ரத்தச் சிவப்பாக மாறியிருந்தது. அவள் அந்தத் தாயையே பரிதாபத்துடன் பார்த்தாள். "நான் உன் மகள் என்கிறதுக்கு ஆதாரம் என்ன?" என்று மேலெழுந்த குரலில் கண்டித்துக் கேட்டாள்.

"தெய்வமே, ஏனம்மா என்னை இப்படிச் சோதிக்கிறே?—நீ என் மகள்—நான் பெற்ற மகள் நீ என்கிறதுக்கு உன்னோட இந்தக் கன்னத்து மச்சம் எனக்கு ஆதாரம்! ஆனா, உன் அம்மா என்கிறதை எப்படியம்மா ரூபிப்பேன்? ஐயையோ தெய்வமே!" என்று ஓலம் பரப்பிய அவள், உணர்ச்சிப் பெருக்குடன் முத்தழகியின் கழலடிகளைத் தஞ்சமடைந்து அவளை அப்படியே வாரி அணைத்துக் கொண்டாள். அப்போது அந்தத் தாயின் மார்பகத்தில் பாலமுதம் சுரந்து பீறிட்டது. மறுகணம், "அம்மா... அம்மா!" என்று கூவினாள் முத்தழகி.

பிறகு, ""அப்படியானால், என்னோட அப்பா எங்கேயம்மா?'' என்று கேட்டான்.

''உன் அப்பாவையா கேட்கறே? இது நியாயமான கேள்விதானம்மா! உன் அப்பா இந்தப் பட்டணத்திலே தானம்மா இருக்கார். உன்னேயோ, என்னேயோ சொந்தம் பாராட்ட மறுத்துப்பிட்டாரம்மா!... உன் அப்பா பெரிய பணக்காரர்! அதனாலேதான் நம்பளே அவர் ஏறெடுத்துப் பார்க்கக்கூட மறுத்துப்பிட்டார்! சமுதாயத்திலே அவருக்கு இருக்கிற அந்தஸ்துக்கும் பேருக்கும் புகழுக்கும் குந்தகம் விளைஞ்சிடும்னு பயப்படுகிறார் அவர்! இதயமில்லாத பாவியம்மா அந்த மனிதர்! மனிதரா அவர்?— பணத்தைக் காட்டி மறுபடியும் என்னே ஏமாத்திட நெனச்சார்!... அவர்கிட்டே நான் பணத்தையா எதிர்பார்த்தேன்?

''ஐயோ! என்னேப் போலப் பலியான கன்னிகள் எத்தனேயோ பேர் வறட்டுக் கவுரவத்தோடவும் போலியான சமூக அந்தஸ்தோடவும் இன்னமும் இந்தச் சமுதாயத்திலே உயிர் வாழ்ந்துகிட்டுத்தான் இருக்கிறாங்கம்மா!... உன் அப்பாகிட்டே ஓடி, நீ பிறந்தவுடனே உன்னேக் கொண்டு போய்க் காட்டினேன். அவர் தன் வீட்டாருக்குப் பயந்து உன்னேப் பார்க்கக்கூட மறுத்திட்டார். உடனே, அவருக்கும் தெரியாமல் அவரோட வீட்டுக்குள்ளேயே உன்னேக் கிடத்திப் பிட்டு ஓடி வந்திட்டேன்.

''அவர் செஞ்ச தீவினேயை நினேச்சு நினேச்சுத்தான் எனக்குப் புத்தி பேதலிச்சிட்டுது. பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே என்னே அடைச்சுப் போட்டுப் பிட்டாங்க! இப்பத்தான் எனக்குச் சுய ஞாபகம் மீண்டுச்சு. உடனே, உன் ஞாபகம் வந்திடுச்சு. நிற்காது நிலேக்காது, மாம்பலத்துக்கு ஓடிப் போய், உன் அப்பன்காரரை விசாரிச்சேன். அப்பவே உன்னே எங்கேயோ அனுதை இல்லத்துக்கு அனுப்பிச் சிட்டதாகச் சொன்னாரு! அவரைப் பார்த்து அழுது புலம்பினேன், அவரோட புதுச் சம்சாரம் வந்து என்னேச் சமாதானப்படுத்தி அனுப்பிச்சாங்க. தங்கமான புண்ணியவதி!

அவுங்க! பாவம்! ரொம்பச் சின்னப் பொண்ணு அது!... அதோட பெருந்தன்மையிலே நமக்கு விடிமோட்சம் கிடைச்சாத்தான் உண்டு.

"உனக்காக நான் பட்டபாடு கொஞ்சமா, நஞ்சமா?... ஒவ்வொரு பள்ளிக்கூடமாத் தேடிக்கிட்டிருந்தேன், உன்னே!... கடைசியிலே, இத்தனே வருஷம் கழிச்சு, கொஞ்ச முந்திதான் உன்னே என் கண்ணிலே காட்டிஞன் கடவுள்!... குழந்தை குட்டிங்களுக்காக ஒரு பக்கம் தவம் இருக்கிருங்க! ஆளு, பத்துமாதம் சுமந்து பெத்த உன்னே இப்பாவாகிலும் கண்டுக்கிட முடிஞ்சுதே, அதுதானம்மா எனக்குச் சந்தோஷம்!... உன் அப்பாவை ஒரு நாளேக்குத் தூர இருந்து காட்டுறேன்! ஆளு, அப்பவே உன் அப்பாரை நீ மறந்துப் பிடணும்! நாம ஏழைங்க!... நமக்கும் ஆசைக்கும் ஒத்து வரவே வராதம்மா: ஏன்ஞ நாம ஏழைங்க!... அதனலே தான், இந்தப் பாழாய்ப்போன சமுதாயம் அது இதெல்லாம் நம்மளுக்குத் துச்சமாப்படுது! இதுகளே நீ மறந்துப்பிடா தேம்மா!"

அந்தத் தாய்க்குத் தொண்டையை அடைத்தது.

தமிழரசி ஓடிப் போய்த் தம்ளரில் பானேத் தண்ணீர் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தாள்.

அந்த அம்மாள் தண்ணீரை மடமடவென்று குடித்தாள். "இந்தாடி ராசாத்தி, நீயும் கொஞ்சம் குடி!" என்று மகளுக்கும் பங்கு கொடுத்தாள். பிறகுதான், அவள் தமிழரசியை அடையாளம் புரிந்து கொண்டாள். தமிழரசியைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டாள்.

தமிழரசியின் கண்கள் நிரம்பியிருந்தன. 'முத்தழகி இனிமேல் அனதை அல்ல!'

ராசாத்தி முத்தழகியின் இடது கன்னத்திலிருந்த மச்சம் மாலே வெளிச்சத்தில் அற்புதமாக எழில் காட்டியது.

விவரம் அறிந்த தலேமை ஆசிரியை அங்கு வந்து, இலவச விடுதியில் இருந்த முத்தழகிக்கு ஆதரவான வகையில், அவளேப் பெற்றவளுக்கும் ஒரு வேலே போட்டுக் கொடுத்தாள்.

தமிழரசி, "வாங்க டீச்சர், நாம் புறப்படலாம்" என்றாள், சாவித்திரியிடம்.

"பரம்பொருளின் ஒவ்வொரு திருவிளையாடலும் இந்தக் கலியுகத்திலும்கூட மகிமையோடுதான் விளங்கி வருகிறது!" என்றாள் சாவித்திரி.

அவர்கள் இருவரும் சுற்று மதிலைக் கடந்தார்கள்.

அப்போது, அவ்வழியே சைக்கிளில் வந்தான் தில்லைக் கூத்தன். அவன் தமிழரசியைக் கண்டதும் இறங்கி, 'வணக்கம்' சொன்னான். அதே நேரத்தில் அந்தப் பக்கமாகச் சென்ற 'அந்த உருவ'த்தைத் தில்லைக்கூத்தன் பார்த்ததுதான் தாமதம், உடனே சைக்கிளை 'ஸ்டாண்ட்' போட்டு நிறுத்தினான். "ராமு!" என்று அலட்டினான் தில்லைக்கூத்தன்.

ஒரு முறை ஜலஜாவுடன் கை இணைத்து வந்து, தமிழரசியிடம் நெருப்புக் கேட்டு, தில்லைக்கூத்தனிடம் உதை வாங்கிச் சென்றானே அவன்தான் 'அந்த உருவம்!'...

தில்லைக்கூத்தனைப் பார்த்ததும் அந்தப் போக்கிரி ராமுவின் முகம் வேர்வையால் நிரம்பிற்று. அடுத்த இமை கொட்டும் நேரத்தில், அவனை நையப் புடைத்துவிட்டான் தில்லைக்கூத்தன். "பாவி! உன் பாவத்தால் டீச்சரம்மா ஜலஜாவுக்கு நேர்ந்த வினையைப் பார்த்தாயா! .. சீ! நீயும் ஒரு ஜன்மமா?... இன்றல்ல, என்றாவது ஒரு நாளைக்கு நீ செய்த வினையை நீயேதான் அறுவடை செய்தாக வேணும்!" என்று முழங்கினான் தில்லைக்கூத்தன். தமிழரசியின் திசைக்குக் கைகளை ஆட்டியவனாக, அவன் சைக்கிளைச் செலுத்தினான்.

அந்தப் போக்கிரி ராமு குனிந்த தலையை நிமிர்த்தித் தமிழரசியை முறைத்துப் பார்த்தபடி, காலரை உயர்த்திக் கொண்டு சிகரெட்டில் நெருப்பைப் பொருத்திய வண்ணம் வேகமாக நழுவிவிட்டான்.

"இனி, கனவிலேகூட உங்ககிட்டே நெருப்பு கேட்க மாட்டான்!" என்று சிரித்தாள் சாவித்திரி.

"கேட்டால் கொடுக்கலாம் என்றுதான் இருந்தேன். போய்விட்டானே, துரோகி!... அவன் நெருப்பே அவனைச் சுட்டெரிக்கும் வினையைத் தூரத்தில் வைத்திருக்காது அவன் விதி!..."

தில்லைக்கூத்தனை மீண்டும் தமிழரசி சந்திக்க வாய்த்தது. "ஸிஸ்டர், அந்த ராமு என்னோடை சித்தப்பார் பிள்ளை. எங்கள் இரு குடும்பமும் சண்டை. அவன் தாயின் பேச்சைக் கேட்காமல் தறுதலையாச் சுற்றுகிறான். எங்கள் குடும்பச் சண்டையை எண்ணி ஒதுங்கினால், இந்தப் பாவி மூலம் எங்க குடும்பத்தின் பரம்பரைக் கவுரவம் சீரழிஞ்சிடாதுங்களா? அதற்காகத்தான் அவனைக் கண்டித்தேன்!... அவனுக்கு ஒரு கால்கட்டைப் போட்டு விடவேணும். குணம் இல்லாத இந்தக் காலியை எந்தப் பெண் கல்யாணம் செஞ்சுக்கப் போறாளோ புரியலை!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான் அவன்.

தமிழரசி வீட்டுக்கு வந்து 'ட்யூஷன்' முடித்துக் கொண்டு, சாப்பாட்டை முடித்தாள். ஏதேதோ சிந்தித்தபடி, கதவைச் சாத்தித் தாழ் இட்டாள். தொடர்ந்த சிந்தனையின் கிளர்ச்சியுடன் படுக்கையை உதறி விரித்தாள். மருந்து இழந்த தீக்குச்சி ஒன்று தூரத்தில் போய் விழுந்தது. தலைவி வந்திருந்த தருணத்தில், ஊதுவத்தி மணத்துக்குக் கனிவுடன் கை கொடுத்த தீக்குச்சி அது! அது அப்போது கவனிப்பாரற்றுக் கிடந்தது. ஆனால், அது ஊதுவத்தியின் மணத்திற்கு ஒரு காரணமாக இருந்த உண்மையை யாரும் மறக்க முடியாது.

அவ்வுண்மையை எண்ணமிட்டவாறு அவள் படுக்கையில் குந்தினாள். சுவரோடு ஒட்டியவாறு, தலையணைகளைப் பதித்து அதில் சாய்ந்து கொண்டாள். தன்னைப் பற்றியும் இல்லத் தலைவியைப் பற்றியும் எண்ணத் தொடங்கினாள். அந்நினைவோட்டம் அவள் மனத்தில் மோகன்தாஸைக் கொண்டு வந்து நிறுத்தியது. காலத் தீயின் தகிப்பில் அவள் மனம் திணறியது. சாய்ந்திருந்த அவள் முகத்தைத் தாழ்த்தினாள்.

தங்கச் சங்கிலியின் பதக்கத்தைச் சுற்றிலும் விழிகளைச் சுழலச் செய்தாள். அரைக் கணத்தில், அவள் மேனி முழுவதிலும் மின் அதிர்ச்சி ஊடுருவிப் பரவியது. நெஞ்சு உயர்ந்து இறங்கியது. அவளது கண்களின் இரு முனைகளிலும் ஈரக்கசிவு இருந்தது. அவள் நிமிர்ந்து அமர்ந்தாள். விரிந்திருந்த ஒரு பத்திரிகையில் கட்டம் கட்டிப் போட்டிருந்த டாக்டர் சிக்மண்ட் ஃப்ராயிடின் தத்துவத்தை அவள் பார்த்தாள் 'பாலுணர்ச்சிதான் எல்லாவித மனநோய்க்கும் அடிப்படையான காரணம்!' என்ற வரிகள் அவள் நெஞ்சில் ஆலவட்டம் சுழன்றன. திகிலுணர்வின் பேதையில் அவள் தலை சுற்றியது. அடுத்த சில விநாடிகளுக்குப் பிறகு, அவள் அந்தப் பத்திரிகையைக் கீழே வீசிவிட்டு எழுந்தாள். விளக்கை அணைத்தாள்.

முத்தழகிக்குரிய அம்மா படித்த குற்றப் பத்திரிகையின் வாசகங்கள் மின்னலாக அவளுள் கீறிப் பளிச்சிட்டன. அவள் எதை நினைப்பாள்? எதை மறப்பாள்?

தமிழரசி மெய்யொடுங்கி, மனம் ஒடுங்கிச் சித்தர் பாடல்களில் மூழ்கினாள்!—அவளுடைய போதம் மிகுந்த நயனச் செப்புகள் கண்ணீரைக் கவிழ்த்துக் கொண்டேயிருந்தன!...

## நித்தியமல்லி

### முப்பத்தொன்று

காலம் எனும் தேவன் பிரபஞ்சத்தின் சில பொழுதுகளை, 'சூ, மந்திரக்காளி!' என்று சொல்லிக் கபளீகரம் செய்து ஏப்பம் பறித்தான்.

தமிழரசி பள்ளிக்கூடத்தை முடித்துக்கொண்டு, சாந்தோமுக்குப் புறப்பட்டாள். கஸ்தூரி அன்னை அனாதை இல்லத்தின் தலைவி திலகவதி அம்மையாரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் உந்தித் தள்ளியது. அதனால்தான், உடனே புறப்பட்டாள்.

"மதர்!" என்று பாசம் மல்க விளித்துக்கொண்டே, தாயின் மடியில் விழ ஓடும் தலைமகள் மாதிரி ஓடிச் சென்றாள்.

புகைப்படத் தொகுப்புக்களில் மூழ்கியிருந்த தலைவி 'டக்' கென்று முகத்தைத் துடைத்துக் கொண்டு ஏறெடுத்துப் பார்த்தாள். தமிழரசியை எதிர்பாராத விதமாகக் கண்டதும், அவள் அதிசயப்பட்டுப் போனாள். அன்புக்கு அதிசயப் பட உரிமை உண்டல்லவா?

அன்னையைக் கண்டதும் தெய்வத்தையே நேரில் கண்டாற்போல அத்துணை ஆனந்தக் களிப்புக் கொண்டாள் தமிழரசி. "உடம்பு வரவர இளைச்சிக்கிட்டு வருதே மதர்?... டாக்டரிடம் மருந்து சாப்பிடக்கூடாதாம்மா?" என்று கவலை தோய வினவினாள், தமிழரசி. தலைவி விரக்தியுடன் சிரித்தாள். "எனக்கு உடம்புக்கு என்னம்மா வந்தது? ஒன்றுமில்லை!... அது சரி!... என்னம்மா இப்படித் திடுதிப் பென்று வந்திருக்கிறாய்?" என்று அன்பு புரள—வியப்புப் புரளக் கேட்டாள், இல்லத் தலைவி. 'போட்டோ ஆல்ப'த் தைப் பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டுத் திரும்பினாள்.

"இன்னிக்குப் பூரா உங்க ஞாபகம்தான் மதர்!... அது தான் ஓட்டமாக ஓடிவந்து விட்டேன்!" என்றாள் தமிழரசி, பெற்றவளிடம் புதல்வி பெருமையுடன் தன் மனத்தைத் திறந்து காட்டுவது மாதிரி.

"தமிழரசி! அப்புறம் உன் கல்யாண விஷயமாக உன் மனத்தை நல்ல விதமாக மாற்றிக்கொண்டாயா, அம்மா?" என்று கூடுதலான கவலையுடன் கேட்டாள், தலைவி.

"எனக்கு ஒரே ஒரு மனம்தானே இருக்குது அம்மா? .. எனக்கு உடைமையான—என் ஆசைக் கனவுக்குச் சொந்த மான—எனது இன்ப லட்சியத்துக்குப் பாத்தியதை பூண்ட அந்த ஒரு மனம் இயற்கையின் வஞ்சனையாலே குற்றுயிரும் குலை உயிருமாகத் துடித்துக்கிட்டிருக்குது. அந்த மனத்தைப் பாவ புண்ணியத்துக்காவது இரக்கப்பட்டு அதன் இஷ்டத் துக்குக் கொஞ்ச காலத்துக்கு ஓய்வு கொள்ளச் செய்ய

வேண்டாமா, மதர்? என்னை நல்ல நெறிமுறைகளுடன் வளர்த்ததே நீங்களும் என் மனமும்தானே, அம்மா?... என்னைக் கோபிக்காதீங்க!... நான் உங்க காலடியிலே வாழ்ந்து, உங்க காலடியிலே சாக வேண்டியவள். உங்க மகள் நான்! அடுத்த பிறப்பில் கட்டாயம் நீங்கதான் என் தாயாக இருப்பீங்க! நேர்மையான கனவுகளும் நியாயமான குறிக்கோள்களும் வெல்லாமல் போவதில்லைன்னு எனக்கு நீங்கள் சொல்லித் தரலீங்களா, மதர்?... நீங்க எனக்கு எப் போதுமே துணை இருக்கையிலே, எனக்குக் கவலை ஏதுங்க, அம்மா?... இனி, எனக்குச் சமூகப் பணிதான் எதிர்காலம்; பள்ளிப் பணிதான் இனி எனக்கு உலகம்!... இந்த என் முடிவுகள், உங்கள் உதாரணத்தாலே விளைந்தது தானுங்களே!...

"நீங்க எனக்குச் சின்ன வயசிலே போட்ட உங்க தங்கச் சங்கிலியைப் பாரதப் பிரதமர் விஜயத்தின் போது அவர்கிட்டே நாட்டுப் பாதுகாப்புக்காக அர்ப்பணம் செஞ்சிடத் துடிச்சேன்!... ஆனா, உங்களோட இந்த அழியாப் பரிசை என்னிடமிருந்து பிரிக்க மனம் இடம் கொடுக்கலே. ஆனதாலே, நாளைக்கு என்னாலான ஒரு தொகையை உங்க கையிலே கொண்டு வந்து தருகிறேன். அதை முதல் மந்திரி கிட்டே சேர்த்திடுங்க!... இன்னொரு தொகை தருவேன். அது நம்ம இல்லத்துக்கு!..."

தமிழரசியின் பேச்சைக் கேட்டதும் திலகவதி அம்மையாருக்குத் திகில் மூண்டது; இதயத்தின் உயிர்ப்பகுதி சலனம் கண்டது. "என்னம்மா இது! என்னமோ ஊர்ப் பயணம் புறப்படப் போறதாட்டம் ஒரே மூச்சிலே என்னவெல்லாமோ பேசிக்கிட்டிருக்கே!..." என்று சொல்லிக் கொண்டே வந்தவள், எதையோ சொல்லத் துடித்தவள் போல் இதழ்களைத் திறந்தாள். மறுகணம் தயங்கியபடி, விழி கலங்கி வாயை மூடிக்கொண்டாள். இரண்டொரு விநாடிகளின் இடைவேளை கழிந்தது. "தமிழரசி, இன்னிக்கு இங்கேயே தங்கம்மா!... உங்கிட்டே மனம்விட்டுப் பேசணும். அப்ப

தான் என் மனசு அமைதிப்படும். திருவாளர் சொக்க நாதனும் உன்கிட்டே ஏதோ பேசணும்னு சொல்லியிருக்கார். அவரையும் வரவழைக்கிறேன்!'' என்று இரந்தாள் தலைவி. அவள் குரல் தழுதழுத்தது. அவள் மேனி மிகவும் நலிந்திருந்தது.

தமிழரசி அதற்குள் எழுந்துவிட்டாள். ''நாளைக்குக் கட்டாயம் வந்து இங்கே தங்குறேன், மதர்! இன்னிக்கு ஸ்கூல் வேலே கொஞ்சம் இருக்குதுங்க, அம்மா!...'' என்று மொழிந்தாள். இல்லத்தின் அன்னையிடமிருந்து விடை பெற்றுப் புறப்பட்டாள்.

புறப்பட்ட தமிழரசியை மீண்டும் விளித்தாள் தலைவி. அவளை விழுங்கிவிடுபவள் போலப் பார்த்துவிட்டு, ''சரி அம்மா!... பத்திரமாகப் போய் வாம்மா!'' என்று அவளது கன்னங்களைத் தன்னுடைய நடுங்கும் கரங்களால் ஏந்தி மகிழ்ந்தவாறு, அவளைப் பிரிய மனமில்லாமல் தவித்துக் கொண்டே அவளை வழியனுப்பி வைத்தாள், அம்மையார். அந்தத் தலைவியின் வலது கண் ஏன் அப்படித் துடிக்கிறது?...

சாந்தோமிலிருந்து பாரிமுனைக்கு வந்தாள், தமிழரசி. அம்பிகையைத் தரிசனம் செய்தாள். நேராக வீட்டை நோக்கி நடந்தாள்.

அரண்மனைக்காரத் தெருவின் தலைப்பில் மேல் சரகில், பிச்சைக்காரர்களின் வரிசை நெளிந்தது. குஷ்டரோகிகள் பாவம், படுத்துப் புரண்டு கொண்டிருந்தார்கள்.

தமிழரசிக்கு மனம் இருந்தது. ஐந்து காசுகளை வரிசையாகப் போட்டுக் கொண்டே நடந்தாள்.

நடைபாதைக் குடும்பங்களில் சூழ்ந்திருந்த ஆர்ப்பாட்டங்களை நோட்டமிட்டவளாக நடந்தாள். மூக்கில் சளி வழிய அவள்மீது மோதிக் கொண்ட குழந்தையை அதன் தாயிடம் சேர்ப்பித்துவிட்டு, நடை தொடர்ந்தாள்.

முத்துமாரிச் செட்டித் தெரு வழி விட்டது.

பறித்து வீசி எறியப்பட்ட முல்லைப் பூக்கள், மண்ணில் நெளிந்த மனிதப் புழுக்களின் கபட வேடக் கூத்துக்களைக் கண்டு வெறுப்படைந்தாற் போன்று, மண்ணைவிட்டு விண்ணைச் சார்ந்து மணம் கூட்டி விளையாடிக் கொண் டிருந்தன.

தமிழரசி வீட்டைத் திறந்து, மின்சார விளக்கின் பொத்தானை அழுத்தினுள். அசதி தீர, நாற்காலியில் இளைப் பாறினுள். குளியல் அறையில் முகத்துக்கு வாசனைச் சவுக்காரம் போட்டுத் தேய்த்துக் கழுவி டவலினுல் துடைத் தாள். கொடியில் உலர்ந்த உள் பாவாடை, பிரேஸரியை மடித்துப் போட்டாள். துருத்திக் கொண்டிருந்த அரிவாள் மனையை உட்புறம் தள்ளி வைத்தாள். முன்னறைக்கு மீண்டாள். மேஜை மீதிருந்த விளக்கொளியும் கண்ணாடியும் அவள் முகத்தைச் சித்திரித்துக் காட்டிக் கொண்டிருந்தன. அவள் தன் வதனத்தை ஆழ்ந்து நோக்கினுள். முகப்பருக்கள் துல்லிதமாகத் தெரிந்தன. அவள் கண்கள் ஒய்யாரமாகத் தாழ்ந்தன. இல்லத் தலைவி பரிசளித்த அந்தத் தங்கச் சங்கிலி, பட்டுக்கரை சேர்த்த விலையுயர்ந்த தடுக்கில் கிடத்தப்பட்டிருக்கும் சிசுவைப் போன்று அழகாகக் கிடந்தது.

அவள் எழுந்தாள்.

தாஷ்கண்ட் பேச்சுக்கள் வெற்றி பெற்ற மாதிரிதான் இனி!

ரேடியோச் செய்திக்காக எதிர் வீட்டில் காது கொடுத்து அவள் காத்திருந்தாள். இன்பச் செய்தி கிடைத்தது. தாஷ்கண்ட் ஒப்பந்தத்தில் பெருமதிப்புக்குரிய பாரதப் பிரதமரும், பெருமதிப்பைச் சுவீகரித்துக் கொண்ட பாகிஸ்தான் அதிபரும் கையொப்பம் செய்து கொண்டார் களாம்!

தமிழரசி ஆனந்தக் கடலாடி மேற்கு முகம் திரும்பினுள். சாப்பிட வேண்டுமென்று மனம் எண்ணியது.

காலைச் சமையலுக்கான திட்டமும் உருவானது.

தமிழரசியின் வீட்டுக்கு வந்தாள் சீதை. "டீச்சர், உங்களுக்கு ஒரு பந்தயம் வைக்கப் போறேனுக்கும். இது யார்னு சொல்லுங்க!" என்று முன்னுரை அமைத்து, தன் உள்ளங்கையில் வைத்திருந்த ஒரு புகைப்படத்தைக் காட்டினுள், சீதை.

தமிழரசி அப்படத்தைக் கூர்த்த மதி பதித்துப் பார்த்தாள். "இது... உங்க அண்ணுச்சி கல்யாணம் செஞ்சுக்கப் போகிற பெண் பூங்கொடியோட போட்டோ இது!... உங்க அண்ணுச்சியே என்னிடம் சொன்னுங்களே!" என்று விவரித்தாள்.

மறுகணம், அந்தக் கன்னிப் பெண் சீதை கைகொட்டிச் சிரித்தாள். காதுச் சிமிக்கிகள் கண் சிமிட்டின. "ஐயையோ! நீங்க ஏமாந்திட்டீங்க, டீச்சர்! நல்லா உங்களை ஏமாற்றி யிருக்காங்க எங்க அண்ணுச்சி!... இந்தப் படத்திலே இருக்கிறது யார் தெரியுமா?— எங்க அண்ணுச்சியாக்கும்!... ஒரு வாட்டி டிராமாவிலே பெண்பிள்ளை வேஷம் போட்டு நடிச்சப்போ எடுத்த படம் இது டீச்சர்!..." என்று புதிரை விடுவித்துவிட்டு, வில்லினின்றும் புறப்பட்ட அம்பாகப் பறந்தாள் சீதை!...

தமிழரசி இதயத்தைப் பிடித்துக்கொண்டு அப்படியே பிரமை தட்டி உட்கார்ந்துவிட்டாள்!...

அப்போது, சுசீலா அங்கு வந்து சேர்ந்தாள். "அக்கா! உங்ககிட்டே ஒரு பெரிய உண்மையைத் தெரியப்படுத்தத்தான் ஓடோடி வந்தேன்...! நீங்க இனிமே அனுதை இல்லீங்க... உங்க அம்மாவும் அப்பாவும் உயிரோடுதான் இருக்காங்க!..." என்று நிறுத்தினுள் சுசீலா.

இதுவரை கனன்று கொண்டிருந்த எரிமலை திடுதிப்பென்று அடங்கி ஓய்ந்தாற்போன்று ஓர் இன்பமயமான அமைதியைத் தமிழரசியின் மனம் அங்கீகாரம் செய்து காட்டியது. "அப்படியா?... என் உயிரை வேண்டுமானுலும் தருகிறேன்... சீக்கிரம் சொல், சகோதரி!" என்று துடித்தாள் அவள். சுசீலாவின் மெலிந்த கைகளைத் தன்

கைகளால் ஏந்திக்கொண்டு பரிதாபமாகக் கெஞ்சினுள் தமிழரசி.

"கஸ்தூரி அன்னை இல்லத்தின் தலைவிதான் உங்களைப் பெற்ற அம்மா!... ஸ்ரீமான் சொக்கநாதன் அவர்கள்தான் உங்க அப்பா!... இப்பத்தான் எங்க ஆயா இந்த ரகசியத்தைச் சொன்னுங்க!..." என்று முடித்தாள் சுசீலா.

"நிஜமாகவா?..." என்று தமிழரசி அதிர்ச்சி மிகுந்த அதிசயத்துடன் கேட்டாள். மறுகணம், அவள் சிலையாகச் சமைந்தாள். கண்களில் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. நெற்றியில் வேர்வை வழிந்து கொண்டிருந்தது. நெஞ்சை அடைப்பது போலிருந்தது. இறுகப் பற்றித் தேய்த்துக் கொண்டாள். அவள் சுயப் பிரக்ஞை பெற்றுக் கண்களைத் திறந்தபோது, சுசீலாவைக் காணோம்!

சொல்லாமல் வந்தவள் சொல்லாமலே போய்விட்டிருப் பாள் போலும்!

தமிழரசி ஓர் அரைக்கணம் வீறுகொண்டு நின்றுள். மறு விநாடி, அவள் சுயநிலைக்குத் திரும்பினுள். உடல் நடுங்கியது. புத்தக அலமாரியில் சாய்ந்து விட்டாள். புத்தகங்கள் சிதறின. இல்லத்திலிருந்து ஞாபகமாக எடுத்துக் கொண்டு வந்த "நன்னூல் விருத்தியுரை" பிரிந்து கிடந்தது. அதில், நிழற் படமொன்று காணப்பட்டது. எடுத்துப் பார்த்தாள்.

படத்திலே திலகவதி அம்மாளும் சொக்கநாதனும் காட்சி கொடுத்துக் கொண்டிருந்தார்கள்— அவர்களுக்கு மத்தியில் ஒரு பெண் குழந்தை!

அக் குழந்தையை நன்ருக உற்றுப் பார்த்தாள் தமிழரசி. 'என்னுடைய படமல்லவா இது! ஆஹா! நான் சேர வேண்டிய இடத்தில் தெய்வம் என்னை முன்கூட்டியே சேர்த்து விட்டிருக்கிறது!'

உணர்ச்சிச் சுழிப்புடன் தமிழ்க் கடவுளின் திருமுன்னே நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கி விசையுடன் எழுந்தாள் தமிழரசி. "ஐயனே!... நீ இருக்கிருய்!... நீ

உண்மை!... நீயே சத்தியம்!... ஆமாம்!...'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் தேம்பினுள் அவள்.

மிகமிக அபூர்வமானதோர் அழகிய அமைதி புனித பூமியை நினைவூட்டியவாறு அங்கு அப்போது சூழ்ந்து வந்தது!

கீழே வீழ்ந்திருந்த அந்தப் படத்தைப் பாசத்துடன் எடுத்தாள். மீண்டும் பார்த்தாள். ''அம்மா!... அப்பா!...'' என்று மாறி மாறி அழைத்தாள். பிறகு, அந்தப் படத்தை மேஜைமீது வைத்தாள். முருகன் அணிந்திருந்த நீண்ட மல்லிகைச் சரத்தைப் பாதி ஆக்கி அப்படத்துக்கு அணிவித் தாள். கைகளைக் கூப்பி அப்படத்தைக் கும்பிட்டாள் அவள்.

முகத்தைத் துடைத்துக்கொண்டு அவள் திரும்பினுள். பீரோவைத் திறந்தாள். தாய் மண்ணின் மானம் காத்த வீர ஜவான் மோகன்தாஸின் படத்தை எடுத்தாள். மிஞ்சி யிருந்த பூச்சரத்தை அதற்குச் சூட்டினுள். ஒற்றை மல்லிகைப் பூவை அவளது கொண்டைக் கதம்பத்தில் இணைத்துச் செருகிக் கொண்டாள். அந்த வீரத் தமிழ் மகனுக்கு வீர வணக்கம் செலுத்தினுள் தமிழரசி. பூவிழிகள் பூச்சிதறல் களாக நீருகுத்தன.

அவளுடைய டயரியின் ஏடு அவள் இதயத்தை ஏந்தியது.

''இன்று எனக்கு ஒரு புனிதம் மண்டிய—பொற்புமிகுந்த நந்நாள் ஆகும்! நான் இனி அனுதை அல்லள்!... எனக்கு அம்மா இருக்கிருள்!... அப்பாவும் இருக்கிருர்!... அவர்கள் இருவரும் இதுவரை இருந்தது போலவே திரைமறைவி லேயே இருக்கட்டும்!... அவர்களுடைய சமூக அந்தஸ்துக்கோ, கவுரத்துக்கோ என்ருல் இன்னல் விளைய வேண்டாம்! அவர் கள் என் தெய்வங்கள்! ஆமாம்; அவர்கள் என் தெய்வங்கள்!... தெய்வங்கள் திரைமறைவில்தான் இருக்கவேண்டும்!... அப் படியே இருக்கட்டும்!... நான் இனி அனுதை அல்லள்! எனக்கு அப்பா இருக்கிருர்!... அம்மாவும் இருக்கிருள்!...... இனி மேல், நான் 'சொ. தமிழரசி!'......

"ஆம்; இன்று என் தவம் பலித்திட்ட சுபநாளும் ஆகும்... என் மனத்தின் லட்சியக் கனவு பலித்துவிட்டது! — என் இதயக் கோவிலில் கொலு வீற்றிருக்கும் என் காதல் தெய்வத்தை இனி எந்த விதியும் அசைக்கவே முடியாது!

"ஆஹா! நான் எல்லா வகையிலும் பாக்கியவதியே!

"தெய்வமே! உன் திருவிளையாடல் மகத்தானதுதான்! அட்டியில்லை!... ஆமாம்; என் பிறவி இனி பொருள் பெற்று விடும்!... தமிழ்க் கடவுளே! உன் கருணையே கருணை!"

இனி அவளுக்குப் பிரளயம் ஏது?

மறுகணம், அவள் தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள்!......

சிரிப்பின் இனிய நாத அலைகள் அவளைச் சுற்றி அலைந்து கொண்டிருந்தன.

மறுகணம் அவள் தனக்குத்தானே அழுது கொண்டாள்.

அழுகையின் ஒயிலான நாத அலைகள் அவளைச் சுற்றி அலைந்து கொண்டிருந்தன!...

சிரிப்பும் அழுகையும் அவளது கனவின் இரு வேறு லட்சிய கேந்திரங்களாக இயங்கி, அவளை அக் கேந்திரங்களின் நாயகியாக்கிக் கொண்டிருந்தன!...

அவள் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்தாள்.

கால ரதத்தின் பவனி தொடர்ந்து கொண்டேயிருந்தது.

சிரிப்பும் அழுகையும் அவளது வாழ்வின் விதியாக அவளுக்குத் துணை இருந்துகொண்டே இருந்தன!

அவள் ஏன் சிரித்தாள்?

விதியை வெற்றி கண்டு விட்டாளே என்ரு?...

அவள் ஏன் அழுதாள்?

வினை அவளிடம் தோற்றுவிட்டதே என்ரு?...

அவளது செவிகளிலே, ஓங்கி உலகளந்த உத்தமனின் பேர் பாடிக் கொண்டிருந்த பாடல் ஒலிக்கத் தொடங்கியது!

மேஜைமீது இரண்டு உறைகள் இருந்தன. அவை ரூபாய்த் தாள்களை உள்ளடக்கமாகக் கொண்டு இருந்தன. ஓர் உறையில் 'தேசீயப் பாதுகாப்பு நிதிக்கு' என்றும், அடுத்த உறையில், 'கஸ்தூரி அன்னை அனாதை இல்லத்துக்கு' என்றும் குறிப்புக்கள் நேர்த்தியாக எழுதப் பெற்றிருந்தன!...

இன்னமும் விடியவில்லை—பொழுது!

தவயோகம் சித்திக்கப் பெற்ற ஞானச் செருக்குடன் தமிழரசி விளங்கினாள். அவளது அழகு வளர் வதனம் சலன மற்றுத் திகழ்ந்தது. அவளது எழிலார் மார்பகத்தில் அந்தத் தங்கச் சங்கிலி பாங்குற அமிழ்ந்து கிடந்தது!...

நிமிஷங்கள் நெளிந்தன.

திறந்திருந்த கதவுகளின் வழியே பத்திரிகை வந்து விழுந்த சத்தத் துடிப்புக் கேட்டதும், விழி விரித்து எழுந்து பத்திரிகையை ஆர்வத்துடன் எடுத்தாள். எடுத்த எடுப்பில் தரிசனம் தந்த பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் பெரிய அளவுப் படத்தைப் பார்த்ததும், அவள் மட்டற்ற மகிழ்வுடன் அப்படத்தைக் கைகுவித்துப் பக்தியுடன் வணங்கினாள்!...

புனித சீலர் லால்பகதூர் அவர்கள் எவ்வளவு நிர்மலமாகப் புன்னகை பூத்துக் கொண்டிருக்கிறார்! சரித்திரப் புகழ் வாய்ந்த தாஷ்கண்ட் வெற்றியை எண்ணித்தான் அவ்வாறு தூய சிந்தையுடன் புன்னகை புரிகிறாரோ!...

சிரிப்பின் மெய்யுணர்வுடன் தமிழரசி தலைப்புச் செய்தியைப் படித்தாள்.

'ஐயோ, தெய்வமே!' என்ற பயங்கரமான ஓலம் அவளது உந்திக் கமலத்தினின்றும் புறப்பட்டு எதிரொலித்தது. அவள் தன் இருதயத்தை அழுந்தப்பற்றிப் பிசைந்து கொண்டே உயிர்க் கழுவில் துடி துடித்தாள். "அம்மா!... அப்பா!" என்று கதறினாள். மறுகணம், அடியற்ற சந்தனமரமாகத் தாய் மண்ணில் சாய்ந்தாள் தமிழரசி.

அதே தருணத்தில் :

இராணுவ வீரன் மோகன்தாஸ் தன்னுடைய இள மீசையை நீவிவிட்ட வண்ணம், கம்பீரமான மிடுக்குடனும் கண்ணியம் மிகுந்த புளகிதத்துடனும், "தமிழரசி!" என்று

அன்புடன், பாசத்துடன், பரிவுடன், நிறைவுடன் அழைத்துக் கொண்டே உள்ளே நுழைந்தான். அவனது வலது கையில் ஒரு கடிதம் மட்டும்தான் இருந்தது!...

விதி சாய்ந்து கிடப்பதைப்போல — வீணை சாய்ந்து கிடப்பதைப் போல — தெய்வமே சாய்ந்து கிடப்பதைப்போலத் தமிழரசி சாய்ந்து கிடந்தாள்!

அவன் கையிலிருந்த அந்தக் கடிதம் நழுவியது.

"ஆ!... தமிழரசி!" என்று கூக்குரலிட்ட வண்ணம் தரையில் அமர்ந்து, தமிழரசியின் பாதங்களைத் தொட்டுப் பார்த்தான். "ஐயோ, என் தெய்வமே... தமிழரசி!" என்று நெஞ்சு வெடிக்கக் கூவி அழுதான். அவனுடைய நயனங்கள் அழுதன. அந்தம் நிறைந்த அதரங்கள் அழுதன. தெய்வமாகிவிட்ட அந்த மானுடப் பெண்ணின் நீள் துயிலைக் கலைக்க விரும்பாமல், அவன் தன் அழுகையைக் கட்டுப் படுத்திக் கொண்டானே? அவன் பார்வை, மௌனமான சோகத்தை விரித்தவாறு ஒதுங்கிக் கிடந்த அன்றையச் செய்தித்தாள்மீது ஊர்ந்தது. "ஐயோ, சாஸ்திரிஜி!" என்று விம்மினன். இதழ்க் கங்குகளில் வழிந்தது கண்ணீர். அவன் தன் விம்மலை அடக்கிக் கொண்டான்.

தமிழரசியின் நெற்றிப் பொட்டும், கொண்டைப் பூவும், இதழ் முறுவலும் வாடாமல் களைகட்டித் திகழ்ந்தன.

"தமிழரசி!... தமிழரசி!..."

அவளை அழைத்து அழைத்து அழுதான்; அழுது அழுது அழைத்தான்; ஓங்கி ஓங்கி மண்டையில் அடித்துக் கொண்டான். "நான் எவ்வளது துர்ப்பாக்கியசாலியாக ஆகிவிட்டேன்!... ஐயோ! என் தெய்வமே!... தமிழரசி! தமிழரசித் தெய்வமே!..."

அவன் எழுந்தான்; நடந்தான்.

காற்றில் அலைக்கழிக்கப்பட்ட அந்தக் கடிதம், தமிழரசியின் பாதார விந்தங்களில் பச்சைக் குழந்தையாய்க் கிடந்தது.

"என் அன்புத் தமிழரசிக்கு,

நீங்கள் என்மீது கொண்டிருக்கும் மகத்தான நேசத்தை எண்ணி மகிழ்ந்து, அந்த மகிழ்ச்சியின் பெருமிதத் திளைப்பிலேயே என் வாழ்நாளைக் கடத்தி விட வேண்டுமென்றுதான் நான் கனவு கண்டு

வந்தேன். அந்த மகத்தான இன்பக் கனவைப் பவித்திரமான பாசத்தோடு என் வாழ்நாள் பூராவும் காப்பாற்றிக் கொண்டுவிட வேண்டுமென்றுதான் நான் நித்த நித்தம் கவலைப் பட்டேன். தாய் மண் பணி செய்து அதன் மூலம் கால்களை இழந்த என்னைத் தாங்கள் பெருமனம் கொண்டு துணிவுடன் திருமணம் செய்து கொள்ள முன் வந்த அந்த ஈரத்தை என் மனச்சாட்சி அங்கீகரிக்கவில்லை. என்னுடன் நிலைத்துவிட்ட ஊனம் என்னுடனேயே இருக்க வேண்டுமென்று நான் முடிவு கட்டிவிட்டேன்!... அதன் காரணமாகவேதான், நான் அன்று உங்களிடம் 'பொய்' சொல்லவும் நேர்ந்தது. ஆனால், அந்தப் பொய்க்கும் வாழ்வு குறுகிவிட்டது; பொய்யின் புனைகதையும் உங்களுக்குப் புரிந்துவிட்டது, என்னுடைய தங்கை மூலமாக!

இனியும் நான் என்னைக் காப்பாற்றி கொள்ள விரும்பவில்லை.

என் மனச்சாட்சியின் ஜீவனை உங்கள் அன்புதான் இதுநாள் பரியந்தம் உயிருடன் காப்பாற்றிக் கொண்டு வந்திருக்கிறது.

இது சத்தியம்!

ஆசைக்கு ஓர் அளவில்லை என்பார்கள்.

அன்புக்கும் அளவு ஏது?

இது உண்மை!

ஆகவே, இதோ, என்னை உங்கள் வசம் ஒப்படைத்து விடுகிறேன்.

ஆஹா! என்னைப்போலக் கொடுத்து வைத்தவன் இந்த உலகத்திலே வேறு யார் இருக்க முடியும்?

ஆம்; நான் கொடுத்து வைத்தவன்தான்!

அதனால்தானே, உங்களை நான் எடுத்துக் கொண்டேன்!...

அன்புடன்,
ச. மோகன்தாஸ்."

கணங்கள் மோனத் தவிப்புடன் வழிந்து கொண்டிருந்தன.

தமிழரசிக்குத் துணை வந்தது மோகன்தாஸின் குடும்பம். தெரு ஜனங்களும் கூடத் தொடங்கினர்.

'சாரதா பெண்கள் உயர்நிலைப் பள்ளி' அங்கே திரும்பி விட்டது!

மோகன்தாஸ் திரும்பிவந்து மௌனச் சிலையாக நின்றான்.

காலம் மௌனக் கண்ணீர் வடித்தது.

வாடாமல்லி நிறக் கார் வந்து வாசலை அடைத்துக் கொண்டு நின்றது. குமாரி திலகவதி அம்மையாரும் திருவாளர் சொக்கநாதனும் விம்மியவாறு காரிலிருந்து இறங்கி உள்ளம் துடிதுடிக்க, உள்ளே ஓடி வந்தார்கள்.

தமிழரசியின் இடது புறத்தில் திலகவதி அம்மையும், வலது புறத்தில் சொக்கநாதனும் அமர்ந்து குலுங்கிக் குலுங்கி அழுதார்கள்!...

"அம்மா, தமிழரசி! என் மகளே!" என்று ஓலமிட்டாள் திலகவதி அம்மாள். அவள் தமிழரசியின் நெஞ்சிடைத் தலைபதித்துக் கதறி அழுதாள்.

விதியை வெற்றி கொண்ட கம்பீரப் பெருமை துலங்க, துங்கமணி மின்போல அமைதியுடனும் நிறைவுடனும் விளங்கிக் கொண்டிருந்தாள் தமிழரசி.

அவள் நித்தியமல்லி.

அவளுக்கென்று இப்படி ஓர் அமைதியா?

அவளுக்கென்று அப்படி ஒரு நிறைவா?

அவளுடைய செங்கனி வாய்ச் சிரிப்பு வாடவில்லை; வதங்கவில்லை!

அவள் நித்தியமல்லி!

சோகத்தின் வடிவமைந்த சொக்கநாதனைத் தலை உயர்த்திக் கண்ணீருடன் நோக்கினாள் இல்லத்தின் தாய். "ஐயா!... தமிழரசி அனாதையல்ல! எப்போதுமே அனாதை அல்ல! ஆனா, நம்மைத்தான் இப்போது அனாதையாய் ஆக்கிட்டுது தமிழரசி... நம்ம தமிழரசி!... எங்க தமிழரசிக்கு ஒரு கல்யாணத்தைச் செஞ்சு வச்சு, அதை என் மகளாகவே ஆக்கிக் கொள்ள வேளை பார்த்துக்கிட்டு இருந்தேன். என்னோட இந்த மன ஆசையை அதுகிட்டே சொல்லிவிட இரண்டொரு தடவை எத்தனிச்சேன். பின்னாலே சொல்லி

விடலாமென்று அப்போவெல்லாம் சும்மா இருந்திட்டேன்!... கடைசிலே... ஐயையோ... பாழும் விதி என்னை இப்படிச் சோதிச்சிட்டுதுங்களே!... ஐயையோ... என் தாயே!... அம்மா தமிழரசி!..." என்று நெஞ்சுலரக் கதறினர்கள் குமாரி திலகவதி அம்மையார்.

குமாரி தமிழரசியின் உதடுகள் தெய்வப் புன்னகை காட்டின.

அவள் நித்தியமல்லிகை.

அப்போது, பதறித் திணறி வந்து தமிழரசியின் பாதங்களிலே விழுந்தாள், ஆயாள்—கஸ்தூரி அன்னை அனாதை இல்லத்தின் பழைய ஆயாள் கிழவி. பேச முடியாமல், அழுதாள். அழமுடியாமல், கண்ணீர் பெருக்கினாள். நொந்த மனம் துடித்தது: "உன்னோட ஏங்கின மனசுக்கு ஒரு நிம்மதி கொடுத்திட வேணும்னு யோசிச்சு, ஒரு பொய்யை ராத்திரி எங்க சுசீலா மூலம் உன்கிட்டே அனுப்பினேனே!... நீ அந்தப் பொய்யோட நிறைவிலேயே இப்பிடி மெய்யான அமைதி அடைஞ்சிருப்பேன்னு நான் சொப்பனம்கூட காணலையே அம்மா?... தெய்வம்தான் என்னைத் தூண்டி அப்பிடிப் பொய் சொல்ல வச்சிருக்குமோ?... ஐயோ, தெய்வமே!... இனி உன்னை எந்தச் சென்மத்திலே காணப் போறேனோ!... அம்மா!... தமிழரசி!..." கிழவி பேய் பிடித்த நிலையில் தடுமாறிக்கொண்டே யிருந்தாள்.

குமாரி தமிழரசியின் இதழ்கள் அமர முறுவல் சிந்திக்கொண்டேயிருந்தன.

அவள் நித்தியமல்லி.

நிரவிக் கிடந்த பயங்கரச் சோகத்தை ஊடுருவியவாறு, குமாரி தமிழரசியின் அமர யாத்திரை, அந்த அழகிய வாடாமல்லீ நிறக் காரில் தொடர்ந்தது—கஸ்தூரி அன்னை அனாதை இல்லத்தை நோக்கி.

தமிழரசிக்குக் 'கொள்ளி' வைக்கும் பாக்கியம் மோகன் தாஸுக்குக் கிட்டியது.

விதிக்கு மட்டும் அழவே தெரியாதோ?...

அங்கங்கே தாயின் மணிக்கொடிகள் ஆறாத் துயரத்துடன் அரைக் கம்பங்களில் தொங்கிக் கொண்டிருந்தன!...

**வாழிய செந்தமிழ்!**